## மனம் விட்டுப் பேசுவோம்

●'என் கதை'- சலனின் சுவையான தொகுப்பு என்னை மீண்டும் ஒரு முறை படிக்க வைத்தது.

—க. புகழேந்தி, திருவையாறு

●'நெகிழ்ச்சி மிக்க நினைவுகள்' எனும் தலைப்பில் புலவர் நாக சண்முகம் அவர்கள் சரித்திரமாக ஆகிவிட்ட கவிஞர் கண்ணதாசனைப் பற்றி எழுதிய கட்டுரையும், நடிகையர் திலகம் சாவித்திரி அவர்கள் தான் நோயுற்றுப் படுப்பதற்குச் சில நாட்களுக்கு முன் தன்னுடைய மனக் குமுறலைக் கூறியதை 'சலன்' அவர்கள் தொகுத்த கட்டுரையையும் படிக்கும் போது என்னையும் அறியாமல் அழுது விட்டேன். பல அறிஞர்கள், கலைஞர்களுடன் நடிகையர் திலகம் எடுத்துக் கொண்ட புகைப்படத் தொகுப்புகளை 'அமுதசுரபி' இதழைத் தவிர வேறு எந்த இதழும் இதுவரை வெளியிடவேயில்லை.

— திருமதி பிரசன்ன ராஜன், கும்பகோணம்.

●'பணி பெரிது பெயர் சிறிது' — டாக்டர் ராஜலட்சுமி அவர்களின் கட்டுரை பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம்.

— லா. ரா. சுந்தர ராஜன் பி.காம், சென்னை-28.

●பாரதி நூற்றாண்டிற்குச் சென்ற ஆண்டே முகப்பு அட்டையில் அவர் தம் ஓவியத்தைப் போட்ட வகையில் முழக்க மிட்டீர்கள். இப்பொழுது பஞ்சாலி சபதத்தில் ஒரு ரம்யமான காட்சி. 'லதா'விற்காகவே இப்படி ஒரு காட்சியை மகாகவி விவரித்திருப்பாரோ?

— கே. ராஜகோபாலன், பூவிருந்தவல்லி.

●நடிகர்களின் நடிப்போடு வந்த 'ஐந்தறிவே உன்னை ஆராதிக்கிறோம்' கதை நன்றாகவே, சிறப்பாகவே இருந்தது. இந்த மாதிரி மாதம் ஒன்றாவது வருவது நன்றாக இருக்கும். வருமா?

— மு. கல்யாண சுந்தரம், மேட்டுப்பாளையம்.

●தீபாவளி மலரில் 'ஈடில்லா இழப்பு' தொகுப்பில் மகாத்மாவின் இறுதி ஊர்வலக் காட்சி கண்டு என் கண்கள் கலங்கின.

— சா. தமிழ்த் தம்பி, திருப்பூர்-4

●பள்ளிப் பருவத்தில் பார்த்த, படித்த 'அமுதசுரபி'யை மூன்று வருடங்கள் கழித்துத் தற்போது பார்க்கப் படிக்க நேர்ந்தது. அதிகமாக கதை கட்டுரைகள் நிறைந்த 'அமுதசுரபி' இனித் தொடர்ந்து நான் படிக்கும் பத்திரிகைகளில் ஒன்றாக இடம் பெறும்.

— வெ. ச. தமிழரசன், சி. கொத்தங்குடித் தோப்பு, சிதம்பரம்.

●'ஆரத்தின் அறுந்த நூலிழைகள்' குறுநாவலில் கௌதம நீலாம்பரன் நீலாம்பரி ராகத்தில் கதையை ஒரு இசையாக சொல்லியிருக்கிறார்.

— இரணியல் 'கலை', தெர்மல் நகர், தூத்துக்குடி-6.

●**ஆம்பூர் 'அமுதசுரபி' அன்பர்கள் தீபாவளி மலரைப் பாராட்டுகிறார்கள்**

தங்களின் 'அமுதசுரபி' தீபாவளி மலரில் எதைப் பாராட்டுவது எதைப் பாராட்டாமல் விடுவது என்று எனக்கே புரியவில்லை- இவ்வாறு ஆம்பூர், இந்து ஹையர் செகண்டரி பள்ளி ஆசிரியர் திரு. கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.பி.எட்., எழுதியுள்ளார்.

அட்டைப் படமோ அன்னையை நேரில் தரிசித்ததுபோல் உள்ளது என்று ஆம்பூர் திருமதி ஜோதி கோபால் எழுதுகிறார்.

"புகைப்பட மெல்லாம் புதிர் போட்டவிழ்க்க- இந்தப்
புதுமலர் மணமே புவி எங்கும் சிறக்க...
தெவிட்டாத தெள்ளமுதைத் தீபாவளி சுரக்க-இந்தக்
கன்னியே முன்வந்துக் களிப்பூட்டினாளே!"

என்று ஆம்பூர் இறையடியார் கவிதையாகவே பொழிந்துள்ளார்.

[உங்கள் ஊரில் எப்படியோ?]

## உங்கள் கருத்து என்ன?

●கதை, கட்டுரை, கவிதை துணுக்கு ஜோக் ஆகிய அணைத்துக்கும் பக்கங்கள் ஒதுக்குவது நியாயந்தான். வெறும் கதைகளுக்கு மட்டும் பக்கம் ஒதுக்குவது சரியிருக்காது.

— திருப்பூர், ச. ராஜகோபால்.

●மனம் விட்டுப் பேசுவோம் பகுதியில் ஓர் அன்பர் கதைகள் அதிகம் வேண்டுமென்று அங்கலாய்க்கிறார். சாம்பார், ரசம், மோர் நாலு வகைப் பதார்த்தம், ஊறுகாய், அப்பளம், வடை, பாயசம் இவற்றோடு சாப்பிட்ட அளவுக்குத் திருப்தி தருமா வெறும் சாம்பார் சாதம்? சாம்பார் சாதம் போன்ற கதைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து அதிகப் பக்கம் ஒதுக்கி விட்டால் மற்றவைகளை நாம் எப்படிச் சுவைக்க முடியும்?

— வி. ரங்கநாதன், சுதிரிமங்கலம், (திருப்பத்தூர், வ.ஆ)

●'அமுதசுரபி'யில் தற்பொழுது கதைகளுக்காக ஒதுக்கும் பக்கங்கள் சரியான விகிதாச்சாரத்தில் இருக்கின்றன. கதைகளுக்குக் கூடுதல் பக்கங்களை மற்றப் பகுதிகளின் பக்கங்களிலிருந்து பிடுங்கி ஒதுக்கி ஓர வஞ்சனை செய்ய வேண்டாம். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது: கதைகளுக்காக என்று மேலும் 24 பக்கங்களைக் கூடுதலாகச் சேர்ந்து விலையையும் 50 பைசா கூட்டுங்கள்.

— ல. ரா. சுந்தரராஜன், சென்னை-28.

[வாசகர்களே உங்கள் கருத்து என்ன?]

அமுதசுரபி

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே — பாரதியார்

மலர்: 34 இதழ்: 8 டிசம்பர் '81 மார்கழி

ஆசிரியர்: டாக்டர் விக்கிரமன்

கௌரவ இலக்கிய ஆலோசகர்:
என். வி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல்., ஐ.ஆர்.டி.எஸ்.

பதிப்பாளர்: ஏ. வி. எஸ். ராஜா


அமுதசுரபி
ஜனவரி 1982
இதழில்
'லக்ஷ்மி'
எழுதும்
அழகு
என்னும்
தெய்வம்
புதிய தொடர்கதை
ஆரம்பமாகிறது.

# ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மகாகவி தோன்றினர்

நூறு ஆண்டுகளுக்கு முன்பு— கார்த்திகை மூலத் திருநட்சத்திர நன்னுள்.

வான வீதி கலகலப்பு மிகுந்தது. செம்பொற் சுடர் வீசும் கதிரவனின் ஒளியுடன் தேவாதி தேவர்களின் அழியாப் பேரொளியும் ஒன்று சேர்ந்தன.

வான வீதியிலே ஞானிகள் பலர் கூடி நின்றனர்.

மாரத வீரரும், மாமுனிவோர் பலரும், நலந் திகழ் கானமிசைக்கும் நாரதரும், அருள் பொலியும் புத்தபிரானும், சங்கரரும், இராமானுஜரும், ஏசுபிரானும் கூடி நின்றனர்.

வான்புகழ் கொண்ட வள்ளுவரும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமெனும் மணியாரம் படைத்த சேரன் தம்பியும், புகழ்க் கம்பனும் கம்பீரமாக வந்து நின்றனர்.

அப்பரும், சுந்தரரும், அருள் மணிவாசகரும், ஞானசம்பந்தரும், ஆழ்வாராதியரும் குழுமி விட்டனர்.

கண்ணனும், கந்தனும் அங்கு வந்துவிட்டனர்.

தெய்வத் தமிழ் நாட்டிற்கு விடிவெள்ளியாகப் புதல்வன் ஒருவன் தோன்றப் போவதைக் காண தமிழ் நாட்டின் ஞானிகளும், காவிய மன்னர்களும், வீரர்களும் மேதைகளும் கூடி விட்டனர்.

அந்த வேளை வந்தது.

தேவர்கள் பூமாரி பொழிந்தனர். நாரத கானம் எங்கும் எழுந்தொலித்தது.

'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்' என்று தேவலோக வாசிகள் வாழ்த்தினர்.

எட்டயபுரத்திலே, சின்னஞ்சிறு வீட்டிலே அத்த அதிசயம் நிகழ்ந்தது.

அந்த சித்திரபானு ஆண்டு கார்த்திகை மாதம் இருபத்தேழாம் தேதி மூல நட்சத்திரத்திலே (1882 டிசம்பர் 11) லக்ஷ்மி அம்மாள் எனும் புண்ணியத் தாய்க்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

அடிமைப் போர்வைக்குள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த, இந்த மண்ணின் மைந்தர்கள் அந்த அதிசய நிகழ்ச்சியை அறியவில்லை. வழக்கப்போல் உறங்கியவா றிருந்தனர்.

அந்தக் குழந்தை செந்தமிழ் நாட்டு மக்களின் துயிலெழுப்பும் கடமை வீரனுகத் திகழ வேண்டும் என்று ஞானியரும், மா புருடர்களும், மேதைகளும், தீர்க்க தரிசிகளும், அமரர்களும் வாழ்த்தொலி கூறி மலர்மாரி தூவினர்.

நாள்தோறும் பிறக்கும் ஆயிரம் ஆயிரம் குழந்தைகளைப்போல் அந்தக் குழந்தையும் சாதாரண தமிழ் மகனுக வாழக் கூடாது என்று தேவலோகத்தவர்கள் ஆசைப் பட்டனர். அவன் வீர மகனுக, ஓர் சமுதாயத்தை உருவாக்குபவனுகத் திகழ வேண்டும் என்று அவர்கள் எண்ணினர்.

அடிமை இருளில் மூழ்கிக் கிடக்கும் தமிழ் மக்களுக்கு அவன் ஒரு கை விளக்காகத் திகழ வேண்டும் என்று அவர்கள் விரும்பினுர்கள்.

ஆங்கில மோகத்திலே அமிழ்ந்திருக்கும் தமிழனுக்குத் தம் பரம்பரைப் பெருமையை உணர்த்தும் இலட்சிய மகனுக அவன் விளங்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

அறியாமைப் பேய் பிடித்து, கிலி பிடித்து வாழும் மாந்தர்கள் மடமையைப் போக்கும் வல்லவனுக அவன் விளங்க வேண்டும் விரும்பினுர்கள்.

பெண் குலத்தவர்களின் அடிமைத் தனத்தை நீக்கி, நிமிர்ந்த ஞானச் செருக்குடன் தாய்க் குலத்தை தலை நிமிர்ந்து நிற்கச் செய்யும் ஆற்றல் மிக்கவனுன, ஒரு தமிழ் மகனுக அவன் விளங்க வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டார்கள்.

அமரர்கள் எண்ணினுல் ஆகாதது உண்டோ? ஆசைப்பட்டது நடக்காது போகுமா? தெய்வசித்தம் மாறுபடுமோ?

சித்திரபானு ஆண்டு மூல நட்சத்திரத்திலே நூறு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த அந்த ஆண் மகன்தான் சுப்ரமண்ய பாரதி.

அவர் இந்தத் தெய்வத் திரு நாட்டின் பெருமையை உணர்த்தும் பாடல்களை-எழுத்துக்களை வடித்துக் கொடுத்தார்.

'எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே' என்று பாடி நம் பெருமையை நாம் அறியச் செய்தார்.

'திறமான புலமை யெனில் பிற நாட்டார் அதை வணக்கஞ் செய்ய' வேண்டிப் பாடினுர்.

'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்தால் தான் சேமமுறலாம்' என்று கனல் கக்கும், கன்னல் மிளிரும் பாடல்களை, எழுத்தினை இயற்றி அளித்தார்.

"கனக்கும் செல்வம் நூறு வயது இவையும் நீ தரக் கடவாயே" என்று மகாகவி தமது விநாயகர் நான் மணி மாலையில் வேண்டியிருக்கிறார்.

நாற்பது ஆண்டுகளுக்குள்ளே நாலாயிரம் ஆண்டுப் பணியை முடித்தார்.

அவர் பெருமை அறிய நூறு ஆண்டுகள் தேவைப்பட்டது.

அவர் கட்டிய காவிய மாளிகையில் இன்று வாழ்கிறோம்.

நூற்றாண்டு விழா எடுக்கிறோம். 1982ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதி வரையில் கொண்டாடப் போகிறோம்.

அதுவரை மட்டும் தானா? அந்த மகா கவியின் புகழை அதுவரை மட்டும்தான் நினைப் போமா? பந்தல் போட்டு, புகழ் பாடி, ஓய்ந்து விடுவோமா...?

இந்தத் தமிழ் மண் உள்ள வரையில் நாம் நினைத்துப் போற்றுவோம்.

அவர் விட்ட பணியைத் தொடர்வோம். அவர் இலட்சியக் கனவு நிறைவேறும் வரை பாடுபடுவோம். அவர் கனவு என்ன?

ஏழை என்றும் அடிமை என்றும்
எவனுமில்லை ஜாதியில்

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினியுண்டோ?

தனி யொரு வனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம் —

மாதர் தம்மை இழிவு செய்யு
மடமையைக் கொளுத்துவோம்!

இனியொரு விதி செய்வோம் — அதை
எந்த நாளும் காப்போம்

எல்லாரு மோர் குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!

## தெருவெல்லாம் தமிழ் முழக்கம்




"எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழி யவே!" எனப் பொங்கும் தமி ழுக்குப் புதுவாழ்த்துக் கூறுகிறான் மகாகவி பாரதி. இந்த வாழ்த் தையே கொள்கையாகவும் குறிக் கோளாகவும் கொண்டு, கடந்த முப்பத்து மூன்று ஆண்டுகளாக, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மகத் தான தொண்டாற்றி வருகிற 'அமுதசுரபி'யைத் தாங்கள் அறிவீர் கள். தெள்ளூற்ற தமிழமுதின் சுவைகண்ட ஆசிரியர் டாக்டர் விக்கிரமன் அவர்களும், உள்ளத்தில் உண்மையொளி நிறைந்திருக்கும் பதிப்பாளர் ஏ. வி. எஸ். ராஜா அவர்களும் மகாகவியின் வாக்கை யும் நோக்கையும் நேசிப்பவர்கள்; பூசிப்பவர்கள்! எனவே பாரதி நூற் றாண்டை நினைவில் கொண்டு 'அமுதசுரபி'யில் ஆக்க பூர்வமாக மகாகவிக்கு அஞ்சலி செலுத்தும் ஆர்வத்தில் 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம்' எனும் தொடர் கட்டு ரையை ஜனவரி'82 புத்தாண்டு இதழில் தொடங்க உள்ளனர்.

"சேமமுற வேண்டுமெனில் தெரு வெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!" என்பது தானே-பாரதி பிறப்பித்த முதல் கட்டளை! மகா கவியின் முதல் கட்டளையை ஏற்று, 'தமிழ் முழக்கம்' செய்யும் தலையாய பணியில் ஆர்வம் காட்டி, தமிழ் நாட்டில் பல்லாயிரம் இலக்கிய அமைப்புகள் தொண்டாற்றி வரு கின்றன. இந்த இலக்கிய அமைப் புகளின் சேவையால் பெற்று வருகிற நலமும், கற்று வருகிற பலமும்-தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் ஊட்டம் தருபவை. தமிழின் உயர்வுக்காக, தமிழரின் மேன்மைக்காக உரிய வகையில் தொண்டாற்றி அரிய பணி ஆற்றி வருகிற அமைப்புக்களின் சேவை களை வெளி உலகிற்குத் தெரியச் செய்வதாய், தமிழ்த் தொண்டை அனைவரும் அறியச் செய்வதாய்த் தொடர் கட்டுரை அமையும். தெருக்களிலும், திடல் களிலும், மண்டபங்களிலும், இலக் கிய நிகழ்ச்சிகளை அமைத்துத் தமிழ் மொழியின் பழமையை, இனி மையை, அருமையை, பெருமையை உணர்த்தி வருகிற அமைப்புகளை ஊக்குவிக்கும் முனைப்புடன் வெளி யாகும் தொடர் கட்டுரை மகாகவி யின் நூற்றாண்டில் ஆக்கபூர்வமான அஞ்சலியாக அமையுமல்லவா?

பாரதி நூற்றாண்டு முழுவதும் 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம்' 'அமுதசுரபி'யில் தொடர் கட்டுரை யாக வெளியிடப் பெறும். ஒவ்வொரு மாத இதழும் ஒவ்வொரு மாவட்ட இலக்கிய அமைப்புச் சிறப்பிதழாக மலரும். டிசம்பர் இதழில் மகாகவி பிறந்த 'திருநெல் வேலி' மாவட்டம் முதன் முதலாக இடம் பெறுகிறது. கட்டுரையை எழுதி வழங்கும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. தயைக் காட்டித் தங்கள் அமைப்புப் பற்றிய முழு விபரங்களை — தொடக்கம், மலர்-நூல் வெளியீடுகள், பொறுப் பாளர்கள், நிகழ்ச்சிகள், குறிப் பிடத்தக்கவை அனைத்தும்—எனக்கு அனுப்பி வைத்து உதவும்படி வேண்டுகிறேன். வெளியிடுவதற் கென அமைப்பிலிருந்து பொறுப் பாளர் ஒருவரின் போட்டோ ஏற்றுக் கொள்ளப்பெறும். எனவே வெளி யிடத் தக்க படம் (பாஸ்போர்ட் சைஸ்) ஒன்றினையும் அனுப்ப வேண் டுகிறேன். தங்கள் அமைப்பைப் பற்றியும் தாங்கள் அறிந்து வைத் துள்ள அமைப்புக்களைப் பற்றியும் குறிப்புகளை 10-12-81க்குள் அனுப்பி உதவுமாறு பணிவன்புடன் வேண்டு கிறேன்.

குன்றக்குடி பெரியபெருமாள்,
'இலக்கிய பீடம்'
47, சஞ்சீவிநாதபுரம்,
இராஜபாளையம்-626117



# நாட் கிழமைகள்


**காஞ்சி காமகோடி பீடாதிபதி**
**ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்.**


உலகில் உள்ள பிராணிகளுள் மனிதனாகப் பிறப்பது மிகுந்த புண்ணியத்தின் பயனால் ஏற்படக் கூடியது. உலகப் படைப்பில் ஓர் அறிவு முதல் ஆறு அறிவு வரை கொண்ட பிராணிகள் உள்ளன. ஓர் அறிவு முதல் ஐந்து அறிவு உள்ள பிராணிகளுக்கு நல்லது கிடைத்தால் அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும்; தீயதை விடவேண்டும் என்றுதான் தெரியும். தானாகவே நல்லதைத் தேடிக் கொள்ளத் தெரியாது. உண்பது, உறங்குவது; மழை, கானலுக்கு ஒதுங்குவது போன்றவற்றைத் தவிர இறைவனை வழிபடுவது, நல்ல குணங்களுடன் வாழ்வது, துன்பம் வந்தால் போக்கிக் கொள்ள முயல்வது போன்ற செயல்கள் அவற்றுக்குத் தெரியாது. அதேபோல் தேவையுள்ள பொருள்களைச் சேகரித்துப் பத்திரப்படுத்திப் பயன்படுத்தவும், அவ்வளவாகத் தெரியாது.

மனிதன் தன் வாழ் நாள் முழுவதும் பொருட்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு சுகமாக வாழத் தெரிந்தவன். அப்படி மீறித் துன்பங்களும், நோய்களும் வந்தாலும், அவற்றைத் தவிர்த்துக் கொள்ள மனிதனுக்கு வழி வகை தெரியும்.

மனிதனின் உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு, இறைவழிபாடும், விரதங்களும், பண்டிகைகளும், விழாக்களும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. விரத காலங்களில் உபவாசமும், இறைவழிபாடும் முக்கியமாக வலியுறுத்தப் பட்டிருக்கின்றன. தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்கள் சூடு ஏறாமலும், பழுதுபடாமலும் இருப்பதற்கு அவ்வப்போது எண்ணெய் போட்டுச் சுத்தம் செய்யப்படுகின்றன. சிலசமயம் ஓடாமல் நிறுத்தியும் வைக்கப்படுகின்றன. காரணம், அவற்றுக்கும் ஓய்வு தேவைப்படுகிறது.

இவ்வறிவை மனிதன் எங்கிருந்து கற்றறிந்தான்? இறைவன் படைத்த தன் உடற் கூறு சாஸ்திரத்திலிருந்தே அல்லவா!

இதேபோல் மனிதனும் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் வேலை செய்து ஓய்வு கொள்கிறான். மனிதனது உணவு முறையில் ஒரு சீரான நிலை ஏற்படுவதற்காக, ஏகாதசி, ராமநவமி, சிவராத்திரி போன்ற விசேஷ நாட்களில் உணவு உட்கொள்ளாமலிருக்க வேண்டும். அல்லது இலகுவான உணவு உட்கொள்ள வேண்டும் என்று வகை செய்யப் பட்டிருக்கிறது. இறைவனது திருவுள்ளம் ஆறறிவு படைத்த மனிதனுக்குக் காட்டிய ஆரோக்கிய வழி இது.

**தொகுப்பு: பைங்காநாடு வெங்கட்ராம சாஸ்திரிகள்,**

# 2வது உலக சிறுவர் பட விழா...



நேருவின் 92ஆவது பிறந்த தினமான நவம்பர் 14 ஆம் தேதியன்று, இரண்டாவது உலக சிறுவர் திரைப்படவிழாவைத் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் தலைமையில், இந்திய சிறுவர் திரைப் பட நிறுவனத்தின் தலைவர் டைரக்டர் சாந்தாராம் முன்னிலையில், மத்திய செய்தி—ஒலிபரப்பு அமைச்சர் வஸந்த் சாத்தே சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கி வைத்து, ''சகோதர— சகோதரிகளே — வணக்கம்!'' என்று கூறியதும் ரசிகர்களின் கரவொலி அரங்கத்தை அதிரச் செய்தது.

இருபது கோடி குழந்தைகள் உள்ள இந்தியாவில் எழுநூறு படங்களே தயாராகும் புள்ளி விவரத்தைத் தென்னிந்திய வர்த்தக சபைத் தலைவர் டி. ராமானுஜம் தெரிவித்தார். எம்.ஜி.ஆர் பேசும்போது, காலம் சென்ற டைரக்டர் சுப்ரமண்யம் அந்த நாளில் இந்த வகையான படங்களைத் தயாரிக்க முன்னோடியாக இருந்தாலும் அது போன்ற முயற்சியை மேற்கொள்ள எவரும் முன்வராதது வருத்தப்படக் கூடிய விஷயம் என்றார். சிறப்பாகத் தயாரிக்கப்படும் படங்களுக்குத் தமாஷாவரி விலக்கு, பண உதவி, பரிசுகள், தவிர, நேருபடம் பொறித்த பதக்கம் எல்லாமே தரப்படும் எனும் இனிப்பான செய்தியைத் தமிழக முதல்வர் அறிவித்ததும் அரங்கம்மகிழ்ச்சியில் நீந்தியது. பள்ளிகளில் 16 எம் எம் படங்கள் காட்டப்படும் விவரத்தை டைரக்டர் சாந்தாராம் கூறி, தமிழகமும்-குஜராத்தும் சிறுவர் படத்தயாரிப்பாளர்களுக்கு ஊக்கமளிக்க முன் வந்தது போல, இதர மாநிலங்களும் முன்வர வேண்டும் என்று வலியுறுத்தினார். வஸந்த் சாத்தே பயனுள்ள பொழுது போக்கு, அறிவியல் விளக்கம் இவைகளைப் படங்களின் மூலம் சிறுவர்களுக்குத் தர சினிமாத்துறை முன்வரவேண்டும் என்றார். பலம், ஞாபகம், விசுவாசம், தொழிலில் பெருந்தன்மை இவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் யானைச் சின்னம் இந்த சிறுவர் விழாவிற்கான அடையாளச் சின்னம். யானையின் தும்பிக்கையிலுள்ள ஜோதி கல்வி, விளையாட்டு, பொழுது போக்கு எல்லாவற்றையும் கூறும்வகையில் காணப்படுகிறது. கிட்டத்தட்ட இருபத்தியொன்பது நாடுகள் கலந்து கொள்ளும் இந்த விழாவில், நூற்றிப்பத்து படங்களுக்கு மேல் காண்பிக்கப்பட்டன. பழம்பெரும் டைரக்டர் எல்.வி. பிரசாத் தலைமையில் உள்ள அகில உலக நீதிபதிக் குழு தவிர, சிறுவர் குழாம் ஒன்றும் நல்ல படங்களைத் தேர்ந்தெடுக்கும். பத்திரிகையாளர்களுக்கு மூன்று அரங்குகளிலும், பொதுமக்களுக்கு குறைந்த கட்டணத்தில் சில அரங்குகளிலும் பல்வேறு காட்சி நேரங்களில் எல்லாப் படங்களையும் பார்க்கும் வாய்ப்பை இந்த விழா ஏற்படுத்தித் தந்தது. தொடக்கவிழாவை அடுத்து ''ஜங்கிள் புக்'' என்கிற வால்ட் டிஸ்னியின் கார்ட்டூன் படம் திரையிடப்பட்டது. இப்படத்தின்டைரக்டர் ரெய்தர்மேன் மேடையில் வரவழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அடுத்த சிறுவர் விழா 1983ல் கல்கத்தா நகரில் நடக்கவிருக்கிறது.

—டி.எம்.ஆர்.





# டிக் டிக் டிக்

டிக் டிக் டிக்-ஒரு நல்ல ஆங்கிலப் படம் பார்த்த மாதிரியான ஒரு திருப்தி. சில இடங்களில் நம் மனமும் 'திக்திக்' என்று அடித்துக் கொள்கிறது. கமலஹாசன் நடிப்பு குறிப்பிட்டுச் சொல்லும்படி அமைந்துள்ளது. அவர் அழகி ஸ்வப்னவிடம் மாட்டிக் கொண்டு விடுபடமுடியாமல் தவிப்பதும், அவள் கொலை செய்யப்பட்டிருப்பதைப் பார்த்து அவர் நடுங்குவதும் அங்கிருந்துத்தான் நழுவுவதற்குப் பிரயத்தனப்படுவதும் அவர் நடிப்பின் சிறப்பைக் காட்டுகின்றன. ராதா, தன் தாய் சீரியஸாக இருக்கிறார் என்று கேட்டு ஆஸ்பத்திரிக்குப் போகும்போது, கமலையும் விட்டு விட்டு போன், கதவு, எதையும் கவனிக்க வேண்டாம் என்று சொல்லி அவரை விடவும் முடியாமல் போகும் போது மிக நன்ருக நடித்திருக்கிருர் இளைய ராஜா கடைசிவரை தன்இசையைப் படத்திற்கு ஏற்றமுறையில் நன்ருக அமைத்திருக்கிருர். ஆனல் பாடல் மனத்தைத்தொடும்படியாக இல்லை. படம் முழுவதும் நம்மைச் சிறிதும் அசைய வைக்காமல் பார்க்க வைத்திருப்பதற்கு ஒரு அப்ளாஸ்.

வேதா ஸ்ரீனிவாசன்
சென்னை-14.

வைரங்களை வனிதைகளின் உடலில் பதித்து அவர்கள் கதையை முடிக்கும் ஒபிராய் என்னும் பண ஓநாய், அவருக்குப் பக்கபலமாக நின்று காரியங்களைக் கச்சிதமாக முடிக்கும் கையாள்—இவர்களிடையே மூன்று பெண்கள் மாட்டிக் கொண்டு தவியாய்த் தவிக்கிருர்கள். செக்ஸில் தோய்த்த சம்பவங்கள், அதில் மிளிரும் மர்மங்கள் எல்லாமே புதுமைக் கோலம் பூண்டிருக்கின்றன. ஒரு முழு நீள ஆங்கிலப் படத்தைப் பார்க்கும் பிரமையை பாரதிராஜா படம் பூராவும் ஏற்படுத்தி யிருந்தாலும்,பல ஆங்கிலப் படங்களில் நாம் ஏற்கனவே இது போன்றுப்பார்த்திருப்பதால் நமக்கு திகைப்பு ஏற்பட வில்லை. இளைய ராஜாவின் இசையின் தொடுப்பு எடுப்பாத உள்ளது. கமலின் நடிப்பு சில இடங்களில் வைரமாக மின்னுகிறது. மாதவி, ஸ்வப்ன, ராதா ஆகிய மூவரும் நடிப்பில் தம்தம் கோணங்களில் மின்னுகின்றனர்.

எஸ் ஜி கிருஷ்ணன்
சென்னை-1.

# அந்த 7 நாட்கள்

''வாசுதேவ எனி....'' மங்களகரமான கல்யாணியில், நாதஸ்வர இசையின் சிலிர்ப்புடன் ஆரம்பம். நிமிர்ந்து உட்காருகிருேம்.

நேர்மை உள்ளம் கொண்ட உத்தம இசைக் கலைஞன் ஆசான் பாலக்காடு மாதவன்; அவனுடைய நிழலாக டோலக்குடன் தொடரும் சிஷ்யன் கோபி. அப்பாவி பாத்திரம் பாக்கிய ராஜுக்கு—சொல்ல வேண்டுமா? மலையாளத்தில் பிய்த்து உதறிவிட்டார். ஹாஜா ஷெரிப்—குட்டிப்—பையன் சுட்டித்தனமான நடிப்பில் உயர்ந்து நிற்கிருன். கலக்கத்தைக் கண்ணில் காண்பிக்கும் கனமான பாத்திரம் டாக்டர் ஆனந்த். பண்பட்ட குணச்சித்திர நடிப்பில் மனத்தை நெகிழவைத்து விட்டார் ராஜேஷ். அம்பிகாவின் அகன்ற விழிகள். குலுங்கும் மணி சிரிப்பு. ஏமாற்றத்தைப் வெறுப்பாகப் கொட்டும் சூடு. மனத்தில் பதிந்துவிட்டார்.

''ஒன்னும் ஒன்னும் மூனு ஆகாது. ஈசட்டத்தில் எல்லாத்துக்கும் இடம் உண்டு. பட்சே நம் மண்ட சம்பரதாயத்தை மாற்ற ஒரு குச்சி இடம் இல்லா. எண்ட காதலி ஆக முடியாது. இது கொரச்சு ஓல்ட் கிளைமாக்ஸு பட் கோல்ட்'' போன்ற நல்ல வசனங்களுடன், கொச்சை வசனங்களும் உண்டு.

நடு இரவில் காதலனைச் சந்தித்து மனம் விட்டு—இல்லை இல்லை—மானத்தை விட்டுப் பேசும் வசனங்கள். மிகையான மீறல்கள். கடைசியில் தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றி விடுகிருேமே என்று இடையில் கோட்டை விட்டு விட்டார்களா?

## சிவன் நினைவு நாளில்

## ‘மருந்துக்கு’

## சிவன் பாடல்

மயிலை சாஸ்திரி ஹாலில், அக்டோபர் மாதம் 31-ஆம் தேதி அன்று பாபநாசம் சிவன் நினைவு நாளை ஒட்டி, திரு. எம். டி. ராமநாதனின் கச்சேரி நடைபெற்றது. சிவன் நினைவு நாள் கச்சேரியில், சிவனுடைய கிருதிகளை எதிர்பார்த்துக்கொண்டு கச்சேரிக்குச் சென்றவர்களுக்கு, ஏமாற்றம் தான் காத்திருந்தது. ஏனெனில், சிவன் கிருதிகள் தமக்குப் பாடமில்லை என்று ராமநாதன் வெளிப்படையாகவே கூறி விட்டார்! அவை முழுவதும் குழுமியிருந்த ரசிகர்களைத் திருப்திப் படுத்துவதற்காக, மருந்துக்கு ஒரே ஒரு சிவன் பாடலை (''என்ன தவம் -'' காபி)ப் பாடினார் அவர்.

இருந்த போதிலும், அவருடைய சுருதி சுத்தமும், பாவ உணர்ச்சியும், கச்சேரிக்குக் கை கொடுத்தன. அவர் பாடிய ''ஸொகஸுகா மிருதங்க தாளமு'' (ஸ்ரீ ரஞ்சனி) ''நாதோபாஸன'' (பேகடா) கிருதிகள், செவிக்கு இனிய விருந்தாக அமைந்தன. ஆனால் ஒரு குறை: இவர் பாடும்பொழுது ''ஸாஹித்யங்கள்'' முழுமையாக வெளிவருவதில்லை.

திரு. எம். சந்திரசேகரன், அவருக்கே உரித்தான பாணியில், அழகாகவும், அனுசரணையாகவும் வயலின் வாசித்து, ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார். மிருதங்கம் வாசித்த திரு. குருவாயூர் துரை பக்குவமாகவும், பாங்காகவும் வாத்தியத்தைக் கையாண்டு, கச்சேரிக்குக் களை ஏற்படுத்தினார். தனி ஆவர்த்தனத்தில் அவர் அளித்த சொற்கள் அருமையாயிருந்தன.

— ''கே. ஜீ.''

ஒரு காதலி பேசும் பேச்சாகப்படவில்லை காமுகியின் பேச்சாகப் படுகின்றன. சில ‘ஏ’ வசனங்கள். பவித்ரமான காதல்; பாட்டிலும், ஏட்டிலும் போற்றப்பட்ட காதல்; பங்கப்பட்டு விட்டதே!

வேட்டியைத் தாவணியில்முடித்து அம்பிகாவை மாடியிலிருந்து இறக்கும் காட்சி—‘ஐயோ தமிழ் சினிமாவே உனக்கு விடிவில்லையா?’

கதாநாயகி ஏதோ ஒரு காட்சியிலாவது மேலே துணியில்லாமல் நிற்கவேண்டும்! ஐயோ பாவம் தமிழ் நாயகிகள்! ஆனால், கடைசி உச்சக்கட்ட காட்சியில் அறுந்த பட்டமான தமிழ்ப் பண்பாடு திசை தப்பாமல் பிடித்து இழுத்துவிட்டார் பாக்யராஜ்.

தொய்வுகள் இருந்த போதிலும் திருப்தியுடன் வெளிவருகிறோம்.

‘எடோ! பாலக்காட்டு மாதவா! நிண்டே அப்பாவித்தனம் கண்டு, எந்தா பப்ளிக் மோகிச்சு போயி.... அறியோ!’

—சுமங்கலி

மாஜி காதலன் பாக்கியராஜ்—இப்போதைய கணவன் ராஜேஷ், இருவரிடையே சிக்கித் தவிக்கிறாள், அம்பிகா. முதலிரவில் தற்கொலை செய்து கொள்ள முயலும் மனைவியைக் காப்பாற்றி அவளுடைய கடந்த காலத்தைப் பற்றிக் கேட்கும் இடத்திலும், அடுத்து, அவளது காதலனைத் திரும்ப அவனிடமே சேர்க்கிறேன் என்று சொல்லும் இடத்திலும் ராஜேஷின் அமைதியான நடிப்பு நம் நெஞ்சை விட்டு அகலாது.

கொலு பொம்மையில்-அம்பிகா. பெண் பொம்மையை எடுத்து ஆர்மோனியக்காரன் பொம்மை பக்கத்தில் வைத்து விட்டு பொடியனிடம் கேட்கும் போதும், பொடியன் பாக்கியராஜிடம் சொல்லும் போதும் குருவை மிஞ்சும் சீடனாக விளங்குகிறான்!



கனவுக் காட்சிகள் எல்லாமே எம் ஜி ஆர் பாணியில் மிகச் கச்சிதமாக அமைந்திருக்கின்றன. அம்பிகாவிற்குக்கவர்ச்சி இருக்கிறதே தவிர நடிப்பு எடுபடவில்லை.

தன்னுடைய பெண்ணுடன் போனில் பேசும் டாக்டர் ராஜேஷ், ‘புது மம்மி கோபமாகத்தான் இருக்கிறார்களா, சாப்பிடச் சொல், மாத்திரை போட்டுக்கச் சொல்’ என்று அவளிடம் கேட்கும் போதும் ‘ஒன்றுமே சாப்பிடவில்லை மம்மி’ என்று அவள் பதில் சொல்லும் கட்டத்திலும், மேலும் அப்பெண் தன் புது மம்மியிடம் ''நீங்கள் ஒரு வாரத்திற்குத் தான் இருப்பீர்கள், என்னுடைய வேலைகளை நானேதான் செய்ய வேண்டும் என்று டாடி கூறியிருக்கிறார்'' என்று கூறும் இடத்திலும் அந்தச் சிறிய பெண்ணின் நடிப்பு நெஞ்சை உருக்குகிறது.

தமிழ்ப் பண்பாடு பற்றி விளக்கி டாக்டருக்குப் புத்திகூறி வெளிநடக்கும் பாக்கியராஜின் நடிப்பு ஒரு படி மேலே ஏறுகிறது. இரண்டே முக்கால் மணி நேரம் வயிறு குலுங்க சிரிக்கவும் சிந்திக்கவும் சிறந்த படம்.

இராஜகோபாலன்
சென்னை-4

பேட்டி அமைப்பு: டி.எம்.ஆர்.



# அமரகவியின் இறுதிப் பாடல்

**—கே.எஸ். நாகராஜன்**

''அறம் குறைந்து மறம் தலை யோங்கும் போதெல்லாம் நான் அவதாரம் செய்கிறேன்'' என்று கண்ணன் பகவத் கீதையில் உறுதி யளிக்கிறான். அதன்படி அறத்தை நிலைநிறுத்தத் திருமால் பத்து அவ தாரங்களை எடுத்தருளிய பான் மையை நம் நாட்டுப் புராணங்கள் யாவும் குறிப்பிடுகின்றன. தமிழ் நூல்கள் பல இவற்றைப் பற்றிப் பேசுகின்றன. சிலப்பதிகாரம் முதல் பாரதி நூல்கள் வரை யாவும் திருமால் சீரைப் பலபடப் போற்று கின்றன. அவர் எடுத்த அவதாரங் களுள் ஒன்று நரசிங்க அவதாரம். விஞ்ஞான வளர்ச்சியின் உச்ச நிலையை, அறிவுத் திறமையின் உயர்வைக் குறிக்கிற இரண்யனை, மெய்ஞ்ஞானக் குன்றான, அன்பின் ஆற்றல் கைவரப் பெற்ற பிரகலாத னுடைய உறுதி வென்ற வரலாறு இது. அசையாத கடவுள் நம்பிக் கைக்குப் பிரகலாதனைவிடச் சிறந்த சான்று இல்லை என்னலாம். இந்த ஞானநாயகனுடைய வரலாற்றைக் கூறினாலன்றி அமைதி கிட்டாது என்று எண்ணிய கம்பர் ராம காதையில் அதைப் புகுத்தினர். இராவணனுக்கு வீடணன் அறி வுரை கூறும் வகையில் பிரகலாதன் வரலாறு இடம் பெறுகிறது. பிரக லாதனின் பக்தியைப் பாடிப் பரவாத புலவர்கள் இலர். பாராட்டிப் பேசாத நூல்கள் இல்லை.

இதைப் பாடவேண்டும் என்ற ஆர்வம் அமரகவி பாரதிக்குப் பல்லாண்டுகளாகவே இருந்திருக்க வேண்டும். ஆயினும் எக்காரணம் பற்றியோ அது நிறைவேறவில்லை. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயில் யானையால் தாக் கப்பட்டு, அவ்வதிர்ச்சியால் உடல் நலம் குன்றி இருந்தபோது ஒரு நாள் ஞானநாயகன் நினைவாகவே இருந்தான் பாரதி. ''இரண்யனுக் கும் பிரகலாதனுக்கும் இடையே நடந்த சம்வாதம்'' என்ற தலைப் பில் ஒரு சிறு நாடகம் எழுதத் தீர்மானித்தான். ஆனால் அம்முயற்சி சில அடிகளுடனேயே நின்றுவிட்டது. அதற்குள் காலன் அணுகி விட்டான்.

தன்னிச்சைப்படி நடக்க மறுத்த சிறுவன் பிரகலாதனை இரண்யனே கொல்ல வருகிறான், அச்சுறுத்து கிறான், வெருட்டிப் பார்க்கிறான். ஆனால் எதற்கும் அஞ்சாது ''ஓம் நமோ நாராயணாய'' என்று சொல்லிக் கொண்டே நிற்கிறான் சிறுவன்.

''நீ கூறும் திருமால் எங்கும் இருக்கிறான் என்றால் இத் தூணில் இருக்கிறானா?'' என்று கேட்டான் தந்தை.

''இருக்கிறான். அது மட்டும் அன்று. இல்லை என்று நீ சொல்லும் சொல்லிலும் இருக் கிறான்'' என்றான் மகன்.

இரண்யன் சினந்துத் தூணைக் கையால் எற்றி னான். தூண் முறிந்தது. உள்ளி ருந்து நரசிங்க மூர்த்தி பேரொலி எழுப்பிச் சிரித்துக் கொண்டே வெளிவந்தார்.

இந்த கட்டத்தில் தொடங்கு கிறது பாரதியின் பாடல்.

நரசிம்மன் (தூணிலிருந்து): தேடு கிறாயா மகனே, தேடுகிறாயா?

இரண்யன்—ஆம். ஆம்.

நரசிம்மன்—அன்பு செய்வாயா? மகனே! அன்பு செய்வாயா?

இரண்யன்—மாட்டேன்

(பிறகு பிரகலாதனை இரண்யன் பார்த்து:

உன்னைக் கொன்றால் இனி என்ன செய்வாய்? என்று உறுமினான்.)

ஓம் நமோ நாராயணாய என்றான் சிறுவன்.

உன்னை மலைமுடி மீதினிலிருந்து உருட்டிவிடுவேன் என்றான் இரண்யன்.

ஓம் நமோ நாராயணாய என்றான் சிறுவன்.

நடுப்பனிக்கடலில், திமிங்கல வாய்க்குனை நான் கொண்டு திணிப் பேன் என்றான் இரண்யன்.

ஓம் நமோ நாராயணாய என்றான் சிறுவன்.

இடுப்பினை ஒடிப்பேன் இங்குனைத் தின்பேன் என்றான் தீயோன்.

ஓம் நமோ நாராயணாய என்றான் சிறுவன்.

x x x

நாட்டைப் பற்றியும், மொழி யைப் பற்றியும், தொழிலைப் பற்றி யும், தத்துவத்தைப் பற்றியும் சிந்தித்துப் பாடிய பாரதியின் உள்ளத்தில் இறுதியாக நிலைபெற் றது பக்தியின் பெற்றியே என்பது குறிப்பிடத்தக்கது. அறிவின் துணை கொண்டு நாம் பெறவேண்டியது அன்பு. அன்பின் துணைகொண்டு நாம் செய்ய வேண்டியது பக்தி. இதைத் தவிர மனிதன் கடைத்தேற வேறொரு வழியில்லை.

[இக்கட்டுரைக்கு ஆதாரம் அமர கவியின் புதல்வி தங்கம்மாள் பாரதி அவர்கள் இக்கட்டுரை ஆசிரியருக்கு 18-10-1967 அன்று எழுதிய கடிதம். இக் கட்டுரை ஆசிரியர் சென்னை 96-ல் உள்ள த. பெ. ஜெயின் கல் லூரி முதல்வர்]





நாரீக் போயாட்ஜியான்

மொழிபெயர்ப்பு:
நாரிக் போயாட் ஜியான்

# ஆர்மீனிய மொழியில் பாரதியார் பாடல்கள்

## நல்லதோர் வீணை..

### ՆՈՒՐԲ ՎԻՆԱ

Նուրբ Վինա մը շինուած – Պէ՞տք է որ հողի՞ն նետուի:
Խօսի՛ր, Սիվա Սաքթի, զիս
Ըրիր բոցավառող յանկարծահաս քաջագործ,
Տուիր հռչակ տարածուող
Համայն աշխարհի օգուտին համար·
Խօսէ՛, Սիվա Սաքթի, թող իմ ծնունդս
Չի բեռնաւորէ այս դաժան աշխարհը:

Ես աղերսեցի ըլլալ արագաշարժ գունդ մը
Ուղղելու էութիւնս դէպի սրտին ամբողջական կանչին:
Միտք մը անբիծ, կեանք մը
Ստեղծագործ փայլքեր արձակող:
Երակներս մնացին ձիգ, Տէ՛ր իմ· երգէ՛·
Սիվա Սաքթի աստղազարդ թռիչքի մէջ
Ես անհատնում երգեմ ուռճացող բերկրանքով,
Այս է միակ աղաչանքս:

ՍՈՒՊՐԱՄԱՆԻԱ ՊՀԱՐԱԹԻ

* Վինա – Հնդկական լարային նուագարան
* Սիվա Սաքթի – հնդիկ աստուած:

Հայերէնի թարգմանեց Քնարիկ Պօյաճեան:

இந்தப் பேரழகி தான் நாரிக் போயாட் ஜியான் (Knarig Boyadjian.) லெபனன் நாட்டின் பீருட்டில் பிறந்த இவர், குழந்தைப் பருவத்தில் இருந்தே கவிதை எழுதி வருகிருர். நார் என்ருல் லையர்(Lyre). நாரகான் என்ருல் கவிதை. 'வாழ்வைத் தேடி' என்று இவர் எழுதிய கவிதைத் தொகுப்பு இவருக்குச் சர்வதேசப் புகழைத் தேடிக் கொடுத்து விட்டது. ஆர்மீனியன்—அஸ்ஸீரியன் பெற்ருேரைக் கொண்ட இக்கவிஞரை உலகக் கவி டாக்டர். கிருஷ்ண ஸ்ரீநிவாஸ் இந்த ஆண்டு ஜுலை மாதம் ஸான் பிரான்ஸிஸ்கோ நகரில் நடந்த ஐந்தாவது கவிஞர்கள் மகாநாட்டில் சந்தித்த போது, தாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்ந்த பாரதியார் கவிதைகளை இவரிடம் கொடுத்து அவரது மொழியில் மொழிபெயர்க்கக் கேட்டுக் கொண்டார். அதன் விளைவே இந்த மொழிபெயர்ப்புகள் கவிஞர் விரைவில் இந்தியா வருகிருர்.



## எத்தனை கோடி இன்பம்..

### ԱՂՕԹՔ

Բիւրաւոր երջանկութիւններ դուն կու տաս
Ո՛վ Տէր, իմ Տէրս, մեր Տէ՛րը:

Ջուլեցիր անմիտը իմաստութին հետ
Ու խնոցեցիր գոյացած կարեւոր տարրերը
Եւ փայլատակեցիր ամէն երանգները ինչպէս ծիր կաթին
Որպէսզի աշխարհիս վրայ զանոնք տեսնենք:

Բերկրանքի գուգաւորումը փոխանցեցիր
Խրախճանքի ամենախոր գիտակցութեան
Ոմանց եւ կոչումը տուիր անոնց,
Ո՛վ Տէր, դուն ես մեր Տէ՛րը:

ՍՈՒՊՐԱՄԱՆԻԱ ՊՀԱՐԱԹԻ

Հայերէնի թարգմանեց Քնարիկ Պօյաճեան:



பர்மா தமிழர் திரு கோவிந்தசாமி

# தில்லியிலிருந்து...

**எம்.ஆர்.ராஜாமணி**

**பர்மாவில்தமிழின் நிலை :**

அண்மையில் பர்மாவிலிருந்து திரு. ஏ. கோவிந்தசாமி என்கிற ரங்கூன் தமிழர், தலைநகருக்கு வந்திருந்தபோது, தில்லி வானொலி நிலையத்தைச் சேர்ந்தவர்கள் அடங்கலாக நிருபர்கள் பலர் அவரைப் பேட்டி கண்டனர். பர்மா வாழ் தமிழர்களின் பிரதான பிரச்னை, தீராதப் பிரச்னையாக இருந்துவரு வருவது, அவர்களுக்குத் தமிழ் மொழியில் எழுதவும், படிக்கவும், வாசிக்கவும் வாய்ப்பில்லாத துர் திர்ஷ்டச் சூழ்நிலைதான் என்றார் திரு. கோவிந்தசாமி! எல்லாம் பர்மிய மொழியில்தான். எங்கள் தாய் மொழி, என்னுடைய பிள்ளைகளுக்கே பழக்கமில்லை. நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக எங்கள் மூதாதையரைப் பின்பற்றிப் பர்மாத் தமிழர்களாக விலாசம் பெற்றுவிட்ட எங்கள் குறை, தமிழ் மொழியைப் பயில்வதற்கான வாய்ப்புக்களையும், வசதிகளையும் எங்கள் சந்ததியினருக்குக் கிட்டவேண்டும் என்பதே! இதற்கு இந்திய, தமிழக அரசினரின் ஆதரவை நாடியே பர்மாத் தமிழர்களின் பிரதிநிதியாகப் பாரதம் வந்துள்ளேன், என்றார் அவர். இரண்டு மனைவியும், 24 குழந்தைகளும் கொண்ட 54 வயது இளைஞரான திரு, கோவிந்தசாமி, பர்மா வாழ் தமிழர்களின் வாழ்க்கைத் தரம் நன்றாகவே இருந்தாலும், பர்மிய உடையிலும், மொழியிலும், கலாசாரப் போர்வையிலும் ஒரு தமிழன், வெகு நாட்களுக்கு ஆன்மீக அமைதியுடன் வாழ முடிவதில்லை என்பதையும் ஒளிக்காமல் சொல்கிறார்! எந்த நாட்டில் இருந்தாலும், அவன் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவனே, அந்த உள்ளீடுகளின் பாரம்பரிய இயல்புகளுடன் வாழ்வதற்கே ஒவ்வொருவனும் விரும்புவான்! என்கிற திரு. கோவிந்தசாமியின் கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை! பர்மா, ஈழம், மலேஷியா, சிங்கப்பூர் ஆசிய நாடுகளில் தமிழர்கள் தொகை அதிகம். அங்கெல்லாம் அவர்கள் நிரந்தரப் பாணிகளாகி, அந்தந்த நாட்டுத் தேசியப் பண்புகளுடன் ஒன்றிப்போய் வாழ்க்கை நடத்திவத்தாலும், உள் மனத்தில், தான் தமிழன், மலையாளி, கன்னடியன், தெலுங்கன் என்கிற உள்ளுணர்வு மட்டுமின்றி, குஜராத்தி, பீஹாரி, பெங்காலி என்பது போன்ற நினைப்புகளும் மேலோங்கி நிற்பது இயல்பு. இந்தியர்கள் மட்டுமன்றி, மற்ற நாட்டைச் சேர்ந்தவர்களும் அவர்கள் எங்கிருந்தாலும் இந்த பிறப்பியல்பை, தாயக மாண்பை மறக்க முடியாது. இது சிருஷ்டி விநோதங்களில் ஒன்றாகும். எனவே, பிரத்யட்சங்களுக்கு அப்பாற்பட்ட சில 'அந்தரங்கமான' அபிலாஷைகளில் சுயமொழிப் பற்றும் முதலிடம் பெறுவது தவிர்க்கமுடியாத மனித இயல்பாகிறது! இதையே, திரு. கோவிந்தசாமி போன்ற கடல் கடந்து திரவியம் தேட முற்பட்டுள்ளவர்களின் மூதாதையர் காலம்



திரு பூர்ணம் சோம சுந்தரம் சென்னையில் திரு உமா சந்திரன் பேத்திகளுடன்.


தொடக்கம் இன்றுவரை இடையருது ஒலிக்கும் வேதனைக் குரல்களின் மூலம் அறிய நேருகிறது. பர்மாத் தமிழர்களின் தென்னாட்டுப் பாணியில் அமைந்த திருக்கோயில்களும் பூஜை செய்வதற்குரிய, பயிற்சிப் பெற்ற அர்ச்சகர்களும், தமிழ்ப் பள்ளிகளை இயக்குவதற்கான ஆசிரியர்கள் பாடநூல்களும் எங்களுக்கு அவசியம் தேவை என்கிறார் திரு. கோவிந்தசாமி.



திரு வாஜ்பாய் அவர்கள். அவர் அருகில் சங்கத்தின் தலைவர் திரு வீரராகவன். வலது கோடியில் சங்க ஸ்தாபகர் திரு ஏ. வி. குப்புசாமி.

**பூர்ணம் சோமு**

சோவித் யூனியனில் பூர்ணம் சகோதரர்களான உமா சந்திரன், விஸ்வநாதன் ஆகியவர்களின் இலக்கிய, கலையுலகப் புகழ் மட்டுமின்றி, பாரதிய இலக்கியங்களின் மேன்மையும், மேம்பாடும் அதிகரித்துள்ளன என்றால் அதற்குக் காரணம், அங்குக் குடியேறி, சோவியத் பிரஜையாகவும் மாறி, ரஷ்யப் பெண்ணையும் வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டு, சோவியத்தின் அயல்மொழிப் பதிப்பகத்தில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த திரு. பூர்ணம் சோம சுந்தரம் அவர்களேயாகும். பழகுவதற்கு இனிய பண்பாளர் என்கிற வாசகம், 'சோமு' வைப்பொறுத்த மட்டில் பகட்டு மொழியல்ல! 'ஆழ்ந்த புலமைக்கு' அவர், ஆதார பூர்வமான அடையாளம் என்பதும் அவரைப் பொருத்தளவில் வெறும் அடைமொழியன்று. எதையும் இங்கிதமாகச் சொல்லும் அடக்கம்; எவரையும் தன்னைச் சேர்ந்தவனாக நினைக்கும், சோவியத் மண்ணிற்கே உரிய இயல்பு. அவரது வாய்மையும், தூய்மையும் பாரதிய வம்சாவளிக்குப் பெருமை சேர்க்கும் உத்தமக் குணநலன்கள் என்றால், மனிதனை ஆராயும் உள்மன ஆழத்தில் அவர் ஒரு தேர்ந்த சோவியத் பிரஜை! குழந்தைகளிடம் நேருஜிக்கு உள்ள ஈடுபாட்டிற்கு இணையானது 'சோமு'வின் பாசமும் பரிவும்! அருமையான அந்த நண்பர், அண்மையில் மாஸ்கோவில் மாரடைப்பால் காலமாகிவிட்டது, இந்திய சோவியத் இலக்கியத் துறைக்கு ஈடுசெய்ய இயலாத இழப்பு. மாஸ்கோவில் குடியேறுவதற்கு முன்னால் தில்லியில் நவபாரத்டைம்ஸ் நாளேட்டில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் மஹாபாரதத்தை ஹிந்தியில் மொழியாக்கம் செய்ததைப் பாராட்டி, நேருஜி, திரு. சோமுவிற்கு விருதும், வெகுமதியும் மத்திய அரசின் சார்பில் வழங்கிக் கௌரவித்த நினைவு, இந்திய இலக்கிய ஆன்மாக்களில் என்றும் பசுமையாக நிற்பதாகும். சோவியத் நாட்டில் அவர் இந்திய இலக்கிய ஆன்மாக்களில் என்றும் பசுமையாக நிற்பதாகும். சோவியத் நாட்டில் அவர் இந்திய இலக்கியங்களையும், சோவியத் இலக்கியங்களையும் பரஸ்பர மொழிகளில் மொழியாக்கம் செய்து, இந்திய—சோவியத் நாடுகளுக்கிடையேயான நட்புறவைப் பேணுவதில் முன்னணியில் பெயர் பொறிக்கப்பட்டவர். திரு. சோமு. ஹிந்தி, ஆங்கிலம், தமிழ், ரஷ்யமொழிகளில் பெரும் புலமையும், பொதுவுடமைத் தத்து



அமெரிக்க அதிபரை பாரதப் பிரதமர் சந்தித்தார்.

வங்களில் ஆழ்ந்த நம்பிக்கையும், அனுபவமும் தந்த உள்ளுணர்வுகளில் மஹா கவிபாரதியிடம் தீராத மோகமும், அவரது கவிதைகளில் தீராதப் பித்தும் கொண்ட திரு. சோமுவின் நினைவிற்கு 'அமுதசுரபி,' தனது உள்ளார்ந்த அஞ்சலியைச் சமர்ப்பித்துக் கொள்கிறது.

**தமிழ்ச் சங்கத்தில்**
**தமிழ்மொழிப் பயிற்சி !**

தில்லித் தமிழ்ச்சங்கம், கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தலைநகரில் தமிழர் பண்பாட்டிற்கும், கலாசார, மொழிவளர்ச்சிக்கும் ஆதாரச் சின்னமாகக் கீர்த்தி பரப்பி வருவது வெளிப்படை. தென்னிந்தியர் சமூகத்திற்கு தில்லித் தமிழ்ச்சங்கமே அரவணைப்பும், ஆதரவும்தரும் புகலிடமும், புக்ககமுமாகத் திகழ்ந்ததை எவரும் மறுக்க இயலாது. தில்லியில் தென்னிந்தியர்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் கூடி வரும் சூழ்நிலை, அவசியம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு தென்னக மாநில மக்களுக்கும், அவரவர் தனித்தன்மை வாய்ந்த கலாசார நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவதற்கும், தாய்மொழிக் கல்வி மற்றும் கலை, இலக்கிய, இசை, நாடகத் துறைகளைப் பேணுவதற்கும் தனித் தனி அமைப்புக்கள் உருவானது இயல்பே. **இந்த வகையில் தில்லித் தமிழ்ச்சங்கம் இவற்றிற்கெல்லாம் மூலாதாரமானதும், மூத்த சமூகப் பணி அமைப்புமாகும்.** தலைநகரில் கடந்த காலங்களில் தமிழ்ச் சங்கம் ஆண்டுதோறும் தமிழ் விழாக்களை நடத்தி, தமிழ் நாட்டையே வியப்பிற்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாக்கிய, மகிழ்ச்சிகரமான, வரலாற்றில் மறக்க முடியாத கால கட்டங்கள் உண்டு. பிரபல விஞ்ஞானியும், சமய இலக்கியங்களில் ஆழ்ந்த பற்றுள்ளவருமான டாக்டர். கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து தலைநகரின் தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராக இருந்து அதன் அளப்பரிய பெரும் பணிகளினால் சர்வதேசத் தமிழர்களின் ஈடுபாட்டையும், ஈர்ப்பையும், மதிப்பையும் உடமையாக்கி உதவினார். டாக்டர் கிருஷ்ணன் அவர்களுக்கு உதவியாக, சங்கத்தின் உபதலைவராக அமைந்து கானாட் சர்க்கஸ்பகுதியில் ஏ.ஆர்.பி. கட்டட அறையொன்றில் இயங்கி வந்த சங்கத்திற்கு, ராமகிருஷ்ண புரத்தில் இருபது லட்சம் மதிப்புள்ள சொந்தக் கட்டடத்தை உருவாக்கி, அதன் பணிகளையும் விஸ்தரித்த பெருமை திரு. ஏ. வி.



குமாரி உமா பால சுப்ரமண்யத்தின் பரத நாட்டிய அரங்கேற்றத்தில் ஒருகாட்சி.



மத்திய உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு மக்வானு குமாரி உமா பானுவிற்குத் தனது பாராட்டுக்களை நல்குகிறார். வலது கோடியில் உமாவின் தந்தையும், 'விமல்' ஸ்தாபன ஜெனரல் மானேஜருமான இளைஞர் பானு.

அமுதசுரபி
ஜனவரி 1982
புத்தாண்டு இதழில்



எழுதும்
சரித்திரக்
குறுநாவல்

குப்புசாமி அவர்களைச் சேரும். திரு. ஏ. வி. கே. அவர்கள்தான், தில்லித் தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகர் என்கிற உண்மையும் சேரும்போது, அவருடையத் தமிழ்ப் பற்றும், தனிப்பெருமையும் மேலும் தமிழினப் பெருமக்களின் நன்றிக்கு உரியதாகிறது. டாக்டர். கே. எஸ். கே., திரு. ஏ. வி. கே. ஆகியவர்களின் இயல்பான பொதுப்பணியும், தமிழ்மொழி ஆர்வமும் தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தொண்டுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தன. தமிழரல்லாத தென்னிந்தியர், மற்றும் வட பாரத மக்களுக்குத் தமிழ்ப் பயிற்சி அளிக்கும் திட்டத்தைச் சங்கம் மேற்கொள்ளும் விதிமுறைகளும், செயலாக்கமும் உருவாயின! தொடக்க காலத்தில், சங்கக் கட்டடத்தில் தமிழ் வகுப்புக்களைத்தானே ஆசானாக அமைந்து நடத்தினர் திரு குப்புசாமி. இந்த ஆண்டு, இந்தத் தமிழ் வகுப்புக்களைத் தொடங்கி வைத்த, பாரதிய ஜனதா கட்சித் தலைவர் திரு. அடல்பிஹாரி வாஜ்பாய் அவர்கள், சங்கத்தின்—குறிப்பாக திரு. ஏ. வி. கே.யின் தமிழ்த் தொண்டை வானளாவப் புகழ்ந்தது, பொருந்தமே!

பாரதம், விவசாய, விஞ்ஞான, கலைத்துறை வளர்ச்சிகளில் உலகின் பெருங் கவனத்தைக் கவர்ந்துள்ள, மிகப் பெரிய நாடு என்பதை விட முதல் தர தேசமாகும் என்பதே உண்மை! பாரத கலாசார, மொழிகளில் இயற்கையாகவே ஒருமைப்பாடு ஊடுருவியுள்ளதை, இத்துறை தொடர்பான ஆழ்ந்த ஆராய்ச்சிகள் புலப்படுத்தியுள்ளன. ஆங்கிலம் சர்வதேச உறவிற்கு அவசியமானது. என்றாலும், அது, பாரதம் போன்ற எண்ணற்ற, தொன்மையான, அழகும் ஆழமும், அறிவு-ஞானச் சத்தும் கொண்ட ஜீவித மொழிகள் புழங்கும் நாடுகளில் நீண்ட நாட்களுக்கு ஆதிக்கம் செலுத்துவது—இயலாது என்றார் திரு வாஜ்பாய்!

'தமிழர் ஒருவர், பாரதத்தின் வெளியுறவு அமைச்சராக மத்திய அரசில் அங்கம் வகிக்கும்போது, ஐ. நா. சபையில் தமிழ் ஒலிக்கும், ஒலிக்க வேண்டும்! நான் வெளி விவகார அமைச்சராக யிருந்த கால கட்டத்தில் ஐ. நா. சபையின் வழக்கு மொழிகளில் ஹிந்தியையும் ஒன்றாக்கும் பணிகளைத் திட்டமிட்டேன்; தீவிரமாகவும் இதற்காக செயல்பட்டேன்' என்றார் திரு. வாஜ்பாய். ஹிந்தி, தேசிய மொழி. பாரதத்தின் சகல மொழிகளும் தேசிய அந்தஸ்து உடையனவை. வழக்கொழிந்ததாகக் கருதப்படும் சமஸ்கிருதத்திற்கு, உலகின் பிற பகுதிகளில் தரப்படும் முக்கியத்துவத்தை நாம் உணரவேண்டும், என்று கூறிய அவர், 'சமஸ்கிருத மொழி என்ற ஒன்று இல்லாமல் போயிருந்தால் ஹிந்தி, உருதுபோன்றமொழிகளின் கவிதை நயமும், உருவ வார்ப்பும், உள்ளார்ந்த உச்சரிப்பு அழுத்தமும் தோன்றுவதற்கே வாய்ப்பில்லாமல் போயிருக்கும்' என்றார்! சமஸ்கிருதம் ஆங்கிலத்தைவிட சர்வதேச அரங்குகளில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் அநாதி கால மொழியாகும். மொழிகளில் மூத்ததான தமிழ், பண்டைய இதிகாச, இலக்கியங்களுக்கான ஜீவநாடி என்கிற வகையில் சமஸ்கிருதம், ஆகியவற்றின் மேம்பாடுகளுக்கு முதலிடம் தருவதையே இந்தியப் பிரஜைகளின் பிரதானக் கருத்தாக, தலையாய கடமையாக, இருக்கவேண்டும் என்றார். மேலும் திரு. வாஜ்பாய் அவர்கள் 'தேசபக்தியுள்ள ஒவ்வொரு மனிதனும், முதலில் தனது தாய் மொழிக்கு அரியாசனம் அளிக்கவும், அதை உலக 'மைய' அரங்கில் அரசோச்சச் செய்யவும் ஆசைப்படவேண்டும். உயர்ந்த தேசியப் பிரஜையின் பரிசுத்தமான நாட்டுப் பற்றுக்கு, அவனது தாய் மொழிப் பற்றே அடிப்படை' என்பதையும் அழுத்தமாக சுட்டிக் காட்டி, தில்லித் தமிழ்ச் சங்கத்தாரின் தமிழ் மொழிப் பயிற்சி வகுப்புகளின் நோக்கத்தை மனதாரப் புகழ்ந்தார் திரு. வாஜ்பாய். இமயம் முதல் குமரிமுனை மட்டும் இந்தியனின் மொழிப் பற்றின், தேசியக் கடமைகளின் எல்லையாக இருப்பது போதாது; வால்கா முதல் கங்கை வரை எல்லைக் கோடிட்ட புரட்சிப் படைப்பாளரான ராகுல சாங்கிருத்யாயன் போன்ற இலக்கிய ஆசிரியர்களின் கண்ணோட்டத்தை விடக் கூடுதலான சர்வதேசப் பரப்பளவில், மிக ஆழமாக, விரிவாகப் படரவேண்டிய நமது தேசிய மொழிகள் தொடர்பான திட்டங்களை விரைவு படுத்த வேண்டிய அவசியம் நெருங்கியுள்ளதை நாம் மறத்தலாகாது என்ற அவர், காலஞ் சென்ற, அறிஞர் அண்ணா அவர்களின் மேடைப் பேச்சின் இனிமையையும் நினைவு கூர்ந்தார். "அண்ணா"வை எனக்கு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்திய நண்பர்கள், இவர் நமது ஹிந்திக்குப் பரம விரோதி என்றார்கள், என்றாலும், அவரது நாடாளுமன்ற சொற்பொழிவுகள் அனைத்தையும் ஆர்வமுடன் பருகினேன் நான். அண்ணாவின் ஆங்கிலமும், தமிழும் அவ்வளவு அருமையாக இருந்தன" என்றார், ஹிந்தி மொழியில் 'அறிஞர் அண்ணா'வாகத் திகழும், புகழ் வாய்ந்தப் பேச்சாளரும், அரசியல் வாதியுமான திரு. வாஜ்பாய்! ஃ

### குமாரி உமா சுப்பிரமணியம்

சுவாமி சங்கரதாஸ் கலை அரங்கில் தமிழக ஆளுநரின் துணைவியார் திருமதி சாந்தி சாதிக் அலியின் தலைமையில் குமாரி உமாசுப்பிர மணியத்தின் எழிலான நாட்டியம் இடம் பெற்றது. அடையாறு லக்ஷ்ம ணனின் மாணவியான இவர் விறு விறுப்பாகவும், கச்சிதமாகவும் அழ கிய பாவ பொலிவோடும் ஆடினார். மீரா பஜன் உயர்வாக இருந்தது. நிகழ்ச்சியை லயன்ஸ் கிளப் எஸ்பிள னேட் சென்டிரல் ஏற்பாடு செய்தி ருந்தனர்.



### குமாரி ஸ்ரீ கலாகுப்புசாமி

மயிலை பாரதிய வித்யாபவனில் திரு. டி.வி. நாராயணஸ்வாமி தலைமையில் தமிழ்நாடு இசைக் கல்லூரி மாணவ மாணவியர் இணைந்து நாட்டிய நிகழ்ச்சி அளித் தனர். குமாரி ஸ்ரீகலாவின் பேரணி நாட்டியம் பெரிதும் பாராட்டப் பெற்றது. குமாரி மலர் கொடியின் நட்டுவாங்கமும் டி.எஸ். சேஷாத்ரி யின் வயலினும், ஏ. நடராஜனின் மிருதங்கமும் பெரிதும் பாராட்டப் பெற்றன.



### மாஸ்டர் அரவிந் ராமதுரை

திருச்சி திருமதி மாலதி டாமினிக் கின் மாணவனான மாஸ்டர் அரவிந்த னின் பரதநாட்டிய அரங்கேற்றம் திருச்சி தேவர் ஹாலில் சென்னை நீதிபதி சாமிக்கண்ணு அவர்களின் தலைமையில் நடந்தது. அரவிந்தன் நல்ல தாளக்கட்டுடனும். பாவ பொலிவுடனும் அழகாக ஆடினார்.





### குமாரி விலாசினி நாட்டியம்

சென்னை தர்ம பிரகாஷ் அரங்கில் திருமதி காமாட்சி ஜெயராமனின் மாணவியான குமாரி விலாசினியின் பரத நாட்டியம் நடந்தது. பல அருமையான நிலைகளை விலாசினி சித்தரித்தாள். திருமதி கமலா பாஸ்கரனின் இசை உயர்வாக இருந்தது.

குயிலி

## அமுதசுரபி டிசம்பர் '56

# 25 ஆண்டுகளுக்கு முன்பு

தொடக்க நிலைப் பள்ளிச் சிறுவனாக நான் இருந்த காலகட்டத்தில் வெளிவந்த இலக்கிய மாத இதழைத் தற்போது படிக்க நேர்வது என்பதே ஒரு தனி அனுபவம் தான்; அதுவும் அந்தச் சமயத்தின் நாட்டு நடப்புகள், மனித நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் அனைத்தையும் பிரதிபலிக்கும் ஓர் சரித்திர சாசனத்தைக் குறித்து எழுதுவது என்பதே, கிடைத்தற்கரிய வாய்ப்பு என்றே கொள்ள வேண்டும்.

இன்றைய பத்திரிகையுலகில் மேற்கொள்ளப்படும் உத்திகள் பெரும்பாலும் முன்பே முயன்று பார்க்கப்பட்டவைதான் என்பதை நிருபிக்கும் வகையில், இந்த இதழின் அட்டைப் படத்திற்கு (ஓவியர் பெயர் குறிப்பிடப்படவில்லை) ஏற்றாற்போல் சிறுகதை எழுதும் போட்டி அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய எழுத்தாளர்களை இனங்கண்டு ஊக்குவிக்க இத்தகைய போட்டிகளை நடத்தியதுடன் மட்டுமின்றி, 'அமுதசுரபி' இளம் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தும் இலக்கியப் பணியை அன்று முதல் இன்று வரை, ஒரு வேள்வியாகவே தொடர்ந்து செய்து வருவதற்குச் சான்று, வளரும் எழுத்தாளர் வரிசை என்ற பெயரில் வெளியான சிறுகதைகள்.

இந்நாளின் ரயில் விபத்துக்களுக்கு முன்னோடியான அரியலூர் ரயில் விபத்து பற்றிய தலையங்கம் சமூகப் பிரக்ஞையைக் காட்டுகிறது; அதே போல், சூயென்லாயின் பாரத விஜயம், மற்றும் சூயெஸ் கால்வாய்ப் பிரச்னை பற்றிய துணைத் தலையங்கங்கள், தேசிய மற்றும் சர்வதேச அரசியல், சமூகப் பிரக்ஞையைத் தெளிவாக்குகிறது. இதைத் தவிர, இதழின் பொருளடக்கத்தைக் குறித்தும், சில அறிவிப்புகளைக் கொடுத்தும் ஆசிரியர் வழக்கமாக எழுதும் பகுதியும் இடம் பெறுகிறது. அரசியல், சமூகப் பிரச்னைகளைக் குறித்து, அத்தகைய தலையங்கங்கள், இப்போதைய 'அமுதசுரபி'யில் வெளி வருவதில்லை என்று தோன்றுகிறது.

'விந்தன்' எழுதிய 'அன்பு அலறுகிறது', 'சாண்டில்யன்' எழுதிய 'ஜலமோகினி' ஆகிய இரண்டு தொடர் நவீனங்கள், இந்த இதழின் முன்னும் பின்னும் வெளியாகிய பகுதிகளைப் படிக்கத் தூண்டுகின்றன.

'விக்கிரமன்' எழுதிய, 'சிலையும் ஜீவனும்' சிறுகதை உண்மையில் இரண்டு சிறுதைகளை உள்ளடக்கியிருக்கிறது. இரு பிறப்புகளில் தொடர்ந்து இறுதியாக வெற்றி அடையும் காதலின் கதை. ராதிகா (வேங்கடலக்ஷ்மி), கௌரவம் எங்கே? (எஸ். பி. ஹர்ஷன்), மனம் என்னும் புதிர் (வல்லிக் கண்ணன்), அக்னிப் பரீட்சை (கிருஷ்ணு), மாய மோகினி (ரமன்) ஆகியவை பிற சிறுகதைகள். வல்லிக் கண்ணன், குழந்தையின் மனப் போக்கைப் புரிந்து கொள்ள முடியாத பெற்றோரின் மனநிலையைத் தெளிவாகக் காட்டுகிறார், தன் சிறுகதையில். ஒவ்வொரு சிறுகதையின் தலைப்புடனும், அக்கதையின் உட்கருத்தை வெளிப்படுத்துகிற வகையில் சில வாக்கியங்களைப் போட்டிருக்கிறார்கள்.

கட்டுரைகளில், வேலூர் கோட்டையைப் பற்றி விரிவான தகவல்கள் போட்டோக்களுடன் நீடாமங்கலம் எஸ். வேதாந்தம் எழுதிய கட்டுரையும், நான் கண்ட அவதார புருஷர் எனும் தலைப்பில் ஸ்ரீலஸ்ரீ பன்றிமலை ஸ்வாமிகளுடன் தன் அனுபவங்களைக் குறித்து பி. கே. ரங்கராவ் எழுதிய கட்டுரையும், குஜராத்திய நாடோடிப் பாடலை ஆதாரமாகக் கொண்டு ஓர் அரச தம்பதியின் ஊடலைச் சுவைபட எழுதியுள்ள ம. சு. சீனிவாசனின் 'மண்பொம்மை பேசுமோ' என்ற இலக்கியக் கட்டுரையும் குறிப்பிடத் தக்கவை.

'மக்கள் சக்தியின் மாபெரும் சாதனை' என்ற கட்டுரை எளிய நடையால் நம்மைக் கவர்கிறது. சுதந்திர பாரதத்தை நிர்மாணிக்கும் பொறுப்பு எத்தனை யதார்த்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஆடுகின்றாள்' (தேவராம் நடராஜன்), நங்காய் நீ யிரங்காய் (தேவாஜி) பனித்துளி (புதுமைச் சித்தன்) ஆகியவை, இவ்விதழில் வெளியாகியுள்ள கவிதைகள்.

பெண்களுக்கு மட்டும் பகுதியில் பேரீச்சம்பழத்தின் பலன்களைப் பற்றியும் தையல் குறிப்புகளும் எழுதப்பட்டுள்ளன.

கர்நாடக இசையில் தீவிரமாயிருப்பவர்களுக்கு 'சுருதிபேதம்' என்ற பகுதி நல்ல வேலை கொடுத்திருக்க வேண்டும்.

பூச்செண்டு என்ற பகுதியில் சிறுவர்களுக்கான கதையைத் தவிர, பூச்செண்டு சங்கம் என்ற அமைப்பின் மூலம், சிறுவர் சிறுமியரின் எழுத்தார்வத்தை 'அமுதசுரபி' வளர்த்த விதமும் புலப்படுகிறது. அமரர் திருலோக சீதாராம் அவர்கள் எழுதியுள்ள 'உயிர் உறவு' சிந்தனையைத் தூண்டும் கட்டுரையாக அமைந்திருக்கிறது. 1956ஆம் ஆண்டில் 'அமுதசுரபி'யில் வெளியான சிறுகதைகளில் சிறந்ததொன்றைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை வாசகர்களிடம் ஒப்படைத்து, அதன் மூலம் சிறுகதைத் துறைக்குப் பெருமை சேர்ப்பதுடன், பத்திரிகைக்கும் வாசகருக்குமிடையிலான கருத்துப் பரிமாற்றத்திற்கும் நல்வழி வகுத்துள்ள பாங்கினை, இவ்விதழில் காண முடிகிறது. ஆங்காங்கே பொன்மொழிகளும், தகவல் துறைகளும் இதழை நிரப்பியுள்ளன.

பழைய பத்திரிகை என்றாலே, விளம்பரங்களை ஊன்றிப் பார்க்கத் தோன்றும். அந்தக் காலத்தில் என்னென்ன பொருட்கள் பிரபலமாய் இருந்தன; எந்தெந்த நிறுவனங்கள் முக்கியமாய் இருந்தன என்பதை அறியும் ஆவல்தான் காரணம். அப்படிப் பார்க்கும் போது இரண்டு விஷயங்கள் கண்ணில் பட்டன; சென்னை நகரில் ஊதுவத்தி தயாரிப்பு நிறுவனத்தின் தொலைபேசி எண் 4890 என்பதைப் பார்த்து, இப்போது சென்னையில் உள்ள தொலைபேசித் தொடர்புகளின் எண்ணிக்கையை ஒப்பிட்டு நினைக்கையில் வியப்பு தோன்றுகிறது. இதேபோல் வங்கி ஒன்றின் (பஞ்சாப் நேஷனல் பாங்க்) விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதன் கிளைகளின் எண்ணிக்கையும், நிதித் தொகையும், இன்று எந்த நிலையை எட்டியிருக்கும் என்றெண்ணுகையில், ஒரு மலைப்பு!

இவ்விதழில் வெளியாகியுள்ள ஒரு தகவல், புதுவையில் ஒரு புதிய கப்பல் கட்டும் துறை அமைக்கப்படவிருப்பதைத் தெரிவிக்கிறது. இன்னமும் பிறப்பெடுக்காத அந்த திட்டத்திற்கு உயிர் கொடுக்கச் சொல்லி அரசிடம் தூது செல்வதற்கு, இச்செய்தியையே ஆதாரமாகக் கொள்ளலாம்.

மொத்தத்தில், இந்த இதழைப் படித்து முடித்ததும், கால யந்திரத்தில் பயணம் செய்து விட்டு வந்தது போல் இருந்தது. — தி. அசோகன்



# பாலமாகும் சுவர்கள்

மோஹினிசட்டர்ஜி

அந்த விமானத்தில் வந்து இறங்கியவர்களில் சாருமதி மட்டும் தனியாக இருந்தாள். கையில் வெள்ளி பார்டர் போட்ட கரு நிற ப்ரீஃப் கேஸ். வலது கையில் இது. முதலில் ஒரு தங்க வளையல்... கங்கணம் மாதிரி... அடுத்து...ம்... ஒன்று...இரண்டு...எட்டுக் கண்ணாடி வளையல்கள் ... பச்சைக் கலரில்... நாதமாக வெட்கப்பட்டுக் கொண்டன...இன்னொரு தங்க வளையல், கண்ணாடி வளையல்களைச் சிறைப் படுத்தி இருந்தது.

'அரைவல்' (வருகை) டெர்மினலைப் பார்த்தாள்... சென்னைக் காற்றை நுரையீரல்களில் நிரப்பிக் கொண்டாள். பெட்ரோல், டீஸல் புகைகளின் வாசனை... யாரோ புகைக்கும் சிகரெட் நெடி, அவள் கூந்தலின் பாதி வாடிய மல்லிகைப் பூ, சட்டென்று அவளை உரசிக் கொண்டு போகும் அந்த நளின ஸ்திரீயின் லாவெண்டர் நறுமணம், அவள் புடவை வாசனை...

சென்னைக் காற்று ஏராளமான வாசனைகளை இரவல் வாங்கிப் புற்று நோய்ப்பட்டிருந்தது. அதன் இயற்கை வாசனை ஜீவனை இழந்து கொண்டிருந்தது.

இடக்கையின் இரு விரல்களால் தன் பச்சைப் புடவையின் கொசுவங்களைச் சேகரித்துப் பிடித்தாள்... திரும்பி, தன்னைப் பத்திரமாகக் கொண்டு வந்து சென்னையில் ஒப்படைத்த விமானத்தைப் பார்த்தாள். லேசாகச் சிரிப்பு வந்தது. விமானத்தை லேசாகத் தடவிக் கொடுத்து, 'சமத்து' பட்டம் வழங்க ஆசைப்பட்டாள்.

சாருமதி இப்படித்தான், உயிரற்ற பொருட்களின் மீது பாசத் தூற்றல்கள் காட்டுவாள்.

அலுவலகத்தில்—

எழுதிக் கொண்டிருக்கும் போதே நிறுத்தி, தன் பேனாவைக் கனிவு கொஞ்சப் பார்ப்பாள். அதனுடன் ஏதோ பேசுவது போலிருக்கும்... வளையல்களை ஒவ்வொன்றாகக் கலைத்து, எண்ணி, திரும்பக் கலைப்பாள். வளையல்களின் ஆரோக்கியத்தைப் பரிசோதிப்பது போலிருக்கும்...டெலிபோன் டயலைப் பாசமாக நீவிக் கொண்டிருப்பாள்.

விமானம், தன் இரண்டு மணி நேர உறவுகள் பிரிந்து போக அநாதையாக நின்றது. சோகமாக மூக்குப் புடைத்திருந்தது.

சாருமதி தனியாக நடந்தாள். கால்களின் கீழே கான்க்ரீட் சாலை இருப்பது தெரியாமல் சந்தோஷ வானத்திற்கு எல்லோரும் இறக்கைகள் விரித்திருந்தார்கள்.

இந்திய சுற்றுலாத் துறை நடத்திய சித்திரப் போட்டியில் முதல் பரிசு பெற்ற பத்து வயதுச் சாருமதி லண்டனிலிருந்து பம்பாய் மீண்டு, சுற்றுலா முடித்து, இதே விமானத்தில் சென்னை வந்திருந்தாள்...

''ஐ'ம் நித்யா...'' என்று குரலில் மழலை காட்டினாள். அவள் சிறிய விழிகளில் சந்தோஷம் பூச்சிதறலாக இருந்தது. நாசி ஓரத்தில் உற்சாகம் தளும்பியது. தனியாக லண்டன் சென்று திரும்பியவள்.

ஜி. எஸ். டி. சாலை வந்ததும், டாக்ஸிகளின் மஞ்சள் முதுகுகள் தெரிந்தன.

சாருமதி ஒரு டாக்ஸியை விளித்தாள். ஹோல்டாலையும், பெரிய சூட்கேஸையும் டிக்கியில் புதைத்தாள்.

''டீஸண்ட்டா... ஒரு ஹோட்டல்...அதுக்குப் போங்க... தினம் வாடகை முப்பது ரூபா வரைக்கும் இருக்கலாம்...''

டிரைவர் மீட்டரின் மணிக் கழுத்தைத் திருக, அது 'குறைந்த பட்சம்' விழிகளில் காட்டியது.

''ஏம்மா சொந்தக்காருங்க இல்லியா?''

''உன் கேள்விக்கு ரெண்டு விதமாப் பதில் சொல்லலாம் டிரைவர்... சொந்தக்கார் டெல்லிலே இருக்கு. இங்கே சொந்தக்காரங்க யாரும் இல்லே...'' டிரைவரின் காவிப் பற்களின் ஒழுங்கினம் பின்பிம்பக் கண்ணாடியில் தெரிந்தது.

வண்டி கிளம்ப, சாருமதி டிரைவருக்குக் கட்டளையிட்டு, ஒரு நிமிஷம் கேட்டு, எதிரே வெள்ளைப் பெட்டிகளாகப் பாய்ந்து கொண்டிருந்த மின் வண்டியின் கம்பீர நாட்டையை ரசித்தாள்.

''மெட்ராஸுலே சொந்தக்காரங்களை நம்பித்தான் எல்லாரும் இருக்காங்களா? நா தனியா... இருந்திருக்கேன்... இருப்பேன்.''

டிரைவர் வாய் அடங்கினான்...

''டிரைவர் நா ஊருக்குப் புதுசு. எந்த வழியா வேணும்னாலும் போ. எங்கிட்ட இப்ப இருக்கிற பணத்தைக் கொடுக்கிறேன். மீதிக்கு செக் அனுப்புறேன். உன் அட்ரஸ் என்னப்பா?''

''டமாஸுமா இது... என் கார்லே இருக்கிறது யாரு பாரும்மா! கோலவிழி மாரியம்மன். அதுவும் பொண்ணு ... நீயும் பொண்ணு. ரெண்டு பேருகிட்டேயும் நா வொண்ணுத் தாம்மா நடந்துப்பேன்...''

''சந்தோஷம்...''

ஸீட்டில் முதுகு பதித்தாள்... காற்றில் தப்பிய கேசக் கற்றைகளைப் பிடித்து,பாசமாகப் பார்த்து, காது வழியாகப் பின் தள்ளினாள். டிரைவர் கடுகிப் போய், ஆட்டுக்குட்டி ஒன்றின் மேல் ஏற்றப்போய்த் தப்பிக்க, சாருமதி அவனைக் கடிந்தாள். பின் கண்ணாடி வழியாகப் பார்த்து, ஆட்டுக்குட்டி பத்திரமாக இருப்பதை நிச்சயித்துக் கொண்டாள். மீட்டர் முட்களின் தள்ளாடலை ரசித்தாள்.

''ஆபீஸ் எங்கேம்மா?''

''அபிராமபுரம்...''

''அப்ப மயிலாப்பூர்லே ஸ்டே பண்ணிக்கம்மா...''

''பார்க்கலாம்...''

எட்வர்ட் எலியட்ஸ் சாலையில் ஒரு ஹோட்டலைத் தேர்ந்தெடுத்தாள்.

கலைந்திருந்த அறையை ஆர்வமாக ஒழுங்கு படுத்தினாள். அலுவலக ரிப்போர்ட்களைப் பார்த்தாள்.

''யாருமா?... நீ பாட்டுக்கு நொழையறே?... இது பிரைவேட்டு ஆபீசு...யாரைப் பார்க்கணும்?''

குட்டிச் சுவராக ஒருவன் எழுந்தான். இவன் கறுப்புச் சுவர். பார்க்கலாம்.

''பர்ஸன்னல் மானேஜரைப் பார்க்கணும்.''

''அவுரு ... டிரான்ஸ்பர்லே பூட்டாரு. புத்ஸா ஒரு அம்மா வரணும்...''

''இன்னிக்கு அவங்க ஜாய்ன் பண்ணறதா கேள்விப் பட்டேன்.'' —சாருமதி உதட்டில் வெடித்த சிரிப்பைக் கர்ச்சீப்பினுள் ஒற்றிக் கொண்டாள்.

''பொண்ணுதானேம்மா... மெதுவ்வா வரும்...வருதோ இல்லியோ...கொழந்தை...குட்டி... புருஷன்...அவனுக்கு வேண்டியது... ரிஸப்ஷன்லே குந்து பார்க்கலாம்... டேய் கந்த்ஸாமி...பிடி எடுறா...''

''காண்டீபா ...இங்கே வா... காப்பி வாங்கிண்டு வாயா...'' காண்டீபன் என்னும் கரிய சுவர், ரிஸப்ஷன் மேஜையில் கவிழ்ந்தான். ரிஸப்ஷனிஸ்ட் தன் புடவை நுனியைப் பின்னுலிருந்து பிடித்து, இடையில் செருக, காண்டீபன் விழி அகற்முமல் இருந்தான்.

சாருமதி எழுந்து, வரவேற்புப் பெண்ணிடம் போய், ''மே ஐ...'' என, அவள், ''வொய் டோண்ட் யு வெய்ட்?... காப்பி வாங்கிண்டு வா... காண்டீபா...'' என்ருள்.

தொலைபேசி போர்டில் தெரிந்த ஏராளத் துளைகளில், ஒரு துளையில் 'ப்ளக்'கை ஆக்ரோஷமாகக் குத்தினுள்... மஞ்சள் விளக்கு ஒளியிழந்தது.

இவள் இன்னெரு சுவரா?... கம்பெனிக்கும், வெளி உலகிற்கும் பாலம் கட்ட வேண்டியது இவள் பணி. இன்மொழிக் கற்கள் கொட்டி, புன்னகை பூசிக் கட்ட வேண்டிய பாலம்...

பெண்ணே, சுவர் எழுப்பாதே...

''என்னம்மா வேணும் ஓங்களுக்கு...?''

வரவேற்புப் பெண்ணிடம் போய்,

''மே ஐ ஆஸ்க் யூ டு ஸீ மை ஆர்டர்?'' எனத் தன் நியமன உத்தரவைச் சாருமதி நீட்டினுள்.

வரவேற்புப் பெண் பதறிப் போனுள்...கலந்து போய் வாய் குழறினுள்... அவள் முன்கை ரோமங்கள் சிலிர்த்தன.

''ஐ' ம் ஸோ ஸாரி மேடம் ஐ' ம்...''

''டேக் இட் ஈஸி... கமலா...''

''காண்டீபன்! இவங்கதான் புது பர்ஸானல் மேனேஜர்... ரங்கசாமி! ரங்கசாமியைக் கூப்பிடுப்பா. இவங்களே இவங்க சேம்பருக்கு கூட்டிட்டுப் போகச் சொல்லு...'' காண்டீபன் தன் உயரம் குறைந்து, உருவம் கரைந்து குன்றிப் போனுன்.

ரங்கசாமி வந்ததும் சாருமதி அவனுக்கு வணக்கம் சொன்னுள். ரங்கசாமி காக்கியில் கோட் அணிந்து, டர்பன் கட்டியிருந்தான். கணுக்கால் வரைதான் வேஷ்டி ஆசைப்பட்டிருந்தது. இடது கணுக்காலின் முட்டியில், சீழ் கசிந்து கொண்டிருக்கும் புண்ணில் ஈக்கள் சுவாரஸ்யம் காட்டின. ரங்கசாமி, குளம்பு தட்டும் குதிரை மாதிரி இடக்காலை அடிக்கடி தரையில் தட்டி, ஈக்களை அதிர அடித்தார்.

''நா இந்த ஆபீஸ்லே முன்னடி அக்கௌண்ட்ஸ் க்ளார்க்கா இருந்தேன்...கம்பெனி...இப்போ...ப்யூனு எக்ஸ்டென்ஷன் கொடுத்திருக்கு... இத்தனை ஜீவன் இருக்கு... என்னை நம்பி...'' என்று அத்தனை ஜீவன்களையும் சொன்னுன்.

''கால்லெ என்ன அடி ரங்கசாமி? கவனிக்க வேண்டாம்?'' ''ப்ச்! விட்டு கதவு அடிச்சிருச்சுங்கம்மா...''

கம்பெனியில் சுறுசுறுப்புப் புயல் உருவாகியிருந்தது. எல்லோரும் அவசரமாகச் சக்கரங்கள் கட்டியிருந்தார்கள்.

சிலர் எழுந்து, காலை வணக்கம் செலுத்தினர்கள்... சிலர் ஆக்ரோஷமாகக் காப்பி உறிஞ்சினர்கள்... புகையிலை அடக்கினர்கள்...சிலர் புடவைத் தலைப்பின் பூக்களை எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

சாருமதி தன் அறைக்குப் போகும் வழியில்,சற்றுத் தாமதித்து டைப்பிஸ்ட் இருக்கைக்குப் போனுள்...டைப்பிஸ்ட் இளைஞன் முழங்காலைப் பார்த்தான்.

சிலிண்டரில் இருந்த காகிதம் பார்த்தான்...

சாருமதி அவனிடம் போய்க் குனிந்து, ''இங்லீஷ் டைப்ரைட்டர் தானே இது?'' என்ருள். டைப்பிஸ்ட் மலங்க, ''தமிழ் புஸ்தகம் பார்த்துண்டே டைப் பண்ணறீங்களே ஸார்... அதான் கேட்டேன்...'' என்று சாருமதி சிரிப்பை அடக்கினுள்.

''ஸாரி மேடம்...ஸாரி...''

''நாட் நெக்ஸ்ட் டய்ம்...யுவர் நேம்?''

''பாஸ்கர்...''

''நைஸ்...ஐ' ம் சாருமதி...மிஸஸ் சாருமதி சுப்ரமண்யன்...துரதிருஷ்டமா இன்னிலேந்து யுவர் பர்ஸானல் சீஃப்.''

கம்பெனிக்குள் திடீரென்று சில ஆக்ரோஷக் குரல்கள் பிசாசாகப் புறப்பட்டிருந்தன. பெண்களும், ஆண்களுமாக ஒரு கூட்டம் சாருமதியைச் சிறைப் படுத்தியது. சாரு, எச்சரிக்கை! இவர்களின் கண்களில் சுவர்கள் எழும்பியுள்ளன... சாரு...உடைத்தெறி...

கோஷப் புழுதிகள் கிளம்பின...

''குழந்தை பாதுகாப்பகம் தேவை...தேவை...'' என்று குரல்கள் வெடிக்க, கரங்கள் உயர்ந்தன

''வீ வாண்ட்...க்ரெஷ்...க்ரெஷ்'' என்று ஒரு இளைஞன் எச்சில் தெறித்தான்...மீசை துடித்தான்...சிலர் கோரிக்கை அட்டைகளை உயர்த்தினர்கள்...பெண்கள் சிலர் தம் சோளிகளில் 'குழந்தை பாதுகாப்பகம் உடனே தேவை' என்று அட்டைகள் காட்டினர்கள்.

ஓ! புதிய உறவுப் பாலம் அமைக்க வந்தேன்...சுவர்களாக எழுந்துள்ளன...

சாருமதி கைகளை மார்பின் குறுக்காகக் கட்டிக் கொண்டாள்...தெளிவான குரலில், ''லுக் ஹியர்... இந்த மாதிரி கெரோ அது... இதுன்னு ஆரம்பிச்சீங்கன்னு... நாம எங்கேயுமே போக முடியாது. என்னை ஜெயில் படுத்திடலாம். ஃபைன்...ஆனு நீங்களும் நகர முடியலே...கவனிச்சீங்களா?''

''மீட் அவர் டி...மா...ண்ட்ஸ்.''

''தட்ஸ் மை ஜாப்... ஐ' வ் கம் ஹயர்...டு லுக் ன்டு தட். ஃபேஷன் ஷோ நடத்த வரலே...கம்...வித் மி டிஸ்கஸ் அக்ராஸ் மை டேபிள்...'' அவள் குரலின் அதித சக்திக்கு, ஏனைய குரல்கள் கட்டுப் பட்டிருந்தன...

சாருமதி கூட்டத்தை விலக்கித் தன் அறைக்குப் போனுள்...

''லீடர் யாருப்பா...உள்ளாற போ...''

''ரங்கசாமி... எல்லாரையும் உள்ளே அனுப்பு...கால் மை பி.ஏ....''

பி. ஏ. ராகவன் வெற்றிலைக் குதப்பலில் கன்னம் புடைத்திருந்தார். சாருமதியின் மேஜையில் கவிழ்ந்து, ''என்னம்மா...ட்ராவல் எப்படி யிருந்தது?...எங்கே ஸ்டே பண்ணிருக்கேம்மா...''

''மிஸ்டர் ராகவன்! கட் தட் லவ்ஸி டாக்...ஐம் யுவர் பியெம். நாட் யுவர் டாட்டர்...வொங்க எடம் எதுன்னு தெரிஞ்சுக் கோங்கோ... நௌ...கெட் மீ யுவர் ஸ்டாஃப் ஃபைல்...''

''மேடம் நீங்க மதராஸியா?...''

''இந்தியன்...''

வாழ்க்கையில் சாருமதிக்கு ஆச்சரியமான, சந்தோஷமான உயர்வுகள் கிடைத்திருந்தன. இருபத்தியாறு வயதிற்குள் முதுகலை பொருளாதாரம், அலுவலர் நிர்வாகத் தொழில் உறவுத் துறையில் இன்னெரு முதுகலை டிப்ளமோ முடித்திருந்தாள் ... ஏராளமான மூலதனமும், பெயரும் பெற்றிருந்த கம்பெனி ஒன்றில் பர்ஸானல் எக்ஸிக்யூடிவ்வாகச் சேர்ந்து, டெல்லியில் பணியாற்றி, மூன்றே வருடங்களில்பர்ஸானல் மேனேஜராகப் பதவி ஏற்றம் பெற்று, சென்னையிலுள்ள 'ப்ரின்ஸிபல் ஆஃபீஸ¬'க்கு மாற்றல் பெற்ருள்.

பதவி உயர்வைச் சாருமதியின் கணவர் எதிர்த்தார்.

'சாரு...கம்பேஷனேட் க்ரெவ்ண்ட்ஸ்லே ரிடென்ஷன் கேளு...!


'ந்நோ...ஐ டோண்ட் வான்ட் எனிவொன்ஸ் கம்ப்பாஷன்... நா போகத்தான் போறேன்... ஒங்களுக்கு டிரான்ஸ்பர் கெடைச்சா வாங்கோ.'

''ஏண்டா, ரமணி...ப்ரமோஷன்னு ... நறைய சம்பளம் வருமேடா! சாருபாட்டுக்கு போகட்டும்...அப்புறம் ஒரு வருஷத்துலேயோ...ஆறுமாசத்துலேயோ... மாத்திண்டு வந்துடட்டும்...''

— இது கணவரின் அம்மா.

உதவி பர்ஸான்னல் மேனஜர் வசீகர இளைஞன்...நக நுனியில் கம்பெனியின் சட்டங்களைக் காட்டினான்.

''மேடம், கம்பெனி சட்டங்களைப் பார்த்தா...க்ரெஷ் ... அதாவது குழந்தைகள் காப்பகம் தர முடியாது...''



## சாட்சியில்லை....

வானத்தில் செல்லுகின்ற நிலவு தன்னை
வளர்கின்ற காதலுக்குச் சாட்சி யாக்கி
நானென்னை ஒருவனுக்கு விருந்தாய்த் தந்தேன்.
நாயகனோ எனையள்ளிச் சுவைத்த பின்னே
வானத்தில் பறந்தோடும் பறவை போல
வாடவிட்டே ஓடிவிட்டான்; வளர்ந்தி ருந்த
வானத்து நிலவிங்கே தேய்ந்த தாலே
வந்தெனக்குச் சாட்சிகூற நிலவு யில்லை.

பூத்தமலர் கொண்டயெழிற் சோலை தன்னில்
புதுமலராய் நான்விரிந்தே நாளு மங்கே
காத்திருப்பேன்; காதலனும் வருவான். என்னைக்
கையேந்திக் களித்தாட மயங்கிச் சாய்வேன்.
பூத்திருக்கும் மலரெல்லாம் கூச்ச மின்றிப்
பார்த்திருக்கும் இதனையெல்லாம்; இன்றைக் கேனோ
கூத்தாகிப் போனகாதல் கதையை இங்கே
கூறிடவோ மலர்களில்லை சருகே மிச்சம்.

அவனுடனே நான்இணைந்து ஊரைத் தாண்டி
அன்றுடம் செல்லும்வழி ஒற்றைப் பாதை.
அவனின்றி நான்நடக்க மறந்த தாலே
அந்தவழி எந்தவழி மறந்து விட்டேன்.
சுவடேதும் இன்றியந்தப் பாதை கூடச்
சிறுபுற்கள் முளைத்ததனால் மறைந்த தங்கே!
தவறிவிட்ட என்னிதயக் காதல் தன்னைத்
தெரியுமெனக் கூறுதற்கோ பாதை யில்லை.

வசந்தமென்னும் பருவத்தில் ஓர்நாள் அந்த
வாலிபனின் மார்பினிலே சாய்ந்தேன். என்னை
அசதியுடல் காணும்வரை ஆட்ப டுத்தி
ஆடும்வரை ஆடியின்ப மயக்கம் தந்தான்.
விசைமிகவே கொண்டோடும் வைகைப் பெண்ணாள்
வெட்கமின்றிப் பார்த்தபடி சென்றாள், இன்றோ
வசந்தத்தின் பின்வந்த கோடை நாளில்
வைகையிலே நீரில்லை சாட்சி கூற...!

— ஏர்வாடி எஸ். இராதா கிருஷ்ணன்

## வெறும் கனவு...!

பட்டுப் பூவுடல் தொட்டுத் தழுவிநான்
பாடித் திரிந்ததுவும் - இளஞ்
சிட்டுப் போலவே வட்ட விழிகளில்
திரிந்து மகிழ்ந்ததுவும் - தினம்
எட்டுத் திசையிலும் இன்ப வெளியினில்
ஏறிச் சிரித்ததுவும் - பனி
மொட்டு கால்களில் பட்டு வாழ்க்கையை
முடித்த கதையாகும்...!

நெஞ்ச வெளியினில் கொஞ்சும் நிலவென
நித்தம் வந்ததுவும் - உன்
பஞ்சு மெல்லடி நெஞ்சந் தன்னிலே
பாடல் தந்ததுவும் - என்
வஞ்சம் அறிந்திடாப் பிஞ்சு மனதினை
மாற்றி வைத்ததுவும் - ஓ
பஞ்சில் நெருப்பெனப் பாலை நீரெனப்
பாழ்பட் டழிந்ததடி !

ஆடி நடந்தெமைப் பாட வைத்துநீ
அன்பை விதைத்தாயே - துயர்
தேடி வந்தெனை வாட வைப்பதைச்
சிரிப்பால் சிதைத்தாயே ! - நிதம்
நாடி வந்துநீ கூடி மகிழ்ந்ததை
நாளும் நானினைத்து - அடி !
வாடித் துடித்திட ஓடி மறைந்தனை
வாழ்வைப் புதைத்தாயே...!

சென்னிமலை தண்டபாணி

## தமிழைக் கண்டேன்

எழுகதிரில், முழுநி லாவில்,
அலைகடலில், தென்றல் தன்னில்
முழுகருவி குளிரில், பூக்கும்
மலரழகில், தேன்சு வையில்
அழுதுசிரி மழலை தன்னில்
அன்பிற்கு ரியாளின் கண்ணில்
பழுதிலாத பண்ணி சையில்
பாரதத்தில் தமிழைக் கண்டேன்

வலங்கொண்டான்

''என்னய்யா பெரிய ரூல்ஸு... ஜிஎம்மு... ரூல்ஸ் பார்த்தா காருலே...கம்பெனி காருலே... மகாபலிபுரம் போய்ட்டு வந்தாரு?''

''ஷ்...குறுக்கே பேசக் கூடாது... யெஸ் மிஸ்டர் வசிகரன்...''

''அதாவது ஐம்பது பெண்கள் மினிமம் இருந்தாத்தான் க்ரெஷ் தர முடியும். இப்போ இங்கே... நாற்பத்தி ஏழு பேர் இருக்காங்க... மிஸஸ் லக்ஷ்மி ஸ்ரீநிவாஸ் ப்ரொபேஷனர்...''

''பட் ஷி ஹேஸ் எ பேபி... ரைட்... நாம ஐம்பதா ஆக்கிடலாம்...இன்னொரு ரிஸப்ஷனிஸ்ட்... இன்னொரு டைப்பிஸ்ட் அப்புறம்... நா...ஐம்பது பெண்கள்...''

''ரெக்ரூட்மெண்ட் பத்தி ஜிஎம்மைக் கேட்கணும் மேடம்.''

''மிஸ்டர் வசிகரன்...நா உங்க ஜிஎம்மோட ரப்பர் ஸ்டாம்ப் இல்லே...நா எங்கே நிக்கறேன்னு எனக்குத் தெரியும்...என் சக்தி எதுன்னு எனக்குப் புரியும்...உங்க எல்லை எதுன்னும் உங்களுக்குத் தெரியும்...''

''நீங்க மேனேஜ்மெண்ட் ஸைடுமா...யூனியன் பசங்களை சப்போர்ட் பண்ணறிங்களே...''

''மிஸ்டர் ராகவன், ஸீ வேர் ஜஸ்டிஸ் லைய்ஸ்...ஐ மீன் எல்...ஐ... ஈ...எஸ்...இந்த மாதிரி 'பசங்க'— அது மாதிரி வார்த்தைகளைப் பிரயோகிக்காதிங்க...''

சுற்றியிருந்த பெண்கள் சிலர் வாய்விட்டுச் சிரித்தனர்...சாருமதி, வசிகரனிடம் கம்பெனிக் கணக்கின் ஒரு பகுதியைக் காட்டினாள்...சேரில் பின் சாய்ந்து, நிமிர்ந்து, இருகை விரல்களில் பென்சிலைச் சுழற்றினாள்.

''இந்தக் கம்பெனி தன்னோட கட்டடத்துக்காக மாசம் ரெண்டாயிர ரூபா ரெண்ட் கொடுக்கறது...ஜிஎம்' ஸ் க்வார்ட்டர்ஸ் ஆயிரத்து முந்நூறு வாடகை... தென்...பர்ஸான்னல் மேனஜர்... அது நான்...அந்தக் குடியிருப்புக்காக எண்ணூறு ரூபா மாச வாடகை... சிறிது நேரம் யோசித்தாள்.

''நா என்னோட க்வார்ட்டர்ஸை காலி பண்ணிடறேன்.... அது இவங்களோட குழந்தைகளுக்குப் பாதுகாப்பகம்...ஐ கேன் ஸ்டே இன் எ ரூம்...''

''மேடம்!''


சாருமதி எழுந்து போய்க் குளிர் சாதனத்திலிருந்து நீர் எடுத்துக் குடித்தாள்.

''அம்மா, நீங்க பாட்டுக்கு க்வார்டஸ்ஸுலே ஒரு ரூம்லே இருங்கம்மா...''

''நல்லது...வேற ஏதாவது?...''

கூட்டம் வாய்ச் செயல் இழந்து நின்றது ... கோஷமிட்டு, சாருமதியைச் சிறைப்படுத்தியவர்களின் கண்களில் தெரிந்த சுவர்கள் இடிந்துபோய்ப் பாலங்கள் தோன்றின. ஃ

## வைக்கோல் ஓவியம்!



கால் நடைகளிடம் வைக்கோல கிடைத்தால் அதன் வயிற்றுக்கு உணவாவதைப் பார்த்திருக்கிறோம். சிறந்த கற்பனையாளர்களிடம் அது கிடைத்தால் ? அவர்களின் கற்பனைக்கு உணவாகி, அதன் விளைவாக கண்ணைக்கவரும் 'வைக்கோல் ஓவியங்கள்' வடிவெடுத்து விடும்! மிக அற்பமான வைக்கோல், ஓவியமாகிவிட்டால் அற்புதமான ஒரு கலைப் பொருளாக மின்னுவதைப் பலர் பல வீடுகளில், கண்டு இருக்கலாம்! இந்த வைக்கோல் முறை ஓவியங்களை எவ்வாறு தயாரிக்கலாம்?

**தேவைப்படும் பொருள்கள்:**

வைக்கோல் (இது சென்னையில் பெரிய ஃபான்ஸி ஸ்டோர்களில் கைவினைப் பொருள்களைத் தயாரிக்க என்று நேர்த்தியாக வெட்டப்பட்டுக் கிடைக்கிறது.) 'ஸ்டிரா' என்று கேட்டால் குழல் போன்ற அமைப்பில் இது கிடைக்கும்! அந்த வைக்கோலின் நிறத்தில் ஆயில் பேப்பர்-1, ஒட்டுவதற்கு பெவிகால்: கருப்பு நிற வெல்வெட் பேப்பர் அல்லது கருநீலம்-1 கத்தரிப்பதற்கு கத்தரிக்கோல், பென்சில்-1 வெல்வெட் பேப்பரை மத்தியில் ஒட்டுவதற்கு ஒரு வெள்ளை நிற கார்டு போர்டு. இது 25 செ. மீ × 15 செ. மீ. அளவில் இருந்தால் போதுமானது.

**செய்முறை:**

படத்தில் காணப்படுவதைப் போன்ற ஓர் இயற்கைக் காட்சியை உருவாக்க, வெள்ளை நிற அட்டையில் கருப்பு அல்லது கரு நீல வெல்வெட் பேப்பரை மத்தியில் ஒட்டுங்கள். 1 செ. மீ. அளவு பார்டர் இருந்தால்தான் படம் அமைப்பாகத் தெரியும். பின்னர் ஸ்டிரா எனப்படும் வைக்கோலை ஒரு முறை தண்ணீரில் நனைத்து நகத்தால் அழுத்தி நீவி விடுங்கள். வைக்கோல் தட்டையாகி நாடாவைப் போல் ஆகிவிட்டதல்லவா? பிறகு அதன் மடிந்த வாக்கிலேயே (இலை தைக்கும் நபர்கள் துடைப்பக் குச்சியை கிழிப்பது போல) நகத்தால் கீறிக் கிழிக்கவும். மடித்தபடியே துண்டு பண்ணினால் ஒரு குச்சி நான்கு துண்டுகளாகி விடும். ஆயில் பேப்பரை கத்தரித்து குச்சியின் நீளத்திற்கு அதாவது கடையில் துண்டுகளாக கிடைத்த வைக்கோல் குச்சியின் நீளத்திற்கு, ஆயில் பேப்பரை வெட்டி வைத்துக் கொண்டு, அதன் மேல் அந்த வைக்கோலை வரிசையாக நீளவாட்டில் இடை வெளியே இல்லாதவாறு மேல் பாகமாகப் பார்த்து ஒட்டிவைத்துக் கொள்ளவும். இதை நன்கு படியவைத்து எடுத்துக்கொண்டு, இதன் பின் பக்கம் குடிசையையும் படகையும், மரத்தின் தண்டு பாகத்தையும் தண்ணீர் பரப்புக்கும் தொலைவில் தெரியும் மலைப் பகுதியையும் (திருப்பிவைத்து டிரேஸ் செய்து) கத்தரித்துத் துண்டுகளாக எடுத்துக் கொள்ளுங்கள். நிலவு வட்டமாக இருக்க காம்பஸ் வைத்து, பின்பக்கம் வட்டம் வரைந்து அதையும் வெட்டி வைக்கவும். இந்த வேலைகளை முடித்தபின் வெல்வெட் பேப்பரின் மேல் பாகத்தில் அப்படியே இவற்றைப் பதிக்க முயலலாம். அப்படி வர இயலவில்லை என்று எண்ணுபவர்கள் வெள்ளை நிற போஸ்டர் கலரால், அந்த கருநில வெல்வெட் பேப்பரின்மேல் பகுதியில் ஸ்கெட்ச் எடுத்துக்கொண்டு படத்தை ஆரம்பிக்கலாம். முதலில் தண்ணீரின் கடைசிப் பகுதியை நேர்க் கோடாக வரும்படி வைக்கோலைக் கிழித்து ஒட்டியபின், மலைகள், பிறகு குடிசை, அதன்கீழ்ப்பகுதி, பிறகு படகு, அதன் தண்ணீர்ப் பகுதி என்று படிப்படியாக கண்முன் தெரியும் மரத்திற்கு அலங்கரிக்க வரவேண்டும்! கோடு கோடாகத் தெரியும் பாகங்களையும் தென்னை மரத்தையும் அவ்வப்போது மெல்லியதாகக் கிழித்து ஒட்டுவது அவசியம். வானத்தில் தெரியும் மேகங்களையும் ஒரே சீராக நேர்க் கோடாக வரும்படி ஒட்டுங்கள். ஒட்டியபின் நன்கு படியவைக்கவும். வெல்வெட் பேப்பருக்குப் பதில் அட்டையில் ஒட்டிய கருப்பு நிற சில்க் துணி மேற்பரப்பையும் உபயோகிக்கலாம். தூசு படியாமல் கண்ணாடி செய்து மாட்டினால் படம் எடுப்பாக இருக்கும்!

வைக்கோலில் பலவகைகள் வருகின்றன. இயற்கை வைக்கோல், செயற்கை வைக்கோல், நெல்வகை வைக்கோல், கோதுமை வைக்கோல் என்று பல தினுசுகளில் கிடைக்கின்றன. எதுவாக இருந்தாலும் இந்த வழிமுறை எல்லா வகைகளுக்கும் பொருந்தும்! ரமணி ரங்கநாதன்

போன பக்கங்களில் நான், பயணத் தண்டவாளத்திலிருந்து பக்கவாடு பிரிந்து விட்டேனோ என்று படுகிறதோ? இல்லவே இல்லை. இந்த வரலாற்றின் வழியே இப்படித்தான். நீயும் நானும் பாற்கடலைக் கடைந்து கொண்டிருக்கிறோம்.

அண்டை வீட்டு மாடிக்குப் பேரக் குழந்தைகள் விளையாட, அப்பப்போ ஓடினாலும் ராத் 'தாச்சுக்கல்' தன் மடியில்தான் என்று பெந்துப் பாட்டி அறிவாள். எங்களுக்கும் தெரியும்.

பூரா, நாம் ருசியிலேயே வாழவில்லை. பூராப்பூரா ருசியின் நினைப்பிலும் வாழவில்லை. வாஸனைகளில் வாழ்கிறோம் என்று என் துணிபு. மூச்சில் ஏதேதோ மோப்பங்கள் வந்து கலக்கின்றன. பிராணன் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. சரி; பிறருக்கு எப்படியோ, என் உடல், மனப் பாங்கு, நான் வளர்ந்த சூழ்நிலைப்படி, இந்த வாஸனை தத்துவம்தான் எனக்கு வாழும் தத்துவமாக நிலைத்து விட்டது. ஆனால் எல்லாருக்கும் இதுதான் பாதை என்று நான் படிக்க வரவில்லை.

அவரவர் பூத்ததற்குத் தக்கபடி.

வாஸனை? அமுதனைய வாஸனை? இதோ அதற்காக ஒரு கதை. கதையல்ல; சொந்த அனுபவம். சுமார் இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன் —ஏன், மேலேயே இருக்கும்—இரவு சுமார் 10-30. ரேடியோ அலறிக் கொண்டிருக்கிறது (வழக்க ப்ரகாரம் தான், முடுக்கிவிட்டு அவரவர் தூங்கிக் கொண்டிருக்கின்றனர்; வம்பு அளந்து கொண்டிருக்கின்றனர்.) நான் நடுமுற்றத்தில் படுத்த வண்ணம் நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருக்கிறேன். கவனம், படிப்படியாகப் படிந்த வாய்க்காலில், ரேடியோ சத்தங்கள் விழுந்து, உருத் தெளிந்து, நடைபெறுவது நாடகம் எனத் தெரிந்தது.

எனக்குச் சாதாரணமாக ரேடியோ நாடகம் எடுபடுவதில்லை. ஆனால் அன்று நாடக ஆசிரியர் கொண்டு போயிருக்கும் பாணியில் (யாரோ வங்காள ஆசிரியரைத் தமிழாக்கம். நாடக முடிவில் தெரிவிப்பார்களே!) ஒரு சக்தி விறுவிறுத்து, கவனத்தை வசம் கொண்டது.

காசிராஜன் தீர்ப்பளித்தாகி விட்டது. சந்திரமதி திருடியெனத் தீர்மானிக்கப்பட்டு, அவள் தலையை இதோ அரிச்சந்திரன் சீவப் போகிறான்.

பூமியிலும் வானிலும் கூட்டம் நெரிகிறது. தேவர்கள் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டனர். 'ஜே! ஜே!' அதோ; உருத் தெரியா ஜன இரைச்சலைத் தத்ரூபமாகக் கொண்டு வந்திருக்கிறான். அதிலிருந்து கணீரென்று அரிச்சந்திரன் குரல் பிரிந்து வருகிறது. அவன் கைக் கத்தியின் தீட்டிய பளபளப்பை என்னால் பார்க்க முடிகிறது.

''சந்திரமதி! உன் இஷ்டதெய்வத்தை நினைத்துக்கொள்!''

நினைத்துக் கொள்கிறாள். அவளுடைய இஷ்ட தெய்வம் யார்?(!)

விசுவாமித்ரர் ஓடி வருகிறார். கடைசி நிமிஷத்தில் அவனை, இத்தனை சோதனைகளிலிருந்து மீட்டு விடும் ஒரு பொய்க்குக் கெஞ்சுகிறார்.

அந்த ஒரு பொய்.

கட்டம் பரபரப்பாய்த்தானிருக்கிறது. மசித்து விடுவாரோ? ஜெயிப்பு அவருடையதுதானா?

'அரிச்சந்த்ரா! அரிச்சந்த்ரா!! எங்களைக் கைவிட்டுடாதே!!!



# பாற்கடல்

## லா.ச.ராமாமிருதம்

இந்தப் புதுக் குரல்கள் எங்கிருந்து? அரிச்சந்திரன் திகைக்கிறான்.

"நீங்கள் யார்?"

"அரிச்சந்த்ரா! நாங்கள் உன் பிதுர்க்களடா! எங்களைக் கைவிட்டுடாதே! இப்போ நீ சறுக்கினையோ, உன் ஒரு பிழையால், இந்தக் குல பதியைத் தொட்டு வழிவழியாகக் கரையேறியிருக்கும் அத்தனைபேரும் மீளா நரகத்துக்குத் தள்ளப்படுவோம். அடே, குழந்தே! எங்களைக் கை விட்டுடாதே!"

கிடக்கையில் என் உடல் கட்டையாக விறைத்து விட்டது. தொண்டையை அடைத்தது. நான்—நான்—

என்னிலிருந்து ஒரு 'நான்' புறப்பட்டு விம்மிக் கொண்டே—

பால்ரோசம். உள்ளூர அமைதியான ஒரு சிறல் சப்தம்.

ஒரு ஆக்ரோஷத்தின் படமெடுப்பு. இன்னும் விம்மிக் கொண்டே—

இந்த விம்மல் 'நான்' என்னுடைய நான்தான். என்னின்று வந்த 'நான்.' நானும் இதைச் சேர்ந்தவன்தான். ஆனால் நான் இதனுள் அடங்கியவன். இது 'நானி'ன் விசுவரூபம். தணலிலிருந்து சுழித்துக் கொண்டே

மேலெழும்பிய

அகிற்புகையின் வியாபகத்தில் உருப் பிதுங்கின ராக்ஷஸம். நெருப்பில்லாமல் புகையில்லை. இந்தக் கங்கு, பரம்பரை அஸ்தியில் எங்கோ சொருகிக் கொண்டு, கனன்று கொண்டேயிருக்கும் பரம்பரை ஆஸ்தி. Prometheus சொர்க்த்தினின்றுநமக்காக மூங்கில் குழாயில் அடைத்துக் கொண்டு வந்த தீ. எல். ஐ. சி. சின்னத்தில் இரு உள்ளங்கைகளுள் ஏந்தல் காக்கும் குடும்பச் சுடர். ஒலிம்பிக் தீப்பந்தம். அன்றே, என்பாட்டி, என்னையும் என் தம்பியையும் செல்லமாக அழைத்த பெரிய நிவட்டி, சின்ன நிவட்டி. மூன்றாவது கண்ணின் திறப்பு. சாவுக்கும் பிறப்புக்கும் இடைக்கோடின் முகடு. இந்த 'நான்'-இல் நான் நான் நான் நான் நான் நான் நான் நான் பல கோடிப் பிம்பங்களில் நானும் ஒரு பிம்பம். என் ஆரம்பம், அர்த்தம், முடிவு, நோக்கம், பெருமை இதுவே தான் 'நான்' எனும் என் வெளிபீடல்—இதுவே அம்முவாத்து அகந்தை. அவள் எங்களவள் ஆகையால் மற்றதெல்லாம் எங்களுக்கு திரண மாத்திரம் எனும் ஒரு ஸர்வ தோரணை. மஹா பிகு.

ஸத்யோஜ்யோதிஷி
ஜுஹோமி ஸ்வாஹா:

தாராமல் இருப்பாளோ?
அவள் என்ன
சத்தியம் மறந்தவளோ?

பூம் பூம் பூம் ஸ்வயாகாரத்தின்
சங்கநாதம்.

இருங்கள், இருங்கள், பொறுங்கள். மூச்சிறைக்கிறது. இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன்னின் நினைவு கூட்டல் அல்லவா? கூட்டவே வேண்டாம். அன்றின் அழுத்தல் இன்னும் குறையவில்லையே!

இதைத்தான் நான் வாஸனை என்கிறேன்.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி வாழ்ந்ததும் இந்நாடே. பாரதி சொல்வது மட்டும் என்ன?

அவர்கள் சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள், ஆசைகள், எவர், யாவர் என்று விளக்கியும் கூற வேண்டுமா?

நான், நான் மட்டுமல்ல, என் குடும்பச் செருக்கு. அதுவும் எனக்குச் சொந்தமல்ல.

என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒப்பிலா நகை. அதை நான் அணிந்ததால், அது என்னை ஆண்டு, நான் வாழ்ந்த பின, என் பின்னோருக்கு விட்டுச் செல்லும் சாஸனம். இது நான் கண்ட அமுதம்.

பாற்கடலை நீயும் நானும் கடைந்தோம்.

எனக்காக நீ, உனக்காக நான்,

எனக்காக நான்.

நமக்காக நாம்.

கடைந்தோம்.

அமுதம் வந்தது.

நான் கலசமானேன்

என் கரண்டி என் பேனா;

நான் பரிமாறுகிறேன்.

உண். இனி நாம் தேவர்.

—இதை நான் வாஸனை என்கிறேன்.

நான் என் தாத்தாவின் பேரன்

என் அப்பன் மகன்

என் தாய் வயிற்றில் தோன்றப்

பாக்கியம் செய்தவன்.

—இதை நான் வாஸனை என்கிறேன்.

இன்றைய குடும்ப வாழ்க்கையில் இந்த மணம் மறந்து போய்க்கொண்டிருப்பதுதான், என் கொடிய வேதனை.

"சுஜி இந்த வருஷம் காலேஜ் போறான்னு அவளுக்கு அவாத்துலே நைலக்ஸ் தாவணி நாலு வாங்கியிருக்கா பாரு! கண்ணைப் பறிக்கிறது. தவிர ஷெர்வாணி கம்மீஸ்; நாமும் இருக்கோம்!"

"தெரியுமோன்னோ? இல்லே இல்லேன்னு சொல்லிண்டு கடைசியில் அவாத்திலும் டி. வி. வாங்கியாச்சு. அடுத்த மாஸம்—ஃப்ரிஜ்."

"நாலு பையன்களும் சம்பாதிக்கிறான்கள் சேத்து வெச்சுக்கறான்கள். அல்பை மாதிரி அவர் அப்பா, அவர்கள் சம்பளத்துக்குப் பங்குக்கு வரதில்லே. கணக்கும் கேட்பதில்லே. பிறத்தியாரிடமிருந்து நாம் கற்றுக்க வேண்டியது எவ்வளவோயிருக்கு."

மேலே இரைந்து கிடக்கும் நட்சத்திரங்களில், என் மூதாதையர் அப்பா அம்மாவுடன் என்று போய் நானும் சேர்வேன்?

"அவாளைக் கவனிச்சையோ? முகத்தில் ஒரு பணக்காரக் களையிருக்கு!"

அப்போ பணக்காரா வேறே, பணக்காரக் களை வேறேயாக்கும்!

இரண்டும் வெவ்வேறாய்ச் சொல்பவர்களுக்கே தெரிகிறது போலும்!

"நம்மைவிடப் பச்சையாக எதிர் வீட்டில் வாழ்கிறார்கள் என்பதைச் சொல்லியே தீருவேன்; பொறாமைப் படுகிறேன் என்று அர்த்தமல்ல. உண்மையைச் சொல்கிறேன். நான் உண்மை விளம்பி."

ஏற்றத் தாழ்வுகளை ஒப்பிட்டுப் பேசுவது பொறாமையல்லேல் வேறு எது பொறாமை? நான் இன்னும் ஒரு படி மேலேயே போகிறேன். பிறர் வசதிகளைப் பேசத் தோன்றுவதே தாழ்ப்பால்தான் என்று சொல்வேன். பிறரிடம் கண்ட நற்குணங்களைப் பேசுவோம். பெரியோரைப் புகழ்வோம்.

பங்கமிலாது வாழ, அந்த வாழ்வு பெற, நாணயமான முறையில், நம் உழைப்பு, முயற்சி பற்றிப் பேசுவோம்.

தங்க அணிலைக் கண்டால், 'எங்கே புரண்டாய்?' என்று விசாரிக்க மாட்டோம். அதன் தோலை உரிக்க என்ன வழி! அதனால்தான் தங்க அணில் கண்ணில் படுவதில்லை.

என்று நாம்,

நம் வீட்டுப் பழையது,

நான் தொடுத்த முழம்,

ஆத்தானுக்கும் அகமுடையானுக்கும் அங்கச்சிக்கும் நான் எடுத்த புடவை நூற் புடவைதான். ஆனால் என் உழைப்பு. என் அன்பு என் சக்தி, எங்கள் கௌரவம், என்று பெருமை கொள்கிறோமோ, வீட்டில் இருப்பவர் எல்லோரும் அப்படி நினைக்க வேண்டும். திருப்தி படவேண்டும், பெருமைப்பட வேண்டும். இதுவரை தெரியாவிட்டால் இனிமேலாயினும் பழக்கிக் கொள்ள வேண்டும். ஒன்று தெரிய வேண்டும்; நன்றி பெருகப் பெருக அங்கு சுபிக்ஷமும் பெருகும். அங்கு ராமராஜ்யம் நடக்கிறது. அந்த வீட்டைப் பிதுர்க்களின் ஆசிர்வாதம் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. அஞ்சலி செய்வோம்.

கடமை என்பது ஒருவழிக் கடன் அல்ல.



அபபா! Vico-turmeric இல்லாமல இனி ஒரு நிமிஷம் கூடத் தள்ள முடியாது.''

''ஒரு பத்து நாளைக்கு சோப்பைத் தள்ளு. பயத்த மாவைத் தேய்த்துக் கொள்''—என்ருல் கேட்பாளா?

''அப்பாவுக்குக் காசு ஒண்ணுதான் குறி!''

வாஸ்தவந்தான். இல்லாத குறைதான். வேடிக்கை. Vico-turmeric போட்டுக் கொண்டாலும் தான் களைக்கிறது. காலேஜ் குமாரி ஆகிவிட்டால் மரியாதையும் காற்றில் பறந்து விடுகிறது.

மானத்தோடு வாழ்வதைப் பெரிதாக அந்த நாளில் கருதினுர்கள்.

வசதிகளின் பெருக்கம்தான் இப்போ வாழ்க்கையின் குறிக்கோள். கடன் வாங்கியோ, ஏமாற்றியோ, எப்படியோ, ஜப்தி ஆகிறவரையில் அனுபவித்தது லாபம்.

மதிப்பீடுகள் மாறுகின்றன எனும் பொதுத் தீர்ப்பில் எல்லாமே அடங்கி விடுமா?

இத்தனையும், ''குழந்தே, எங்களைக் கைவிட்டுடாதே'' என்று அன்று ரேடியோ நாடகத்தில் கேட்ட அலறலின் எழுச்சிதான். குட்டிக் கதை என்றுதான் ஆரம்பித்தேன்; ஒப்புக் கொள்கிறேன்.

மன்னிப்பு - கேட்க மாட்டேன்.

❋

சிறுதையூர் பஸ் ஸ்டாண்டில் இறங்கினுலே லால்குடிதான். ரோடுக்கு வந்து கொஞ்ச தூரம் நடந்து, ஐயன் வாய்க்கால் பாலம் தாண்டியதும் ஐயனுர் கோயில். உள்ளேயே கறுப்பண்ணன் ஸன்னதி.

ஐயனுர் சிவனுக்குப் பிறந்ததால் பெருந்திருவுக்கும் மகன்.

கறுப்பண்ணன் பெருந்திருவின் பணியாள்.

பெருந்திருவைச் சார்ந்தவர்கள் என்கிற முறையில், அம்முவாம் இந்தத் தெய்வங்களையும் தன் வழிபாட்டில் சேர்த்துக் கொண்டது; அதற்கே உரித்தான வழிபாடு மோஸ்தரில்.

பாட்டனுர், ஐயனுரைத் தோத்தரிக்கிருர் :

நஞ்சிருக்கும் நெஞ்சிருக்கும்
நாரியோடு பாகருக்கும்
மஞ்சிருக்கும் வண்ண நெடு
மாயருக்கும்
மஞ்சன் என உற்ற ஐயனுர்
அப்பன் உண்டு துணை எனக்கு
மற்றெவர்க்கும்
அஞ்சேன் மனம்.

ஒரு சமயம்.

வாளாடியில் தங்கை வீட்டுக்குப் போய்விட்டு, தாத்தா லால்குடிக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். இரவு வெகு நேரமாகிவிட்டது. இப்போ இரண்டு நிமிஷங்களுக்கு ஒரு முறை திருச்சி ரோடில் பஸ்கள் பறக்கின்றன. அந்த நாளில் பஸ்ஸா, மாட்டு வண்டியா, தெரு விளக்கா, ரோடா?

உமாஸ் வேறு.

எனக்கு இப்பவும் ஒரு ஏக்கம். இந்த நாளில் மையிருட்டு என்பதையே பார்க்க முடிவதில்லையே! முகத்துக்கெதிரே கையைப் பிடித்தால் கை தெரியாதாமே! மரங்களை வெட்டிச் சாய்த்து விட்டதால் நட்சத்திர வெளிச்சம் காட்டிக் கொடுத்து விடுகிறது.

சுருக்கப் போய்விடலாம் என்று எண்ணி, படிந்த பாதையை விட்டுக் குறுக்கே எங்கோ புகுந்திருக்கிருர். அப்படி, இப்படி, இரண்டு திருப்பத்தில், வழியும் தப்பிப் போச்சு. சிறிது நேரம் நடந்தபின் ஒரு பெரிய சப்பாத்திக் கள்ளி, வழி விடாமல் குறுக்கே நிற்கிறது. இனி செய்ய என்ன?

'பெருந்திருவே கறுப்பண்ணு!''

இந்தக் குடும்பத்தில் நாபிக் கொடி வீறல் அது ஒன்றுதான்.

''ஆதிமூலமே!'' யானையின் அலறல்.

''ஹே, ஹ்ருதய கமலவாஸா!'' அதுவரை இடுப்பில் துணியைப் பிடித்துக் கொண்டிருந்த கைகள் தலைக்கு மேல் தூக்கிவிட்ட நேரம். அவனும் அதற்காகத்தானே காத்துக் கொண்டிருக்கிருன்! அது என்ன ருசியோ?

''The Lord is my Shepherd. I Shall not want.''

''RUSTOM!'' ரஸ்டமின் வீர கர்ஜனை.

''பெருந்திருவே கறுப்பண்ணு!''

இந்தக் குடும்பத்தின் டங்கார த்வனியும் அதுதான்.

தூரத்தில் ஒரு வெளிச்சப் புள்ளி தோன்றிற்று. நெருங்கி வந்ததும் அந்த ஆள் கை லாந்தரை அப்பா முகத்தெதிரே பிடித்தான்.

''யாரது? இந்த நிசியில் நடுக் காட்டில்?''

தலையில் முண்டாசு. பரந்த நெற்றியில் பட்டையாக உதிரி விபூதி மேல் குறுக்கே. தீட்டிய குங்குமம். குத்து மீசை. குழி மேர்வாய். இடுப்பில் நிஜார். கையில் சாட்டை. மார்பில் சந்தன வாசனை. மேட்டு விழிகள் பொறி பறந்தன.

''வழி தப்பிப் போச்சு அப்பா!''

''நேர் வழிவிட்டு உம்மை யார் குறுக்கே திரும்பச் சொன்னது? கள்ளர் பயம் பேச்சு நடமாடறது தெரியுமல்ல?''

''தெரியுமப்பா!''

''சரி, என் பின்னுலேயே வாங்க.''

நிமிஷமாக பழக்கமான பாதை வந்துவிட்டது. ஒரு பத்து கஜ தூரத்துக்கு முன்னுல் 'லொடக்' 'லொடக்' இரட்டை மாட்டு வண்டி.

''இனி, போவீரா? வழி தெரியுமா?''

''தெரிஞ்சதப்பா. நீ நன்னயிருப்பே!''

'இனி இப்படியெல்லாம் குறுக்கில் இறங்காதீங்க. உமக்கு அது தேவையில்லே!''

திருப்பத்தில் ஆள் மறைந்து விட்டான். அவன் சென்ற திக்கிலிருந்து ''ஜல் ஜல்'' கால் சிலம்போசை. அடுத்துக் குதிரையின் குளம்பு சத்தம்.

எட்ட எட்ட எ....ட்....ட....

தாத்தா வார்த்தைகளில், வந்த ஆளைப் பார்ப்போம்.

''தலைப்பாகும், சீராவும் தாரும்
தடம் தோள்

சிலைப் பாரமும் கைச் சிமுதாடும்
நினைத்த கழற் காலன்
நினைத்த விடம் காணக்
கறுப்பண்ணன்
எக்காலும் துணைக்கு வருவான்
மற்றெவர்க்கும் அஞ்சேன்
மனம்"

பிரதி இரவும் மன்னிப் பாட்டி, மேற்கூறிய இரு பாக்களையும் சொல்லி எங்கள் படுக்கைக்கு இரு தெய்வங்களையும் காவல் வைத்து விடுவாள்.

ஆனால், தாத்தா, வாளாடி வழியில் வகையாக மாட்டிக் கொண்டார் என்பது தவிர, சுபாவத்தில் பயந்தாங்கொள்ளி —இன்னொரு தினுசில்.

கொல்லைப் பக்கம் போய் வருவார்.

''ஏய்!'' (இது அந்தக் காலத்துத் தோரணை) காலில் என்னவோ சுருக்குன்னுது. ரெண்டு மிளகு கொண்டுவா!''

''செருப்புப் போட்டிண்டிருக்கேள். எப்படி சுருக்கென்னும்?''

''கொண்டுவான்னு கொண்டுவா-தர்க்கம் பண்ற சமயத்தைப் பாரு!'' (கொண்டு வந்து கொண்டேதான் மன்னிப் பாட்டி கேட்கிருள். பாவம், என்றுமே இடிசொல் படுவதற்கென்றே வாழ்க்கைப் பட்டவள்.)

—''என்னடி தித்திக்கிற மாதிரியிருக்கு. விசுவநாதஞ் செட்டியை அழைச்சுண்டு வா. காலில் விறுவிறுன்னு ஏர்ற மாதிரியிருக்கு; முழங்காலுக்கு வந்துடுத்து.'' கண்டசதையைக் கிள்ளிப் பார்த்துக் கொள்வார்.

செட்டி வந்து நாடியைப் பார்ப்பான். ''நீங்கள் சொல்றபடி யிருந்திருந்தால், இதுக்குள் என்னென்னவோ நடந்திருக்கணுமே! நாடி கல்லாட்டம் ஓடறது. பித்தநாடி தூக்கல்லே. எனக்கொண்ணும் தெரியலியே!''

''உனக்கென்னடா தெரியும்? இப்போ லக்ஷ்மி இங்கிருந்தால் உன் மாதிரி மசமசப்பளா?''

''வாஸ்தவந்தான்; லக்ஷ்மி அம்மா நாடி பிடிக்கிறதுலே வரப்ரசாதி. ஆனால் அவா இப்போ இங்கே இல்லே. நீங்க வாளாடிக்கே போய்-நடந்தே போய் அவளைப் பிடிக்கச் சொல்லிக் கேட்டுக்கலாம்-''

''ஓஹோ! அதிகப்ரஸங்கம் வேறேயா? விஷய சூன்யமானாலும்!''

விசுவநாதன் செட்டியென்ன, எல்லாருமே கேட்டுப்பார்கள். அந்த நாள் அப்படி.

இதற்குள் மன்னி, செருப்பில் தைத்துக் கொண்டிருந்த சப்பாத்தி முள்ளைப் பிடுங்கி, பணிவுடன் நீட்டுவாள்.

''சரி, சரி. உள்ளே போ! இதென்ன சதிர்க் கூடமா?''

மன்னி, உன்னுடைய நட்சத்ர பதவி, தாத்தாவைவிட உயர்ந்த தாய் இருக்கணும். ஆனால் நீ அங்கு இருக்க மாட்டாய். தாத்தா காலடியில் இடம் தேடியிருப்பாய். அங்கு போயும் உன் தலையெழுத்து அப்படி.

*

தாத்தாவை நினைக்கும் அதே மூச்சில் ஐயாவை நினைக்காமல் இருக்க முடியவில்லை. தாத்தாவுக்கு மூத்தவர். குணுதிசயங்களில் தாத்தாவுக்கு நேர் எதிர். பயம் என்றால் விசை விலையென்ன?

அவரும் நள்ளிரவில் போயிருக்கிறார். சினிமாக் கொட்டகையிலிருந்து நண்பர்களுடன் திரும்பி வருகையில், பாதை குறுக்கே விழுந்து கிடந்த பழுதையை மிதித்து, அது நொடியில் காலில் நாலு சுற்று போட்டு விட்டது. கண்ணிமைக்கும் நேரத்திலும் மின்னில் காலைச் சுற்றியதன் பல் பதியுமுன் பிடுங்கித் தூர எறிந்துவிட்டு, விட்டுப்போன பேச்சைத் தொடர்ந்து சர்வ சகஜமாகப் பேசிச் சிரித்துக் கொண்டு வந்தாராம். கூட வந்தவர்கள் சாக்ஷி.

''ஐயாவா? ஐயோ!'' —வாயைப் பொத்திக் கொள்ளத் தவிர வேறு அவர்களுக்குத் தோன்றவில்லை.

மறுநாள் அதே இடத்தில் பிடாரன் கருநாகம் பிடித்தானும்.

எட்டடி. இது வேறு நாகம் என்று கட்சி கட்டலாம். கட்டுபவர்கள் கட்டட்டும்.

ஐயாவுக்குப் படிப்பு வாஸனையா, எழுத்து வாஸனையா கிடையாது. இடுப்பில் ஒரு வாழைப் பட்டைக் கத்தி எப்பவும் செருகியபடி இருக்கும். படுக்கையில்கூட பக்கத்தில் அதுதான் அவருடைய மந்திரக்கோல், தாழ்க்கோல், காவல், வேலைக்காரன், குரு எல்லாம். அவருக்குச் சொன்னபடி கேட்கும்.

அவருக்கு உற்ற வயதில் மனைவி இறந்து போனபின் இரண்டு குழந்தைகளுடன் தாத்தாவிடம் வந்து தங்கினவர்தான். மறு விவாகம் செய்து கொள்ளவில்லை என்பது கூடப் பெரிதல்ல. அவர் இருந்தவரை (நீண்ட வயதும் இருந்தார்) சதா மெல்ல அலைந்து கொண்டிருக்கும் ஊர்வாய் அவர் மேல் துளி மாசு கற்பிக்கவில்லை.

கோபம் வந்துவிட்டால் வாயில் வந்தபடி பேசுவார். மெய் கூசும். தன்னிடம் நியாயம் ஒடுங்குவது தெரிந்ததும் அதட்டி எதிராளியை அடக்கி விடுவார். கைகூட மிஞ்சி விடுவார்.

பரோபகாரி. கூழுக்குப் பாடி. கோலம் போட்டால், வழியில் போகும் பெண்டிர் ஜோலி மறந்து அதிசயித்துப் பார்த்துக் கொண்டு நிற்பர். கூடை முடைவார். ஓலை, கூரை பின்னுவார். துடைப்பக் குச்சியிலிருந்து இழை ஈர்க்கெடுப்பார். முதல் செடி நட, தென்னங்கன்று, வாழைக் கன்று வைக்க அவரை அழைப்பார்கள். கிணற்றில் சொம்பு விழுந்து விட்டதா? ஐயாவை அழைச்சுண்டு வா! கொல்லையில் பாம்பா? குடத்தில் பிடித்து விடுவார்.



பையன்கள்தான் அவருக்குச் சஹா. கீழத்தெரு கோடியாத்தில், சிப்பாய்க் கலகம் பார்த்த சீதாப் பாட்டியிலிருந்து, எதிர் வீட்டுப் பண்டாரி சிவராமன் தனக்குப் பிறக்கத் தவங்கிடக்கும், இன்னும் வயிற்றில் பூச்சி வைக்காத சிசுவரை எல்லாருக்கும் ஐயா.

வேண்டாத விஷய ஞானம் அதிகப்படி.

ஐயா ஐம்பது தாண்டிய பின், லால்குடி கோவிலில் மெய்க் காவல் வேலை கிடைத்தது (வாட்ச் மேன்). இந்தத் திடீர் அதிர்ஷ்டத்துக்குக் காரணம் தனித்துத் தெரியவில்லை. பலவாயிருக்கலாம். தமிழ்ப் பண்டிதர் குடும்பத்தின் மேல் இருந்த மதிப்பாயிருக்கலாம். ஒரு நாள் விடாமல் ஐம்பது வருடங்களுக்கு மேல் அர்த்த ஜாமம் பார்த்த குடும்பமாச்சே! தமிழ்ப் பண்டிதரிடம் படித்த பையன் தர்ம கர்த்தாவாக ஆகியிருக்கலாம். ஐயா மேலேயே இரக்கமாயுமிருக்கலாம். அவரைக் கண்டு பயமாயுமிருக்கலாம். "டேய் நீ இன்னிக்குக் கோவில் தர்மகர்த்தா. நாலு பேர் உன்னைப் பார்க்க வரா, போறா. ஆனால் உன் அப்பன் எப்படியிருந்தான், என்ன பண்ணினான், அவன் மூடுகுளி என்னன்னு எனக்குன்னா தெரியும்!"

ஐயாவுக்கு blackmail பண்ண வேண்டும் என்கிற எண்ணம் அறவே கிடையாது. அப்படியென்றால் என்ன என்றே அறியார். ஆனால், தன் ரிஷி கோபத்தில், நாலு பேர் நடுவில் என்னத்தையாவது அவிழ்த்துவிட்டால்—அது நிஜமா, பொய்யா? ருசு பின்னால். மான நஷ்ட கேஸ் போட்டாலும் ஐயாவிடம் என்ன வசூலாகும்? நடுத் திண்ணையில் என் கதி, என் கௌரவம் என்ன ஆறது? அவரா நாக்கில் நரம்பில்லாத மனுஷன்.

மத்தியானம் பட்டைச் சாதம் நாலு அளவு, தயிர், தாளிதம் எல்லாமே கனிசம் தவிர மாதச் சம்பளம். அது நேரே மன்னி கைக்கு வந்துவிடும், ஐயா சொன்னபடி.

விசேஷ தினங்களில் உபயக்காரர்கள், வேண்டிக் கொண்டவர்கள் மண்டகப்படியில் பாயஸம், வடை, சுண்டல், சர்க்கரைப் பொங்கலில் அவர்களாகக் கொடுக்கும் பங்கு, தேங்காய் மூடி, சில்லரை, மடப் பள்ளியிலிருந்து ஸன்னதிக்கு நைவேத்யத்தைக் கொண்டு வந்து வைத்தால், படி உண்டு. ஐயாவின் பொடி மட்டைச் செலவுக்கு இடுப்பில் நிமிண்டிக்க இன்னும் என்ன வேண்டும்?

இந்தச் சம்பிரதாயச் செலவுகளுக்கு அபிஷேகக்காரன் பிசுக மாட்டான். பிசுகுவதால், சப்தரிஷி நாதரிடம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த புண்ணியத்தில் குறைந்து போனால், பிறகு தான் இழைக்கும் அக்ரமங்களுக்குப் பிராயச் சித்தம், எப்படி?

வெள்ளிக் கிழமை மாலை மட்டும் குறைந்தது நாலு சஹஸ்ர நாமம் அதற்கேற்றபடி அபிஷேகம், நைவேத்யங்கள் நடக்கும். ஐயா கொடுத்ததை வாங்கிக் கொள்வார். சண்டை பிடிக்கமாட்டார். Don't Care.

"சமயத்துக்குக் கொடுக்கறாளா பாருடா! நீங்கள் சேர்த்து வெச்சு வீடுகட்டி வாழுங்கடா, தரித்திரப் பசங்களா!"

ஐயா வேலை பார்த்தவரை, வீட்டின் ஓநாய்ப் பசி குறைந்து, பட்டினிச் சோர்வு கலைந்து, குடும்பத்துக்கே சற்று முகத் தெளிவுதான்.

தலைச் சிக்கெடுத்து, கோதி வாரி, முகம் மழித்து, பட்டை விபூதி குழைத்துத் தரித்து, டாவாலியில் கையில் கிழங்கு மாதிரி வெள்ளிப் பூண்போட்ட தடி (அர்த்த ஜாமம் ஆனவுடன் தர்மகர்த்தா இரண்டையும் பிடுங்கிக் கொண்டு விடுவான்) யுடன் நிற்கையில் ஐயா களைதான்.

எல்லோரும் போன பிறகு, வௌவாலுக்கும் துரிஞ்சலுக்கும், அவைகளிடும் புஷ்கைக்கும்தான் ஐயா காவல். நடராஜ ஸன்னதிக் கெதிரே தூணடியில் துண்டை விரித்து, ஐயா காலை நீட்டிவிடுவார்.

பெருச்சாளி குடைந்து மடப் பள்ளியில் பாத்திரம் ஏதேனும் உருளும். கோவில் குளத்தினின்று குபீரென்று பாசி நாற்றம் கிளம்பும். (பேரென்னவோ சிவகங்கை) நந்த வனத்தில் திடீரென்று பட்சி ஏதோ "க்றீச்" பாம்பு பிடிச்சுடுத்தா?

ஆனால் இந்த மெய்க்காவல், முதல் ஜாமத்திலேயே, மூணும் ஜாமத்தின் அயர்ந்த 'குறட்டை'யில் நடக்கிறது.

ஆமாம்; மெய்யாகவே காவல் காக்க என்ன இருக்கிறது? நடராஜாவின் பஞ்ச கச்சத்தை எவனாவது உருவிக் கொண்டுபோக வரப் போறானா? விக்ரகத் திருட்டு இன்னும் Fashion இல் வரவில்லை. திருடனே அதுபற்றி இன்னும் நினைக்கக்கூட ஆரம்பிக்கவில்லை. களவு, தனிக் கலையாக, அதன் அந்தஸ்துக்கு வரவில்லை.

ஒரு நாள், ஐயா காவல் முடிந்து, காலை வீடு திரும்பவில்லை. ஆனால் அது பற்றிக் கவலைப் படுவதற்கில்லை.

பல் குச்சியை வாயில் மாட்டிக் கொண்டு எங்கானும் போயிருப்பார்.

எவனேனும் கடலைக் காய்க் கொல்லைக்காரன், வேர்க்கடலை தருவதாகச் சொல்லியிருக்கலாம்.

அல்லது வாழைத் தோட்டக்காரன், தார் தருவதாகச் சொல்லியிருப்பான்.

கரும்பு ஆலையில் சக்கரம் சுற்றினால் வெல்லக் கட்டி கிடைக்கும். ஐயாவுக்கு வெல்லம் என்றால் உயிர்.

ஆனால் இந்த வீட்டில் எவ்வளவு வந்தால் என்ன? ஆடு அப்போ, மாடு மத்தியான்னம்.

எச்சுமிப் பாட்டிக்கு மட்டும் இருப்புக் கொள்ளவில்லை. 'ஐயா ஏன் வரல்லே? எனக்கு என்னவோ பண்றதே!' என்று அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு, கூடத்துக்கும் தெருவுக்குமாக அலைந்தாள்.

வாசல் திண்ணையில் தாத்தா, வழக்கம்போல் பாட்டு நோட்டில் மூழ்கியிருந்தார்.

"ஐயா வரான்டா!"

ஐயா தனியாக வரவில்லை. குடிகாரன் மாதிரி அவர் தள்ளாட, இரண்டுபேர் பிடித்துக் கொண்டு வந்து கூடத்தில் விட்டதும், தடாரென்று தரையில் சாய்ந்தார். தொட்டுப் பார்த்தால் ஜுரம் மழுவாய்க் காய்ந்தது.

"பெருந்திரு ஸன்னதிக்குப் போற வழியிலே, நெனப்பில்லாமல் கிடந்தார்."

"ராமசாமி! ஐயாவுக்கு நாடி விழுந்துடுத்துடா!"

அத்தைப் பாட்டியின் அபயக்குரல் கேட்டு அப்பா - அதான் தாத்தா - திண்ணையிலிருந்து ஓடி வந்தார். அதுவரை ஐயா வந்ததுகூட அவருக்குத் தெரியாது. பாட்டு நோட்டில் அவ்வளவு ஆழ்ந்திருந்தார்.

அத்தை, ஐயாவைத் தோளில் சார்த்திக் கொண்டாள். ஐயாவுக்குக் கண்கள் செருகின.

## செய்தித் தாள்கள்...

**1300 ஆண்டுகளுக்கு முன்னால் தன் அரசாங்கத்தின் முக்கியமான நடவடிக்கைகளை மக்களுக்கு அறிவிப்பதற்காகச் சீன அரசு வெளியிட்ட 'சிங் பாவ்' என்பதுதான் முதல் செய்தித்தாள். இதன் பொருள் 'தலை நகரச் செய்திகள்' என்பது. அதே போல் பண்டைய ரோம் நகரிலும் 'அக்டா டியர்னா' (தினசரி நிகழ்ச்சிகள்) என்கிற செய்தித்தாள் மக்களுக்கு வழங்கப்பட்டது.**

**மிகவும் பிரபலமான 'லண்டன் டைம்ஸ்' 1785-ல் தொடங்கப்பட்டு இன்னமும் நடந்து வருகிறது.**

— யெஸ்பால்

''ஐயா என்ன ஆச்சு?''

ஐயாவுக்குத் தொண்டை ஒரே அடியாய்க் கம்மிப் போச்சு. அவர் வாய்க்குச் செவி வைத்துக் கேட்டால் ஏதோ பதினைந்தாயிரம் வருடங்களுக்கு முன்னால், பதினெட்டாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து ஒரு குரல் தீனமாக வந்தது.

''பெருந்திரு கோவில் வாசற்படியில் படுத்திருந்தேனா, வெடுக்குனு முழிப்பு வந்தது. உள்ளூர ஏதோ உஷார் சிலிர்ப்பில் வர முழிப்பு. எதிரே யாரோ நிக்கரா. உடம்பில் அத்தனை உறுப்புகளும் விழிச்சுண்டு பதறி எழுந்து உட்கார்ந்தேன். யார் இது? எப்படி வந்தாள்? அகல் சுடரில் உருவம் தெளிஞ்சது.

''சிவப்புப் பட்டுப்பாவாடை. மேலே பச்சைப் பட்டுத் தாவணி. தோளில் பச்சைக் கிளி.''

தாத்தா கை,வாய் பொத்திற்று. ''நேத்தைய கடைசி அலங்காரம், ஜவுளிக் கடை ஜம்புநாதன் செட்டியின் அபிஷேகம்!''

—''மூக்குத்தி என்கிற பேரிலே சின்னதும் பெரிசுதுமா ரெண்டு நக்ஷத்திரங்கள் ஜ்வலிக்கிறதுகள். அந்தக் கண்களின் ஒளி—'' ஐயா கண்களைப் பொத்திக் கொண்டு விலங்குபோல் தலையை உதறிக் கொண்டார்.

''கடல் இருட்டின் மேல் மணிக் கூண்டு கதிர்ப் பாய்ச்சல்—

லால்குடி சுற்று வட்டாரத்தைத் தாண்டாத ஐயா, மணிக் கூண்டையும் கடலையும் எங்கு பார்த்தார்? எப்போ பார்த்தார்? முதலில் இந்தப் பாஷையே ஐயாவுடையதா?

''கண்களின் ஒளி வீச்சின் கூசல் அதன் பின்னால் அந்த முகத்தைச் சரியாப் பார்க்க விடலே. முகம் கோட்டுக்குள் அடைச்ச நிழலாப் போச்சு. ஆனால் அந்தக் குஞ்சிரிப்புக் கூடவா ஒளிவீசும்? இடுப்பில் ஒரு கை, மறுகையில் சாட்டை போல் பின்னலைச் சுழட்டிண்டு-

''நான் திகிலாயிட்டேன். இருக்கிற தைரியத்தை, மனசை ஒண்ணு கூட்டிண்டு கண்ணை இறுக மூடிண்டு ''யாருடி நீ? இங்கே எப்படி வந்தே? ஹத்துத் தேவடியா முண்டை, பெருந்திரு மேல் ஆணையா சொல்றேன் இங்கேருந்து ஓடிப் போ--''

''கடகடன்னு சிரிக்கற சத்தம் கேட்டது, ஓடிப்போற கொலுசின் ஓசை கர்ப்ப க்ருஹத்துள் ஓடி மறைஞ்சுடுத்து. அப்புறம் என்ன ஆச்சு தெரியாது.''

தலை தொங்கிப் போச்சு. தாத்தா ஐயாவைக் கட்டிண்டு, விக்கி விக்கி அழுதார்.

''ஐயா, குடி கெடுத்தையேடா! ஆயுசுக்கும் நான் என் பாட்டு நோட்டைக் கட்டிண்டு என்னத்தைக் கண்டேன்? யாருக்குமே கிட்டாத பாக்கியம் உனக்குக் கிட்டியும், எட்டி உதைச்சுட்டே. இனிமேல் இந்தக் குடும்பத்துக்கு விமோசனம் உண்டோ?''

ஐயா படுக்கையை விட்டு எழுந்திருக்க மாதம் சென்றது. பிறகு அவர் வேலைக்குத் திரும்பவில்லை. திரும்பவும் பழையபடி பழைய ஐயாதான். வீட்டில் வெல்லப் பானையைத் தூக்கிண்டு ஓடிண்டு, மாற்றான் கொல்லையைக் கொள்ளை அடிச்சுண்டு, அடிச்சதைப் பசங்களுடன் பங்கிட்டுண்டு, திரும்பவும் வெறுங்கையை வீசிண்டு, சிரிச்சுண்டு, சீறிண்டு, வெகுளியா, எல்லோருக்கும் வேண்டியவராய், தனக்கு உதவாக்கரையா—தன் வேளை வந்து சாகிற வரை அப்படியே—

''எனக்கு, என்னுடையது—எனும் தன் தனிச் சொந்தங்களிலிருந்து விடுபட்டு, அதனாலேயே எல்லாமே தனக்குச் சொந்தமாகி, பொறுப்பற்ற, கவலையற்ற அது போன்ற வாழ்க்கை கிட்டல் அரிது. பொறுமைக்கு உரியது.

ஞான சித்தி இலாது, கௌபீனத்தோடு மட்டும். ஃ




## 95. வேடம் ஒழிந்தது வீணரை வென்றான்

பசுத்தோல் போர்த்தாலும் புலி புலிதான். அதன் இயல்பு மாறுமோ?

பிருகந்நளை என்ற பெயரில் பேடி உருக் கொண்டு வாழ்ந்தாலும் மாவீரன் அர்ச்சுனன் அர்ச்சுனன் தானே! அவன் இயல்பு மாறுமா என்ன?

துரியோதனனையும் அவன் பெரும் சேனையையும் கண்டு அஞ்சி ஓட முனைந்த உத்தரனைத் தடுத்தான் அர்ச்சுனன்.

''மன்னவன் மகனே! நீ முதுகு காட்டி ஓடாதே! நான் ஒருவன் தனியனாக நின்றே எதிர் நிற்போரை வென்று, அவர்கள் கவர்ந்த நிரையையும் மீட்பேன்; ,அஞ்சாதே!'' என்று உறுதி கூறினான். அவன் என்ன கூறி என் செய்ய? உத்தரன் பின்னங்கால்கள் பிடரியில் பட தேரிலிருந்து ஓடத் தலைப்பட்டான். பெருஞ்சினம் அடைந்த அர்ச்சுனன் அவனைத் தொடர்ந்து சென்று பிடித்து வந்து தேரோடு கட்டினான். பின் தேரைச் செலுத்தினான். முன் நகர்ப்புறத்தில் வைத்திருந்த வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு செருக்களம் வந்தான்.

வன்னி மரத்திலிருந்து வில்லையும் அம்பையும் எடுத்து வந்தாயே அவை யாருடையவை? என்று கட்டப்பட்டிருந்த உத்தரன் கேட்டான்.

''கொடிய காடுகளில் உலவும் அர்ச்சுனனுடையவைதான் அவை'' என்று பேடி உருவில் இருந்த அவன் கூறினான்.

விழிகள் வியப்பால் விரிய ''இப்பொழுது அர்ச்சுனன் எங்குள்ளான்?'' என்று உத்தரன் கேடடான்.

''உன் தந்தை அவைக்கு கங்க பட்டன் என்று வந்தானே அன்றே அர்ச்சுனனும் விராட தேசம் வந்து விட்டான். ஓர் ஆண்டு மறைந்து வாழ வேண்டிய நிலை இருந்ததால் அவன் பேடி உருவில் வாழ்ந்து வருகிறான். மறைந்து வாழ்வதற்குரிய நேரம் இன்னும் முடிந்த பாடில்லை. இன்னும் நான்கு நாழிகைப் பொழுது இருக்கிறது. பிறகு இந்த இடத்திலேயே நீ அவனைக் காணலாம். நீ எதற்கும் அஞ்சாதே!'' என்று கூறி அவனைக் கட்டவிழ்த்து விட்டான்.

அர்ச்சுனன் கூறியவற்றைக கேட்ட உத்தரன் தெளிவு பெற்றான். அவன் கால்களில் வீழ்ந்து வணங்கினான். அர்ச்சுனனுக்குச் சாரதி யாகும் பாக்கியத்தைப் பெற்ற அவன் விரைந்து தேரில் ஏறி அதைச் செலுத்தத் தொடங்கினான்.


துரியோதனன் படையில் இருந்த துரோணர் முதலியோர் ஆங்கு நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து, பேடி உருவில் இருப்பவன் அர்ச்சுனனே என ஐயம் கொண்டார்கள்.

பேடி உருவில் இருந்த அர்ச்சுனன் நீண்ட காலத்திற்குப் பின் தன் நெடிய வலிய வில்லைக் கையிலே ஏந்தினான். மழையென அம்புகளைப் பெய்தான். துரியோதனனோடு வந்த எண்ணற்ற மன்னர்கள் அழிந்தார்கள்.

நிலைமையை விதுரன் பார்த்தான். துரியோதனனை அன்புடன் அழைத்தான். ''தன் இடத்தில் வாழும் முயல் வலியயானையையும் வெல்லும் என்ற உலகியல் மொழியை நீ அறிவாய். எனவே அயலார் மண்ணில் நின்று நாம் போர்தனைத் தொடர்வதை விட, நம் மண்ணிற்கு அவர்களை வருமாறு செய்வதே

# கோலங்கள்...

உலக. சிதம்பரம்.



வாழ்க்கை அரங்கினில் வந்து நிறைந்தன
வசந்தத் தின் ஸ்வரங்கள்!—அழகை-
வாரியிறைந்தன வண்ணக் குழம்பினில்
வரைந்தன சித்திரங்கள்!—அவை

கோழித் துயிலெனக் கூடி மறைந்த பின்
கோடை விளங்கியது!—அதன்
கூடச் சுமைகள்கை கோப்பன போல் இடி
கொட்டி முழக்கியது!— சிறு

நாழிப் பொழுதினுள் நாடகத்தின் இடை
வேளையும் வந்ததுவோ!—இது
ஞானம் புதுக்கிடும் நல்ல, இலையுதிர்
காலப் பொழுதலவோ!—அந்த

யாழை இசைப்பவன் யார்?என்-றது அதில்
எழுந்தது சிறுநாதம்—வரும்
ஊழின் இசையினை ஊமை மொழிகளில்
உறைத்தது பனிக்காலம்!

மேல்'' என்று கூறினான். துரோண னும், வீடுமனும் விதுரன் கருத்தை ஆதரித்தார்கள்.

நல்லவர் சொல்லைத் துரியோதனன் என்று கேட்டான், இன்று கேட்க? அவர்கள் உரை கேட்டுத் துரியன் நெருப்பெனச் சீறினான்.

''எதிர்ப்புறத்தில் தேரில் இருந்து நம்மோடு போர் செய்ய முனைந் துள்ளவன்—மாவீரன் அல்லன். பேடி! அப்படி இருக்க நீங்கள் ஏன் இப்படி அஞ்சுகிறீர்கள்?'' என்று கர்ணன் கேட்டான்.

''நாம் கவர்ந்த ஆநிரைகளை இடையர்கள் நம் தேசம் நோக்கி ஓட்டிச் செல்லட்டும், ஒரு பகுதி வீரர்கள் அதற்குத் துணைசெல்லட் டும். ஏனையோர் விரைந்து போர் செய்யுங்கள்.'' என்று துரியோத னன் அனல் பறக்க ஆணையிட்டான்.

ஆயினும் என்ன? வில்லுக்கு ஒருவ னான அர்ச்சுனன் முன்னே அவன் ஆணை என்ன செய்யும்? காற்றென விரைந்த அர்ச்சுனன், எதிர் நின்ற பெரும் படையை விலக்கிச் சென்று, நிரையோடு சென்ற சைனியங்களை வென்று கன்றுகளும் பசுக்களுமாகச் சென்ற ஆநிரைகளை மீட்டான்.

இதனால் நிரைகளைக் கவர்ந்து சென்ற துரியோதனனோடு வந்த இடையர்கள் நன்றாகக் காய்ந்த நெய்போல ஆரவாரம் அடங்கிப் போனார்கள். விராட தேசத்து இடை யர்கள் கொதிக்கும் நெய்யில் துளி பால் பட்டால் எப்படி ஓசை எழுமோ அப்படி ஆரவாரம் செய் தார்கள்.

முந்த ஆன் தொறுமீட்டலும்
முற்கவர் பொதுவர்
வெந்த நெய்யென ஆரவாரம்
அடங்கினர் மிகவும்
அந்த நெய்யினில் பால்துளி
உகுத் தென ஆர்த்தார்.
வந்த மச்சர் கோமகனொடும்
வந்த கோபாலர்.

மகிழ்ச்சி அடைந்த அந்த இடை யர்கள் பசுக்களோடு விராட நகரின் வடபுறத்தில் தங்கள் இடங்களை அடைந்தார்கள்.

கப்பிய இருள் ஆயினும் காலம் வரும்போது நீங்கித்தானே ஆக வேண்டும்!

அர்ச்சுனன் சொன்ன நான்கு நாழி கைப் பொழுது கழிந்தது. ஊர்வசி கொடுத்த சாபத்தால் நேர்ந்த பேடித் தன்மையும் மறைந்தது. மறைந்து வாழும் காலமும் முடிந் தது.

உடனே அர்ச்சுனன் தன் கொடி யில் சின்னமாக விளங்கும் அனுமப் பெருமானைத் தியானம் செய்தான். உடனே அனுமன் உருப் பொறித்த கொடியுடன் அர்ச்சுனது வலிய தேர் அவன் முன்னே காட்சி தந்தது. தன் தேரில் ஏறிக் கொண்டான். உத்தரன் அத் தேருக்குச் சாரதி ஆனான். கொடுத்து வைத்தவன்!

சூரியனைக் கண்ட பனி என, பேடி உருவம் மாற, கரிய மேனியனாய், கட்டழகனாய், கர்மவீரனாய், அர்ச்சு னன் காட்சி தந்தான். பகைவர் கதி கலங்கினர். அர்ச்சுனன் தேர்க் கொடியிலிருந்த அனுமன் மகிழ்ச்சி யால் கூத்தாடினான். இடியோசை கேட்ட நாகங்கள் என அர்ச்சுனன் வில்லோசை கேட்டுப் பகைவர்கள் நடுங்கினர்.

பகைவர் நடுங்கியிருக்க அர்ச் சுனனது சிங்க நாதத்தையும் சங்க நாதத்தையும் நாண் ஒலியையும் கேட்ட உத்தரன் தேர் செலுத்தும் தொழில் மறந்து மயங்கி வீழ்ந்தான். அவனை மீண்டும் தேற்றித் தேர் செலுத்துமாறு செய்தான் அர்ச்சுனன்.

குகையிடைக் கிடந்த சிங்கம் வெளிப்பட்டால் நிலை என்ன? கரந்தும் மறைந்தும் வாழ்ந்த அர்ச் சுனன் தன் உருப்பெற்றதும் புயல் ஆனான்; இடி ஆனான்; மழை ஆனான்; வெள்ளம் ஆனான். அவற்றில் சிக்கிப் பகைவர்கள் சின்னாபின்னம் ஆனார்கள். துரியோதனன் தேர்க் குதிரைகளையும் பாகனையும் அழித் தான். வஞ்சமாய்ச் சூதாடி அவர் கள் வாழ்வைக் கவர்ந்த நயவஞ்ச னும் துரியோதனனை நோக்கி வெஞ்ச மரில் அர்ச்சுனன் ஏளனமாய்ச் சிரித்தான்.

துரியோதனன் வஞ்சகத்தில் தானே வீரன். எனவே நிலை மிஞ் சியதும் தப்பி ஓடத் தொடங்கினான். அவனைத் தடுத்து நிறுத்திய அர்ச்சுனன்:

''கையிலே வில்லிருக்க களத்திலே புறமுதுகிட்டு ஓடினால் களிற்றின் மேல் இருந்து நீ ஊர்வலம் வரும் போது இருபுறமும் நிற்கும் பருத்த மார்பகங்களை உடைய மாதர்கள் என்ன சொல்வார்கள்? இருபுறமும் மாதரார் கவரி வீச, இவ்வுலகம் முழு தும் உன்னுடையதாக இருக்கப் புற முதுகிடுதல் உனக்கு ஏற்றதா? உன்னையும் உன் தம்பியரையும் ஒரு கணத்திலே விண்மிசை ஏற்றுவேன். ஆனால் சிங்கக் கொடியை உடைய என் தமையன் வீமனின் வெஞ்சினம் பொங்குமே என்று அஞ்சி அதனைச் செய்யாது விடுகின்றேன். எங்களைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு சூரியன் மறைய இரவில் சந்திரன் ஒளி வீசு வதுபோல் தடையின்றி உங்கள் ஆட்சியை நடத்தி வந்தீர்கள். வெகு விரைவில் நிகழப் போகும் போரில் வீமன், துரோகியான உன்னையும் உன்னைச் சேர்ந்தவர்களையும் களப் பலியாக்குவான்.''

என்று அவன் துரியோதனனை நோக்கிப் பேசிய பொழுது, அக் கொடியவனும் வீடுமனும் கர்ண னும் ஏனையோரும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

கர்ணன் வீர வார்த்தைகளை வீசி அர்ச்சுனனைப் போருக்கு அழைத் தான். இருவரும் நேர்முகப் போரில் ஈடுபட்டார்கள். நெடுநேரப் போரில் பலமுறை தோற்றுத் திரும்பத் திரும்ப வந்தும், கர்ணன் இறுதியில் தோற்று ஓடினான்.

ஓடிய கர்ணனை நோக்கி அசுவத் தாமன் சில கூறினான். கூறினானா? கூரம்புகளை வீசினான்.

தொடரும்



# சோவியத் நாட்டில் ஓர் இந்தியக் கவிஞர்



டாக்டர் கிருஷ்ணஸ்ரீநிவாஸ்

“எல்லோரும் இந்நாட்டு மன்னர்” என்று பாரதியார் பாடிச் சென்ற நாடு என் கண்ணில் தென்படாதா என்று நான் தவிக்கும் நேரத்தில், ‘‘சோவியத் நாட்டை இரு வாரங்கள் வந்து பார்க்க இயலுமா?’’ என்று தந்தி வந்தது, மாஸ்கோவிலுள்ள சோவியத் எழுத்தாளர் சங்கத்திலிருந்து.

சர்வதேசக் கவிஞர்கள் விரும்பி ஆதரிக்கும் என் மாதாந்திர பத்திரிகை ‘பொயட்’டின் மே இதழ், ரஷ்யக் கவிஞர்களின் உயர்ந்த கவிதைகளைத் தாங்கி உலக நாடுகள் எங்கும் உலாவி வந்த தருணம் அது. ஜூலை மாதம் அமெரிக்காவில் நடந்த ஐந்தாம் உலகக் கவிஞர்கள் மாநாட்டிற்கு வந்திருந்த ரஷ்யக் கவிஞர் டால்மடாவ்ஸ்கி, என்னை மாஸ்கோ வரும்படி வற்புறுத்தியிருந்தார். அழைப்பை ஏற்றுக் கொண்டேன். அக்டோபர் மாதம் 15-ஆம் தேதி டில்லிக்குப் பறந்து சென்று, அன்றிரவு 12-15-க்கு மாஸ்கோ விமானம் ஏறினேன். டாஷ்கண்டில் ஒரு மணி நேரம் இறங்கி இருந்து விட்டு, விமானம் புறப்பட்டு, காலை 6-30-க்கு மாஸ்கோ அடைந்தது.

‘‘வருக! வருக!’’ என்று புன்முறுவலுடன் என்னை வரவேற்றார் மீரா சௌகானிக். எனக்குத் துணையாக இருக்க நெல்லி கோபினாவும் வந்திருந்தாள். நான் எழுத்தாளர் சங்கத்தின் அதிதி என்பதால் ராஜ மரியாதையுடன் இமிக்ரேஷன் சோதனை ஒன்றுமில்லாமல், எனக்கென்று காத்திருக்கும் காரில் ஏற்றிக்கொண்டு, பிரசித்தி பெற்ற கிரெம்ளின் அரண்மனைக்கு எதிரே உள்ள ‘ஹோட்டல் ரஷ்யா’வை அடைந்தோம். அங்கே பத்தாம் மாடியிலுள்ள அறைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். ‘‘களைப்பாயிருக்கும்! பிற்பகல் வருகிறேன். நெல்லி உங்களைக் கவனித்துக் கொள்வாள்’’ என்று சொல்லி இருவரும் சென்று விட்டனர்.

மூன்று மணி.

‘‘கிருஷ்ணா! போலாம் வா!’’ என்று என்னை அழைத்துச்சென்றாள் நெல்லி. மாஸ்கோவின் பிரபல ரஸ்தாக்களில் என்னை அழைத்துச் சென்றாள். கிரெம்ளின், போல்ஷ்விக் தியேட்டர், மயாகவாஸ்கி சதுக்கம், புஷ்கின் சதுக்கம். மற்ற இடங்களைக் காரிலேயே சென்று பார்த்தோம்.



கவிஞர் டால்மடாவ்ஸ்கி

‘‘மாஸ்கோ ஜனத்தொகை என்ன?’’ என்று கேட்டேன்.

‘‘ஒரு கோடி!’’ என்றார்.

‘‘ஒரு கோடி என்றால், நகர வீதிகளில் அதிகம் மக்கள் காணவில்லையே?’’ என்று கேட்டேன்.

‘‘அத்தனை மக்களும் பூமிக்கடியில் இருக்கிறார்கள்’’ என்றார் சிரித்துக் கொண்டே.

‘‘எப்படி?’’ என்றேன்.

‘‘நாளை பார்க்கலாம். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நாளை வருகிறேன்’’ என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். பிரயாண அலுப்பால், நான் மெய்மறந்து தூங்கிவிட்டேன்.

மாஸ்கோவில் காணமுடியாதது ஒன்று: சூரியன். நானிருந்த பன்னிரண்டு நாட்களில், ஒரே ஒரு நாள் தான் சூரியனைப் பார்த்தேன். எப்போதும் மேக மூட்டம்தான். சீதோஷ்ணம் 36 டிகிரி. வெளியே போகவேண்டுமானால், ஓவர்கோட், குல்லா இல்லாமல், காலடி வைக்க முடியாது.

17-ம் தேதி காலை பத்து மணிக்கு நானும் நெல்லியும் கிரெம்ளின் சென்றோம். உலகிலேயே பிரமாண்டமான ‘பாலஸ் ஆஃப் காங்கிரஸ்’ இங்கு இருக்கிறது. 6000 பேர் ஒரே சமயத்தில் உட்காரலாம். ரஷ்யாவின் பார்லிமெண்ட் இங்கு தான் கூடுகிறது. மற்ற தினங்

களில் நாட்டிய நாடகங்கள் நடைபெறும். எங்கு பார்த்தாலும் மாதா கோவில்கள்-(ஒன்றில் கூடத் தொழுகை நடக்காது)தங்கக் கோபுரங்கள், பெரிய மணி, அதன் நாக்கு பல அடிகள் நீளம், அரசாங்க அலுவலகங்கள், லெனின் நடமாடிய தோட்டங்கள்-எல்லாம் கவர்ச்சிகரமாக இருந்தன.

அன்று மாலை டால்மடாவ்ஸ்கி வீட்டில் எங்களுக்கு இரவு உணவு. அவர் மனைவியார் எனக்காகக் காய்கறிகள் வேகவைத்து, பால்-பழம் கொடுத்து உபசரித்தாள்.

அன்று இரவு ஒரு ஸர்க்கஸுக்குச் சென்றோம்.ரஷ்யர்களின் திறனுக்கு உலகில் ஈடு இணையில்லை.

ஞாயிறு காலை 'பாதுகாப்பு' என்ற நாட்டிய நாடகம் பார்த்தோம். ஓர் ஏழைக் கவிஞனை மணக்க, பெண் துணிந்துவிட்டாள். முதலில் தாயாருக்கு விருப்பமில்லை. இறுதியில் காதலர்கள் வெற்றிபெறுகிறார்கள். நடனமும், நடிப்பும் பிரமாதம். மாலை, போல்ஷவிக் தியேட்டரில், மற்றொரு நவீன 'பாலே.'

திங்களன்று எழுத்தாளர் சங்கத்தில் மீராவைச் சந்தித்தோம்.அங்கு இளம் கவிஞர் அலெக்ஸாண்டர் த்காட் சென்கோ என் 'தாசியின் நர்த்தனம்' படித்துவிட்டுப் பூரித்துப் போனார். ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்க அனுமதி கேட்டார். சம்மதித்தேன். ரஷ்யாவில் முதல் பதிப்பு 50,000 பிரதிகள் அச்சிடுகிறார்கள். சில கவிஞர்களின் படைப்புகள் இலட்சக் கணக்கில் விற்பனையாகின்றன. டி.வி.யிலும், ரேடியோவிலும், பத்திரிகைகளிலும் கவிதைகள் அபரிமிதமாக வெளிவருவதால், மக்களிடம் அவர்கள் எழுத்து ஒரு தனி ஆட்சி செலுத்துகிறது.

இளைஞன் த்காட் சென்கோ, ''சோவியத் இளங்கவிஞர்களுக்கு, உங்கள் 'போயட்'டில் ஒரு மாதம் இடம்கொடுங்கள்,எங்கள் கவிதைத் திறனை உலகம் அறிய உதவுங்கள்'' என்று கேட்டுக்கொண்டார். களிப்புடன், சம்மதம் என்றேன். அந்தக் கவிஞனுக்குத்தான் எத்தனை ஆர்வம். முப்பது கவிஞர்களின் துடிக்கும் கவிதைகளைச் சேகரித்துவிட்டான். ஜனவரிக்குள் எனக்கு அனுப்ப மீரா உறுதி கூறினான்.

மாலை 'டான் ஜுவான்' பாலே.

இரவு 11-55-க்கு நானும் நெல்லியும் லெனின்கிராட் நகரத்துக்கு ரயிலில் பிரயாணமானோம்.

ஹோட்டல் ஐரோப்பாவைக் காலையில் அடைந்ததும், லெனின்கிராட் நகரம் சுற்றிவர, பொழுமி குலன்று பாக்டாஸரியான் என்னுடன் வந்தாள். பிரமாண்டமான நகரம். கலை மணக்கிறது. எங்கும். பெரிய பெரிய பாலங்கள்.

பிற்பகலில் டாஸ்டராஸ்கி வசித்த வீட்டைப் பார்த்தேன். அவர் உபயோகித்தவை எல்லாம் அப்படியே காக்கப்பட்டு வருகின்றன. அவர் பேனா, படுக்கை, புத்தகங்கள் எல்லாமே... அவர் பட்ட கஷ்டங்கள் எத்தனை. தீட்டிய காவியங்களோ, பல.

மறுநாள், 'ஹெர்மிடேஜ்' அரண்மனையைச் சுற்றிப் பார்த்தோம். பிரமிக்க வைக்கும் கலைப் பொருள்கள் இங்குக் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மன் நாட்டுக் கலைப் பொக்கிஷங்கள் இங்கு இருக்கின்றன. மடோன்னா பிரமாதம். சுற்றிப் பார்க்க பல மணி நேரம் ஆகும்.

மாலையில் லெனின்கிராட் சர்வகலாசாலையைச் சேர்ந்த டால்ஸ்டாயி அம்மையார் என்னைச் சந்தித்தார். இவர் ஹிந்தி, பஞ்சாபி பாஷைகளில் தேர்ச்சி பெற்றவர். என்'பஞ்ச பூதம்' அவரை ரொம்பவும் கவர்ந்தது. ஒரு பிரதி அவருக்குக் கொடுத்தேன். அதன் பின் குராஃப் வந்தார். தெலுங்கில் தேர்ச்சி பெற்றவர்.இந்தியாவுக்குப் பல முறை வந்திருக்கிறார். என் காவியம் அவரை ரொம்பவும் கவர்ந்தது. நடுநிசியில் புறப்பட்டு, வியாழன் காலை மாஸ்கோ திரும்பினோம்.

''பாதாளம் போகலாமா?'' என்றாள் நெல்லி.

ஒரு பாதையில் இறங்கி 600அடிக்குக் கீழே உள்ள 'மெட்ரோ' என்ற சுரங்க ரயில் பாதையைக் கண்டேன். எனக்கு மயிர்க்கூச்செறிந்தது. கண்ணுக் கெட்டிய தூரம் தலைகள்தான் தென்பட்டன. —பனியில் பூத்த சிவப்பு ரோஜாக்கள் வரிசை வரிசையாக, ஒன்றன்பின் ஒன்றாக, மெதுவாக நகர்ந்து வருவதைப் பார்த்ததும், ஒரு பிரமாண்டமான பூந்தோட்டமே நகர்ந்து வருவது போல் எனக்குத் தோன்றிற்று. நெல்லியின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு, அந்த நடமாடும் மனித சமுத்திரத்தில் மூழ்கினேன். எங்கே போகிறோம் என்பதையே என்னால் உணர முடியவில்லை. என்னால் சிந்திக்கவே முடியவில்லை. கண்திறந்த மௌனியாய் மெய்ம்மறந்து நடந்தேன். ஐந்து கோப்பெ, நுழைவு கேட்டில் போட்டு, ரயிலில் கொஞ்ச தூரம் பிரயாணம் செய்தோம். எல்லாம் ஸ்வப்னம் போலிருந்தது.

பிற்பகல் மூன்று மணிக்கு,ரஷ்யாவின் வருங்கால மேதைகள் உருவாகும் 'கார்க்கி இலக்கிய இன்ஸ்டிடியூட்'டுக்குச் சென்றோம். மகாகவிஞர்களும், மகா மேதைகளும் உருவாகும் பண்ணை இது. 1400 மாணவர்கள், கடினமான தேர்வுகளுக்குப் பின் இங்கே சேர்க்கப்படுகிறார்கள். ஆறு ஆண்டு காலம், உயர்மட்டக் கல்வி. ரஷ்யாவின் பிரபல அறிஞர்கள் இங்கு தேர்ச்சி பெற்றவர்கள்.

முப்பது நிமிடம்,மாணவர்களுக்கு, உலகக் கவிதை, கவிதை மூலம் சமாதானம் ஏற்படுத்த நான் எடுக்கும் முயற்சிகள், என் பத்திரிகையின் நோக்கங்கள் எல்லாவற்றையும் அவர்களுக்கு எடுத்துக் கூறினேன்.

இந்த ஒரு மணிநேர நிகழ்ச்சியை மாஸ்கோ டெலிவிஷன் நிலையம் ஒளிப் பதிவு செய்தது. ''மீண்டும். மீண்டும் இதைக் கோடிக்கணக்கான ரஷ்யர்கள் காண்பார்கள்'' என்று கூறினார்கள்.

மாஸ்கோ ரேடியோ,என் தமிழ்ப் பேச்சை ஒலி பரப்பியது.

மறுநாள் பாரதி நூற்றாண்டு விழா கமிட்டியினரைச்சந்தித்தேன். மாஸ்கோ சர்வகலாசாலை தமிழ் பேராசிரியர் டுபியான்ஸ்கி பாரதியாரைப் பற்றிய நூல்களைத் தமக்கு அனுப்பக் கோரினார். பிரசுரகர்த்தரான போர்னிகா விழா நிகழ்ச்சிகளை விளக்கினார்.

இந்தியாவிலிருந்து,இலக்கிய மேதைகள், ரஷ்யாவில் நடக்கும் பாரதி விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினேன். அன்புடன் சம்மதித்தார்கள். நான் எழுதிய 'கவிதை பாரதி'யை ரஷ்ய மொழியில் பெயர்க்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். இறுதியில், ''சந்திப்போமா?'' என்று என்னைக் கேட்டதும், ''சென்னையிலா? மாஸ்கோவிலா?'' என்றேன். ''இரண்டிலும்'', என்றார்கள் மூவரும். இந்த ரஷ்யர்களுக்குத்தான் தமிழில் எத்தனை ஆர்வம். பல அரிய நூல்களை மொழிபெயர்க்க முயலுகிறார்கள். இது, தமிழ் செய்த பாக்கியம்.

அன்று பிற்பகல் மூன்று மணிக்கு ரஷ்ய மொழியில் வெளியாகும் 'அந்நிய நாட்டு இலக்கியம்' என்ற ஆசிரியர்களைச் சந்தித்தேன். ஒரு மணி நேரம் என்னைக் கேள்விகள் கேட்டு என் பதில்களைப்பதிவுசெய்து கொண்டார்கள். என் காவியம் 'பஞ்ச பூதம்' இதில் விமர்சிக்கப்படும். பத்து லட்சம் பிரதிகளை ருஷ்ய மக்கள் அனைவரும் படிக்கிறார்கள்.

நான் பாரதியாரின் 'ஊழித் கூத்தை' ஆங்கிலத்தில் பெயர்த்திருந்தேன். அதை உருக்கமாகப் படித்ததும், அவர்கள் பூரித்தார்கள். பாரதியாரைப்பற்றி எழுதுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். மகாகவியின் நூற்றாண்டில் இது ஒரு முக்கியமான வெற்றி

தமிழர்களுக்கு. 'கீதை'யைப் பற்றி விளக்கம் கொடுத்தேன். ரொம்பவும் ரசித்தார்கள். இந்தியாவின் மீது அவர்களுக்கு எத்தனை மதிப்பு!

சனிக்கிழமை டால்மடாவ்ஸ்கி வீட்டில் விருந்து.

கடைக்குச் சென்று ரஷ்யக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்புகள் வாங்கினேன். அன்றிரவு ஓர் அற்புதமான 'பாலே' பார்த்தேன்.

ஞாயிறன்று பிற்பகல் 'ஜெல்லோ' கச்சேரி போயிருந்தோம், போல் ஷவிக் தியேட்டரில். 1756-ல் கட்டப்பட்ட இந்த அரங்கம் இரு தடவை தீ விபத்தில் சிக்கினும், இன்று பார்க்கப் பார்க்கப் பரவசம் ஊட்டும் அரங்கமாக விளங்குகிறது. பால்கனியில் ஆறுமாடிகள். 3000 ரசிகர்கள் உட்காரலாம்.

திங்களன்று தீபாவளி. கங்கா ஸ்நானம் கிடைக்காவிட்டாலும், 'மாஸ்கோ' ஸ்நானம் கிட்டியது. காலையிலே நீராடி, புத்தாடை உடுத்திக்கொண்டு ஆண்டவனை வணங்கினேன்.

பிற்பகல் ஒருமணிக்கு 'சோவியத் இலக்கியம்' ஆசிரியர்களைச் சந்தித்தேன். இது, ஆங்கிலம், பிரெஞ்ச், ஸ்பானிஷ், ஜெர்மன், ஜப்பானிய முதலிய உலகபாஷைகளில் வெளியாகி, நூறு நாடுகளில் அமோகமாக



நெல்லி கோபினு

விற்பனையாகிறது. இதன் ஆசிரியை வேலன்டீனு ஜேக்யூ, என் காவியம் 'ஆத்ம கீதத்தை' ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்க என் அனுமதி பெற்றுவிட்டாள்.

இப்பத்திரிகையில் வெளியானமிகச் சிறந்த கவிதைகளைத் தொகுத்து என் பத்திரிகையின் ஓர் இதழில் வரும்படி அனுப்புகிறேன் என்றாள். 'கவிதை மூலம் சமாதானம்' என்ற கட்டுரையை நான் இவர்களுக்கு எழுதி அனுப்பிவிட்டேன். 'ரஷ்யக் கவிஞர்களை பிறநாட்டுக் கவிஞர்களுடன் ஒப்பிட்டு, ஆராய்ச்சிக் கட்டுரைகள் அனுப்புகிறேன்' என்றேன். அவர்கள் இதை ரொம்பவும் விரும்பி வரவேற்றார்கள். என்னுடன் ஒரு நீண்ட நேரப் பேட்டியும் கண்டார்கள். மன நிறைவுடன் ஹோட்டல் திரும்பினேன்.

என் ரஷ்ய விஜயம் இத்தனை எதிர்பாராத வெற்றிகளைத் தேடிக் கொடுக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ''எல்லா இலக்கிய கர்த்தாக்களையும் அழைத்துச் செல்வது போல் என்னையும் அழைத்துச் செல்வார்கள்; 'பார், பார், மாஸ்கோ பார்' என்று கூட்டத்தில் ஒருவராய் என்னையும் நடத்திச்செல்வார்கள்'' என்றுதான் நினைத்திருந்தேன். உலகக் கவிஞர்கள் தலைவன் என்ற முறையில்தான் என்னை அழைத்திருக்கிறார்கள் என்று மாஸ்கோசென்றபின் தான்தெரிந்து கொண்டேன். ''கிருஷ்ணு, நீ மாஸ்கோவைட்! எங்களுடன் நீயும் ஒருவன்'' என்று நெல்லி சொன்னதைப் பின்னரே என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

புறப்படும் நேரத்தில் நான் ரொம்பவும் சந்தோஷப்பட்டேன்; பூரித்துப் போனேன். என் மாஸ்கோ விஜயத்தில் நண்பர்கள் பலரின் இலக்கியப் படைப்புகள் உலகப்புகழ் அடையப் போகின்றன என்பதை அறிந்து மனமகிழ்ந்தேன்.

மாஸ்கோ விமான நிலையத்தை அடைந்ததும், நெல்லியுடன் பிரியும் நேரம் நெருங்கிவிட்டது. கண்களில் நீர் பொங்க அவள் என்னைப் பார்த்தாள். ''மீண்டும் சந்திப்போம்'' என்று நான் அவளைத் தேற்றி, விமானம் ஏறினேன்.

மாஸ்கோ மண்ணை விட்டுக் கிளம்பி, டில்லி நோக்கி, விமானம் பறக்கத் தொடங்கிற்று.

'எத்தனை பெரிய நாடு! எத்தனை உயர்ந்த உள்ளம் படைத்த மக்கள்!' என்று என் எண்ணங்கள் ரீங்காரம் செய்தன! ஃ



## அக்ஷரலக்ஷம்

● பாரதியாரின் பாக்கள் பல அக்ஷரலக்ஷம் பெறக்கூடியவை என புகழ்ந்து கூறி மகிழ்வார் வ.வே.சு. ஐயரவர்கள். அவர் கூறுகிறார்:

''கடற்கரையில் சாந்தி மயமான சாயங்கால வேளையில் உலகனைத்தையும் மோகவயப் படுத்தி நீலக் கடலையும், பாற்கடலாக்கும் நிலவொளியிலே, புதிதாகப் புனைந்த கீர்த்தனங்களைக் கற்பனு கர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியர் (பாரதியார்) தம்முடைய கம்பீரமான குரலில் பாடினதைக் கேட்ட ஒவ்வொருவரும் இந்நூலிலுள்ள பாட்டுக்களை மாணிக்கங்களாக மதிப்பர்'' என்று கண்ணன் பாட்டு முகவுரையிலே கூறியுள்ளார்.

## நடையும் உடையும்

● ''பாரதியாரின் நடையே ஒரு மாதிரி. பூமிமேல் அதிகமாகக் கால் ஊன்ற மாட்டார். அவரது மெலிந்த தேகம் காற்றினால் தள்ளப்பட்டு முன்செல்வதுபோல் இருக்கும். சிறுவயதிலிருந்தே உள்ளங்காலில் கல்லொத்து என்னும் உபாதை இருந்து வந்ததனால் தரைமேல் காலை அதிகமாக ஊன்ற மாட்டார். அவர் எண்ணங்கள் எப்பொழுதும் மேல் நோக்கிச் செல்வதற்கேற்ப அவர் நடையும் அமைந்தது போலும். சிறகுகளை அசைத்து நடக்கும் பக்ஷிகள் போல பாரதியார் நடந்தார்.''

தீ மயிலைரக் கத்தரித்துக் கொள்வார். சில சமயம் முழுமயிரையும் எடுத்துவிடுவதும் உண்டு. மீசை எப்போதும் உண்டு. புதுவைக்குப் போன பிறகு தாடியும் வளர்க்க ஆரம்பித்தார். சக்திப் பாடல்களைப் பாட ஆரம்பித்ததிலிருந்து தான் நெற்றியிலே சிவப்புக் குங்குமப் பொட்டோ அல்லது திரிசூர்ணக் கோடோ அணிவார். சாதாரணமாக வீட்டில் இருக்கும் போதுகூட கோட்டும் ஷர்டும் கழுத்தில் மப்ளரும் தலையில் முண்டாசுமாகத்தான் காட்சியளிப்பார்.

ஒப்பந்தக் கூலி முறை ஒழிப்புக்கு அரும்பாடுபட்டவர் சி.ஏப். ஆண்ட்ருஸ். கவிதைகளாக அவர் எழுதி வைத்த ஆங்கிலப் பெருமகன் அவர் தனது ஆங்கிலக் கவிதைகளை தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். தமிழ்ப் புலவர்கள் யாரும் அவரது கவிதைகளை தமிழாக்க முயலவில்லை. இதனைக் கேள்விப்பட்ட பாரதியார் ''கரும்புத் தோட்டத்திலே'' எனத் தொடங்கும் நான்கு பாடல்களைப் பாடி அனுப்பினர். இவைகளைப் படித்த ஆண்ட்ருஸ் மிகவும் மகிழ்வடைந்தார். தனது ஆங்கிலக்கவிதைகளை விட, தமிழ்ப் பாடல்களின் சோகம் அதிகமாக இருப்பது கண்டு மெய் சிலிர்த்தார்.

—கங்காராமமூர்த்தி

1-12-81 முதல் 31-12-81 முடிய

# உங்கள் ராசி பலன்

'மீனாட்சி பாலன்'

## மேஷம் (அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

இந்த இராசி நேயர்கள் புத்திரர்களால் சந்தோஷம் அடைவர். தெய்வீக வழிபாடுகள் நிறைந்திருக்கும். மஹான்களின் தரிசனம் கிட்டும் வாய்ப்பு உண்டு. பரோபகார சிந்தனையுடன் புகழடைவர். யோகாப்பியாசத்தில் பற்றுதல் ஏற்படும். சுகமும் தனமும் சேரும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்குத் திருமணம் நடைபெறும். கிரஹ லட்சுமி வருகையால் ஜீவனபலம் அதிகமாகும். ஆடை அணிகலன்கள், சொத்துக்கள் சேரும் பாக்கியமுண்டு. சந்தோஷ சுகத்துடன் வாழ்க்கை அமையும். வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு நற்பலன்கள் கிட்டும். வருவாய் பெறும் யோகம் உண்டு. தொழில் துறையில் ஈடுபட்டுள்ளோர் தங்கள் முதலீடுகளை முன் எச்சரிக்கையுடன் பயன்படுத்துவது விவேகம். ஏனெனில் செய் தொழிலில் சத்துருக்கள், வஞ்சகர்கள் இருப்பார்கள். வாகன சுகம் கிட்டும் யோகம் உண்டு.

## ரிஷபம் (கிருத்திகை 2, 3, 4 பாதங்கள்; ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள்)

இந்த ராசி நேயர்கள் தந்தையிடம் அன்பையும் பாக்கியத்தையும் பெறுவர். பால் பாக்ய விருத்தியுண்டு. புகழுடன் வாழ்க்கை நன்கு பிரகாசிக்கும். யோக வாழ்க்கை கை கூடும். பெரியவர்களிடையேயும், சுற்றத்தாரிடமும் பழகும் போது அன்புடனும் பண்புடனும் பழகுவது விவேகம். புத்திர விருத்தியுண்டு. குடும்பத்தில் சந்தோஷங்கள் நிறைந்து விளங்கும். பெரியவர்களின் ஆதரவும் சினேகமும் இருக்கும். சிலருக்கு அரசாங்க உயர் பதவி கிட்டும். பிரபல யோகத்துடன் திகழும் வாழ்க்கை அமையும். சிலர் பூர்வீக உடைமைகளைக் கடன்களால் இழக்க நேரலாம். புத்திரர்களுக்கு மருத்துவச் செலவை ஏற்கும் நிலையும் ஏற்படும். ஸ்திரீகள் விஷயமாய்ச் செலவுகள் ஏற்படும். தாராள மனதுடன் செலவை ஏற்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகும். சுற்றம் நண்பர்கள் மூலம் நற்பெயர் கிட்டும்.

## மிதுனம் (மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள்; திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, பாதங்கள்)

இவ்விராசி நேயர்களுக்குச் சில எச்சரிக்கைகள்: குடும்பப் பொறுப்பை ஏற்காமல் வெளியே சுற்றும் சூழ்நிலை உருவாகும். மனம் ஆசையால் உந்தப்பட்டு மெல்லியலார்களின் கடைக் கண் வீச்சுக்கு ஆட்படாமல் நடந்து கொள்வது நன்று. இல்லையெனில் அதன்பின் விளைவுகள் மிகத் தொல்லை தரும். தொழிலில் பற்றுதல் இல்லாமல் கவர்ச்சி, கர்வம், 'தான்' என்ற எண்ணத்துடன் உலவி வருவர். இருப்பினும் இல்லாள் மூலம் லாபம் கிட்டும் போக்கு காணப்படுகிறது. சகோதரர்களின் ஆதரவு உண்டு. புத்திரர்களால் அமைதி குன்றும். குடும்ப பட்ஜெட் எல்லைக்கு மேல் தலைதூக்கும். மேலும் வழக்குகள் மூலம் செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. உடல் நலக் குறைவாலும் செலவுகள் உண்டு. ஸ்தாவர சொத்து, வண்டி, வாகனம் ஆகிய ஆஸ்திகள் சேரும். தாய் வழி ஆதரவும் ஏற்பட நியாயமுண்டு.

## கடகம் (புனர்பூசம் 4-ஆம் பாதம்; பூசம், ஆயில்யம்)

இவ்விராசி நேயர்கட்குச் சில பிளஸ் பாயிண்டுகள். அறிஞர்களின் நட்பு கிட்டும். தைரியம், வாக்கு வன்மை, செல்வம், செல்வாக்கு, பிறரைக் கவரும் பேச்சுத் திறன் வாகன யோகம் ஆகிய உயர் அம்சங்களுடன் வாழ்க்கை அமையும். புத்திரர்களால் சுக, சௌகரியங்கள், தனப் பிராப்தி ஆகியவை ஏற்படும். புத்திரர்கள் விசுவாசத்துடன் இருப்பார்கள். குடும்பத்தில் வருமானத்திற்கும், செல்வத்துக்கும் குறைவிருக்காது. சிலர் சாஸ்திர ஆராய்ச்சிகளில் ஈடுபடுவர். இல்வாழ்வில் பற்றுதலோ பிடிப்போ இருக்காது. சகோதர ஒற்றுமை குறையும். மனத்திண்மை குறைந்து மனத்தில் ஒரு விதப் பீதி குடிகொள்ளும் போக்கும் காணப்படுகிறது. பூர்வீக சொத்துக்கள் பின்னமடையும். பணியில் கவனமுடனும் விழிப்புணர்ச்சியுடனும் பணியாற்றுவது சாலச் சிறந்தது.

## சிம்மம் (மகம், பூரம், உத்திரம் 1-ஆம் பாதம் முடிய)

இவ்விராசி நேயர்கட்கு விசாலமான குடியிருப்பு கிட்டும் யோகம் உள்ளது. இல் வாழ்க்கையின் இன்ப சுருதி வாழ்க்கைச் சங்கீதத்தை இனிமையாக்கும். வாழ்வில் சகல வளங்களும் கிட்டும். சுற்றத்தார் ஆதரவு உண்டு. வியாபாரத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் அதிகமான இலாபங்களை எதிர் பார்க்கலாம். குடும்பம் பலத்துடன் திகழும். பணி ஆட்கள் செல்வாக்குடன் வாழ்க்கை அமையும். தெய்வீக வழிபாடுகள், மற்றும் மகிழ்ச்சியுடன் குடும்பம் விளங்கும். புத்திரர்களால் மருத்துவச் செலவு ஏற்படும். சமூகத்தில் எதிர் பார்க்கும் இனங்களில் ஏமாற்றம் தான் எதிர்ப்படும். மனைவியின் வழியாலும் சுற்றத்தார்களாலும் லாபங்களை அடையலாம். மாத முதல் வாரத்தில் தேவாலய தரிசனங்கள், திருப்பணிகள். இவற்றால் செலவுகள் ஏற்படும். இரண்டாவது வாரத்தில் செய்யும் தொழிலில் முடக்கமும், தொழிலை விட்டு விலகுதலும் ஏற்படும்.

## கன்னி (உத்திரம் 2, 3, 4 பாதங்கள்; ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதங்கள்)

இவ்விராசி நேயர்கட்குப் புத்திர சந்தான யோகம் கிட்டும். அரசாங்கம் மற்றும் சமூகத்தில் உயர் மதிப்பும் செல்வாக்கும் ஏற்படும். மாத முதல் வாரத்தில் மனைவியின் மூலம்

---

**பாரதியார் பொன்மொழிகள்.**

எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை; எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். இன்பத்துக்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. முகஸ்துதி செய்பவனையும், பொய் நடிப்புக் காட்டுவோனையும், தலையிலே வைத்து, ஸாமர்த்யமுள்ளவனையும் யோக்கியனையும் கீழே போடக் கூடாது.

இந்தக் காலத்தில் யாருக்கும் பயந்து நாம் நமக்குத் தோன்றுகிற உண்மைகளை மறைக்கக் கூடாது.

வீணை தவறாக வாசித்தால் வீட்டில் உள்ள ஜனங்களுக்கு மாத்திரந் தான் துன்பம், ஹார்மோனியம் தெருமுழுவதையும் ஹிம்சைப் படுத்துகிறது. ஒரு வீட்டிலே ஹார்மோனியம் வாசித்தால் பக்கத்திலே ஐம்பது வீடுகளுக்குக் கேட்கிறது. அறியாதவன் தனது அறியாமையை வீட்டில் இருந்தபடியே இரண்டு மூன்று வீதிகளுக்குப் பிரசாரம் பண்ண வேண்டுமானால் அதற்கு இந்தக் கருவியைப் போல உதவி வேறொன்றுமில்லை.

—எடுத்தெழுதியவர்: கங்காராமமூர்த்தி

அதிர்ஷ்டம் கிட்டும். இலாபங்கள் பெருகும். பால் பாக்யம், வாகன யோகம் கிட்டும். பொதுப் பணியில் ஈடுபாடு ஏற்படும் புத்திரர்களால் நன்மையுண்டு. பூர்வீக சொத்துக்கள் சேரும். தெய்வீக வழிபாடுகள் நிறைந்திருக்கும். சகோதரர்களுடன் ஒற்றுமை குறையும். இளைய சகோதர சகோதரிகளால் விரயம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் பின்னமடைய வாய்ப்பு உண்டு. யோகாப்யாசத்தில் பற்றுதல் ஏற்படும். உடல் நல்ல ஆரோக்யத்துடன் திகழும். மாத மூன்றும் வாரத்தில் நல்ல வருமானம், லாபங்கள், கௌரவம், செல்வாக்கு, அதிகாரம் ஆகியவை எதிர்பார்க்கலாம். வாக்குக்கு நன்மதிப்பும், ஆதரவும் உண்டு.

## துலாம் (சித்திரை 3, 4 பாதங்கள்; சுவாதி, விசாகம் 1, 2, 3 பாதங்கள்)

இந்த ராசி நேயர்கட்கு அதிகார யோகமும், அந்தஸ்து, சினிமா, நாடகம், நாட்டியம் ஆகிய கலைத் துறைகளில் ஈடுபாடும், சங்கீதத்தில் பிரியமும் ஏற்படும். ஆடை அணிகலன்கள் சேர்க்கை உண்டு. சகோதர சகோதரிகளின் ஆதரவு உண்டு. செல்வம், செல்வாக்கு, கீர்த்தி ஆகியவைகளுடன் திகழ்வர். சிலருக்கு மனைவியின் மூலம் லாபம் பெறும் யோகமும் ஏற்படும். கௌரவம், செல்வாக்கு நல்ல நிலையில் திகழும். கல்வித் துறையில் இருப்பவர்கட்கு வசதிகள் பெருகும். வண்டி வாகன யோகம் கிட்டும். சில இனங்களில் மாடு கன்று பெறும் யோகமும் ஏற்படும். தசாபுக்தி சாதகமாக இல்லையெனில் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் தோன்றும். வண்டி வாகனங்களால் பொருள் விரையம் ஏற்படும், சந்தர்ப்பமும் எதிர்பார்க்கலாம். எவ் விஷயத்திலும் முன் எச்சரிக்கை தேவை.

## விருச்சிகம் (விசாகம் 4-ஆம் பாதம்; அனுஷம் கேட்டை)

இந்த ராசி நேயர்கள் வாக்கு வன்மையுடன் சமூகத்தில் உயர் அந்தஸ்து பெறுவார்கள். எத்தொழிலைத் தொடங்கினாலும் நல்ல இலாபங்களை எதிர்பார்க்கலாம். குடும்பம் சுக சௌகர்யங்களுடன் திகழும். அறிவாளிகளுடன் நட்பு ஏற்படும். தெய்வீக வழிபாடுகள் நிறைந்திருக்கும். சிலருக்கு அரசுத் துறையில் உயர் பதவி, கௌரவம், நல்ல வருமானம் இவை கிடைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். தொழில் பலம் நன்கு அமையும். புண்ணிய காரியங்களில் மனம் ஈடுபடும். தொழிலை நல்ல முறையில் ஏற்று நற்பலனடையும் யோகம் கிட்டும். சில நேயர்கட்குக் கண் நோய் தொடர்பான இடர்கள் நேரலாம். வீண் சண்டையை விலைக்கு வாங்காமல் நிதானப் போக்குடன் நடந்து கொள்வது விவேகம். நல்ல வருமானமும், அது தொடர்புடன் செலவுகளும் ஏற்படும். இரவு நேரங்களில் காலணியுடன் வெளியே சென்று வருவது நன்று. உணவு, பருகும் நீர் இவற்றில் கவனம் செலுத்துதல் உடல் ஆரோக்கியத்திற்கு உறுதுணை அளிக்கும்.

## தனுசு (மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்.)

இந்த ராசி நேயர்கட்குப் புத்திரர்களால் மருத்துவச் செலவு ஏற்படும். குடும்ப பட்ஜெட் கட்டுக் கடங்காமல் செல்லும். கல்வியில் ஈடுபட்டுள்ளோருக்குச் சோம்பல் தலைதூக்கும். கல்வியில் ஊக்கம் குறையும். உடல் நலம் பாதிக்கப் படலாம். சிலர் கண் பரிசோதனைக்கு உட்படுவர். 'யாகாவாராயினும் நாகாக்க' என்ற குறளைக் கருத்திற் கொண்டு சமூகத்தில் பழகுவது நன்று. இல்லாளுக்கும் உடல் நலம் பாதிக்கலாம். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கக் கூடிய வாய்ப்பு உண்டு. பெரியவர்களிடம் பக்தி, விசுவாசத்துடன் இருப்பர். சுக சௌகர்யங்களுடன் வாழ்க்கை அமையும். பூமி, வியாபாரம் போன்றவற்றால் நல்ல இலாபம் கிட்டும். தாய்க்கு உடல் நிலை பாதிக்கும். பந்துக்களின் ஆதரவு உண்டு. தாய் வழி மூலம் ஆதரவும் லாபமும் எதிர்பார்க்கலாம்.

## மகரம் (உத்திராடம் 2, 3, 4 பாதங்கள்; திருவோணம், அவிட்டம் 1, 2 பாதங்கள்)

இந்த ராசி நேயர்கட்குப் புத்திர விருத்தி ஏற்படும் யோகம் கிட்டும். சமூகத்திலும், அரசுத் துறையிலும் நற்பெயர் கீர்த்தி பெற கிரஹ நிலைகள் சாதகமாக அமைந்துள்ளன. ஆசாரியர், மஹான்களின் தரிசனமும், ஆசியும் பூரணமாகக் கிட்டும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்கு நல்ல விருதுகள் பெறும் யோக்யதை உண்டு. உடல் நலம் நன்கு அமையும். யோகாப்யாசத்தில் பற்றுதல் கொண்டு ஆன்மீகத் துறையில் முன்னேறுவர். செல்வம், அதிகாரம், சுக சௌகர்யங்கள், உயர் பதவி, நல்ல வருவாய் இவைகளைப் பெறுவர். நற்பெயர் உண்டு. சுற்றம் நட்பு அறிவுடையோர் இவர்களின் நட்பைப் பெறுவர். பூர்வீக சொத்துக்கள் பின்னமடையும். தெய்வீக வழிபாடு நிறைந்துக் குடும்பம் நல்ல நிலையில் திகழும். குடும்பத்தில் மன அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். புத்திரர்களால் லாபம் ஏற்படும்.

## கும்பம் (அவிட்டம் 3,4 பாதங்கள்; சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள்.)

இவ்விராசி நேயர்கட்கு உடல் ஆரோக்யம் நன்கு அமையும். சொத்துக்கள் சுக சௌகரியங்கள், உயர் பதவி, நல்ல வருமானம் இவற்றில் முன்னேற்றம் காணப்படும். ஆடை ஆபரணச் சேர்க்கையுண்டு. வாகன யோகமும் கிட்டும் பாக்கியம் ஏற்படும். மனைவியின் மூலம் அதிர்ஷ்ட பாக்கியங்களைப் பெறும் சந்தர்ப்பம் கிட்டும். லாபங்கள் பெருகும். புத்திரர்களால் சௌகர்யங்கள் ஏற்படும். ஸ்திர சொத்துக்கள் சேரும் பாக்கியம் உண்டு. சாஸ்திர ஆராய்ச்சிகளிலும், தெய்வீக வழிபாட்டிலும் மனம் ஈடுபடும். பூர்வீகச் சொத்துக்களைப் பெறும் வாய்ப்பு கிட்டும். குடும்பம் உயர் நிலையில் திகழும். கொடுக்கல் வாங்கல் போன்ற வியாபாரங்களில் லாபங்களை எதிர்பார்க்கலாம். சகோதர சகோதரிகளின் ஆதரவு உண்டு. நிலபுலன்கள் வீடு போன்ற ஆஸ்திகள் வாங்கும் வசதியும் ஏற்படும். தந்தையின் அன்பு பூரணமாக நிலவும். இல்வாழ்க்கையில் எதிர்பார்க்கும் சௌகரியங்களும் சுகமும் கிட்டும். குடும்பம் கௌரவமான வாழ்க்கைப் பாதையில் வெற்றி நடை போடும்.

## மீனம் (பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

இவ்விராசி நேயர்கட்கு மந்த புத்தி தலை தூக்கும். எக்காரியத்தையும் நிதானமுடன் மேற்கொள்வது முக்கியம். தந்தையின் சொத்துக்கள் சிறந்த முறையில் விருத்தியாகும். பணியாட்கள், சுற்றம், பெரிய மனிதர்களின் நட்பு ஆகியவை மனத்திற்கு மகிழ்ச்சியையும், களிப்பையும் நல்கும். தசா புக்தி பாதகமாக உள்ள இனங்களில் பூர்வீகச் சொத்துக்கள் கடன்களினால் இழக்க நேரிடும். புத்திரர்களுக்கு உடல் நலம் தொடர்பாக செலவினங்களை ஏற்கும் சந்தர்ப்பம் ஏற்படும். சில இனங்களில் கடன் தொல்லைகள் மன அமைதியைக் குலைக்கும். மெல்லியலார்களால் அதிக செலவை ஏற்கும் சந்தர்ப்பம் ஏற்படும். அறிவுக்குத் திரையிடும் செயல்களில் ஈடுபடாதவாறு புத்தியை நன்கு உபயோகப்படுத்தினால் நல் விளைவுகளை எதிர்பார்க்கலாம். தான தர்மம் செய்ய சில சந்தர்ப்பங்களில் மனம் ஈடுபடும். குடும்ப நிலை சௌகர்யங்களுடன் திகழும். ஃ

"சரி...நான் கௌம்பட்டுமா, நாழியாறது?...பத்து மணிக்கு போர்ட் மீட்டிங். சாயங்காலம் ரெடியா இரு. ரங்க பாஷ்யம் பெண் கல்யாண ரிஸப்ஷனுக்குப் போகணும். பிரசென்டேஷன் கொடுக்கறதுக்கு பஜாஜ் மிக்ஸி ஒண்ணு பாக் பண்ணி மத்தியானம் மூணு மணி வாக்குலே ஒன்கிட்டக் கொடுக்கச் சொல்லியிருக்கேன். வாங்கி வச்சுக்கோ. நாலு மணிக்கு எனக்கு ஃபோன் பண்ணி ஞாபகப்படுத்து. ஸ்டெனோ இருபது நாளா லீவு. ஹனிமூன் போயிருக்கா. எனக்குக் கையொடிஞ்சாப்பலே இருக்கு...சரி சுமித்ரா ரெடியாயிட்டாளா பாரு ...எனக்கு நாழியாறது..."

மிடுக்காய் நடந்து காரை நோக்கிப் போனார் சுந்தரவதனம்.

வெளிர்நீல அம்பாஸிடரின் பின் கதவைப் பவ்யமாய்த் திறந்த வண்ணம் நின்று கொண்டிருந்தான் டிரைவர்.

"ஸாரி ஃபார் த டிலே டாடி!... மம்மி நா வரேன்..."

கையில் சில புத்தகங்களுடன் கன்றுய்த் துள்ளி ஓடி வந்த சுமித்ரா, காரினுள் சென்று அமர்ந்தாள்.

மெல்லச் சிணுங்கிய கார், ஓர் ஒய்யாரக் குலுக்கலுடன் புறப்பட்டுப் போயிற்று.

'சரி, நானும் போயிட்டு வரேன்' என்கிற மாதிரி ஒரு சிட்டுக் குருவி தலையை ஒரு சிலுப்புச் சிலுப்பிக் கொண்டு, விருட்டென்று பறந்து போயிற்று.

தோட்டக்காரன் புல் வெளிக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான். புதுத் தண்ணீர் பாய்ந்ததும் செடிகள் நன்றி சொல்லித் தலையசைத்தன. காம்பவுண்ட் சுவரோரம் பூச்செடிகள் அணிவகுத்து நின்றன. கிழக்கு மூலையில் காவல் காக்கிற மாதிரி நின்ற வேப்ப மரத்தைச் சுற்றி வட்ட வடிவில் மேடை. வழவழவென்று ரெட் ஆக்ஸைடு மின்ன, 'உட்கார்ந்து கொள்ளேன்' என்று அழைத்தது.

தினசரி காலை வாக்கிங் போய் விட்டு வந்ததும் அந்த மேடையில் பத்து நிமிஷம் உட்காராவிட்டால் அவருக்கு மனமே சரியாய் இருக்காது.

"நான் வேகு வேகமா நடந்து வந்து உள்ளே நொழையறபோதே எங்கம்மா மாதிரி 'வா வா'ன்னு கையைக் கையை அசைச்சுக் கூப்பிட்டு இளம் காத்தை விசித் தடவிக் குடுக்கறதுடீ, இந்த மரம்! நெஜம்மாவே எங்கிட்ட பேசறது.

# கன்யாகுமரி



ஜெயரதன்

குறு நாவல்

அதான் தெனம் காலம்பற அதுகிட்ட பேசிட்டு வரேன்...''

ஆதுரத்துடன் அடிமரத்தை வருடியவாறே நிற்கும் சுந்தர வதனத்திற்குக் காபியைக் கொண்டு வந்து கொடுப்பாள் மங்களம். அந்த மரத்தடியில்தான் காலே அவருக்கு விடியும். அப்புறம் அந்த மரத்தடியிலேயே செய்திப் பத்திரிகையுடன் சல்லாபம். சரியாக ஏழு மணிக்குக் குளிக்கப் போனாரானால் ஏழேகாலுக்குப் பூஜை அறையில் இருப்பார்.

பளிரென்று மின்னும் சந்தன மேனி நிறம். ஆணழகன் போட்டியில் கலந்து கொள்ளலாம் போலச் 'சிக்'கென்ற உடல். அனாவசியமாய் ஒரு துளிச் சதையில்லாத செதுக்கியெடுத்த உடல்வாகு. மறுமுறை பார்க்கத் தூண்டுகிற வசீகர முகம். கம்பீரக் கனிவு இழையும் பார்வை. அந்தரங்கமாய், அன்யோன்யமாய்ப் பேசுகிற மாதிரி, அவர் பிரார்த்தனை செய்கிறதை முழுதுமாய்ப் பார்க்க முடியாமல் கண்ணீர் பார்வையை மறைக்கும்.

'' மங்கா...''—கூப்பிட்டுக் கொண்டே சமையலறைக்குள் வந்து விடுவார்.

''இந்தா பிரசாதம்...''

கையில் கொடுக்கிறபோது காலில் விழத் தோன்றும்.

சமையல்காரியின் — வயதானவள் தான்—பார்வை அவர் வெற்று மேனியில் ஊர்கிறதைப் பார்த்ததும் மனம் பொறுதவளாய், ''சரி, வெறும் ஒடம்போட ரொம்ப நாழி நிக்க வேண்டாம். காத்து சில்லுனு அடிக்கறது. பனியனைப் போட்டுக் கொண்டுங்கள்......போங்கள்.......'' என்று மனமின்றி அவரை அனுப்பி விட்டு, ''அங்கே, இங்கே பராக்குப் பார்க்காமெ அடுப்பைக் கவனிபுங்கோ. ரஸம் பொங்கறது'' என்று சமையல்காரியை ஒரு சொடுக்குச் சொடுக்கிவிட்டு, அவர் பின்னாலேயே செல்வாள் மங்களம்.

'இவருக்கா நாப்பத்தஞ்சு வயசாறது? சத்தியம் பண்ணினாலும் நம்ப முடியாது. முப்பத்தஞ்சு சொல்லலாமோ? ஊஹூம்! முப்பதுதான் தான் சொல்லலாம்.'

விண்ணென்று அழுத்துகிற அவரது தோள்களில் முகம் புதைக்கிற போதெல்லாம் நினைத்துக் கொள்வாள்.

''மங்கா...ஒனக்கு நாப்பது வயசாறதுன்னு எஸ். எஸ். எல். ஸி. புத்தகம் சொல்றதே, நெஜமாடி!... ஒங்கப்பா ஏகமா வயசைக் கூட்டிப் போட்டுட்டார் போல்ருக்கு. ஒரு தலைமயிர் நரைக்கலே. எங்கெங்கே எதது எப்படியெப்படி இருந்தா புருஷர்கள் மயங்கி விடுவாளோ, அங்கங்கே அதது அப்படியப்படி இருந்து என்னைச் சொக்க வைக்கறது. நெஜம்மாவே நீ எனக்கே எனக்கா? முழுசா அப்படியே எனக்கா? நம்ப முடியல்லியே! ஒன்னே அப்படியே சாறு புழிஞ்சு குடிச்சுடணும் போல்ருக்கே! ஆலிங்கனம் பண்ணிப் பண்ணி எனக்குள்ளே உள்ளுக்குள்ளேயே அழுத்தி வச்சுக் கணும் போலிருக்கே...மங்கா... மங்கம்மா...என் கண்ணம்மா...''

அவர் தழுவலில், இறுக்கத்தில் காற்றாய்க் கரைந்து, நீராய்த் தளர்ந்து நெருப்பாய் உருகி, மண்ணாய்ப் பெருகி இருந்தும் இல்லாதவளாய்த் துளியாய்ச் சிறுத்து, உலகாய் விரிந்து, ஒன்றுமே தெரியாதவளாய்ச் சகலமும் உணர்ந்தவளாய்ச் சுகத்தின் சுகமாய் வியாபிப்பாள் மங்களம்.

இப்படி எத்தனை இரவுகள்!

'பகலே வரவேண்டாம்' என்று அவள் துடித்த எத்தனை இரவுகள்!.........

''அம்மா...என்னம்மா பண்ணின்டிருக்கே? சாதம் போடு. காலேஜுக்கு நாழியாறது. சுமி அப்பாவோட காலேஜுக்குப் போயிட்டாளா?...''

புருஷத்தனம் குரலில் நுழையத் தொடங்க, சிறுவன் நிலையைக் கடந்து, இளைஞன் என்ற அந்தஸ்தைப் பெறத் துடிக்கிற விநோத் அருகே வந்தான்.

ஏதோ நினைவுகளில் மூழ்கித் திளைத்த மங்களம் நிலேக்கு வந்தாள்.

''ஒண்ணுமில்லே...தோட்டக்காரன் சரியாத் தண்ணீர் விடறானான்னு பாத்தேன். சரி; வா... ஒனக்கு நாழியாச்சு. ஸ்கூட்டர்லே பெட்ரோல் இருக்கா?...''

நினைவுகளின் வாசனையை மனப் பேழைக்குள் வைத்துப் பூட்டிவிட்டு உள்ளே சென்றாள் மங்களம்.

டைனிங் டேபிளில் பிரகாஷ் உட்கார்ந்திருந்தான்.

''என்னம்மா பண்ணிண்டிருந்தே வாசல்லே?...ஸ்கூலுக்கு நாழியாகல்லே?...''

முகத்தைச் சுளுக்கிக் கொண்டு பிரகாஷ் கோபத்துடன் கேட்ட போது மங்களத்திற்குச் சிரிப்பாய் வந்தது.

பிரகாஷ் அப்படியே அப்பா மாதிரி.

பால் பொங்குவது மாதிரி குப்பென்று கோபம்.

தண்ணீரைத் தெளிக்கிற மாதிரி குளுமையாய்ப் பார்த்துப் பேசி விட்டால் அப்படியே அடங்கிப் போகும். அம்மா...அம்மா...என்று பூனைக்குட்டியாய்க் காலைச் சுற்றிச் சுற்றி வருவான்.

அவருக்குக் கோபம் வந்து கத்துகிற போதெல்லாம் நிதானமாய்ப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

''என்ன தடபுடல் பண்ணியாறது?''

''என்னோட வெளிர் நீலச் சட்டை எங்கே?.....ஹாங்கர்லேயும் காணும்?...''

வெந்நீர்த் திவலைகளாய் வார்த்தைகள் தெறிக்கும்.

சிவந்த முகம் மேலும் சிவந்து, மூக்கு நுனியிலிருந்து கோபம் துள்ளிக் குதிக்கும்.

அரக்கப் பரக்க அங்கும் இங்கும் தேடுவதை அமைதியாய்ச் சற்று நேரம் வேடிக்கைப் பார்ப்பாள் மங்களம்.

''நேத்திக்கு ஆபீஸ் போற போது, அப்படியே லாண்ட்ரியிலே போடறேன்னு ஷர்ட், பேண்ட் எல்லாம் கட்டிக் கார் டிக்கியிலே போட்டேனே! லாண்ட்ரியிலே போட்டாச்சோ?''

சிரிக்காமல் கேட்பாள் மங்களம்.

மூக்கு நுனி வழியே வந்த கோபம், வெட்கப்பட்டுக் கொண்டு சட்டென்று உள்ளே போய்விடுகிறதைப் பார்த்து ரசிப்பாள்.

''ஓ...அதுலே இருக்கில்லே...''

சூரியன் மறைந்து நிலா தோன்றும்.

''என்னது இது, நேரம் போதுஇல்லாமெ?...கொழந்தைகளுக்கு வயசாயிண்டு வரது....பூனையாட்டமா சுமி வந்து நிக்கப் போறா...''

வளைகள் கணகணக்க, பூச்சரம் பொல பொலக்க, அவர் பிடியினின்றும் விடுவித்துக் கொண்டு உள்ளே போவாள் மங்களம்.

''என்னம்மா எங்கேயோ பாக்கறே?......சாதம் போடேம்மா.''

பிரகாஷின் கோபம் அவள் நினைவுகளைக் கலைத்து நிஜத்துக்கு இழுத்துக் கொண்டு வந்தது.

என்ன ஆயிற்று இன்றைக்கு?

அவசர அவசரமாய்ப் பரிமாறினாள் மங்களம்.

ஒரு வழியாய்ச் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டார்கள்.

''அம்மா, சாயங்காலம் வர லேட்டாகும். என். ஸி. ஸி. பாரேட் இருக்கு...''

சபைஎன துளம்எனத் தான் அமர்ந் தெனக்கே
அபயம் அளித்ததோர் அருட்பெருஞ்ஜோதி
மருள்எலாம் தவிர்த்து வ்ரம்எலாம் கொடுத்தே
அருள்அமு தருத்திய அருட்பெருஞ்ஜோதி
வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர்
ஆழிஒன் றளித்த அருட்பெருஞ்ஜோதி
என்னையும் பொருள்என எண்ணிஎன் உளத்தே
அன்னையும் அப்பனும் ஆகிவீற் றிருந்து
உலகியல் சிறிதும் உளம்பிடி யாவதை
அலகில்பேர் அருளால் அறிவது விளக்கிச்
சிறுநெறி செல்லாத் திறன்அளித் தழியா
துறுநெறி உணர்ச்சிதந் தொளிஉறப் புரிந்து
சாகாக் கல்வியின் தரம்எலாம் உணர்த்திச்
சாகா வரத்தையும் தந்துமேன் மேலும்
அன்பையும் விளைவித் தருட்பேர் ஒளியால்
இன்பையும் நிறைவித் தென்னையும் நின்னையும்
ஓர்உரு ஆக்கியான் உன்னிய படிஎலாம்
சீர்உறச் செய்துயிர்த் திறம்பெற அழியா
அருளமு தளித்தனை அருள்நிலை ஏற்றினை
அருள்அறி வளித்தனை அருட்பெருஞ்ஜோதி
வெல்கநின் பேரருள் வெல்கநின் பெருஞ்சீர்
அல்கல்இன் றோங்கிய அருட்பெருஞ்ஜோதி
உலகுயிர்த் திரள்எலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும்ஐந் தொழிலையும் யான்செயத் தந்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயல்எனக் களித்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி.

—திரு அருட்பா.

## நவரத்தின மாலை

1. விடாப்பிடி கொள்வதைச் சிலர் வைராக்கியம் என்று எண்ணுகின்றனர். உண்மை அதுவன்று. ராகம் என்றால் பற்றுதல். விராகம் அல்லது வைராக்கியம் என்றால் பற்றற்ற நிலை. உலக விஷயங்களில் வைராக்கியம் வந்தால் விஷயங்களில் இயல்பாக நாட்டம் உண்டாகும். வைராக்கியம் இல்லாதவனுக்கு ஆத்ம சாதனம் இல்லை.

—சுவாமி சித்பவானந்தர்

2. சொந்த முயற்சியும் அறிவுக் கூர்மையும் உள்ள ஒருவன் நல்லோருடன் சிறிது நேரம் கலந்து பழகினாலும் அறிவின் துணை கொண்டு முயன்று முன்னேறி விடுகிறான். நல்லோரின் தொடர்பு நல் வாழ்க்கைக்குத் தூண்டுதலாய் அமையும்.

—ஸ்ரீ புத்தர்

3. விரதங்கள், பூஜை, யாத்திரை, பணம் சம்பாதித்தல் இவைகளையெல்லாம் இளமையிலேயே செய்தல் வேண்டும். முதுமையிலே உடல் கெட்டையும். அதனிடத்தில் வலிமை இல்லாது போகும். அக் காலத்தில் எதைத்தான் செய்ய முடியும்? தவம் பூஜை முதலியவைகளை இளமையிலேயே பழகுங்கள். உங்கட்கு எது செய்ய விருப்பம் இருந்தாலும் சரி, இளமையிலேயே அதை செய்து முடித்துக் கொள்ளுங்கள். இதுவே தகுந்த பருவம்.

—ஸ்ரீ சாரதாமணி தேவியார்

4. ஓர் தேசத்தார் ஞானமும் செல்வமும், வீரமும் புகழும் கொண்டு உன்னத நிலையிலே இருக்கும்பொழுது அவர்களுக்குள் ஆண் மக்களிடம் மட்டுமேயல்லாது பெண்பாலரிடத்திலும் கூடத் தர்மாபிமானமும் வீரத்தன்மையும் சிறந்து விளங்கும்.

—மகாகவி பாரதியார்

ஷூ சப்தம் மிடுக்காய் ஒலிக்க, சொல்லிக் கொண்டே புறப்பட்டுப் போனான் பிரகாஷ்.

எட்டாவது படிக்கிறான்.

ஸ்கூட்டரின் பின்புறத்தில் தம்பியைக் கவ்விக் கொண்டு சென்றான் விநோத். இவனைப் பள்ளியில் விட்டு விட்டுக் கல்லூரிக்குச் செல்வான்.

மீண்டும் வாசலில் வந்து நின்றாள் மங்களம்.

பூச் செடிகளின் நன்றி தெரிவிப்பு மாதிரி பூக்கள் மினுமினுத்தன. வேப்பமரம் கம்பீரமாய்க் கையசைத்தது. பச்சைப் புல்வெளிகள் நீர் முத்துக் கிரீடம் அணிந்து பளபளத்தன. கைவிரல்களை விரித்தது மாதிரி பெரிது பெரிதாய்ச் செம்பருத்திப் பூக்கள் செடியெல்லாம் பூத்துக் கிடந்தன.

இந்த மலர்ச் செடிகள் மாதிரியே அவள் மனத்திலும் சந்தோஷங்கள் பூத்துக் கிடந்தன.

கல்யாணமாகி இருபது வருஷங்கள் முடிந்துவிட்டன,

இருபது நாட்களாய், இனிமை நாட்களாய்ப் போயிருக்கின்றன.

கல்லூரிப் படிப்பு முடிந்த உடனேயே கல்யாணம்.

தோழிகள் கேலி செய்ய, சில உறவுக்காரர்கள் அருயைப்பட தடபுடலாய் நடந்த கல்யாணம்.

நன்னிலம் மிராசுதாரின் ஒரே பெண்ணின் கல்யாணம் என்றால் சும்மாவா?

தெருவடைத்துப் பந்தல். வாண வேடிக்கைகளும், பிரபல அஞ்சனா தேவியின் நடனக் கச்சேரியுமாய் நன்னிலம் ஊரே அமர்க்களப்பட்டுப் போயிற்று.

அப்புறம் பத்து நாட்களுக்கு நாதஸ்வரம் காதுகளிலேயே ஒலித்துக் கொண்டிருந்தது என்றார்கள்.

அந்த மாதிரி சமையல், அப்புறம் எந்தக் கல்யாணத்திற்கும் அமையவில்லை. நாக்கிலேயே நின்ற சமையல் என்று தலைத் தீபாவளிக்குப் போனபோதுகூட ஊரில் சப்புக் கொட்டினார்கள்.

'ராஜா மாதிரி புருஷன். பேரைப் பாத்தியோ சுந்தர வதனம்! பொருத்தமா எப்பிடி அமைஞ்சிருக்கு பாரு...மங்களம் எல்லாத்திலேயுமே குடுத்து வச்சவ...'

பெருமிதம் பொங்க, புருஷன் வீடு போனாள் மங்களம்.

அழகாய்ச் சின்னதாய் மயிலாப்பூரில் வீடு.

'சிக்' கென்று ஆணழகனாய்ப் புருஷன்.

வதனத்தில் சுந்தரமும், மனத்தில் அடங்காத காதலுமாய் அன்பைக் கொட்டி ஆராதனை செய்த புருஷன்.

பார்க்கிற பொருளெல்லாம் அழகாய்த் தெரிந்தன.

கேட்கிற ஒலியெல்லாம் சங்கீதமாய் ஒலித்தன.

நடையெல்லாம் நடனங்களாய் மிளிர்ந்தன.

பூவும் வாசனையுமாய்ச் சந்தோஷம் கொப்பளிக்க, நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

மனமே இல்லாமல் அலுவலகம் போவான்.

மாலை, பறந்து கொண்டு வீட்டுக்கு வருவான்.

''தனியாய் இருக்கப் போரடிக்கிறதா மங்கா?...''

பூச்சரங்களுக்குள்ளிருந்து வரும் அவன் குரலிலும் மல்லிகை மணக்கும்.

தனிமையை விரட்ட சுமித்ரா பிறந்தாள்.

பூச்செண்டாய்ச் சிரித்தாள்.

அவளோடு பல அதிர்ஷ்டங்களும் சேர்ந்து பிறந்தன.

வெறும் அஸிஸ்டன்ட் அக்கவுண்டன்ட், காஸ்ட் அக்கவுண்டன்ட் சுந்தரவதனம் ஆனான்.

பஸ் பயணம், ஸ்கூட்டர் பயணமாயிற்று.

வீட்டில் வசதிகள் சேர்ந்தன.

வீட்டின் மூலையில் ஃபிரிஜ் வந்து உட்கார்ந்து கொண்டது.

படுக்கையின் வெப்பத்தைத் தணிப்பது. ஏர்கண்டிஷனர் வேலையாயிற்று.

தவழ்ந்து திரிந்த சுமித்ரா நடக்க ஆரம்பித்தாள்.

அவளுக்குத் துணையாய் விநோத் வீட்டில் தவழ ஆரம்பித்தான்.

காஸ்ட் அக்கவுண்டன்ட் சுந்தரவதனம், காஸ்ட் அக்கவுண்ட்ஸ் ஆபிஸர் என்று அந்தஸ்து மாறினார்.

அலுவலகத்தில் தனியாக அறை கொடுத்தார்கள்.

அறையில் ஏர்கண்டிஷனர் ரீங்கரித்தது.

உதவிக்கு ஒரு ஸ்டெனோ டைபிஸ்ட், கையில் நோட்டுப் பென்ஸிலுடன் இவன் சொல்வதை எழுதத் தயாராய் இருந்தாள்.

பத்து நாளைக்கு ஒரு தடவை, டில்லியென்றும், கல்கத்தாவென்றும், பம்பாய் என்றும் விமானம் அவரைச் சுமந்து சென்றது.

ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் அடைக்கலம் தந்தன.

5. கருணை, தியாகம் மன்னிப்பு இவற்றால் இந்து மதம் நிரம்பியுள்ளது. இந்து மதம் தான் எல்லா வித மதங்களுள்ளும் அதிகத் தாராள மனப்பான்மையுள்ளது. அதன் சித்தாந்தம் சகல விதமான மத நுட்பங்களையும் தன்னுள்ளே கொண்டுள்ளது.

—மகாத்மா காந்தி

6. என்றைக்கு வைராக்கியம் தோன்றுகிறதோ அன்றைக்குப் பாசம் அறுந்துவிடும். பணம், அழகு, ஆயுள், மனது இவைகளைக் கொண்டு நாம் கட்டப்பட்டிருக்கிறோம். அவை வேண்டாம். உள்ளே சுத்தமான ஒன்றுதான் இருக்கிறது. அது ஆத்ம ஸ்வரூபம். பசு பாசத் தொடர்பு அற்றுப் போனால் பேரின்பமயமாக இருக்கலாம்.

—ஸ்ரீ காமகோடி சங்கராச்சாரியார்

7. ஆன்மீக வாழ்க்கைக்குத் தெளிந்த மனம் உறுதியான அடிப்படையாகும். தெளிந்த மனதிலே தான் திவ்ய ஒளியும் பிரகாசிக்கும். அத்தகைய மனமேதான் தெய்வீக உணர்ச்சிகளையும் கிரகிக்க வல்லது.

—சுவாமி சிவானந்தர்

8. ஆசை கொடியது. பிறவிப் பெருங்கடலில் உன்னை ஆழ்த்திவிடும். அதர்மத்தினால் மனிதன் சிறிது காலம் க்ஷேம முறலாம். ஆனால் அவன் அடியோடு நாசமாகிறான். ஆசையற்ற மன நிலைக்குச் சமானமான சுகம் ஸ்வர்க்கத்திலும் இல்லை. கைலாசத்திலும் இல்லை.

—ஸ்ரீ சாந்தானந்த சுவாமிகள்

9. இறைவன் தாய் போல் அன்புள்ளவன், தந்தை போல் தயவுள்ளவன். உள்ளத்துள்ளே உறைபவன். உண்மையை விளக்குபவன். இறைவனைக் காண வேண்டுமா? சாதி சமய வேறுபாடுகளை விட்டொழியுங்கள். அவசியம் நீங்கள் இறைவனைக் காணலாம்.

ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள்

தொகுப்பு: சரஸவாணி

---

அங்கங்கே அதிகாரிகளுடன் மணிக்கு ஒரு விதமாய்ச் சந்திப்புகள். அமைச்சர்களுடன் பேச்சு வார்த்தை.

அலுவலகக் கார் வீட்டு வாசலில் இருக்கும் இடம் கேட்டது.

விமான நிலையத்திலிருந்து வீட்டுக்கு வரும் போதே 'மங்கா' என்று கூவிக்கொண்டே ஓடி வருவார்.

கங்கையைச் சேர்கிற யமுனையாய்க் கரைந்து போவாள் மங்களம்.

'டாடீ, டாடீ!' என்று பூச்செண்டுகளாய்க் குழந்தைகள் கால்களைத் தழுவின.

சந்தோஷமும் இனிமையும் தமது ஆள், படை, அம்புகளோடு அந்த வீட்டிலே நிரந்தர முகாமிட்டன.

''இந்த வீடு போறல்லே... இல்லே?'' என்ற மங்காவின் கேள்விக்குப் பதிலாக, புதிய வீடு வந்து சேர்ந்தது.

அழகான காம்பவுண்டுக்குள், கம்பீரமாய் ஒரு வீடு.

'சுந்தர மங்களா' என்ற பெயர்ப் பலகை மின்ன பச்சைப்புல் வெளியின் நடுவே, 'பளிங்குப் பாவையாய்' வெள்ளை நிறத்தில் வீடு. அதன் விளக்காய் மங்களம்.

மேலும் பிரகாசம் சேர்க்கப் பிரகாஷ் பிறந்தான்.

வாயில் தங்க ஸ்பூனோடு பிறந்தான் அவன்.

காஸ்ட் அக்கவுண்ட்ஸ் ஆபீஸர், பைஃபனான்ஷியல் கண்ட்ரோலர் என்று பெயர் மாறினார்.

மேலும் புதிய அந்தஸ்துகள், அதிகாரங்கள், சுகங்கள். மங்களம் மிதந்தாள்.

குழந்தைகள் திளைத்தார்கள்.

ஒவ்வொரு நாளும் ஒரு வினாடி மாதிரி மறைந்தன.

அயல் நாட்டுக்கு அடிக்கடி சென்று வந்தார் சுந்தர வதனம்.

ஜப்பானியக் கம்பெனி ஒன்றுடன் வியாபார ஒத்துழைப்புக்காகச் சந்திப்பும், பேச்சும் நிகழ்த்த வேண்டும் என்று தீர்மானித்த போது, அந்தக் குழுவிற்குச் சுந்தர வதனம்தான் தலைமையேற்க வேண்டுமென்று நிர்வாகம் ஏக மனதாகத் தீர்மானித்தது.

அவரது அழகுத் தொப்பியில் மேலும் சில அலங்காரச் சிறகுகள் சேர்ந்தன.

அப்புறம் சிங்கப்பூரிலே ஒரு செமினார்.

மணிலாவில் ஒரு வியாபாரச் சந்திப்பு.

வெற்றிகள் வீட்டு வாயிலில் வரிசையாய் நிற்கத் தொடங்கின.

ஒவ்வொருமுறை வெளியூர் பயணம் செல்லும்போதும் மனைவியைப் பிரிய மனமின்றியே செல்வார் சுந்தர வதனம்.

திரும்ப வந்ததும் தாபம் தணியச் சந்தோஷக் கடலில் இருவரும் மிதப்பார்கள்.

உலகத்துச் சந்தோஷங்கள் எல்லாம் மங்களத்தின் மனத்தில் குடியேறின.

2

ஹாலில் சோபாவில் வந்து உட்கார்ந்தாள் மங்களம்.

வாய்க்கும் மனத்துக்கும் இதமாய் இருந்த சமையல் நாவில் மணத்தது. ஏர்கண்டிஷனர் தன் பணியைச் செவ்வனே செய்ய, குளுமை இதமாய் மேனியெல்லாம் இழைந்தது.

சற்று நேரத்திற்குமுன் கடைக்காரன் கொண்டு வந்து கொடுத்த மிக்ஸி, பரிசு கொடுப்பதற்குரிய அலங்காரத்துடன் டீபாயில் வீற்றிருந்தது. அதைச் சுற்றியிருந்த கலர்க் காகிதத்தைப் பார்த்தாள். அதில் கணவரின் ரசனை இழையோடியதைப் பார்க்கப் பெருமையாய் இருந்தது.

ஆழ்ந்த வயலட் நிறக் காகிதத்தில், தென்னம்பூ நிறத்தில் ரோஜா இதழ் மாதிரி பெயின்டிங். நடு நடுவே, தங்க நிறத்தில் ஜரிகைக் கோடுகள் கட்டமிட்டன. நல்ல மாம்பழ நிறத்தில் சாட்டின் ரிப்பன் அதைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. அதில் ஒரு வெண்ணிற அட்டை மூலையில் ஒட்டப்பட்டிருந்தது. அதில் 'அன்பு வாழ்த்துக்களுடன் மங்களம், சுந்தரவதனம்' என்ற எழுத்துக்கள் 'டைப்' செய்யப்பட்டிருந்தன.

பெருமிதம் முகத்தில் இழையோடியது மங்களத்திற்கு.

எப்போதும் எதிலும் மங்களத்தின் பெயரைத்தான் முதலில் எழுதுவார். அப்புறம்தான் தன் பெயரை எழுதுவார்.

''அதென்னது எல்லாத்திலேயும் எம்பேரை முன்னாலே போடறது? உங்களுக்கப்பறம்தானே நான்? பாக்கறவா உங்களைக் கொறைச்சலா நினைக்க மாட்டாங்களோ?''

செல்லச் சிணுங்கலுடன் கேட்பாள் மங்களம்.

''பார்க்கிறவர்கள் ஆயிரம் சொல்லட்டும். சாஸ்திரம் லட்சம் சொல்லட்டும். நீதான் எனக்கு முதல். இந்த வீட்டுக்கு முதல். அப்புறம்தான் நான். உன் பிரகாசம்தான் எனக்கு வெளிச்சமே! எல்லாமே எனக்கு நீதான். உன் முன்னாலே நான் வெறும் பூஜ்யம்...''

குழந்தை மாதிரி அவள் கழுத்தைத் தழுவிக் கொண்டு அவர் சொல்கிற போது, மங்களம் பெருமிதத்திற்கு ஒரு வடிவமாகிப் போவாள்.



மேஜையிலிருந்த தமிழ்ப் பத்திரிகைகளைச் சற்று நேரம் புரட்டிப் பார்த்தாள். எல்லாப் பத்திரிகைகளுமே ஏறத்தாழ ஒரே மாதிரி, ஒரே திசையில் செல்லுகிறதைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது. இப்பொழுது வருகிற பத்திரிகைகளில் எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் எழுதுவது குறைந்து போய், நிருபர்கள் செய்திக் குறிப்புகள் எழுத ஆரம்பித்து விட்டதாக அவளுக்குத் தோன்றியது.

'சரி, கொஞ்ச நேரம் தூங்கிவிட்டு டிரஸ் செய்து கொண்டால் சரியாயிருக்கும். அவருக்கு நாலு மணிக்கு ரிஸப்ஷன் இருக்குன்னு ஞாபகப் படுத்தணும்' என்று எண்ணிக் கொண்டே படுக்கையறைக்குப் போக எழுந்தாள் மங்களம்.

''அம்மா' ஏதோ லெட்டர் வந்திருக்கும்மா'' என்று மரியாதையுடன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான் தோட்டக்காரன்.

'அம்மாவா இருக்கும். விசாரித்து எழுதியிருப்பாள். கல்யாணம் ஆகி இருபது வருஷம் ஆயாச்சு. இன்னமும் நான் கொழந்தைதான் அவளுக்கு. தினம் ராத்திரி ரொம்ப நாழி கண் முழிக்காதே. வாரா வாரம் எண்ணெய் தேச்சிக்கோன்னு எழுதுவாள். அடுத்த வருஷம் சுமிக்கு மாப்பிள்ளை தேடியாகணும்...'

கடிதத்தை வாங்கினாள் மங்களம்.

அது அவள் எதிர்பார்த்தது மாதிரி அம்மாவிடமிருந்து வந்த கடிதமில்லை.

ஒரு மணியார்டர் கூப்பன்.

பணம் பெற்றுக் கொண்டதற்கான ரசீது.

யாரோ 'செல்லம்' என்று கையெழுத்திட்டிருந்தார்கள்.

அந்த ரசீதைப் புரட்டிப் பார்த்தாள் மங்களம்.

சுந்தரவதனம்தான் அனுப்பியிருக்கிறார்.

அவர் கையெழுத்துத்தான்.


அவரது வழக்கமான வயலட் மையினால் எழுதப்பட்டிருந்த விலாசம்.

யார் இந்தச் செல்லம்?

ஏன் இவர் பணம் அனுப்பியிருக்கிறார்?

தன்னிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லையே?

எந்தத் தேதியில் அனுப்பியிருக்கிறார் என்று பார்த்தாள்.



முதல் தேதி.

வயிற்றைப் பிசைந்தது.

யாராவது உறவுக்காரர்களாய் இருக்குமோ?

ஊஹூம்! அவளறிய யாருமில்லே. யாருக்கும் அவளறியாது ஒரு பைசா அனுப்பியதில்லே.

அப்புறம்?

யார் இந்தச் செல்லம்?

எந்த ஊரில் இருக்கிருள்?

அவசர அவசரமாய்த் தபாலாபீஸ முத்திரையைப் பார்த்தாள்.

ராமச்சந்திரபுரம் என்று தெரிநதது.

எந்த ராமச்சந்திரபுரம்?


இவரது சொந்த ஊர் இல்லேயோ அது?

கல்லில் மலர்ந்த காவியம்: 6

# கங்கைகொண்ட சோழபுரம்

கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள திருக்கோயில் அற்புதமான கலைப் படைப்பாகும். ராஜராஜனின் மைந்தனான ராஜேந்திரன் எடுப்பித்த கோயில் அது. அங்கு தான் எத்தனை எத்தனை அழகிய சிற்பங்கள்! கோஷ்டங்களிலும் மாடங்களிலும் எத்தனை எத்தனை சிலாமூர்த்திகள்! அத்தனையும் பேசும் பொற்சித்திரங்கள்! யாவும் கல்லில் வடித்த கவிதைகள்!

பெரிய பெரிய மூர்த்திகளில் காணப் பெறும் நுணுக்கங்கள் யாவும் சின்னஞ்சிறு சிற்பங்களிலும் விளங்கும். தாண்டவமூர்த்தியையும் அதைச் சுற்றியுள்ள பல்வேறு சிற்பங்களையும் நோக்குங்கள்! எத்தனை அருமைப்பாடுகளை அவை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அடுத்துள்ள கங்காதர மூர்த்தியையும் பார்வதியையும் காணுங்கள். எத்துணைக் காம்பீர்யம்



ஆமாம்; சொந்த ஊரேதான். அங்கே யார் செல்லம்?

அவளுக்கு எதற்கு இவர் பணம் அனுப்புகிறார்?

அந்த ஏர்கண்டிஷனிலும், உள்ளங்கை வியர்த்துவிட்டிருந்தது.

யாராவது தெரிந்தவர்களாய் இருந்து சிரமப்படுவதாக எழுதியிருந்தால், மனம் இரக்கப்பட்டுப் பணம் அனுப்பியிருப்பாரோ?

அப்படியிருந்தாலும் அந்தப் பெண்ணின் புருஷன் பெயருக்குத் தானே அனுப்பியிருக்க வேண்டும்? அந்தப் பெண்ணின் பெயருக்கு அனுப்புவானேன்? ஒருவேளை விதவையாக இருப்பாளோ?

விதவையாய் இருந்தால் இவரிடம் உதவி கேட்கிற அளவுக்குத் தெரிந்திருப்பானேன்?

ஏன் ஒரு வார்த்தைகூடத் தன்னிடம் சொல்லவில்லை?

தனக்குத் தெரியாமல் ஒரு பெண்ணுக்குப் பணம் அனுப்புவதென்றால் எப்படி?

எங்கேயோ உதைக்கிறதே?

கண்ணில் தூசு விழுந்தது மாதிரி தவித்துப் போனாள் மங்களம்.

இருபது வருஷக் குடும்ப வாழ்க்கையில் தன்னிடம் எதையாவது மறைத்திருக்கிறாரா என்று நினைவுகளைத் துழாவிப் பார்த்தாள்.

ஊஹூம்! எதுவுமே மறைத்ததில்லை. மறந்ததுமில்லை. விலாசத்தைப் பார்த்தாள். முத்து முத்தான தெளிவான சுந்தரவதனத்தின் கையெழுத்துதான். அவரது அதே வயலட் மைதான்.

நெருப்புத் தணலாய்க் கையைச் சுட்டுக் கொண்டிருந்த அந்த ரசிதை மேஜையின் மீது வைத்துவிட்டு உடம்பு, கைகால்கள் துவள, சோபாவில் சரிந்து உட்கார்ந்தாள் மங்களம்.

அவரையே டெலிஃபோனில் கேட்டால் என்ன?

மந்திரமாய் அந்த எண்ணம் அவளைத் துடிப்புடன் இயங்க வைத்தது. பரபரப்புடன் அவள் டெலிஃபோனை நெருங்கவும் அது ஒலிக்கவும் சரியாக இருந்தது.

கம்பெனி டெலிஃபோன் ஆப்பரேட்டர்தான் பேசினாள்.

''எக்ஸ்க்யூஸ்மி மேடம்!......சார்தான் டெலிஃபோன் செய்யச் சொன்னார். இன்னைக்கு போர்ட் மீட்டிங் எதிர்பார்த்ததைவிடத் தாமதமாயிடுச்சாம். அது முடிஞ்சதும் ஹோட்டல் தாஜிலே ஒரு மீட்டிங்காம். அவசியம் போயாகணுமாம். அதனாலே இன்னைக்கு ரிஸப்ஷன் இருக்காமே, அதுக்கு வர முடியாதாம். உங்களை மட்டும் போயிட்டு வரச் சொன்னார். பிரசண்டேஷன் வந்தாச்சான்னு கேட்கச் சொன்னார். சார் வர ராத்திரி பத்து மணிக்கு மேலே ஆகுமாம்...''

கொஞ்சுகிற மாதிரி, மன்னிப்புக் கேட்கிற நகாசுடன் உதட்டு நுனியால் பேசினாள் டெலிஃபோன் ஆப்பரேட்டர்.

மீண்டும் சோர்ந்துபோய் உட்கார்ந்தாள் மங்களம்.

இன்னும் ஏழெட்டு மணி நேரம் இந்த நரக வேதனையை எப்படிச் சகித்துக் கொள்வது என்று திணறியவாறே படுக்கையில் சாய்ந்தாள்.

அவளே அறியாமல் கண் இமைகள் வழியே நீர்க் கோடுகள் காது மடல்களில் குறுகுறுத்தன.

## 3

வெளிர் நீல நிறத்தில் படுக்கையறை விளக்கு துபரத்துடன் ஒளி உமிழ்ந்து கொண்டிருந்தது.

தீவிரமான முகத்துடன் தன் கட்டிலில் அமர்ந்து கொண்டு சுந்தரவதனம் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் மங்களம்.

ஏர்கண்டிஷனர் சுருதி கூட்ட, உடைந்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தார் சுந்தரவதனம்.

''மங்கா....நான் சொல்றதெல்லாம் சத்தியம். பல வருஷங்களா என் மனசுக்குள்ளே வச்சுப் பூட்டியிருக்கிறதை யெல்லாம் இப்பக் கொட்டப் போறேன். கல்யாணம் ஆனதுக்கப்புறம் எத்தனையோ தடவை ஒன்கிட்டச் சொல்லலாமான்னு நினைச்சதுண்டு. வாய் விளிம்புவரை வார்த்தைகள் வந்ததுண்டு. என் மேலே நீ வச்சிருக்கற ஆசை, அபரிமிதமான மரியாதை, பக்தி, இதெல்லாம் கொறைஞ்சு போயிடுமோன்னு பயந்து மனசை அடக்கியிருக்கேன். நீ வருத்தப் படுவியோன்னு நெனைச்சு சொல்லாமெ விட்டேன். ஒன்னோட வருத்தத்தையும், கண்ணீரையும் என்னாலே சகிக்க முடியாது. என்னை இயக்கற தேவதை நீ! நீ துயரப் படறதை என்னாலே தாங்கவே முடியாது. அதனாலேதான் இவ்வளவு நாள் சொல்லலலே. தெய்வம் எல்லாத்துக்குமே ஒரு நாள் குறிச்சு வச்சிருக்கு. இல்லாட்டா, இத்தனை நாளா என் ஆபீஸ் விலாசத்தைக் கொடுத்து மணியார்டர் அனுப்பின நான், இந்தத் தடவை வீட்டு விலாசத்தைக் கொடுப்பானேன்? வழக்கமா என் பர்சனல் செகரட்ரி மாசா மாசம் ஒண்ணும் தேதி இதையெல்லாம் ஒழுங்காப் பண்ணி விடுவாள். இந்த மாதம் அவள் லீவு போட்டதுனாலே நானே கூப்பனை எழுதினேன். வீட்டு விலாசத்தை எழுதியிருக்கிறேன். இதோ! உன் முன்னாலே குற்றவாளிக் கூண்டிலே நிக்கறேன். ஆமாம்; நான் குற்றவாளிதான். மனைவி இருக்கறப்போ இன்னொரு பெண்ணை நினைக்கிறவன் குற்றவாளிதான், தண்டனைக்குரியவன்தான். மங்கா!...நீ என்ன தண்டனை கொடுத்தாலும் ஏத்துக்கறேன். சந்தோஷமா ஏத்துக்கறேன்....''

குரல் நெகிழச் சொல்லிக் கொண்டிருந்தார் சுந்தரவதனம்.

கண்களை இமைக்கும் சக்தியைக் கூட இழந்தவளாய் மங்களம் துவண்டு போய்க் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள்.

''...இந்தச் செல்லம் எங்க ஊர். பள்ளிக்கூடத்திலே படிக்கற போதிலிருந்தே எனக்கு அவளைத் தெரியும். எங்க ஊர் சிவன் கோயில் குருக்களோட பெண் அவள். ஒண்ணாப் பாண்டி விளையாடியிருக்கோம். கண்ணாமூச்சி ஆடியிருக்கோம். 'கல்லா, மண்ணா?'—ஆடியிருக்கோம். கண்மாய்க் கரையிலே இருக்கிற புளிய மரத்திலே நான் ஏறிப் பழம் பறிச்சுப் போடுவேன். அவ பொறுக்கி வச்சிருந்து, ரெண்டு பேரும் ஒண்ணாச் சாப்பிட்டிருக்கோம். கண்மாய்லே மணிக்கணக்கிலே நீஞ்சி துவம்சம் பண்ணியிருக்கோம். 'சுந்தரா, சுந்தரா!'ன்னு என் மேலே உயிர் அவளுக்கு. 'செல்லா, செல்லா'ன்னு ஒரு நாளைக்கு நூறு தரமாவது அவளைக் கூப்பிடுவேன்.

''எங்க ஊர்லே அஞ்சாவது வரையிலும்தான் பள்ளிக்கூடம் இருந்தது. பக்கத்துலே ரெண்டு மைல் தள்ளி ஹைஸ்கூல். ரெண்டு பேரும் தெனம் ஒண்ணா நடந்து ஸ்கூலுக்குப் போவோம். திரும்பி வரபோது ஒண்ணா வருவோம். அவளோட பேசிச் சிரிச்சிண்டு வரதே எனக்குச் சந்தோஷமா இருக்கும். என்ன கேலி பண்ணினாலும் கோபமே வராத சிரிச்ச முகம் அவளுக்கு. யார் கேலி பண்ணினாலும் கொஞ்சம் கூடக் கவலைப் படாத செல்லத்துக்கு நான் வெளையாட்டுக்குக் கேலி

பண்ணினுக் கூடத் தாங்காது ''என்னடா சுந்தரா, நீ கூட...' அப்பிடீன்னு கேக்கற போதே கண்ணீர் வந்துடும். நான் துடிச்சுப் போயிடுவேன்.

''எனக்கு ஏதாவது பரிட்சையிலே கொஞ்சம் மார்க் கொறைஞ்சாலும் என்னைவிட அவதான் வருத்தப் படுவாள். நான்தான் கிளாஸி லேயே எப்போதும் முதல் மார்க் வாங்குவேன். அவ ரெண்டவாவது ராங்க் வாங்குவாள். ஏதோ ஒரு பரிட்சையிலே, எப்போன்னு ஞாப கம் வரல்லே. அவ மொதல் மார்க் வாங்கினா. நான் ரெண்டாவது. 'சுந்தரா, உன்னைவிட நான் கூட வாங்கிட்டேனே! இது தப்புடா... இனிமே வாங்க மாட்டேண்டா...' அப்பிடீன்னு புலம்பிட்டா.

''ரெண்டுபேர் மனசிலேயும் என்ன வளர்ந்ததுன்னு அப்போ எங்க ரெண்டு பேருக்குமே தெரியல்லே. விவரம் புரியாத வயசில்லியா? ஆனா ஒண்ணு மட்டும் தெரிஞ்சுது. அவளைப் பார்க்கறது, அவளோட பேசறது, அவளோட பழகறது இதெல்லாம் என்னை, என் ரத்த நாளங்களை, சுகிக்க வச்சுது. அவ ளுக்கும் அப்படியேதான் இருந்த துன்னு ஒருநாள் எங்கிட்ட அவ சொன்னப்போ, றெக்கை மொளைச்சு ஆகாசத்துலே பறக்கற மாதிரி இருந்தது. காலம் அப்படியே போகல்லே. செல்லம் பெரியவ ளாறா.

''அதோட அவ படிப்பு முடிஞ்சுது. இத்தனைக்கும் அவ எட்டாவதுதான் படிச்சிண்டிருந்தா. கிராமத்துப் பெண் இல்லியா; அப்படி ஒரு வளர்த்தி. அவ்வளவுதான். அவளைச் சுத்தி ஒரு பெரிய கோட்டை கட்டினாங்க. காவல் போட் டாங்க. வெளியே அடிக்கடி போகக் கூடாதுன்னு சட்டம் போட்டாங்க. நெனைச்சா வெளியே வந்திண்டிருந்த அவளைத் தனியாப் பார்க்கவே முடியாமப் போயிடுத்து. ஒண்ணு, அவ அம்மா தொணைக்கு வருவா; அல்லது ரெண்டு மூணு அக்கம்பக்கத்துப் பெண்களாவது வருவாங்க. குனிஞ்ச தலை நிமிராமே 'விர்னு' வந்து போயிடுவா. எதிரும் புதிருமா வரபோது, போறபோது, ஒரு நிமிஷம் என்னைக் கூர்மையாப் பார்த்துட்டுப் போவா. அந்தப் பார்வை மணிக் கணக்கா, நாள் கணக்கா என் மனசிலே அப்படியே படமா நின்னு போயிடும்.

''நானும் வளர்ந்தேன். அரை டிராயர் போய் வேஷ்டி வந்தது. உடம்பு வளர வளர அவ மேலே ஆசையும் வளந்துது. அங்கே இங்கே போறபோது அவளைப் பாத்துத் துடிப்பேன். ஆனா பேச முடியாது. இப்ப மாதிரி யில்லே அப்போல்லாம். அது கிராமம் வேறே. ஊர்லே எல்லா ருமே போலீஸ்காரங்கதான். இன் னும் சொல்லப்போனா, போலீஸ் ஸ்டேஷனே இல்லாத அந்த நாள்லே ஜனங்க எல்லாருமே போலீஸா, தாமாகவே வேலை பார்த்தாங்க. அப்போ எல்லாருக்குமே ஒரு நெஜமான அக்கறை இருந்துது. இப்போதான் போலீஸ் ஸ்டேஷன் வந்தப்பறம், ஜனங்க எல்லாருமே எல்லாத்துக்குமே போலீஸை நம்பிண்டிருக்காங்க. எல்லாருமே தனித்தனி மனிதத் தீவுகளாப் போயிண்டிருக்காங்க. இது நாகரிக வளர்ச்சியா, அல்லது மனிதாபிமான வீழ்ச்சியான்னு எனக்குத் தெரி யல்லே...சரி. அது போகட்டும். இந்த ஆராய்ச்சியெல்லாம் இப்போ எதுக்கு?

''அப்போதான் எனக்குப் புரிய ஆரம்பிச்சுது. அவள் மேலே, அவள் சரீரத்தின் மேலே எனக்கு மோகம் வந்ததுன்னு தெரிஞ்சுது. ராப் பகலாத் தூக்கம் வராமெத் தவிச்சேன். அவளைச் சந்திக்க முடியல்லேன்னு ஒரு தாபம். எல்லாத் தடைகளையும் மீறி அவளைச் சந்திக்கணும்னு ஒரு வெறியா மாற ஆரம்பிச்சுது. ஒண்ணு பண்ணாதேன்னு தடை பண்ணினா அதை மீறணும்னு தோணறது மனித சுபாவமில்லையா?

''அதுனாலே அவள் வீட்டுக்குப் பின் புறம் இருக்கிற கிளாஸ் பையனோட சிநேகிதம் பிடிச்சேன். 'படிக்கப் போறேன், படிக்கப் போறேன்'னு அவன் வீட்டுலேயே குடியாக் கெடக்க ஆரம்பிச்சேன். நான் அங்கே வரது அவளுக்கும் தெரிஞ்சு போச்சு. என்னைவிடத் தீவிரமா அவள் என்னை விரும் பினவள் இல்லியா? அதுலேயும் பெண் வேறே. இதிலெல்லாம் பெண்களுக்கு அசாத்திய சாமர்த் தியம். பதினஞ்சு பதினாறு வயசுப் பெண்ணுக்கு இருக்கற சாமர்த்தியத் துலே பத்துலே ஒரு பங்குகூட இருபது வயதுப் பையனுக்குக் கிடை யாது. நிச்சயம் கிடையாது.

''கொல்லைக் கிணத்தடியிலே ஏதா வது வேலை செய்கிற சாக்கில் இருந்து கொண்டே இருப்பாள். நான் கையில் புத்தகத்துடன் துணி துவைக்கும் கல்லில் உட்கார்ந்திருப் பேன். பார்க்கிறவங்களுக்கு அவ மும்முரமாய் வேலை செய்யற மாதிரியும், நான்தான் பொருத்த மில்லாமல் கிணத்தடியிலே விருதாவாக அலையற மாதிரியும் இருக்கும். அதெல்லாம் எனக்கு அப்போப் புரியவே இல்லை.

''அம்மா! இன்னிக்குச் சாயங் காலம் கோவில்லே நெய் வெளக்குப் போடணும் இல்லே?'' என்று எனக்குக் கேட்கிற மாதிரி கேட்பாள். அன்றைக்குச் சாயங் காலம் நாலரை மணிக்கே கோயில் வாசல்லே பழியாய்க் கிடப்பேன்.

''ஆறு மணிக்குச் சிநேகிதிகள் சூழ வருவாள். கண்களை இமைக்கக் கூட இயலாமல் பார்த்துக்கொண்டே இருப்பேன். பிராகாரத்தைச் சுற்று கிற சாக்கில், தோழிகளிடமிருந்து விலகித் தனியாய் நடப்பாள். இதற் காகவே காத்துக் கொண்டிருந்த நான், பிரமாதமாய்ப் பேசிக் கிழித்து விடுகிற மாதிரி பின்னா லேயே ஓடுவேன்.

''தப்பா நெனைச்சுக்காதே, மங்கா! மனசுலே இருக்கிற எல்லாத்தையும் கொட்டி விடறேன். என்னைப்பத்தி என்ன வேணும்னாலும் எடை போடு. எப்பிடி வேணும்னாலும் தண்டனை கொடு. சந்தோஷமா ஏத்துக்கு றேன்...நடந்ததைச் சொல்லணும் இல்லியா?...என் மனப்பாரம் கொறையணும் இல்லியா?

''அவளைப் பார்த்து, பேச்சே வராமல் நாக்குழற மூச்சு வாங்க நின்று கொண்டிருப்பேன். அசை யாமல் கோயில் சிற்பம் மாதிரி, பிராகாரத்தில் மங்கல் வெளிச்சத் திலே தூணோரம் நிற்பாள். சாதாரண சிட்டிப் பாவாடை, வாயில் தாவணி. இடுப்பே தெரி யாமல் நீண்ட ரவிக்கை, பார்க்க எவ்வளவு லட்சணமாய் இருப்பாள் தெரியுமா? மனசு பாகாய் உருக, அவளைப் பார்த்துக்கொண்டே நிற்பேன். அவளும் நிற்பாள். பேசணும்னு வந்துட்டுப் பேசவே முடியாம ரெண்டு பேரும் திணறிச் சிரமப்படுவோம். மௌனம் எவ்வளவு பெரிய பாஷைன்னு அப்போதான் தெரிஞ்சுண்டேன்.

''இந்த மாதிரி அங்கே, இங்கே, கல்யாண வீடுகளிலே, கோயில் உற்சவங்களிலே, அப்பிடி இப்பிடின்னு சந்திப்போம். ஒண்ணு அல்லது ரெண்டு வார்த் தைக்கு மேலே பேச அவகாசம் இருக்காது. ஆனா, அந்த ஒண்ணு ரெண்டு வார்த்தைகள் கோடிச் சம் பாஷணைக்குச் சமம். மனசு தவிச்சு உருகிப் போயிடும்.

''ஊர்லே யாரோ கவனிச்சிருக் கிறார்கள். அதான் சொன்னேனே, அப்போல்லாம் ஊர்லே எல்லாருமே சி. ஐ. டி. தான்னு!

''அவ்வளவுதான். அவளைக் கண்ணிலேயே காண முடியல்லே. அவள் வீட்டுக் கொல்லைக்கதவு சாத்தியே இருக்கும். வாசலிலே இருபத்திநாலு மணி நேரமும்

பாட்டி உட்கார்ந்து கொண்டே இருப்பாள்.

''எங்க வீட்டிலேயும் ஏகக் கெடுபிடி. அப்பா விசிறிக் கட்டையை எடுத்தார். அம்மா அழுதாள்.

''நம்ம அந்தஸ்து என்ன, கோயில் குருக்கள் எங்கே? நம்ம கௌரவத்துக்கே கேவலம். சுண்டுவெரலுக்கு அரைக்காப் பவுன்லே வளையம் பண்ணிப் போட யோக்யதை உண்டாடா அவங்களுக்கு? வேண்டாண்டா, கொழந்தே, வேண்டாம். ராஜாத்தியா பொண்கள் காத்துக் கெடக்காடா...' அப்பிடி இப்பிடின்னு இருபத்தினாலு மணி நேரமும் அத்தையும் அம்மாவும் பாட்டியுமா எனக்குச் சொல்லிச் சொல்லி என் ஆசையிலே குடம் குடமாத் தண்ணீரைக் கொட்டினார்கள். ஏதேதோ சொல்லி, யார் யாரையோவெல்லாம் பத்திச் சொல்லி என் மனசைக் கலக்கினார்கள்.

''மங்கா! எனக்கு என்ன ஆச்சுன்னே தெரியல்லே. என் தைரியம் எங்கே போச்சுன்னே தெரியல்லே. எல்லாருமா சேர்ந்து என்னை ஒரு கோழையா, குழந்தையா மாற்றி விட்டார்கள். என் சுய நிர்ணய சக்தியே என்னைவிட்டு போயிட்ட மாதிரி ஆயிடுத்து.

''எங்க அப்பா என்ன பண்ணினாரோ தெரியல்லே. பம்பாயிலே ஒரு வேலை கெடச்சுது. உடனே என்னை அங்கே அனுப்பினார்கள். போற அன்னிக்குக்கூட செல்லத்தை எப்பிடியாவது பார்த்துடணும்னு பார்த்தேன். ஊஹூம், முடியவே இல்லே. அவள் வீடு இருக்கும் திசைக்கே என்னை அந்நியம் ஆக்கி விட்டார்கள்.

''பம்பாய்க்குப் போனேன். கிராமத்திலேர்ந்து பம்பாய்க்குப் போனா எப்பிடியிருக்கும்? வீட்டிலே அழற குழந்தையைக் கடைத் தெருவுக்குக் கூட்டிண்டு போற மாதிரித்தானே? பம்பாயோட பரபரப்பிலே அமுங்கிப் போனேன். பெரிய பெரிய கட்டடங்களும், பரபரப்பும், பளபளப்பும் நாகரிகமும் என்னை அப்பிடியே மயக்கிடுத்து. வேலைக்குப் போற பெருமை வேறே. சம்பாதிக்கிற சம்பிரம் வேறே. விதவிதமாய்ச் சட்டை துணிமணிகள். பாசி வழுக்கிக் குளத்துக்குள்ளே போற மாதிரி, பம்பாயோட நாகரிகத்துல்லே அதோட கவர்ச்சி வெள்ளத்துலே மூழ்கிப் போனேன்.

''செல்லம் கொஞ்சம் கொஞ்சமாய் மனசை விட்டு விலகிப் போனாள். அப்புறம் வேலையிலே மனசு லயிச்சுது. ஈவ்னிங் காலேஜ்லே சேர்ந்து டிகிரி வாங்கினேன். காஸ்டிங் படிச்சா நல்ல சான்ஸ் இருக்குன்னு தெரிஞ்சுது. அது படிக்க ஆரம்பிச்சேன். இதுக்கு நடுவிலே, எங்க குடும்பமே ஊரைக் காலி பண்ணிண்டு மெட்ராஸுக்கு வந்துட்டுது. காஸ்டிங் பரீட்சையை முடிச்சேன். அவ்வளவுதான். என் வாழ்க்கையே திசைமாறிப் போச்சு. சம்பளம் ஒசந்துது. வசதி வந்தது. மனசை விட்டுச் செல்லம் அடியோட மறஞ்சு போனாள்.

''அப்புறம் உன்னைக் கைப் பிடிச்சேன். நீ வீட்டுக்கு வந்தே. உன்னோட கற்பக விருட்சம் வந்தது. காமதேனு வந்தது. அட்சய பாத்திரம் வந்தது. மகாலட்சுமியே வந்து வாசம் பண்ண ஆரம்பிச்சா....அப்புறம்...அப்புறம் என்ன?...என் வாழ்க்கைதான் உனக்குத் தெரியுமே? என் வாழ்க்கையே நீ எழுதற டைரி தானே?''

உணர்ச்சி கொப்பளிக்க அமர்ந்து கொண்டிருந்த சுந்தரவதனம், ஆயாசத்துடன் கட்டிலில் சாய்ந்து கொண்டார்.

ஒரு சிலை மாதிரி உறைந்து போய் உட்கார்ந்திருந்தார் சுந்தர வதனம்.

நீல நிற விளக்கொளி அறையெல்லாம் பின்னிப் படர்ந்திருந்தது.

ஏர்கண்டிஷனர் 'பம்' மென்று சுருதி கூட்டியது.

ரேடியத்தில் மின்னிய சுவர்க் கடிகாரம் ஒரு மணியைக் காட்டியது. எங்கோ ஒரு சுவர்க் கோழி கிறீச்சிட்டது.

ஃபிரிஜ்ஜைத் திறந்து ஒரு டம்ளர் குளிர்ந்த நீரைப் பருகினார் சுந்தரவதனம்.

''மங்கா...ஒனக்கு?...''

வேண்டாமென்று தலையசைத்தாள்.

மறுபடியும் படுக்கையில் அமர்ந்து கொண்டார் சுந்தரவதனம்.

மங்களம் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''...அப்புறம் செல்லம் ஞாபகமே எனக்கு வரல்லே. இப்போ ஆறு வருஷத்துக்கு முந்தி. புதுக்கோட்டைக்குப் பக்கத்துலே ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கலாமான்னு இடம் பார்க்க ஆபீஸிலே போனேமில்லியா? நான்கூடத் திரும்பிவந்து ஒரு மாசம் டைபாய்டு காச்சலிலே கிடந்தேனே நினைவிருக்கா?...அப்பத்தான் பளீர்னு மின்னடிச்சாப்பலே செல்லம் ஞாபகம் வந்தது. நம்ப சொந்த ஊர் ஞாபகம் வந்தது. நான் மட்டும் காரை எடுத்துண்டு கிராமத்துக்குப் போனேன். மனசு பரவாப் பரந்தது. தவியாச் தவிச்சுது.

''சிவன்கோயில் குருக்கள் வீட்டுக்குப் போனேன். அப்போ என் மனசு எப்பிடித் துள்ளித் தவிச்சுதுன்னு எனக்குத்தான் தெரியும்.

அதே பழைய ஓட்டுச் சார்ப்பு எறக்கின வீடு. காரை பெயர்ந்து மழைக் கறை வித விதமாய் ஓவியம் தீட்டியிருந்த . சுவர்கள். வாசல் திண்ணையில் தட்டியெல்லாம் பிய்ந்துபோய் வெறிச்சோடிக் கிடந்தது.

''தெருவிலே வீட்டுக்கு வீடு வாசல் திண்ணையில் தலைகள். மனிதர்களே வராத ஊருக்குக் காரில்—அதுவும் குருக்கள் வீட்டுக்கு—வருவதென்றால்...?

''நான் காரைவிட்டு இறங்கி வீட்டு வாசலுக்குப் போறதுக்கும் வீட்டுக் குள்ளேர்ந்து, புடவைத் தலைப்பில் கையைத் தொடச்சிண்டே ஒரு பெண் வருவதற்கும் சரியாயிருந்துது.

என் அடி வயிறு குலுங்கிடுத்து.

செல்லம்!


முன் தலையிலே சனல் பழுப்பாய் லேசாய் நரை. நன்றாய் உயர்ந்து, பூசின மாதிரி பளபளன்னு உடல் வாகோட, செல்லம்தான்!

''யார் வேணும்?' என்று கேட்கற போதே கண்ணை விரிச்சுப் பார்க்கிற பழைய செல்லம்தான் கண்ணுக்குத் தெரிந்தாள். கொஞ்சம் முத்திப் போயிருந்த செல்லம். வாசல் திண்ணையிலே தூண், பாதி ஒடப்பை மறச்சிண்டுருந்தது. அவள் பார்வை மட்டும் என்னைத் துழாவித் துழாவி அடையாளம் கண்டுபிடிக்கத் தவியாத் தவிச்சுது.

''என்னை மெதுவா அறிமுகப் படுத்திண்டேன். என்னை யாருன்னு தெரிஞ்சதும் அவள் முகம் எப்பிடிப் பிரகாசமாச்சு, தெரியுமா? கை கால்களெல்லாம் பரபரக்க என்னை அழைச்சிண்டு உள்ளே போனாள். அதே வீடு. அதே இருட்டு. வீடும் வயசாயிடுத்துன்னு பார்த்தாலே தெரிஞ்சுது. மூலை முலையாய்ச் சுவரில் விரிசல்கள். இடிசல்கள்.

''மங்கா!... அவளைப் பாத்துத் துடிச்சுப் போயிட்டேன். பழைய படியே ஒருத்தரோட ஒருத்தர் பேசாமெப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

''மெதுவா விசாரிச்சாள். அதே சன்னக் குரல். குரல்லேயே பிரியத்தைக் காட்றது, அவளுக்குக்



கடவுள் கொடுத்த வரப்பிரசாதம். எல்லாத்தையும் சொன்னேன். நான் படிச்சது. வேலைக்குப் போனது, கல்யாணம் ஆனது, மூணு கொழந்தைகளுக்கு அப்பாவானது எல்லாத்தையும் அவகிட்டச் சொன்னேன். கண்களிலே கண்ணீர் பொங்கப் பொங்க, எல்லாத்தையும் கேட்டாள். சுமித்ராவைப்பத்தி, உன்னைப் பத்தியெல்லாம் விசாரிச்சாள். சந்தோஷப்பட்டாள். க்ஷேமமாயிருக்கணும்னுள்.

''நான் அவளைப்பத்திக் கேட்டதுக்கு ஒண்ணும் சொல்லாமெ மௌனமா சாமி படத்தையே பார்த்தாள். நான் ரொம்பக் கேட்டப்பறம் சொன்னுள்.

''மங்கா!...அவ சொன்னதைக் கேட்டதும் இடிவிழுந்த மாதிரி துடிச்சுப் போயிட்டேன். இப்பொ நெனச்சாக்கூட விம்மி, வெடிச்சு அழணும் போலிருக்கு...அவ கல்யாணமே பண்ணிக்கலே மங்கா! தனியாவே வாழ்ந்து தன்னைத் தீய்ச்சுக்கரு மங்கா!

'உங்க நினைவை என்னுலே போக்க முடியல்லே. மாத்த முடியல்லே. என்னுலே யாரையும் கல்யாணம் பண்ணிண்டு குடும்பம் நடத்த முடியும்னு தோணல்லே. அதனுலே தனியாவே வாழ்ந்திண்டிருக்கேன். உங்களை மனசார மோஹிச்சுட்டு என்னுலே யாரோடயாவது வாழமுடியுமான்னு' அவ கேட்ட போது, மங்கா... நான் நொறுங்கிப் போயிட்டேன். வெலவெலத்துப் போயிட்டேன். சவுக்காலே அடி வாங்கின மாதிரி துடிச்சுப் போயிட்டேன்.

''ஒரு பெண்ணேட வாழ்க்கையைப் பாழாக்கிட்ட பாவியில்லியா நான்! அவளை எரிச்சுட்ட நெருப்பில்லியா நான்! ஒரு பெண், எனக்காக, என்னை நெனச்சுக் கன்னியாவே வாழ்க்கை வாழறதா? நான் சகல போகத்தையும் அனுபவிக்கறதா? இது என்ன அக்ரமம் மங்கா? என்ன அநியாயம் இது? நான் பாவி...மகாப் பாவி...''

விம்மி, வெடித்து, விசும்பிக் குழந்தை மாதிரி கேவிக் கேவி அழலானுர் சுந்தரவதனம். அந்த இருளின் மோனத்தில் அவரது கேவல், பெரிதாய் அச்சுறுத்துகிற மாதிரி கேட்டது

பாறையாய் உறைந்து போய் உட்கார்ந்திருந்தாள் மங்களம்.

குலுங்கிக் குலுங்கி அழுதார் சுந்தரவதனம்.

''நான் என்ன பண்ணுவேன் மங்கா! தியாகம், அது, இதுன்னு படிக்கிறோம். கேட்கிறோம். ஆனா நேர அனுபவிச்சா எப்படியிருக்கும்னு அன்விக்குத்தான் தெரிஞ்சுது. இது எப்பேர்ப்பட்ட தியாகம்? தியாகம்னு சொல்றது கூடத் தப்பு. தவம்! ஏதோ ஒரு காரியத்துக்காகத் தவம் பண்ணு. தன்னைத் தியாக அக்னியிலே எரிச்சுக்கறு. என்னோட சகல உணர்வுகளும் ஒஞ்சு போய் அவளேயே பார்த்திண்டிருந்தேன். அவளைச் சுத்தி, ஒரு ஜோதி விசின மாதிரி இருந்துது.

'சாப்பாட்டுக்கு என்ன பண்றே'ன்னு கேட்டேன்.

'சாப்பாட்டுக்கென்ன? அண்ணா கோவில்லே குருக்களா இருக்கான். தெனம் சுவாமிக்குப் பூக்கட்டிப் போடறேன். மாலை சாத்தறேன். அக்கம் பக்கத்துலே ஏதாவது அவசியம்னு வேலை செய்யறேன். புதுக்கோட்டைக்குப் போனா, பல பேர் வீட்டுலே எத்தனையோ வேலை இருக்கு. நான்தான் ஜாஸ்திபோறதில்லே. காலம் சௌக்யமாத்தான் போறது...' அப்பிடீன்னு சொன்னபோது நான் ஒண்ணுமே இல்லாமெத் துளியாக் குறுகிப் போயிட்டேன்.

''அவ விச்வரூபம் எடுத்து நிக்கறு. நான் அல்பப் புழுவா நெளியறேன்.

''அன்னிலேர்ந்து அவளுக்கு மாசம் முன்னூறு ரூபாய் அனுப்பறேன். அவள் வாழக்கையே நாசம் பண்ணின நான், சாப்பாட்டுக்காவது முன்னூறு ரூபாய் அனுப்பாட்டா, என்ன மனுஷனோட சேர்த்தி மங்கா? சொல்லு. நீதான் சொல்லு.

''அவ வாங்கிக்கவே மாட்டேன்னு சொன்னா. நான்தான் ரொம்பக் கட்டாயப்படுத்தி அனுப்பறேன். வாங்கிக்காட்டா உசிரையே விட்டுடுவேன்னு சொன்னப்பறம்தான் சம்மதிச்சா?

''ஒவ்வொரு மாசமும், கோவிலுக்குக் கட்டளை அனுப்பற மாதிரி பணத்தை அனுப்பிச்சிண்டு வரேன்.

''இதுதான் மங்கா, நடந்தது. சத்தியமா இதுதான் நடந்தது. இதையெல்லாம் ஒன்கிட்டச் சொல்ற தைரியம் எனக்கில்லே. நீ எப்பிடி எடுத்துப்பியோ, என்னவெல்லாம் சந்தேகப்படுவியோன்னுதான் சொல்லலே. ஆனா ஒரு விஷயம் மங்கா...அவள் மேலே என் விரல் நகம்கூடப் பட்டதில்லே. இது சத்தியம். என் புருஷத்தனத்தின் மீது ஆணையா சத்தியம்...''

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு விம்மினார் சுந்தரவதனம்.

''இப்போ நீதான் ஜட்ஜ். நான் குற்றவாளிக் கூண்டிலே நிக்கறேன். எனக்கு என்ன தண்டனை வேணும்னாலும் கொடுக்கலாம். நான் ஏத்துக்கறேன். மனம் சுளிக்காமெ ஏத்துக்கறேன்...என் மனப்பாரம் எறங்கிடுத்து......''

களைத்துப்போய்ப் படுக்கையில் விழுந்தார் சுந்தரவதனம்.

ஆடாமல் அசையாமல் பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தாள் மங்களம். அவள் கண்களில் ஈரம்காய்ந்துப்போயிருந்தது. முகத்தில் ஒரு தெளிவு பிறந்திருந்தது. அமைதி படரத் தொடங்கியிருந்தது. மெதுவாய்த் தன் படுக்கையைவிட்டு எழுந்து வந்து அவரருகில் அமர்ந்து கொண்டாள்.

''தண்டனைதானே.........இதோ தந்துட்டேன்'' என்று அவரை அழுந்த ஆலிங்கனம் செய்து கொண்டாள். முகமெல்லாம் முத்தமிட்டாள். 'என் கண்ணா! இத்தனை நாளா இவ்வளவு சுமையை இந்த

---

# என்னைக் கவர்ந்த எழுத்தாளர்

## அசோகமித்திரன்...



''பாண்டி பஜாருக்குப் போகும் போதெல்லாம் எனக்கு அசோகமித்திரன் எழுதிய 'கரைந்த நிழல்கள்' கதைதான் நினைவுக்கு வருகிறது'' என்று பேட்டியைத் தொடங்குகிறார் செல்வி கல்யாணி.

''எங்க குடும்பமே பத்திரிகையும் புத்தகமுமாகப் பொழுதைப் பயன்படுத்தும் பழக்கத்தைக் கொண்டது. மளிகைச் சாமான் வாங்கி வந்த பழைய பேப்பர்த் துண்டைப் படிப்பதற்குக் கூட நாங்கள் போட்டி போடுவோம்.

''இப்படி விழுந்து விழுந்துப்படித்ததால்தான் எது நல்ல எழுத்து, எது மோசமான எழுத்து என்று தரம் பிரிக்கத் தெரிகிறது. அப்படித் தரம் பிரித்துப் பார்க்கப் போய்த்தான் 'அசோகமித்திரனை' அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

''அவரது நடையைப் புரிந்து கொள்ள மனப்பக்குவம் வேண்டும். ஒரு தரத்துக்கு மேல் யோசிக்க வேண்டும். அவருடைய கதையோடு ஐக்கியமானால்தான் சுவைக்கும்.

''அவருக்குக் கதை என்பது அசாதாரணமான சம்பவங்களின் தொகுப்பு அல்ல. ஒரு சாதாரண மனிதன் வாழ்வில் நடக்கும் சாதாரணச் சம்பவமே அவருக்குக் கதை. அதில் வாழ்க்கையைக் காட்டும் நடப்பியல்பாடுகள்தாம் அவரது எழுத்தின் உயிர் நாடி.

'' 'வாழ்விலே ஒரு முறை' என்பது அவரது சிறுகதைகளின் ஒரு தொகுப்பு. இதில் ஒரு கதை: அதில் அப்போதுதான் திருமணம் செய்து கொண்ட ஒரு தம்பதி, போட்டோ எடுத்துக் கொள்கிறார்கள். இந்தச் சாதாரணச் சம்பவத்தை நாம் நேரில் பார்ப்பது போல, நாமே அனுபவிப்பது போல உணரச் செய்து இருப்பதுதான் அவரது எழுத்து வன்மை.

''இதே தொகுப்பில் சோப்புத்தூள் விற்கிற ஒரு 'சேல்ஸ் கேர்ளை'ப் பற்றி ஒரு கதை. அந்தப் பெண் ஒரு வீட்டிற்குச் சென்று தன் விற்பனையைத் தொடங்கும்போது அந்த வீட்டு மாமி ஒரு ஒன்பது கஜம் புடவையை எடுத்துக் கொடுத்து, துவைத்துச் 'சாம்பிள்' காட்டச் சொல்கிறார். ஒவ்வொரு வீட்டிலும் இதே மாதிரி ஒன்பது கஜம் புடவையாய்க் கொடுத்தால் அவள் பாடு என்ன ஆகும்? இதை அவர் சொல்லியிருக்கும் த்வனி மிக அற்புதமானது. அந்தப் பெண்ணின் பரிதாபமான தோற்றம் உடனே நம் கண்முன் வந்து நின்றுவிடுகிறது.

'' 'இனி வேண்டியதில்லை' கதையில் வருகிற சுஜாதா என்ற பாத்திரம் ஒரு புத்திசாலிப் பெண்ணின் ஆரோக்கியமான தன்மையைச் சித்தரிப்பது. 'சுஜாதா'

மனசுலே வச்சிண்டிருந்தீர்களா' என்று நெஞ்சைத் தடவிவிட்டாள். மேனியெல்லாம் விரல்களால் வருடிக்கொடுத்தாள். தலைமயிரைக் கோதிவிட்டாள். உடல் அழுந்தத் தீர்க்கமாய்த் தழுவிக் கொண்டாள்.

''மங்கா...மங்கா...'' என்று கேவிய வண்ணம் அவளை மூர்க்கமாய் அணைத்துக் கொண்டார் சுந்தரவதனம்.

அந்த நிலையிலேயே வெகு நேரம் இருந்தார்கள்.

நேரம் வெட்கப்பட்டுக் கொண்டு ஓடிற்று.

ஏதோ தீர்மானம் செய்து கொண்டவளாய் அவர் பிடியினின்று தன்னை விடுவித்துக் கொண்டாள் மங்களம்.

''...இதோ பாருங்கள். நாளைக்கு நாம ரெண்டு பேரும் கிராமத்துக்குப் போறோம். செல்லத்தைப் பார்க்கறோம். பேசறோம். அவளையும் அழைத்துக்கொண்டு திரும்ப வரோம். இந்த வீட்டிலே அவளுக்கும் சமபங்கு உண்டுன்னு நிரூபிக்கப் போறோம். நாளையிலேர்ந்து இந்தக் கோயிலிலே ரெண்டு தீபங்கள். இந்தச் சுவாமிக்கு இரண்டு மனைவிகள்...''

ஏதோ சக்திக்கு உட்பட்டவள் மாதிரி பேசலானாள் மங்களம். அவள் கண்களில் ஒரு தேஜஸ் மிளிர்ந்தது. அந்த நீல நிற விளக்கொளியிலும் அவருக்குத் தெரிந்தது.

''மங்கா...''

''ஆமாம்; அதுதான் தர்மம். அவள் தன்னை எரிச்சுக்கறதை இனிமேயும் நாம அனுமதிக்கக் கூடாது. அது பாவம். அந்தத் தியாக அக்னியிலே நாமெல்லாம் பொசுங்கிப் போயிடுவோம்...''

விக்கித்துப் போய் உட்கார்ந்திருந்தார் சுந்தரவதனம்.

''மங்கா...இதெல்லாம் சாதாரண விஷயமில்லே. மூணு பெரிய கொழந்தைகளுக்குத் தகப்பன் நான். ஒரு அந்தஸ்திலே இருக்கறவன். இதெல்லாம் சாத்தியமில்லே...வேண்டாம். இருக்கிற படியே இருக்கட்டும். இதற்குண்டான பாவ புண்ணியங்களை நான் அனுபவிக்கறேன்...''

பளிச்சென்று இடைமறித்தாள் மங்களம்.

''மறுபடியும் உங்களைப்பத்தியே தான் நினைக்கிறீர்கள். ஒரு பெண்ணோடை நிலையிலேர்ந்து அன்னிக்கும் சரி, இன்னிக்கும் சரி, நீங்க பார்க்கவே இல்லே...மறுபடியும் அதே தப்பைப் பண்ண வேண்டாம்... பேசாமெப் போய்ப் படுத்துத் தூங்குங்கோ...மணி மூணாறது...''

அவரைப் பேசவிடாமல் படுக்கையில் சரித்தாள் மங்களம். பின்னர் தானும் படுத்துக் கொண்டாள்.

4

ஒரு பழைய ஸ்டூலில் அமர்ந்து கொண்டிருந்தார் சுந்தரவதனம்.

கீழே ஒரு கோரைப் பாயில் மங்களமும் செல்லமும் உட்கார்ந்திருந்தார்கள்.

இனம் புரியாத அமைதி போர்வையாய்ப் போர்த்தியிருந்தது. கூடத்தின் கிழக்கு மூலையில், முற்றத்தில் சூர்ய வெளிச்சம் நிலைக்கண்ணாடியாய் விழுந்திருந்தது. அந்த முற்றத்தில் ஒரு துளசி மாடம். மேற்குப் பக்கத்துச் சுவரோரமாய், வர்ணம் பிடிபடாத அழுக்கு டிரங்குப் பெட்டிகள் சில இருந்தன. அப்புறம் ஒரு பெஞ்ச். அதன் மீது ஓலைத் தலையணை. அப்புறம் சுவரில் ஆணிகளில் ஏதேதோ சாக்குப் பைகள் குவியல் குவியலாகத் தொங்கின. பழைய காலண்டர்கள் சாயம் வெளுத்துச் சுவரில் தெரிந்தன. வாலைச் சுழற்றிக்

பேட்டி : கலாப்ரியன்

அசோகமித்திரனுக்கே மிகவும் பிடித்தமான பாத்திரம். ஒரு பெண் தனக்குப் பிரியமான ஆண் மகனுக்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்தும், அவனை இழக்க நேர்ந்து விடுகிற துரதிர்ஷ்டம்—அந்தப் பெண்ணின் மிக நுணுக்கமான அந்தரங்க உணர்வுகளையெல்லாம் துல்லியமாகப் படம் பிடித்த கதை இது.

''அவரது நாவல்களாகிய கரைந்த நிழல்கள்', 'தண்ணீர்', '18-வது அட்சக் கோடு', 'ஆகாயத் தாமரை' ஆகியவை தமிழ் இலக்கியத்தின் மைல் கற்கள்.

''18-வது அட்சக்கோடு, தெலுங்கு தேசத்தில் சென்று குடியேறிய ஒரு தமிழ்ப் பிராமண குடும்பத்தின் மூத்த மகனின் அனுபவங்களைக் கூறுகிறது.

''ஐதராபாத் நகரம் அவரால் வர்ணிக்கப்படும் போது நாம் அங்கு உலாவி வருவது போலவும், கதை நாயகனான சந்திர சேகரன் பெறும் அனுபவங்களை நாமே பெறுவது போலவும் உணர வைக்கிறார். சுதந்திரத்துக்குச் சற்று முன்னும் பின்னும் ஐதராபாத்திலே நடந்த நிகழ்ச்சிகளை வைத்துக் கதை பின்னப்பட்டு இருக்கிறது.

''வேற்றூரில் வேற்றுக் கலாச்சாரத்துக்கு இடையே வளர நேருகிற இளம் பிராயத்தினர், தம் பரம்பரையான மரபு, சூழலில் தம்மை இழந்தும் - முழுவதையும் இழந்து விடாமலும், தம் சூழலிலிருந்து மாறுபடுபவர்களிடமும் நேசம் கொள்வதையும்; அவர்களே ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு, தங்களது கலாச்சாரத் தனிமைக்காக வருந்துவதையும் அழகாகச் சொல்லி இருக்கிறார்.

''பொதுவாக நகைச் சுவையாக எழுதுபவர்கள், கதா பாத்திரங்களை மட்டம் தட்டினால்தான் சிரிப்பை வரவழைக்க முடியும் என்று நம்பி அந்தப் பாணியில் எழுதுவர்கள். ஆனால், இதற்கு முற்றிலும் மாறுபட்டவர் அசோகமித்திரன். நகைச்சுவை இழையோடும் பல சிறுகதைகளை இவர் எழுதியிருக்கிறார். அதில் பாத்திரங்களை எந்த விதத்திலும் துளிகூட அகௌரவப் படுத்தாமல் எழுதியிருப்பார்.



செல்வி கல்யாணி

''அசோக மித்திரனின் கதைகள் மனத்தில் குழப்பம், கிளர்ச்சி ஏற்படுத்தாதவை. மனிதர்களைப் பற்றி மேலும் மேலும் அறியத் தூண்டும் ஆற்றல் படைத்தவை. வாழ்க்கையில் நம்பிக்கையையும் தெளிவையும் உண்டாக்கக் கூடியவை.

''இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதி வரும் இவர் எண்ணிக்கையில் அதிகம் தராவிட்டாலும், தரத்தில் மிகமிக உயர்ந்து நிற்பவர்.

''உலகத்தின் சிறந்த எழுத்தாளர் என்று போற்றப்படும் எவருக்கும் இணையானவர் இவர் என்பது என் முடிவு.''

ஆழ்ந்த லயிப்போடும் பரவசத்தோடும் செல்வி கல்யாணி பேட்டியை முடிக்கிறார்.

## அமுதசுரபி தீபாவளி மலர்' 81

### சிறுகதைப்போட்டியில் பரிசு பெற்றவர்கள்



'சுமங்கலி'
முதற் பரிசு



ஆர்.பி. சாரதி
இரண்டாம் பரிசு



'சுபா'
மூன்ரும் பரிசு



கல்கி தாசன்
மூன்ரும் பரிசு



உஷாதேவி
மூன்ரும் பரிசு

கொண்டு, ஒரு பல்லி சர்வ அவரசமாய்ச் சுவரில் ஓடியது.

செல்லத்தின் அண்ணு தன் மனைவி, குழந்தைகளுடன் திருச்சியில் ஒரு கல்யாணத்திற்குப் போயிருந்தான்.

மங்களம்தான் மௌனத்தைக் கலைத்தாள்.

''நான் சொல்றதைக் கேளுங்கள். எனக்கு நேத்தி ராத்திரிதான் எல்லாம் தெரியும். துடிச்சுப் போயிட்டேன். நீங்க தனியாவே இருக்கறதைச் சொன்னதும் என்னுலே துக்கத்தைத் தாங்க முடியல்லே. இப்பவே வாங்கோ. அது உங்க விடு. எனக்கு இருக்கற சகல உரிமையும் உங்களுக்கும் தரேன்...இல்லே...இல்லே. நான் என்ன தரது?...உங்களுக்கு உண்டு. இனிமேயும் நீங்க தனியா இருக்கக் கூடாது. என்னுலே சகிக்க முடியாது...''

குரல் நெகிழ்ந்து சொன்னுள் மங்களம். இதயத்தின் ஆழத்திலிருந்துதான் பேசுகிருள் என்பதைக் கண்கள் காட்டின.

வாயைத் திறக்காமல், குனிந்த தலையுடன் அமர்ந்து கொண்டிருந்தார் சுந்தரவதனம்.

எந்தக் குழப்பமும், பரப்பரப்பும், தவிப்பும் இல்லாமல் நிதானமாய் உட்கார்ந்திருந்தாள் செல்லம். முகத்தில் அமைதி தவழ, இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''நான் எதுக்கு வரணும்? எனக்குப் புரியவே இல்லே...?''

திடமாய்ப் பேசினுள்.

ஏதோ குறுக்கிட்டுப் பேச முயன்ற மங்களத்தைப் பார்வையாலேயே அடக்கினுள். ஒரு கண அமைதிக்குப் பின் மீண்டும் பேசினுள். குரலில் தெளிவும், அழுத்தமும் இழைந்தன.

''ஆறேழு வருஷத்துக்கு முந்தி அவரைப் பாத்தேன். ரொம்ப மனசு ஒடைஞ்சு போயிட்டார். மாசம் பணம் அனுப்பத்தான், அனுப்புவேன்னு அனுப்பருர். நான் அத்தனையையும் செட்டியார் பாங்குலேதான் போட்டுண்டு வரேன். ஒரு பைசா தொடல்லே. சுமித்ரா கல்யாணத்தின் போது, திரும்பத் தரலாம்னு வச்சிண்டிருக்கேன்...''

திகைத்துத் தலைநிமிர்ந்த சுந்தரவதனத்தைத் தீர்க்கமாய்ப் பார்த்தாள் செல்லம்.

''எனக்குக் கொஞ்சம்கூட வருத்தமோ, துக்கமோ இல்லே. ஏன் நீங்க ரெண்டு பேரும் இப்படி மனசு ஒடஞ்சு போயிருக்கேள்னு தெரியல்லே. இதுலே என்ன இருக்கு? அவர் மேலே ஆசைப்பட்டேன். அது நடக்கலே. அதுக்கு அவர் என்ன பண்ணுவார்? இந்த ஜன்மத்துலே எனக்குக் கிட்டாதது அடுத்த ஜன்மத்திலேயாவது கிடைக்கணுமேன்னு பகவானைப் பிரார்த்திச்சிண்டு இருக்கேன். அவ்வளவுதான். உங்களோட வந்து இருக்கச் சொல்றேளே? இதெல்லாம் சாத்தியமா; அழற கொழந்தைக்கு மிட்டாய் வாங்கிக் குடுக்கற மாதிரி நெனைச்சுட்டேளே? நியாயமா இது? உங்களோட அமைதியையும், கௌரவத்தையும் நான் கெடுக்கணுமா? அடுத்த ஜன்மத்திலேயும் நான் பெண்ணுப் பொறக்கணும். அவர் ஆணுப் பொறக்கணும். அவரை நான் முழுசா அடையணும். அதுக்குத்தான் இந்த ஜன்மாவிலே இப்படி இருக்கேன். இதுக்கு யாரும் காரணம் இல்லே. மங்களம்! உன் புருஷனை நான் ஆசைப்படல்லே. ஆசைப்படல்லே. எனக்கு இன்னொரு பெண்ணோட புருஷன் வேண்டவே வேண்டாம். அடுத்த ஜன்மத்திலே அவரை முழுசா நான் அடையணும். அதுக்காக இந்த ஜன்மத்திலே தபஸ் இருக்கேன். அவ்வளவுதான். என் வாழ்க்கை, இந்தக் கிராமத்திலேயே, இந்தக் கோயிலிலேயே நடக்கும். முடியும். இதுலே எந்த மாற்றமும் இல்லே. நீங்க எல்லோருமே க்ஷேமமா இருக்கணும். சகல சௌபாக்யத்தோட இருக்கணும். குழந்தைகளுக்கு என் ஆசீர்வாதம்......''

மெதுவாய் எழுந்த செல்லம், சுந்தரவதனத்தை நமஸ்கரித்தாள்.

செயலிழந்து, பேச்சிழந்து ஒரு பிம்பமாய் அமர்ந்திருந்தார் சுந்தரவதனம்.

''இந்தா மங்களம்'' என்று குங்குமச் சிமிழை எடுத்து நீட்டினுள் செல்லம்.

5

''கடலோரத்துலே தேவி கன்யாகுமரி தபஸ் பண்ற மாதிரி இங்கே செல்லமும் உங்களுக்காகத் தபஸ் பண்ருள். காலம் என்கிற அக்னியிலே, தன் கன்னித்தனத்தை, ஆஹுதி செய்து, தபஸ் பண்ருள். இவளும் கன்யாகுமரிதான். கன்யாகுமரி தபஸ் செய்யறது, புராணம் மட்டுமில்லே, தத்துவமும் போலிருக்கு. ஒரு அமானுஷ்யமான பெண் இந்தச் செல்லம்...''

குரல் நெகிழ, கண்ணீர் கண்ணை மறைக்கச் சொல்லிக் கொண்டு வந்தாள் மங்களம்.

பதில் பேசத் தெரியாது, காரைச் செலுத்திக் கொண்டிருந்தார் சுந்தரவதனம்.

ஐந்து வருடங்களுக்கு முன்னால் சில அடிப்படையான உண்மைகளை அன்னையின் கருத்துக்களிலிருந்து எடுத்துத் தொகுத்தோம். தொழில் அதிபர்கள், நிர்வாக ஆலோசகர்கள், நிர்வாகிகள் போன்றோருக்குப் பயன்படும் வகையில் அவற்றைத் தொகுத்தோம். ஆல் இந்தியா மானேஜ்மெண்ட் கான்பிரன்ஸ் (All India Management Conferance) உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றில் இந்தக் கருத்துக்கள் பற்றிப் பேசப் பட்டது. சில தொழிலதிபர்கள் இந்தக் கருத்துக்களில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். இக் கருத்துக்களைத் திரட்டி ஒரு சிறு கட்டுரையாக எழுதி, விரும்பிக் கேட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஐரோப்பாவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் மானேஜ்மெண்ட் அசோஸியேஷன் (Management Association) தலைவருக்கும் அக் கட்டுரையின் நகல் ஒன்று அனுப்பப் பட்டது.

1978-ஆம் ஆண்டு நடந்த உலக மானேஜ்மெண்ட் கான்பிரன்ஸில் அன்னையின் பக்தர் ஒருவர், ஓர் உறுப்பினராகக் கலந்து கொண்டு மேற்கூறிய கருத்துக்களை ஆதாரமாகக் கொண்ட கட்டுரையை எழுதி அங்கு வெளியிட்டார். அப்பொழுது ஐரோப்பிய மையத்தின் தலைவரை, அந்த அன்னையின் பக்தர் சந்திக்க நேர்ந்தது. அவரை அந்தத் தலைவர் அடையாளம் கண்டு கொண்டு விட்டார். அவர் பல வருடங்களுக்கு முன்னால் தனக்கு அனுப்பப் பட்ட கட்டுரையைப் பற்றிக் குறிப்பிட்டு, "நீங்கள் அந்தக் கட்டுரையில் எழுதி இருந்த கருத்துக்கள் எனக்குப் பிடித்திருக்கின்றன. மேலும் அக்கருத்துக்களைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள விரும்புகிறேன். உண்மையைச் சொல்வதானால், 'சேவைக்குப் பிறகு லாபம்' என்ற உங்கள் கொள்கையை நான் பின்பற்றி வந்தேன். அதன் விளைவாக நான் இப்பொழுது சற்றும் எதிர்பாராத வகையில் அமெரிக்கன் மானேஜ்மெண்ட் அசோஸியேஷனின் தலைவனாகி விட்டேன்!" என்று கூறினார்.

ஒரு வருடத்திற்குப் பிறகு அன்னையின் பக்தர் அவரை நியூயார்க்கில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது இன்னும் விரிவாக அன்னையின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட நிர்வாகத் தத்துவங்கள் பற்றி அந்தத் தலைவரிடம் விளக்குவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது, அந்தப் பக்தருக்கு. தலைவருக்குப் புதிய தத்துவ விளக்கங்களைக் கேட்டுப் பூரணத் திருப்தி. "உங்கள் தத்துவத்தை முறையாக, என்னுடைய நிறுவனம் ஒன்றில் பயன்படுத்தினேன். அந்த நிறுவனம் ஆரம்பத்தில் வருடம் ஒன்றுக்கு ஐம்பது லட்ச ரூபாய் நஷ்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தது. இப்பொழுது அது நஷ்டம் இல்லாமல் போதிய அளவு லாபத்துடன் செயல்பட்டு வருகிறது. தென் அமெரிக்காவில் என் நண்பர் ஒருவர் இருக்கிறார். அவரும் உங்கள் கருத்தை ஏற்றுக் கொண்டு, தன் நேரத்தில் பாதியைத் தன் நிறுவனங்களைத் துப்புரவு செய்வதில் செலவழித்தார். அதன் பயனாக அவருடைய நிறுவனங்கள் இப்பொழுது அதிக லாபத்தை ஈட்டுகின்றன!" என்றார்.

நியூயார்க்கில் நடைபெற்று வரும் கல்லூரி ஒன்று, ஆண்டுதோறும் அரை கோடி ரூபாய் நஷ்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தது. அதைச் சரி செய்வதற்கு ஏதாவது ஆலோசனைகள் கூற வேண்டும் என்று அதன் தலைவர் கேட்டுக் கொண்டார். அவருக்கு ஆலோசனைகள் அனுப்பி வைக்கப்பட்டன. எட்டு மாதங்களுக்குப் பிறகு, அந்தக் கல்லூரியின் பொருளாதாரம் நன்கு முன்னேறி வந்து கொண்டிருப்பதாக எழுதி இருந்தார் அவர்.


சூரியனுடைய கிரணங்களைப் போன்றது அன்னையின் கருணை. அது பரவிய இடம் எல்லாம் பக்தர்களின் துயரைக் களையும் என்பதற்கு ஒரு விஞ்ஞானியின் அனுபவமும் ஒரு சான்று.

அவர் ஒரு விஞ்ஞானி; தன்னுடைய துறையில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர். இரவு பத்து மணியானாலும் தன் மேஜையில் உள்ள மைக்ராஸ்கோப்பை விட்டுச் செல்ல அவருக்கு மனம் வராது. அவர் ஒரு கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். மாணவர்களிடம் மிகுந்த பற்றும், பாசமும் கொண்ட அவரிடம், மாணவர்களுக்கும் உயர்ந்த மதிப்பும் அன்பும் உண்டு. கல்லூரியில் எந்த விதமான கலவரம் இருந்தாலும், அவருடைய வகுப்பு மட்டும் வழக்கம் போல அமைதியாக நடைபெறும். அவர் எல்லாவற்றாலும் சிறந்த ஆசிரியராக விளங்கினார்.

எம்.எஸ்ஸி., பட்டம் பெற்றிருந்த அவர், பி. ஹெச்டி. (டாக்டர்) பட்டம் பெற ஆராய்ச்சியை மேற்கொண்டார். அவருடைய பி. ஹெச்டி. படிப்பை மேற்பார்வை செய்கின்ற பொறுப்பை, அவரின் பேராசிரியரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. அப் பேராசிரியரோ கல்லூரியின் முதல்வராகவும் இருந்தார். துரதிருஷ்டவசத்தால் அந்த ஆசிரியரால் முதல்வரின் நல்லெண்ணத்தைப் பெறமுடியாமல் போய் விட்டது. 'கடமை உணர்விலும், அன்போடு பழகுவதிலும் அறிவாற்றலிலும் சிறந்தவர்' என்று எல்லோரும் பாராட்டுகின்ற அளவில் உயர்ந்திருந்த அவர், என்ன காரணத்தாலோ முதல்வரின் மனத்தில் இடம் பெற முடியவில்லை.

அவர் பி. ஹெச்டி. படிப்பில் சிறந்து விளங்கினார். திராட்சை, முல்லை, தக்காளி ஆகிய மூன்றும் அவரின் ஆராய்ச்சிப் பட்டப் படிப்பில் முக்கிய இடத்தை வகித்தன. இம் மூன்றிலும் அவர் நல்ல தேர்ச்சி





பெற்றிருந்தார். அவருடைய ஆராய்ச்சி நூல் மிகச் சிறப்பாக அமைந்து விட்டது. அவர் தன் நூலைச் சமர்ப்பிப்பதற்கு முன்னுலேயே அவருடைய கண்டுபிடிப்புகள் சக வல்லுநர்களின் பாராட்டைப் பெற்று விட்டன. அவருடைய கல்லூரி முதல்வர், கல்லூரி நிர்வாகத்தில் சிறப்புப் பெற்றிருந்தாரே தவிர, விஞ்ஞானத் துறையில் பரிச்சயமானவர் இல்லை. பி. ஹெச்டி. ஆராய்ச்சி நூலைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டிய கட்டம் வந்தது. பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்ட பிறகுதான் ஆய்வுக் குழுவினர் பரிந்துரையின் மேல் பி. ஹெச் டி. பட்டம் அந்த நூலுக்கு வழங்கப்படும். ஆய்வு நூலை அனுப்புமுன் மேற் பார்வையாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்பது பல்கலைக் கழக விதிகளில் ஒன்று. 'என்னுடைய மேற்பார்வையில் எழுதப்பட்ட இந்நூல், உண்மையான ஆராய்ச்சி அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது' என்று மேற்பார்வையாளர், ஒப்புதல் அளிக்க வேண்டும். என்ன காரணத்தாலோ அவருடைய மேற்பார்வையாளர், இவ்வாறு ஒப்புதல் அளிக்க மறுத்து விட்டார்.

ஆசிரியருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. இது அவருக்கு மட்டுமல்ல; அந்தக் கல்லூரியில் பணியாற்றிய மற்ற எல்லோருக்குமே ஆத்திரத்தை அளித்தது. 'இப்படிப்பட்ட ஒருவருக்கா இந்தச் சோதனை?' என்று அனைவரும் வருந்தினர்கள்.

இதற்கிடையில் மத்திய அரசால் நடத்தப்படும் நிறுவனம் ஒன்றில் பதவி உயர்வு கிடைக்கவே, அவருடைய மேற்பார்வையாளர் வட இந்தியாவுக்குச் சென்று விட்டார். காலம் விரைவாக ஓடிக் கொண்டிருந்தது. 'ஆராய்ச்சியைத் தொடங்கிய ஆரம்பத் தேதியிலிருந்து நான்கு வருடங்களுக்குள் ஆராய்ச்சி நூலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ப்பித்துவிட வேண்டும். அவ்வாறு நான்கு வருடங்களுக்குள் அது சேர்ப்பிக்கப்படா விட்டால், அதனை மறுபடியும் இரண்டு ஆண்டுகள் சென்ற பின்புதான் பல்கலைக் கழகத்தில் சேர்ப்பிக்கலாம்' என்பது பல்கலைக் கழகத்தின் இன்னொரு விதி.

அதன்படி நான்காவது ஆண்டு முடிவதற்கு இன்னும் சில வாரங்களே இருந்தன. அதற்குள் ஆசிரியர் தன் ஆய்வு நூலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ப்பித்து விட வேண்டும். ஆனால் மேற்பார்வையாளரின் ஒப்புதலைப் பெறாமல் அதனைப் பல்கலைக் கழகத்தில் சேர்ப்பிப்பது என்பது முடியாத காரியம். ஆசிரியருக்கு அதை அந்தக் காலக் கெடுவிற்குள் அனுப்பி வைக்க முடியும் என்ற நம்பிக்கை சிறிதுகூட இல்லை.

இந்த நிலையில் அவருடைய நண்பர் ஒருவர் என்னிடம் வந்து "இந்தப் பிரச்சினைக்கு ஏதேனும் வழி உண்டா?" என்று கேட்டார். "அன்னையைப் பிரார்த்தனை செய்து கொள்வதற்கு அந்த ஆசிரியர் சம்மதப் பட்டால் பிரச்சினை தீர வழி இருக்கிறது" என்றேன் நான்.

சில வாரங்கள் கழிந்தன. யாரோ ஒருவர் என் இல்லத்திற்கு வந்தார். தன்னுடைய நண்பர் என்னிடம் அவரை அனுப்பி வைத்ததாகக் கூறித் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். வந்தவர் அந்தக் கல்லூரி ஆசிரியர்தான். தான் ஸ்ரீ அரவிந்தாசிரமத்திற்குச் சென்றிருந்ததாகவும், அங்குள்ள ஸ்ரீ அரவிந்தரின் அறையில் சிறிது நேரம் தியானம் செய்து விட்டு வந்ததாகவும் கூறி விட்டுத் தொடர்ந்தார் அவர்:

"அந்த நண்பர் உங்களைச் சந்தித்துப் பேசிய பிறகு என்னிடம் வந்தார். என் ஆராய்ச்சி நூலின் நிலையை விசாரித்து விட்டு, 'நீங்கள் அன்னைக்குப் பிரார்த்தனை செய்து கொள்வதற்கு ஏதாவது ஆட்சேபணை உண்டா?' என்று கேட்டார். எனக்கு அன்னையைப் பற்றி எதுவும் தெரியாவிட்டாலும், நண்பர் அன்னையைப் பற்றி அடிக்கடி கூறுவார். 'அன்னை தெய்வாம்சம் உள்ளவர்' என்று பன்முறை என்னிடம் கூறி இருக்கிறார் அவர். அன்னைக்குப் பிரார்த்தனை செய்து கொள்வதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லாவிட்டாலும், அது அவ்வளவு எளிதான காரியமாக எனக்குத் தோன்றவில்லை. இருந்தாலும் அன்னையிடம், 'என்னுடைய ஆராய்ச்சி நூலைப் பல்கலைக் கழகத்தில் ஒப்படைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் தீர வேண்டும்' என்று பிரார்த்தனை செய்து கொண்டேன். நூலை அனுப்புவதற்கு இன்னும் இரண்டு நாட்கள்தாம் உள்ளன. என்னுடைய மேற்பார்வையாளர் எந்தத் திசையில் இருக்கிறார் என்பதைக் கூட என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தேன். ஆராய்ச்சி நூல், சர்ட்டிபிகேட்டுகள், சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள் ஆகிய யாவற்றையும் எடுத்துக் கொண்டு சென்னைக்குச் சென்றேன். அன்றுதான் நான் என் ஆராய்ச்சி நூலைச் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள். பல்கலைக் கழகத்தின் ரிஜிஸ்டிராரை அணுகி என் நிலையை எடுத்து விளக்கினேன். அதைக் கேட்டு அனுதாபம் அடைந்த அவர், எனக்குத் தன் பூரண ஒத்துழைப்பையும் தரத் தயாராக இருந்தார். ஆனால் மேற்பார்வையாளரின் ஒப்புதல் இல்லாமல் ஆராய்ச்சிக்கு நூலைப் பெற்றுக் கொள்ள இயலாது என்றார் அவர். என்னுடைய மேற்பார்வையாளர் ஒப்புதல் தர மறுத்து விட்டதையும், இப்பொழுது அவர் எங்கு இருக்கிறார் என்று எனக்குத் தெரியாது என்பதையும் அவருக்குக் கூறினேன். அதற்கு அவர், 'அதிர்ஷ்டவசமாக

### கம்பர்

நீ. கணேசன்

தேர் எழுந்த ஊரிலே
தேன் கவிதை பாடியே!
வேந்தர் நெஞ்சம் மகிழ்ந்திட
வாழ்ந்து வந்தார் கம்பரே!

இளம் வயதில் தந்தையை
இழந்து வருந்தி வாடினார்
இனிய தமிழைக் கற்றதால்
இன்றும் கம்பர் வாழ்கிறார்.

அகிலம் என்றும் போற்றிடும்
அருமைத் தமிழ்க் காவியம்
இராம காதை நூலிலே
இனிய வள்ளல் வாழ்கிறார்.

கம்பன் சிலையைக் காணலாம்
கடலின் ஓரம் நிற்குதே!
கன்னித் தமிழைக் கற்றவர்
கவியில் கம்பன் வாழ்கிறார்.

இன்னல் வந்த போதிலும்
இம்மி யளவும் வருந்தலே
இயன்ற மட்டும் உழைத்ததால்
இன்றும் உலகம் போற்றுதே!

### வரதட்சணை !

ஆர்ப்பாக்கம் பாப்பித்தன்

கொடுமை! கொடுமை! கொடுமை!- வர
தட்சணை வாங்கல் கொடுமை!
அடிமை! அடிமை! அடிமை! -அதை
அடைந்தோன் பெண்ணுக் கடிமை!
(கொடு)

பெண்ணின் பொருளைப் பெற்றே-நீ
பிழைத்தல் சிறுமை! சிறுமை!
பெண்ணின் உண்மை யன்பை-நீ
பெறுதல் பெருமை! பெருமை!
(கொடு)

அமுத சுரபியை உடைத்தல்- உனக்
கழகோ? அழகோ? அழகோ?
கமழும் மலரைக் கசக்கி-நீ
முகர்தல் முறையா? சரியா?
(கொடு)

பொன்னும் பொருளும் நிலையா?-அது
மாறும் மறையும் முகிலாய்!
பெண்ணைக் கொள்வாய் சிலையாய்- நீ
பெறுவாய் இன்பம் நிலையாய்!
(கொடு)



# அபூர்வ சக்தி

பீட்டர் (கிர்க் டக்ளஸ்), தன் மகன் ரோபினுடன் (ஆண்ட்ரு ஸ்டீவன்ஸ்) ஆனந்தமாக நீச்சலடித்துக் கொண்டிருக்கும் போது, நண்பன் சைல்ட்ரஸினால் (ஜான் காஸவேட்ஸ்) சுடப்பட்டாலும், தப்பித்துக்கொள்கிறார். தன் தந்தை சுடப்பட்டு இறந்துவிட்டார் என்று அனுமானித்துக் கொண்டிருக்கும் ரோபினை, சைல்ட்ரஸின் ஆட்கள் கடத்திப்போய், அவனது அசாதாரண புலன் உணர்வுச்சக்திகளைவழிப் படுத்த முயல்கின்றனர். பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பெண் கில்லியன் (அமி இர்விங்) தன் புலன் உணர்வுச்சக்திகளைக்கண்டு தானே வியந்து, தன்னைப்போல ரோபின் என்கிற பையனுக்கும் இம்மாதிரி சக்தி இருப்பதை அறிந்து அவனைச் சந்திக்க ஆவலாயிருக்கிறாள். சைல்ட்ரஸின் எண்ணம் இப்போது கில்லியனையும் பிடித்துப் போடுவது தான். இதனைத் தடுக்கப்போன ஹெஸ்டர் என்னும் பெண், கொலலப்படுகிறாள். ரோபின் இருக்குமிடத்தைத் தனது சக்தியினால் அறிந்த கில்லியன், பீட்டருடன், சைல்ட்ரஸின் இருப்பிடத்திற்கு விரைகிறாள். ரோபினுக்கும், கில்லியன் என்கிற பெண்ணைப்பற்றி தன் சக்தியினால் அறியமுடிகிறது. தன்னைப் பாதுகாத்து நிற்கும் ஒரு டாக்டரை ரோபின் தீர்த்துக் கட்டுகிறான். பீட்டரும், கில்லியனும் ஆட்களால் பிடிபட்டாலும், தந்திரமாக கில்லியன், சைல்டரஸின் உள் நோக்கத்தை உணர்ந்து அவனை ஒழித்துக்கட்டி விடுகிறாள். தந்திரக் காட்சிகளால் புலன் உணர்வுச் சக்திகளை சுவாரஸ்யமாக அமைத்து, சாதாரண கதையைக்கூட டைரக்டர் ப்ரெய்ன் டிபால்மா பிரமாதமாக செய்து அமைத்து விட்டார். ஃபாக்ஸ் இதனை வெளியிடுவார்.

—டி. எம். ஆர்.

இரவில் இப்படித் திடீர் என்று விழித்து எழுந்தது மகன் சந்தானத்திற்கு இல்லாமல் தன் சொந்த உபாதைக்காக என்று உணர்ந்தபோது விசாலத்துக்குச் சிறிது வெட்கமாக இருந்தது. அவள் ஆஸ்பத்திரி பாத்ருமை நாடிப் போனாள்.

பாத்ரும் என்று சொல்வதே முதலில் பொய். அதைக் கக்கூஸ் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இப்போதெல்லாம் கக்கூஸ் என்ற சொல் அதிகம் பயன்படுத்தப் படுவதில்லை. எல்லாரும் பாத்ரும் எங்கே என்று தான் கேட்கிறார்கள். பாத்ருமிலேயே பாத்ரும் என்றும் குளிக்கும் பாத்ரும் என்றும் இரு பிரிவுகள் வந்து விட்டன.

பெண்கள் பாத்ருமில் குழாயைத் திறந்தால் தண்ணீர் வரவில்லை. விசாலம் தயங்காமல் ஆண்கள் என்று குறிப்பிட்டிருந்த பாத்ருமிற்குச் சென்று காலைக் கழுவிக் கொண்டாள். இதே ஆஸ்பத்திரியில் இந்த பாத்ரும்களை நோயாளிகளைவிட அவர்களுக்குத் துணை யிருப்பவர்கள்தாம் அதிகம் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. அதிலும் இந்த இரண்டாவது மாடி வார்டில் இருக்கும் ஒன்பது நோயாளிகளும் 'பெட்பான்' கேஸ்கள்.

விசாலம் விரல்களை நனைத்துக் கண்களைத் தொட்டுக் கொண்டாள். 'பகவானே, என் குழந்தையைச் சீக்கிரம் குணப்படுத்தி வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகக் கருணை பண்ணு' என்று வேண்டிக் கொண்டாள். இந்தப் பத்து நாட்களில் பகவானுக்கும் அவளுக்குத் தெரிந்த எல்லாக் கடவுளுக்கும் வேண்டிக்கொண்டு விட்டாள். சந்தானம் உடம்பு சரியாகி வீடு திரும்பினால் ஓராண்டு காலத்திற்கு அவளுடைய வேண்டுதல்களை மாறி மாறிப் பூர்த்திசெய்து விடுவதற்கே நேரம் போதாமல் போய் விடும்.

சந்தானம் தூங்கிக் கொண்டிருந்தான். அது அவனிச்சையாகத் தூங்கும் தூக்கம் அல்ல. அந்தக் குழந்தையை இந்தப் பத்து நாட்களாக அரை நினைவு நிலையிலேயே தான் வைத்திருக்கிறார்கள். இப்படி மயங்கிக் கிடக்கும்போது கூட அவனுடைய முகத்தில் அவ்வப்போது தோன்றும் சிணுங்கல், அவன் அனுபவிக்கும் வலியை வெளிக்காட்டி விடும். மயக்க மருந்து கொடுத்தால் அவன் வலியை அவ்வளவு உணராமல் இருக்கக் கூடும். ஆனால் வலி எங்கும் போய் விடுவதில்லையே?

திடீரென்று சந்தானத்தின் உடல் நெளிந்தது. சகிக்க முடியாத

# காபி

அசோகமித்திரன்




வேதனை மின்னல் போல அவனுள் பாய்ந்து செல்வதை அவனுடைய முகம் காட்டிற்று. விசாலம் சந்தானத்தின் நெற்றியைத் தடவிக் கொடுத்தாள். "என்ன பண்ணறதுடா, கண்ணா?" என்று கேட்டாள்.

மயக்கம் தூக்கலாக, சந்தானம் தலையணையில் தொய்ந்தான். விசாலம் அவனுடைய நெற்றியையும் தலையையும் தடவிக் கொடுத்தாள். சந்தானம் உதட்டை அசைத்தது போலிருந்தது. அவன் வாயருகில் தன் காதைப் பொருத்தி வைத்துக்கொண்டு, "என்னடா கண்ணா?" என்று கேட்டாள். அவளுக்கே தெரியும் அந்த உதடுகள் எதைச் சொல்ல முயற்சி செய்தன என்று. சந்தானம் கேட்டது ஒரு வாய்க் காபி.

சந்தானம் மீண்டும் மயக்கத்தில் ஆழ்ந்து போய்விட, விசாலம் அவன் கட்டிலுக்கருகில் தரையில் கிடத்தியிருந்த பாயில் படுத்துக் கொண்டாள். அந்த அறையில் மங்கலாக ஒரே ஒரு விளக்கு மட்டும் எரிந்து கொண்டு, எல்லாக் கட்டில்களுக்கடியிலும் இருட்டை நிலைக்கவைத்ததால்தான் அவளால் அப்படி அந்த அறையில் தரையில் படுக்க முடிந்தது.

ஒரு காரணம், எல்லாக் கட்டிலுக் கடியிலும் மூத்திரக் குப்பியும் எச்சில் குவளையுமாக இருந்தது. அவளுடைய மூன்று பிரசவங்களும் வீட்டிலேயே வைத்துக் கொண்டு விட்டார்கள். அவளுக்குத் தெரிந்து ஆஸ்பத்திரிகள் மாலை நான்கிலிருந்து ஆறு மணி வரை சாத்துக்குடிப் பழ சகிதம் சென்று ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் உறவினர் அல்லது தெரிந்தவரைப் பார்த்து 'இப்போ உடம்பு எப்படி. இருக்கு?' என்று கேட்டு 'இப்போ கொஞ்சம் தேவல' என்ற பதிலைப் பெற்று, மிகுதி ஒன்றரை மணி நேரம் என்ன பேசுவது. என்ன செய்வது என்று தெரியாமல் சங்கடப்படும் இடங்கள். சந்தானத்தை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும் என்று டாக்டர் சொன்ன போது கூட அவளுக்கு அவனை அங்கேயே விட்டு விட்டு வர வேண்டும் என்பது புத்திக்கு எட்டவில்லை. ஆனால் அவனை வார்டில் கொண்டு சேர்த்துப் படுக்கையிலும் படுக்க வைத்தவுடன் ஒரு தடிமனான நர்ஸ் அவளை அங்கே நிற்கக் கூடாது என்று விரட்டிய போது தான் ஒரு ஆஸ்பத்திரியில் சேர்ப்பது என்றால் என்ன என்ற முதல் விளைவு அவளுக்குப் புரிந்தது. முதல் நாள் இரவு ஆஸ்பத்திரியில் சந்தானம் தவித்தானோ என்னவோ விசாலம் ஒரு கணம் கூடத் தூங்க முடியாமல் துடிதுடித்துப் போனாள். பொழுது விடிந்ததும் விடியாததுமாகச் சமையலை அறை



குறையாக முடித்துவிட்டு ஆஸ்பத்திரி முன்னால் போய் நின்றான். ஆனால் அங்கிருந்த டாக்டர்களும் நர்ஸ்களும் அவளிடம் ஏதும் விசேஷமாகச் சொல்லவில்லை. அவளுடைய கணவனுக்கும் அவளிடம் எதையும் முழுக்கச் சொல்லும் பழக்கம் கிடையாது. அவளிடம் சொன்னதெல்லாம் ஹார்லிக்ஸ், குளுகோஸ் தண்ணீர் தவிர சந்தானத்திற்கு எதையும் கொடுத்து விடாதே. எதையும் கொடுத்து விடாதே.

ஆனால் சந்தானம் எதையும் கேட்டு விடவில்லை. அவன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட மூன்றும் நாள்தான் அவனுடைய வயிற்று வலிக்கு இரண்டு நாட்கள் முன்பு யாரோ சொல்லி யாரோ கொடுத்த மலமிளக்கி மருந்து விபரீதத்தை விளைவித்து விட்டது தெரிந்தது. அப்பெண்டிசைடிஸ் புண் உடைந்து வயிற்றுக் குழாயில் பொத்தலும் உண்டு பண்ணி விட்டதோ என்று பயந்தனர். இதெல்லாம் கூட விசாலத்துக்கு யாரும் உடனுக்குடன் தெரியப் படுத்தவில்லை. ஆனால் அன்றிலிருந்து சந்தானத்துடன் எப்போதும் யாராவது வீட்டு மனிதர் ஒருவர் இருக்க வேண்டும் என்ற போது முதலில் அவளுக்கு ஆறுதல் ஏற்பட்டாலும் அப்புறந்தான் நிலைமை சரியில்லை என்று தெரிந்தது.

யார் இரவில் ஆஸ்பத்திரியில் இருந்து விடுவது என்று ஒரு சிறு விவாதம். வீட்டில் சந்தானத்தை அடுத்து இன்னும் மூன்று குழந்தைகள். அம்மா இருந்துதான் ஆக வேண்டும் என்ற கட்டத்தைத் தாண்டியவர்கள். மாலை சாப்பாட்டை முடித்து விட்டு விசாலம் ஆஸ்பத்திரி வந்து விட்டால் காலை ஏழு மணிக்கு வீடு திரும்பி சமையல் செய்து விடலாம். சந்தானத்துக்குத் துணையாக ஒருவர் இருந்தது போலவும் இருக்கும். வேறு யாருக்கும் பெரிய இடைஞ்சலும் ஏற்படாது.

ஆபரேஷன் செய்த தினம் விசாலத்தின் கணவனும் ஆஸ்பத்திரியிலேயே பகல் முழுவதும் இருந்தான். சந்தானத்தைக் காலையில் உடலெல்லாம் சவரம் செய்தார்கள். வலியோடு சந்தானம் கூச்சத்தாலும் துடித்துப் போனான். ஆபரேஷனுக்குத் தள்ளு வண்டியில் எடுத்துப் போகும்போதே அவனுக்கு ஜீவன் அதிகம் மிஞ்சியதாகத் தெரியவில்லை. இதோ ஆபரேஷன் முடிந்து நான்கு நாட்களாகப் போகிறது. இன்னும் குழந்தைக்கு ஊசி முனையில்தான் ஊட்டம்.



"பிறந்த வீட்டுக்குப் போயிருக்கிற உங்க மனைவி திரும்பும் வரை, உங்க வீட்டுக்கு வேலை செய்ய பாவாடை தாவணி போட்ட பெண் தேவை என்றீயாமே சாமி?"

இந்த ஆஸ்பத்திரியில்தான் எப்படி நோயாளிகளும் அவர்களைப் பார்த்துக் கொள்கிறவர்களும் மாறி மாறித் தின்ற வண்ணமேயிருக்கிறார்கள்? ரயில் பயணிகள் போல ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து விட்டாலும் கூச்சமெல்லாம் போய் விடுகிறது. யார் எதிரிலும் எதை வேண்டுமானாலும் செய்யலாம். அந்தரங்கச் செயல்கள் பகிரங்கமாகப் புரியப்பட்டன. எல்லாருடைய நோக்கமே முடிந்த வரை உடலுக்குள் உணவைச் செலுத்திக் கொண்டே இருக்க வேண்டும். சந்தானத்தைத் தவிர.

விசாலம் ஒரு முறை எழுந்து சந்தானத்தைப் பார்த்தாள். அந்தக் குழந்தை ஒழுங்காகச் சாப்பிட்டுப் பதினைந்து நாட்களுக்கு மேலாகி விட்டன. அதற்கு முன்பும் எப்போதாவது வயிற்று வலி என்பான். ஆனால் அதற்காக முழுப் பட்டினி போட்டு முழுப் படுக்கையாகக் கிடத்தியதில்லை. பத்தே நாட்களில் இந்தக் குழந்தை ஆண்டாண்டு காலமாக இந்த ஆஸ்பத்திரியிலேயே படுத்துக் கிடப்பது போலாகி விட்டது.

சந்தானம் முகத்தில் நிரந்தமாக ஒரு சுளிப்பு இருந்துகொண்டே இருந்தது. மயக்கத்தில் கிடக்கும் அவன் முகத்தைப் பார்த்தால் உடல் வேதனை தாங்காமல் கண்களை மூடிக் கொண்டிருக்கும் பையனுடையதுதான் இருந்தது. ஆனால் கூப்பிட்டால் உம்மென்று கூடப் பதில் முனகல் கிடைக்காது. வலியென்று அழுவது முனகுவது கூடப் பயனில்லை என்று தீர்மானித்து விட்டது போலிருந்தது. பதினான்கு வயது நிரம்பாத ஒரு பையன் இவ்வளவு பொறுத்துக் கொள்ள முடியுமா? இந்த மயக்க மருந்துகள் அவனை என்னதான் செய்து கொண்டிருக்கும்?

விசாலம் மீண்டும் படுத்துக் கொண்டாள். அந்தப் பெரிய அறையில் தரையில் இன்னும் நான்கு பேர் படுத்துக் கொண்டிருந்தார்கள். நான்கு நோயாளிகள் தான். அதிக சீக்கு என்று இல்லை. ஆனால் நால்வருக்குத்தான் எப்போதும் கூட யாராவது இருக்கக் கூடிய சூழ்நிலை. நான்கு பேருமே ஒரு தற்செயல் அமைப்பில் ஒரே வரிசையில் இருந்தார்கள். விசாலம் படுத்தாள். அவள் பார்வைக்குக் கீழே படுத்திருக்கும் இன்னும் ஒரு நபர்தான் தெரியும். இன்னும் மூவர் படுத்திருப்பதைச் சற்றுத் தலையை உயர்த்திப் பார்த்தால்தான் தெரியும். சந்தானத்தை ஆஸ்பத்திரியில் சேர்த்த முதல் நாளிரவு அந்த வார்டில் ஒரு நோயாளி இறந்து விட்டார். விசாலம் அந்த ஒரு இரவு ஆஸ்பத்திரியில் தங்க விடாதது குறித்துச் சந்தோஷப் பட்டுக் கொண்டாள். ஆனால் அவள் ஆஸ்பத்திரியில் சந்தானத்துக்குத் துணை படுத்துக் கொள்ளத் தொடங்கிய பின் ஒவ்வொரு நாளும் அந்த இறந்தவர் நினைவு தான் திரும்பத் திரும்ப வந்தது. அவர் இறந்தபோது யாரும் பக்கத்தில் இல்லை. அவர் தன் உடலைப் புரட்டிக் கட்டிலிலிருந்து இறங்க முயற்சி செய்திருக்கிறார். ஆனால் அதற்குள் உயிர் போய் விட்டது. அவர் கை கால்கள் கோணலும்மாணலுமாக இருப்பதை வெகு நேரம் யாரும் கவனிக்கவில்லை. பக்கத்துப் படுக்கை நோயாளிக்காகத் துணையிருந்த ஒரு பையன் இரவில் எழுந்து பார்த்திருக்கிறான். இறந்தவர் கண்கள் அவனையே உற்று நோக்கியது போல இருந்தன. அவன் பேய் கண்டது போலக் கத்தியிருக்கிறான்.

விசாலம் சட்டென்று எழுந்து நின்று சந்தானத்தின் நெற்றியைத் தடவிக் கொடுத்தாள். அவள் கை பட்டு அவனுடைய நெற்றித் தோல் சிறிதே நகர்ந்து கொடுத்தது. அவனுடைய அசைவுகள் எல்லாமே தன்னிச்சையாகத்தான் நிகழ்ந்தன. இந்தப் பத்து நாட்களில் அவனுக்கு ஒழுங்காக நினைவு தெரிந்து பார்த்துப் பேசியதெல்லாம் அரை மணிக்குள் அடக்கி விடலாம். விசாலம் 'என்ன வேணும் கண்ணு? என்ன வேணும், கண்ணு?' என்று மீண்டும் மீண்டும் கேட்டதன் பேரில் அவன் பதில் சொன்னான்: காபி.

ஆனால் அவனுக்கு எதுவுமே கொடுக்கக் கூடாது என்று

திரும்பத் திரும்பச் சொல்லி விட்டார்கள். எல்லாம் உடம்பு சரியாகி வீட்டுக்கு வந்து விட்டால் வேண்டியதையெல்லாம் வேண்டிய அளவு சாப்பிடலாம். ஆனல் இப்போது மட்டும் எதுவுமே கொடுத்து விடக் கூடாது.

விசாலம் சந்தானத்தின் உடம்பைத் தடவிக் கொடுத்தாள். சந்தானம் பொதுவாகவே சோனிப் பையன். இப்போது ஈர்க்குச்சியாகக் கிடந்தான். அந்த ஈர்க்குச்சிக்குப் பத்து நாட்கள் அந்தப் படுக்கையில் கிடந்து இடுப்பில் ஓரிரண்டு இடங்களில் கொப்புளங்கள் கிளம்பியிருந்தன. ஆனல் அவன் வாய் திறந்து வலி என்று சொல்லி நிறைய நாட்களாகியிருந்தன. மயக்க நிலையில் அவனுக்குச் சொல்லத் தெரிந்தது கேட்கத் தெரிந்தது எல்லாம் ஒரு வாய் காபி தான்.

இவனுக்கு எப்படி காபி மீது தனிப் பிரியம் வந்தது என்று விசாலத்திற்குத்தோன்றிற்று. அவர்கள் வீட்டில் காபி சாப்பிடுவதே கிடையாது. யாராவது விருந்தினர் வந்தால் தான். நெடுநாள் உபயோகிக்காத காபி பில்டரில் திடீரென்று டிகாக்ஷன் போட்டால் ஒரு மக்கின வாசனை தான் வரும். ஆதலால் வீட்டில் காபி சாப்பிட்டு விட்டு அதன் மேல் சந்தானம் ஆசை வைத்திருக்க முடியாது. அவன் எங்கோ நல்ல காபி சாப்பிட்டிருக்க வேண்டும்.

குழந்தை உடல் நிலை சரியானவுடன் வீட்டிலேயே காபி போட்டுத் தர வேண்டும் என்று விசாலம் தீர்மானித்துக் கொண்டாள். இனிமேல் வீட்டில் தினமும் காபி போடவேண்டும். எல்லாருடைய வீட்டிலும் ஒரு வேளையாவது காபி போடுகிருர்கள். கேழ்வரகுக் கஞ்சியைச் சிறிது நாட்களுக்கு நிறுத்தி வைக்கவேண்டும். நாளைக்கே நிறுத்திவிட வேண்டும். ஆனல் அது முடியாது. காலையில் சந்தானத்தின் அப்பா முதல் காரியமாக வெந்நீர் வைத்துக் கஞ்சி போட்டுக் குழந்தைகளுக்குக் கொடுத்துத் தானும் சாப்பிட்டு ஒரு தூக்கில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வருவார். அதை அவள் சாப்பிட்டு விட்டுச் சிறிது சந்தானத்துக்கும் தருவாள். இந்தக் கஞ்சி விஷயத்தில் சந்தானத்துக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனல் அவன் படுத்ததிலிருந்து காபி கேட்கிருன். இது வரை பத்துப் பதினைந்து முறை கேட்டிருப்பான்.

விசாலத்துக்குத் துக்கமாக இருந்தது. சந்தானம் பிறந்தது முதல் ஒன்றரை ஆண்டுகளுக்குத்தான் குழந்தை. அதற்குப் பிறகு அடுத்தடுத்து மூன்று பிறந்து விடவே அவன் நடக்க ஆரம்பித்ததிலிருந்தே அவனைக்குழந்தையாகக் கவனிப்பது குறைந்து போய் விட்டது. எதற்கெடுத்தாலும் 'நீ பெரியவன், நீ அழலாமா?' என்று கேட்டே அவனுடைய பொம்மை, பட்சணம் எல்லாம் சின்னவர்களுக்குக் கொடுத்து விடுவார்கள். அவனும் பெரிய மனுஷத் தோரணையாக இருந்து விடுவான். அவனை ஏதும் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தது கிடையாது. அவனுடைய தம்பி தங்கைகளுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும் என்றே அவனுடைய ஆசைகளை அடக்கிக்கொண்டு இருந்திருக்க வேண்டும். இந்த வயிற்று வலி கூட எப்போதிலிருந்து கிளம்பியதோ? ஐயோ, இந்தக் குழந்தை காலாகாலத்தில் இந்த வலியைப் பற்றித் தெரியப்படுத்தியிருக்கக் கூடாதா?

விசாலம் மறுபடியும் பாயில் படுத்துக் கொண்டாள். சந்தானம் சிறுநீர் கழிக்க ஒரு குழாயைப் பொருத்திக் கீழே பாட்டிலில் இணைத்திருந்தார்கள். அந்தக் குழாயும் பாட்டிலும் இரவு வேளையில் கண்ணுக்கு எளிதில் தெரியாது. சந்தானம் ஆஸ்பத்திரியில் கூடப் பெரிய மனுஷத் தோரணையாக இருந்தான். அவனையும் மீறி அவனிடமிருந்து கிளம்பும் முனகலைத் தவிர அவன் அலட்டிக் கொள்ளவோ அனுவசியமாக அம்மாவையோ மற்ற யாரையுமோ படுத்தவில்லை. அவன் ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதும் இப்போது சில நாட்களாக அவனுடைய அம்மா அவனுக்குத் துணையிருப்பது கூட அவனுக்குச் சரியாகத் தெரியுமோ தெரியாதோ?



"வறட்சி நிவாரணப் பணிக்காக உதவி செய்யுங்கள் என்று கத்தி கத்தியே என் தொண்டை வரண்டு விட்டது தொண்டர்களே! ஒரு வாய் தண்ணீராவது தாங்க!"

"தொண்டர்கள் அனைவரும் கிணறு தோண்டப் போயிருக்காங்க. அதில் தண்ணீர் கிடைக்கும் வரை நீர் பேச தலைவா பேச!"

வெளியே ஒரு பெரிய லாரி தடால் புடால் என்று சப்தமெழுப்பியபடி விரைந்த ஒலி அந்த வார்டில் தெளிவாகக் கேட்டது. சந்தானம் முனகியது போல இருந்தது. விசாலம் சட்டென்று எழுந்து அவனுடைய நெற்றியைத் தடவிக் கொடுத்தாள். அதற்காகக் காத்திருந்தது போல அவனுடைய முகம் வலியால் கோணிக் கொள்ள ஆரம்பித்தது. அவனுடைய தலை துடித்தது. விசாலம் உடனே ஓடி நர்சைத் தேடிக் கொண்டு போனள். நர்ஸ் நாற்காலியில் உட்கார்ந்து மேஜை மீது கைகளில் முகத்தைப் புதைத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். விசாலம், "சிஸ்டர், சிஸ்டர்," என்று அவளைத் தட்டி எழுப்பினள்.

நர்ஸ் விழித்துக் கொண்டாள்- "என்னம்மா?" என்று கேட்டாள்.

"என் குழந்தைக்கு ஏதோ போலிருக்கு! சீக்கிரம் வந்து பாருங்க."

நர்ஸ் வந்து பார்த்தாள். மீண்டும் வலி தெரியாதிருக்க ஊசி போடுகிருள் என்று விசாலத்துக்குத் தோன்றியது. ஊசி போட்ட பிறகு சந்தானத்தின் நாடியை நர்ஸ் தேடிய போது நர்ஸ் முகம் பரபரப்பைக் காட்டியது. அரை மணிக்குள் ஒரு டாக்டர் வந்து விட்டார்.

டாக்டர் விசாலத்திடம், "உங்க வீட்டுக்கு டெலிபோன் இருக்கா?" என்று கேட்டார்.

"இல்லை. ஏன்?"

"அப்போ நீங்க இங்கேயே இருங்க. நாங்க இந்தப் பையனுடைய அப்பாவுக்குத் தகவல் அனுப்பறோம். உங்க அட்ரஸ் கொடுத்திருக்கீங்க, இல்லே?"

"ஏன் இப்போ என்ன? என் குழந்தைக்கு என்ன?"

"நாங்க செய்ய முடிஞ்சதெல்லாம் செஞ்சு பாக்கறோம்."

"நீங்க என்ன சொல்றேள்? இன்னிக்குக் கார்த்தாலே கூட ஒரு டாக்டர் இன்னும் இரண்டு நாளிலே வீட்டுக்குக் கொண்டு போயிடலாம்னு சொன்னரே—"

டாக்டர் விசாலத்துக்குப் பதில் சொல்லாமல் நர்ஸிடம் மெதுவாக

இரு வார்த்தைகள் சொன்னார். அவன் எங்கிருந்தோ ஒரு மடக்கு ஸ்கிரீன் கொண்டு வந்து சந்தானம் படுக்கையைப் பிற நோயாளிகள் பாராதபடி மறைத்தான்.

விசாலம் உரத்து அவளுக்குத் தெரிந்த கடவுள்களை எல்லாம் வேண்டிக் கொண்டாள். "என் கண்ணே, என் செல்வமே! கண்ணை விழிச்சுப் பாருடா! நான் காபி வைச்சுத் தரேண்டா! சித்தெக் கண்ணைத் திறந்து பாருடா! சந்தானம்! என் கண்ணே! உனக்கு நான் காபி கொண்டு வந்து தரேன்! சித்தேப் பாருடா!" என்று புலம்பினாள். "ஐயோ யாராவது காபி வாங்கிண்டு வாங்கோளேன்!" என்று கத்தினாள்.

ஒரு வார்ட் பாய் அங்கு வந்து, "கத்தாதீங்க, அம்மா. மத்த பேஷண்ட்ஸெல்லாம் பயந்துக்கப் போறாங்க" என்றான்.

விசாலம் விம்மி விம்மி அழுதாள். அவளுடைய கணவன் வர எவ்வளவு நேரம் ஆகப் போகிறதோ? அது வரை சந்தானத்தின் உயிரைப் பிடித்து வைத்துக் கொள்ள முடியுமா? இங்கே எமனோ எம தூதனோ வந்திருக்கிறானா? சாவித்திரி கெஞ்சி சத்தியவான் உயிரை மீட்டது போல அவள் தன் பிள்ளை உயிரை மீட்க முடியுமா? போகிற உயிரைக் காபி கொடுத்து நிறுத்தி வைக்க முடியுமா?

முகம் கொஞ்சம் சிணுங்கலைக் காண்பித்தது என்பதைத் தவிர சந்தானம் வழக்கம் போலத்தான் மயங்கிக் கிடப்பது போல இருந்தது. "என் கண்ணே, நான் உனக்குக் காபி வைச்சுத் தரேண்டா! தம்ளர் தம்ளராத் தரேண்டா, கொஞ்சம் கண்ணை முழிச்சுக் கோடா, கண்ணே!"

விசாலத்திற்குக் காபி ஒன்றால் தான் அவளுடைய பிள்ளையின் உயிரைப் பிடித்து நிறுத்தி வைக்க முடியும் என்று தோன்றியது. மறைப்புக்கு வெளியே வந்து, "யாராவது காபி வாங்கிண்டு வாங்களேன்! என் குழந்தை தொண்டையை நனைக்க யாராவது காபி வாங்கிண்டு வாருங்களேன்!" என்று கத்தினாள்.

அந்த அறையில் எல்லாரும் விழித்துக் கொண்டபடி இருந்தார்கள். வேறு நோயாளிகளுக்குத் துணையிருப்பவர்களில் இருவர் காபி வாங்கிவர முன்வந்தார்கள். ஆனால் வெளியே கும்மிருட்டாக இருந்தது. மணி இரண்டு இரண்டரைதான் இருக்கும். அந்த வேளையில் எங்கு காபி கிடைக்கும்?

ஒரு நர்ஸ் விசாலத்தைக் கட்டிப் பிடித்தாள். மீண்டும் மறைப்புக்குள் அவளை அழைத்து வந்தாள்.

"ஒண்ணும் ஆயிடலேம்மா, கொஞ்சம் நிதானமாக இருங்க. பெரிய டாக்டருக்குச் சொல்லி யனுப்பிச்சுருக்கோம்" என்றாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. என் குழந்தைக்குக் கொஞ்சம் காபி கொடுத்தா எல்லாம் சரியாயிடும்."

நர்ஸ் ஒன்றும் புரியாதவளாக விழித்தாள்.

விசாலம் விரல்கள் கெட்டியாகப் பின்னிக் கொள்ளும்படி தன் இரு கைகளையும் பிடித்துக் கொண்டாள். 'ஸ்வாமி பகவானே, அவர் வரும் போதே காபி கொண்டு வரணும். காபி கொண்டு வரணும்' என்று தீவிரமாக வேண்டிக் கொள்ள ஆரம்பித்தாள்.

அவளுடைய கணவனும் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவரும் ஒரு மணி நேரத்தில் அங்கு வந்து சேர்ந்து விட்டார்கள். ஆனால் அவர்கள் யாரும் சந்தானத்துக்குக் காபி வாங்கிக் கொண்டு வரத் தேவை ஏற்படவில்லை. ❖

# அனுப்புக... மணல் கயிறு

ஜென்னியும் நானும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்.

மறுபடியும் திரும்பி அவளைப் பார்த்து அவள் பிர்கதியே தான் என்று உறுதி செய்து கொண்டு பேயாய் அலற வாயைத் திறந்த போது —

"உஸ்ஸ்... கத்திடாதீங்க."

உதட்டில் விரலை வைத்து எச்சரித்தாள் அவள். "காரியமே கெட்டுப் போயிடும்."

வராண்டாவின் இந்தப் பக்கம் பார்த்தாள். அந்தப் பக்கம் பார்த்தாள். யாரும் எங்களைக் கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு—கதவை முழுக்கத் திறந்து விட்டாள்.

"உள்ளே வந்துடுங்க."

அவசரமாக நாங்கள் உள்ளே போனதும் — கதவை அறைந்து சாத்தினுள். "ஹாய்" என்ருள் இளிப்புடன்.

"ஹோய்!" அளவுக்கு மீறிய வியப்புடன் கேட்டேன். "நீ இன்னுமா சாகல்லே?" என்று நான் கேட்டதையும் விழித்த விழியையும் அவள் மிகவும் ரசித்திருக்க வேண்டும்.

நிறைய சிரித்தாள்.

"ச்சீய். உங்க ஆசை ரொம்பவும் மட்டமானது. நான் செத்து உனக்கு ஆகப் போகிறது என்ன?" ஜென்னி ஏமாந்த நேரம் பார்த்து என் காது அருகில் கிசுகிசுத்தாள். "உயிரோட இருக்கும் போது தான் நீங்க முயன்று பார்க்க முடியும். என்னங்கறீங்க?"

தயங்கினேன். மெலிதாக மயங்கினேன்.

"என்ன என் ரூமிலே ராசலீலை நடத்தறீங்க?" என்று ஜென்னி கேட்டதும் —

இரண்டு பெண்களையும் மாறி மாறிப் பார்த்தேன். (ச்சே நம்ம ஜென்னி ஜென்னிதான்.) இப்போது அந்த பிரகதியைப் பார்க்கும் போது சீரியஸ் மூடு வந்தது.

"நான் உன்னைச் சாகச் சொல்லல்லே. நீ கொலை செய்யப்பட்டுட்டதாக அந்த இன்ஸ்பெக்டர் சொன்னாரே."

"அய்யோ. இன்ஸ்பெக்டர் இல்லே." ஜென்னி சொன்னுள்: "அசிஸ்டண்ட் கமிஷனர்."

"எனக்கு இன்ஸ்பெக்டர்தான் சுலபமா வருது. விடேன். அவர்தான் நீ கார் விபத்திலே மாட்டிக் கொண்டு கொலை செய்யப்பட்டு விட்டதாக..."

"ஷட் அப். உளருதே மறுபடியும்."- மீண்டும் ஜென்னி முறைத்தாள். "கொலைன்ஞ சொன்ஞர்? நோ. இறந்து காணப்பட்டதாக சொன்ஞர். போலீஸ், எப்பவும் வார்த்தையில் எச்சரிக்கையாகவே பிரயோகிக்கும். சொன்ஞரில்லே..?"

"அவர் சொன்ன கொலையும் சரி. நீங்க சொல்கிற 'இறந்து கிடந்த'வும் சரி. இரண்டுமே பொருந்தாது." அவள் சொன்னுள் சிரிப்புடன்: "காரணம் நான் உயிரோட தான் இருக்கேன்."

"அதுதான்" மறுபடி கேட்டேன்: "இது எப்படி நிகழ்ந்தது? நீ எப்படி எங்கே உலாவறே?"

"உலாவறேனு? நான் என்ன பேயா?" காலைத் தூக்கிக் குட்டை மேஜை மீது டக்கென்று வைத்தாள். "ஸர்ச் மீ. கால் இருக்கிறதா இல்லையா பாருங்க..."

உறுதி செய்து கொள்ள தொட்டுப் பார்த்தவன் ஜென்னியை ரகசியமாகப் பார்த்தேன். என் நினைப்பு உண்மை. முறைத்துக் கொண்டு தான் இருந்தாள். சட்டென்று கையை எடுத்தேன்.

"அயையோ! நீ செத்துப் போனதாக நினைச்சு அந்த இன்ஸ்பெக்டர் உன் சிங்கப்பூர் முதலாளிக்குத் தகவல் சொல்லி இருப்பாரே. இரு."-கையமர்த்தி விட்டு போனை எடுத்தேன். "அவர் நம்பர் என்ன ஜென்னி?"

மிக லாகவமாக போனை என் கையிலிருந்துப் பிடுங்கி வைத்தாள் அந்த பிரகதி. "அப்படி நினைக்கணும். இவரும் சொல்லணும் என் முதலாளியும் நம்பணும். அதுதான் என் எதிர்பார்ப்பு."

"புரியல்லே."

"அப்பதான் நான் சீமாட்டியாக முடியும்."

"இதுவும் புரியல்லே. செத்துப் போன ஒருத்தி எப்படி சீமாட்டி ஆக முடியும்?"

"சொல்றேன். அந்தப் புதுக் கவிதையைப் படிச்சிங்களே அர்த்தம் புரிஞ்சுதா?"

"சாரி." இளித்தேன். "எனக்குக் கவிதைகள் மட்டும் லேசில் புரிவதில்லை."

"சரி. நானே சொல்றேன். உட்காருங்க."

உட்கார்ந்தோம்.

"மஞ்சள் புருக்குவியல் ஒன்று என் அறைக்கு வந்தது என்ருல் கடத்தல் தங்க பிஸ்கெட்டுகளை வாங்கி வந்து விட்டேன் என்று அர்த்தம்."

"தங்...தங்க பிஸ்கெட்டா? தின்ன முடியாதே."

"கேளுங்க. அது முதல் ஏரே தெரியவில்லை. விளக்கு மாறி எர்கிறது. அது சிகப்பா? பச்சையா? அதாவது அதிலிருந்து யாரோ என்னைத் தொடருகிருர்கள். வேவு பார்த்து பயமுறுத்துகிருர்கள் என்கிறதாக அர்த்தம். அடுத்த வரிதான் ரொம்ப முக்கியமானது.

"அப்படியா?"

"விடிந்தால் தெரியும். நான் இறந்தேனு இல்லை இருக்கிறேனு? அப்படின்னு யாரோ என்னைக் கொலை செய்ய முயற்சி செய்கிறதாக அர்த்தம். அதாவது என் உயிருக்கு ஆபத்து இருக்கிறதுன்னு அவர் நம்பணும். அது முக்கியம்."

"அனுப்பவும்; மணல் கயிறு? அதுக்கென்ன அர்த்தம்?"

"மணலையும் கயிருக திரிக்கக் கூடிய என் புத்திசாலி முதலாளியே!

ராஜேந்திரகுமார்

உடனே உதவிக்கு வா' என்று அர்த்தம்."

"வருவார், கவலையே படாதே இன்ஸ்பெக்டர் இந்நேரம் தகவல் கொடுத்து இருப்பார். அடுத்த பிளைட்டிலேயே புறப்பட்டு வருவார்."

"வரமாட்டார். எனக்கு நிச்சயம் தெரியும்."

"எப்படி?"

"அவருக்கு நிச்சயமாய்த் தெரியும். நான் கொலை செய்யப்பட்டு விட்டால் ரகசிய தங்கம் அவர் எதிரிகள் கைக்குப் போய் விட்டது என்று அர்த்தம். எதிரிகளை இந்தியாவில் சந்திக்க அவர் விரும்பமாட்டார். வேறு சில தப்புக்களுக்காக இந்திய அரசாங்கம் அவரைத் தேடுகிறது. அதனுல் வரமாட்டார். எனக்கு அதுதான் வேணும்."

"ஏன்?"

"அப்பதான் நான் சீமாட்டி ஆக முடியும்."

பின்னந் தலையைச் சொரிந்தவாறு ஜென்னியைப் பார்த்தேன். "உனக்குப் புரியுதா ஜென்னி?"

கைகளை விரித்துத் தோளை உயர்த்தி உதட்டைப் பிதுக்கினுள்.

"புரியும்படியாவே சொல்றேன்." -அந்த பிரகதி சொன்ளுள். "அந்தத் தங்கம் என் கைக்கு வந்ததும் எனக்குச் சொந்தமாகி விடும். போலீசாரே நான் செத்துப் போனதாகத் தகவல் தந்தால் அதை என் பாஸ் நம்பிடுவார். அப்புறம் என்னைத் தேடமாட்டார். இல்லையா? அப்புறம் அத்தனை தங்கத்துக்கும் நானே உடமைக்காரி ஆயிடுவேன். பெயரை மாத்திட்டு பெரிய சீமாட்டியா பெங்களூர்லேயோ கல்கத்தாவிலேயோ நிம்மதியா வாழுவேன்."

"ஆமா. அதென்ன அது விபத்துக் கதை?" —கேட்டேன் "நீ நீயாக இருக்க - எங்கோ கார் விபத்திலே செத்தவ கிட்டே என் ரூம் சாவி எப்படிப் போச்சு?"

"அதுவா... ஊரைச் சுற்றிப் பார்க்கணும். பி.டி. ஒண்ணு ஏற்பாடு பண்ணுங்கன்னு ஹோட்டல் மானேஜர் கிட்டே சொன்னேன். டிரைவரை வேண்டாம்னு அனுப்பிட்டு நானே ஓட்டிட்டுப் போனேன்."

"எங்கே?"

"இன்ன இடம்னு தீர்மானிக்காம குருட்டாம் போக்கிலே போனேன். சைதாப்பேட்டைப் பக்கம் போகிறச்ச ஒரு பெண் லிப்ட் கேட்டா. அவளைப் பார்த்ததுமே எனக்கு ஐடியா வந்துட்டது. அவளையும் ஏத்திட்டு தாம்பரம்பக்கம்போனேன். அவ ஏமாந்த நேரம் பார்த்து இருட்டிலே ஒரே அடி. மயங்கிட்டா."

"அய்யய்யோ"!

"திரும்பி வர்றச்ச பரங்கிமலைக்குப் பக்கத்திலே இறங்கி டிரைவர் ஸீட்டிலே அவளை உட்கார வச்சுட்டு பெட்ரோலை ஊத்திக் கொளுத்திட்டேன். வாடகைக் காரை வச்சு ஹோட்டலையும், சாவியையும் வச்சு ரூம் நம்பரையும் போலீஸ் தீர்மானிக்கட்டும்னு வேணும்னேதான் சாவியையும் அந்தப் பெண் பக்கத்திலே விட்டெறிஞ்சேன்.. நான் நினைச்சது நடந்தது."

"அப்போ நீ சாகல்லே" என்றேன். காரணமின்றி மகிழ்ந்தேன். (தங்க பிஸ்கெட்?)

"அது சரி. எப்படி என் காட்டேஜுக்குள்ளே வந்தே? யார் சாவியைக் கொடுத்தாங்க? அதெப்படிக் கொடுத்தாங்க?"

"ரொம்ப சிம்பிள். போகிறச்ச மானேஜர் இல்லே. சாவியை நானே கொண்டு போயிட்டேன். எல்லாத்தையும் வெற்றிகரமா முடிச்சிட்டுத் திரும்ப வந்து அர்த்தமா சிரிச்சு மானேஜரைப் பார்த்து 'நான் ஜென்னியோட பிரண்டு. என்னை ரூமிலே இருந்து காத்திருக்கச் சொன்ளுள்' னேன். அந்த ஆள் கொஞ்சம் சபல கேஸ் போல இருக்கு. நிறைய இளிச்சு உடனே சாவியைத் தூக்கிக் கொடுத்துட்டார். நேரா வந்துட்டேன். தெட்ஸ் ஆல். எப்படி என் சாமர்த்தியம்" என்ருள் என்னிடம்.

"பிரமாதம்" என்னு நான் பாராட்ட—

"மண்ணுங்கட்டி" என்ருள் ஜென்னி. எதுக்காக பொய் சொல்லி என் ரூமுக்குள்ளே வந்தே? நீ இவரோட தலைவலி. எதுக்காக என் தலைக்கு மாறுகிறே? நோ. ஐ வோண்ட் அலோ, கெட் அவுட்."

அதிர்ந்தேன். "வாட்?"

"ரைட் நௌ."

"அவளை அப்படி எல்லாம் சொல்லாதே ஜென்னி. அப்புறம் எனக்குக் கோபம வரும்."

"அப்ப நீயும் வெளியே போ."

"எங்க இரண்டு பேரையும் வெளியே துரத்திட்டு தனியா என்ன பண்ணப்போறே?"

"பொழுதைப் பயனுள்ளதாகப் போக்க உத்தேசம். சாப்பாடு ஆர்டர் பண்ணிச் சாப்பிடப்போறேன்."

அந்த பிரகதி சிரித்தாள். "இந்நேரத்துக்கப்புறம் சாப்பாடு ஆர்டர் பண்ணப்போறியா? இந்நேரம் சமையலறையைக் கழுவித் தள்ளிட்டு இருப்பாங்க."

"வாட்?" ஸ்பஷ்டமாக அலறினேன். "அப்ப எனக்கும் சாப்பாடு கிடையாதா? பசிக்கிறதே."

"டோன்ட்வொர்ரீ. எங்க இரண்டு பேரையும் எதிர்பார்த்துத்தான் மூன்று சாப்பாடு கொண்டு வரச் சொல்லித் தயாரா வச்சிருக்கேன்."

"நிஜமாவா?" பூரித்தேன். "எவ்வளவு புத்திசாலிப் பொண்ணு நீ. என் கண்ணு என் செல்லம். மூணு சாப்பாடு வாங்கி வச்சுட்டியா? குட்!"

"மூணு என்ன முப்பது சாப்பாடு கூட சொல்லுவா. அவளுக்கென்ன போச்சு? ரூம் என்னுது. எல்லாம் என் பில்லிலே தான் வரும்?"

"நன்றியில்லாம பேசாதே ஜென்னி. பாவம் பசியோட வருவோம்னு அக்கரையா சாப்பாடு ஏற்பாடு செய்து வச்சிருக்கா. நீ வாம்மா சாப்பிடலாம்."

* * *

சாப்பிடும்போது பிரகதி சொன்ளுள்: "சீக்கிரம் சாப்பிடுங்க. நாம உடனே புறப்பட்டு ஆகணும். ஒரு இடம் போருேம்."

"எங்கே?"

"பதினைஞ்சாவது மைல்லே பீச் ஒண்ணு இருக்கு. ஆந்திரா பார்டர்லே. அங்கே போய்த் தங்க பிஸ்கெட் வாங்கி வரப் போருேம்."

"தங்க பிஸ்கெட்டா?" மகிழ்ந்தேன். "ஐயோ நான் அதைத் தின்னதே இல்லையே."

ஜென்னி மெலிதாக அதிர்ந்தாள். "வாட்?"

"இல்லே. நான் பார்த்ததே இல்லையே. ஆகட்டும் சீக்கிரம்."

"நான் வரலே" என்ருள் ஜென்னி. "நான் படுத்துத் தூங்கப் போறேன்."

"டோண்ட் பீ ஸில்லி மிஸ் ஜென்னி. இவரை விட உன் உதவி தான் எனக்குத் தேவை நீயும் துணிச்சலான பெண் என்னை மாதிரி."

"ஆமாமாம். கராத்தே எல்லாம் பண்ணுவா. அவ என்ன சொல்றது? அவ வருகிருள்."

"வந்தா எனக்கென்ன லாபம்?"

"பங்கு தரேன். தங்க பிஸ்கெட்லே பங்கு தரேன் — இருவத்தைஞ்சு சதம். ஓ.கே?"

ஜென்னியின் மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி.

"மிஸ்டர் குமார். அந்த மீன் குழம்பை எடுங்க" என்றாள் பிரகதி.

மூடி இருந்த பீங்கான் கோப்பையை ஆறி இருக்கும் என்று அலட்சியமாக எடுத்தவன் — அது சுரீர் என்று சுட — "யாவ்" என்ற அலறலுடன் நான் தவற விட — மேஜை மீது விழுந்துச்சிதறியதுஅது.

எழுந்து நின்றாள் ஜென்னி. "நான்சென்ஸ், பார்த்து எடுக்கக் கூடாது. என் டிரஸ் எல்லாமே பாழ்."

"என் டிரஸும் தான் கெட்டுப் போச்சு." நான் கேட்டேன்: "நான் கத்தரேனா?"

"சரி சரி." பிரகதி சொன்னாள். "சிக்கிரமா சாப்பிட்டு முடிங்க. அஞ்சு மணிக்குள்ளே நாம அங்கே இருந்தாகணும்." ஜென்னியைப் பார்த்துக் கேட்டாள்: "மிஸ் ஜென்னி. உங்க டிரஸ் ஒண்ணு எனக்குக் கொடுத்து உதவ முடியுமா?"

"தரேன்."

"தாங்க்யூ." என் பக்கமாக திரும்பினாள். "மிஸ்டர் நீங்க சீக்கிரமா சாப்பிட்டுப் போய் டிரஸ் மாத்திட்டு வந்துடுங்க."

"சரி" என்றேன் உற்சாகமாக. (தங்க பிஸ்கெட் எப்படி இருக்கும் சார்?)

கனவிலே மிதந்தபடி அறையை விட்டு வெளியேறிய நீளமான வராண்டாவில் நடந்தேன். படிகளில் இறங்கினேன்.

உற்சாகமாக ஹம்மிங் செய்தபடி கதவைத் திறந் —

விழித்தேன். 'இதென்ன பூட்டை திறக்கும் முன் கதவு தானாக நகருகிறது?'

மெதுவாகக் கையை வைத்து அழுத்தினேன். எளிதாக திறந்து' கொண்டது.

மிகவும் பயந்தேன். யார்? யார் திறந்து இருப்பார்கள்?

தயக்கமாக உள்ளே போய் நின்றேன். "யாரது?" என்றேன்.

பதில் இல்லை.

"எவண்டா அவன்?" என்றேன் உரக்க.

பதில் இல்லை.

அப்புறம் தான் மனதில் பட்டது. அப்போது ஜென்னியின் பின்னால் ஓடுகிற அவசரத்தில் பூட்டாமல் போய் விட்டேனா? பூட்டினேனா?

"இல்லை."

நிம்மதியாக மூச்சு விட்டு தலையை உதறிக் கொண்டேன். "அப்பப்பா. வர வர ரொம்பவும் கோழையாகிறேன்."

உள்ளே போய் வெளிச்சம் போட்டேன். எதற்கும் இருக்கட்டும் என்று ஒருமுறை சுற்றிலும் பார்த்துக் கொண்டேன்.

'யாருமில்லை,' என்பது உறுதியானதும் உற்சாகம் பிறந்தது. விசிலடித்த படியே மீன் குழம்பு மணக்கும் சட்டையை உருவி எறிந்தேன். பாண்ட்டை கழற்றி எரியும் போது— பனியனை கழற்றும் போதெல்லாம் உணர்வு உறுத்தியது.

யாரோ பார்க்கிறார்கள். சுற்றும் முற்றும் பார்த்தவாறு உடைமாற்றிப் போட்டுக் கொண்டு தலையை சீவ கண்ணாடி முன்னால் அமர்ந்த போது —

எனக்குப் பின்னால் ஒரு உருவம் தெரிந்தது. "ஹாய்" என்று விரலை அசைத்து சீற ஆரம்பித்து — உண்மை உறைத்ததும் விலுக்கென்று திரும்பிப் பார்த்தேன்.

அந்த அமெரிக்க வழுக்கை ஆள்!. ஆவேசமாக வந்து என்னை பூனை குட்டி ஒன்றைத்தூக்குவதுப் போல தூக்கிக் கட்டிலில் (நல்லவேளை) எறிந்தான்.

நீஈஈஈஈளமாக அலறத் திறந்த வாயை அவன் டடக்கென்று நீட்டிய கத்தி அடக்கி விட்டது. 'ஙே' என்று விழித்தேன்.

"ராஸ்கல். எங்கே அந்த நோட்டுத் துண்டு சொல்லு. இல்லே ஒரே



சதக்" கத்தி கழுத்தை தொட்டுக் கொண்டு நின்றதும் வியர்த்துப் போனேன்.

"எ...எ... எப்படி உள்ளே வந்தே நீ?" கேட்டேன் "பூட்டி இருந் ததே."

"இந்தப் பூட்டு சாவி எல்லாம் எனக்கு சர்வ சர்வ சாதாரணமான விஷயம். கமான் டெல் மீ. எங்கே அந்த நோட்டு?"

"ஐயோ எனக்குத் தெரியாதுய்யா அழுகையுடன் சொன்னேன். "நான் எடுக்கல்லே."

"நீ எடுக்கல்லே அந்தப் பெண் எடுத்திருக்கும். மயக்கமும் நினைவுமா நான் ஊசலாடிக் கொண்டிருக்கிறப்ப நான் பார்த்தேன். ஒரு இளம் பெண் தான் என் பையில் ஆராய்ந்து அதை எடுத்தது. உன்னோட வந்த பெண்தான் அது. சொல்லு அவ எங்கே?"

அவனுக்கிருந்த வெறியைப் பார்த்துப் பயந்தேன். இந்த நிலையில் ஜென்னியைப் பார்த்து விட்டால் பாய்ந்துப் பாய்ந்துக் கற்பழிப்பான் போலிருந்தது. "உம் சொல்லு" என்று அவன் கத்தியை அழுத்த — நான் திணற —

டெலிபோன் ஒலித்தது. அவன் தடுக்க முயலும் முன் சட்டென்று எடுத்து விட்டேன். முறைத்தான்.

"ஹேய் ஜூ" ஜென்னி பேசினள். "டிரஸ் மாத்த எவ்வளவு நேரம்? ஆர் யூ ஸ்லீப்பிங் தேர்?"

சங்கடப்பட்ட எனக்கு ஐடியா வந்தது. "ரூம் சர்வீஸா? ரெண்டு பாம்பே மீல்ஸ் அனுப்புங்க."

"எனக்குச் சாப்பாடு வேண்டாம்" என்றான் கட்டைக் குரலில்.

"சரி. சாருக்குச் சாப்பாடு வேணு மாம். எனக்கு மட்டும் கொண்டு வா. சீக்கிரம் வா ரொம்ப அவசரமான பசி எனக்கு" என்றேன்.

"யார் கிட்டே பேசறே?" என்று அவன் போனை பிடுங்குவதற்குள் ஜென்னி போனை வைக்கும் டக் ஓசை கேட்டது. "ஹலோ ஹலோ" என்ற பிறகு வைத்து விட்டான். மீண்டும் முறைத்தான்.

"அய்யோ! எதுக்கு வேண் டாம்னே?" நான் வெஜிடேரியன் அருமையான சாப்பாடு."

"ஷட் அப். எங்கே அந்தப் பெண்! எங்கே என் நோட்டு?"

ஒரு நிமிட நேரத்துக்கு மனதில் உறுத்தியது. ஜென்னி - ஆப்டரால் ஒரு பெண் இவனை வீழ்த்தி இருக்கி றாள். நான் ஆண் பிள்ளையல்லவா? நான் ஏன் பயப்பட வேண்டும்? எதற்கு அவளுக்காக காத்து இருக்க வேண்டும்? எதற்காக இந்த ஹீரோ கதை, ஹீரோயின் சப்ஜெக்ட் ஆக வேண்டும்?

அவள் சாதாரணமான ஹீரோ யின். நான்தானே என் கதைக்கு ஹீரோ! என்ற நினைப்பே எனக்கு ஆயிரம் யானை பலம் தந்தது.

அவன் கொஞ்சம் அயர்ந்த நேரம் பார்த்து முழங்காலை ஓங்கி—

வயிற்றைப் பிடித்துக் கொண்டு பேயாய் அலறிக் கொண்டே தூரப் போய் விழுந்தான். அவன் எழுந்தி ருக்க முயலுமுன் பாய்ந்து போய் பொத்தென்று அவன் மேல் விழுந்து அமுக்கினேன்.

எதிர்பாராத தாக்குதலினால் திக்கு முக்காடிப் போனான். இருந்தும் சமா ளித்து என்னைத் தள்ள முயலும் போது கையில் அகப்பட்ட டெலி போனையே பிரயோகித்து மண்டை யில் ஒரே போடு

மயங்கி விட்டான் சுத்தமாக.

கையில் அகப்பட்ட துணிகளை எடுத்து அவன் கைகளை பின்புற மாக மடக்கிக் கட்டிப் போட்டுவிட்டு நிமிர்ந்தபோது ஜென்னியும் பிரகதி யும் ஆச்சரியமாக நிற்பது தெரிந்தது.

'அஹ்' ஸ்டைலாக இடது கையால் முன்னுச்சி மயிரை பின்னுக்குத் தள்ளி விட்டுக் கொண்டேன். "எப்படி?"

"பிரமாதம்" என்றார்கள்.

"என் கிட்டே வாலாட்டப் பார்க்கி றான். விடுவேனா?" நெஞ்சை நிமிர்த் தினேன். "அவன் எழுந்திருக்க எப்படியும் ஆறு மணி நேரமாவது ஆகும். அதுக்குள்ளே போய்விட்டு வந்துடலாமில்லையா பிக்கி?"

"பிக்கி?" அந்த பிரகதி கேட்டாள். "யாரது?"

"நீயேதான். உன் பேரை சுருக் கிட்டேன். கமான் லெட் அஸ் கோ" என்றவன் கைக் குட்டையை உருவி அவன் வாயில் திணித்து விட்டுக் கிளம்பினேன்.

"வாங்க போகலாம்" என்றேன் சுறு சுறுப்பாக.

இப்போது அவர்கள் பார்வையில் மரியாதை இருந்தது. மதிப்புத் தெரிந்தது.

"ஆமா. அந்த குமரேஷ் என்ன கேட்டு தகராறு பண்ணினான்?" என்று பிரகதி கேட்க —

இரண்டு பேரும் விழித்தோம். "யார் அது? புதுசாக கதையில் நுழைகிறது?"

''அடிச்சு போட்டிருக்கியே அவன் பேர்தான் குமரேஷ்.''

''அப்படியா? அது தெரியாது. அவன் ஒரு கிழிசல் டாலர் நோட்டு வச்சிருந்தான். அதை ஏதோ பொண்ணு அவன் மயக்கமான நிலையிலே இருக்கறச்ச திருடிட்டு போயிட்டதாம். அது இந்த ஜென்னி தான்னு நினைச்சு என்னை பிச்சுப் பிடுங்கி எடுத்தான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். விட்...டேன் ஒண்ணு. ஒரே அடி சுருண்டுட்டான். என் பலம் தெரியாம பேசிட்டான். நான் என்ன ஆளு?''

பெருமை பேசிக் கொண்டே நடந்த நான் ஜென்னி திடீர் என்று பின்புறமாக தாக்கியதும் அலறினேன். கைகள் இரண்டும் நீட்டிக் கொள்ள சிலுவை இல்லாமலே யேசு நாதர் போஸ் கொடுத்து நின்றேன். கையைக் கொஞ்சம் அசைத்தாலும் வலித்தது.

''தா...தே... ஏய். சரி பண்ணி விடு.''

''புரியுதா? இது நரம்பு தட்டுகிற வேலை. இனிமே பெருமை பேசுவியா?''

''இல்லே... உங்கிட்டே பேசினது தப்பு தாயே சரி பண்ணி விடேன். ப்ளீஸ்.''

''அப்படி வா வழிக்கு'' என்றவள் இடுப்பில் ஒரு கராத்தே அடி அடித்ததும் சுண்டிய நரம்பு சுளுக்கிலிருந்து விலகி விட்டது.

ஆச்சரியமாக இருந்தது. தொட்டாலே வலித்ததே! அந்த வலி இப்போ எங்கே?

''புரிகிறதா?'' ஜென்னி ஸ்டைலாக நின்று கேட்டாள். ''வல்லவனுக்கு வல்லவன் இவ்வுலகில் உண்டு. நான் காரத்தே எக்ஸ்பர்ட்டாக்கும்.''

''தப்பு'' உறுதியாக சொன்னேன். ''நீ சொல்கிறது தப்பு. நீ சொன்ன வாசகமே தப்புதான். வல்லவனுக்கு வல்லவன் இல்லே. வல்லவனுக்கு வல்லவி அதுதான் சரி.''

''சரி புலவரே!''

அந்த பிரகதி வாயடக்கி சிரிப்பைக் காட்டினாள். அவளே காரை ஓட்டினாள் படுவேகமாக.

''என்ன சிரிக்கிறே?''

''அப்ப சொன்னியே டாலர் கிழிசல் நோட்டு?'' கைப் பையிலிருந்து ஒரு துண்டை எடுத்துக் காட்டினாள். ''இது மாதிரி இருந்ததா?''

பிடிங்கிப் பார்த்தேன். ''யா. இது மாதிரியேதான் இருந்ததாக ஞாபகம். என்ன ஜென்னி?''

''மாதிரி இல்லே. இதேதான்.'' அந்த பிரகதியே சொன்னாள். ''காரை எரிச்சிட்டு ஒரு ஆட்டோ பிடிச்சு திரும்பினேன். டிரைவர் தவறுதலா அந்தப் பக்கமாக திரும்பிட்டான். அவனைச் சரியாகத் திருப்பச் சொல்றதுக்குள்ளே அந்த ஆள் காரிலே உங்க ரெண்டு பேரையும் பார்த்தேன் காரையே ஃபாலோ பண்ணச் சொன்னேன். அந்த போயஸ் கார்டன்லே நடந்த கலாட்டா எல்லாத்தையுமே பார்த்தேன். நீங்க அவனை அடிச்சுப் போட்டுட்டு போனதும் அவனை நெருங்கிப் போய் அந்த கிழிச்ச டாலர் நோட்டை எடுத்துட்டு வந்துட்டேன்.''

''கிழிஞ்ச நோட்டு எதுக்கு?'' ஜென்னியை இடித்தேன். ''நீதான் நல்ல நோட்டு நிறைய வச்சிருக்கிறதா சொன்னியே. அதிலே ஒண்ணை ஆளுக்கு ஒண்ணு கொடேன்.''

''மாட்டேன். போ''

''இந்த கிழிஞ்ச நோட்டுக்குத்தான் மதிப்பு அதிகம். முழு நோட்டுக்கு ஒரு டாலர் மதிப்பு மட்டும்தான். ஆனா- இந்த கிழிசல் நோட்டு வால்யூ என்ன தெரியுமா? ஒரு பெட்டி நிறையத் தங்க பிஸ்கெட்.''

வாய் பிளந்தேன். ''எப்படி? எப்படி?''

''இப்ப நாம சந்திக்கப் போகிறோமே அந்தக் கடத்தல்காரன் ஒரு டாலரை மூணாகக் கிழிச்சு ஒரு துண்டை என் முதலாளி மூலமா என் கிட்டேயும் இன்னொண்ணை அந்த குமரேஷ் கிட்டேயும் கொடுத்து மூணாவதை அவனே வச்சுக்கிட்டிருக்கான். என் பாஸ் சார்பிலே நானும், அந்த குமரேஷ் தன்னுடைய துண்டையும் ஒரே சமயம் கொண்டு போய் அந்தக் கடத்தல் ஆள் கிட்டே கொடுத்தால் அவன் தன்னோட நோட்டையும் வச்சு இணைச்சுச் சரி பார்த்து அப்புறம் தான் பெட்டியைக் கொடுப்பான். அந்தத் தங்கத்திலே பாதி குமரேஷுக்குப் போய்ச் சேரும். மீதி என் முதலாளிக்கு.''

''குட். ஐடியா நல்லா இருக்கே.''

''நடுவிலே சின்னக் குழப்பம் ஏற்பட்டுப் போச்சு. முழுக்கவே தன்னுடையதாக்கிக்கிற ஆசை ஒரே சமயத்திலே என் முதலாளிக்கும் அந்த குமரேஷுக்கும் ஏற்பட்டுப் போச்சு.''

''இதுக்குப் பேர்தான் பச்சைத் துரோகம்.''

''கேளேன் மீதிக் கதையை. பெங்களூர்லே இருந்த எனக்கு நோட்டுத் துண்டை அனுப்பி வைச்சார் முதலாளி. விஷயம் தெரிஞ்சு என்னை மடக்கவும் நோட்டைப் பிடுங்கவும் ஒரு ஆளைத் தயார் பண்ணினான் இந்த குமரேஷ்.''

''வந்தானா?''

''வந்தான். பெங்களூர் தெருவிலே நான் போகிற இடமெல்லாம் பின்னாலேயே வந்தான். அவன் பார்வையிலேயே எனக்குப் புரிஞ்சு போச்சு. அவனை ரகசியமா கூப்பிட்டேன்.''

''தப்பும்மா. அப்படி எல்லாம் கூப்பிடக் கூடாது. அது ஆபத்து ஆச்சே. அப்புறம் வம்பு பண்ண ஆரம்பிச்சா என்ன ஆகிறது?''

''நானே அந்த 'வம்பு'க்குத் தான் கூப்பிட்டேன் யூ நோ?''

''வாட்?''

''கேளேன், பெரிய ஹோட்டல் ஒண்ணிலே ரூம் எடுத்துத் தங்கினோம். ஆனமட்டும் நல்லா அனுபவிச்சுக் களைச்சுப் போய்த் தூங்கிட்டேன்.''

கொஞ்சம் தள்ளிக் கொண்டேன்.

''என்ன தள்ளிப் போயிட்டே?''

''நீ கற்பழிக்கப் பட்டவள்.''

''அது ஏற்கெனவே கெட்டுப் போன பழம் கதை. என் கற்புக்கு முற்றுப் புள்ளி வச்சதே என் முதலாளிதான். அந்த முற்றுப்புள்ளி தான் இப்ப கொடைக்கானல் ஸ்கூல்லே படிக்குது.''

இன்னும் கொஞ்சம் தள்ளிப் போனேன். ''தாயாக வேற ஆயிட்டியா?''

''அது இருக்கட்டும் — பழைய கதை. புதுக் கதையைக் கேளு. குறட்டை விட்டுத் தூங்கறச்ச ஒரு தலையணை எடுத்து அவன் முகத்திலே போட்டு அமுக்கி முழுக்க சாய்ஞ்சுக்கிட்டேன். துடிச்சான். பத்தே நிமிஷம் ஆள் குளோஸ். ஒண்ணுமே நடக்காத மாதிரி புறப்பட்டு வந்துட்டேன். ப்ளேனோ பஸ்ஸோ பிடிச்சுப் போனா ஆபத்துன்னுதான் பஸ் ஏறி மெட்ராஸுக்கு வந்தேன்.''

''அப்புறம்?''

''உன்னைச் சந்திச்சேன். ஆட்டோவிலே.''

''அப்புறம்?''

''அப்புறம்? எல்லாம் தான் உனக்குத் தெரியுமே.''

''இந்த நிமிஷம் வரை நடந்தது தெரியும். இனிமே என்ன நடக்கப் போகுது?''

''என் கிட்டே இருக்கிற நோட்டை நான் கொடுப்பேன். அந்த

குமரேஷுடைய நோட்டை நீ தருகிறாய். அந்த ஆள் குமரேஷைப் பார்த்ததில்லே, அதனால் லேசிலே நம்பிடுவான். நோட்டுத் துண்டுகளை இணைச்சுப் பார்த்துப் பெட்டி நிறைய தங்க பிஸ்கெட் தருவான்."

"நீ எவ்வளவு தருவே?" ஆவலாகக் கேட்டேன். "எங்க சேவைக்கு?"

"பத்து பர்சண்ட். மொத்தத்திலே பத்து சதவீதம் தரேன். போறுமா?"

"போருதே. நடிக்கிறதுன்னு என்ன அவ்வளவு லேசா? கஷ்டமான வேலையாச்சே. வேணுமானா போய் சிவாஜி கணேசனைக் கேளு."

"சரி இருவது?"

"இல்லே அம்பது." உறுதியாக சொன்னேன். "சரி பாதி தந்தால் தான் நடிப்பேன். இல்லேன்னா என்னை இறக்கி விடு. ஏதாவது லாரி பிடிச்சு மெட்ராஸுக்கே போயிடறேன்."

"சரி. சரி. சரிபாதி தரேன்."

மகிழ்ந்தேன். பெருமையுடன் ஜென்னியைத் திரும்பிப் பார்த்தேன்.

அவள் எப்போதோ தூங்கிப் போய் விட்டிருந்தாள்.

• • •

கார் நின்றது.

"என்ன பெட்ரோல் காலியா?"

"இல்லே. இடத்துக்கு வந்துட்டோம். இங்கேயிருந்து அரைபர்லாங் நடந்து போனா கடல் வரும்."

வந்தது.

"தோணி தயாரா இருக்கும்."

இருந்தது.

"ஏறி துடுப்பு போட்டால் கொஞ்ச நேரத்தில கப்பல் வருவது தெரியும்."

தெரிந்தது.

கப்பலைத் தோணி நெருங்கியதும் ஒரு ஆள் (பார்வையில் நிறைய பிரிட்டிஷ் தனம் தெரிந்தது. மூக்கு மட்டும் டிகாலை நினைவு படுத்தியது. உயரம் பிரஞ்சு ஆள் என்றது. உடம்பின் ஆகிருதியில் அராபியாவும் கலரில் ஆப்பிரிக்காவும் இருந்தன. "யார்? அடையாளம் காட்டு" என்றான் சுத்தத் தமிழாக. மொத்தத்தில் சர்வதேச ஆளாக இருந்தான்.)

அந்த பிரகதி எழுந்து நின்று உரக்க. "அறுப்பவும்: மணல் கயிறு" என்றாள்.

"மறுபடியும் சொல்லு"

"அறுப்பவும்: மணல் கயிறு."

அவன் முகத்தில் திருப்தி வந்தது. தொடர்ந்து நூலேணி ஒன்று வந்து படகைத் தொட்டது.

"இதுதான் மணல் கயிறு?"

சிரித்தாள். "ஏறு. ஏறு. குமரேஷ்" என்று நினைவு படுத்தினாள்.

"ஆமா... ஆமா. நான் குமரேஷ்" என்று முதலில் நான் — என்னை அவசரமாகப் பின் தொடர முயன்ற ஜென்னியைத் தடுத்து இழுத்து நிறுத்தினாள்.

"பயப்படாதே! உன் அக்கா மகனை நான் ஒண்ணும் விழுங்கிட மாட்டேன்!"

"என் அக்கா மகனா?" என்று ஜென்னி அதிர —

"இவர் சொன்னாரே" என்று பிரகதி வியந்தாள்.

"என்கிட்டே நீ தான் அக்கா பொண்ணுன்னு சொன்னாரே?" என்று ஜென்னி வியக்க —

"நானா... அக்கா மகளா?" என்று இவள் அதிர்ந்தாள்.

இரண்டு பேரும் சேர்ந்து முறைக்க — (ம்...ம்...ம்...மாட்டிக் கிட்டேன்.)

அதற்குள் மேலிருந்த ஆள் — "சீக்கிரம். நேரமில்லை" என்று அவசரப்படுத்தவே —

"அக்கா பொண்ணு விவகாரத்தை அப்புறமா வச்சுப்போம்" என்று கறுவியவாறு நூலேணியில் ஏறினாள் பிரகதி. "நீ இங்கேயே இரு ஜென்னி."

"மாட்டேன். என்னை விட்டுட்டு நீங்க கப்பல்லே போயிட்டா தனியா நான் மாட்டிக்குவேனே" பிடிவாதமாக ஏறி வந்தாள்.

மேலே போனதும் அந்த சர்வதேச மனிதன் சந்தேகமாகப் பார்த்தான் — ஜென்னியை.

"எங்கள் ஆள் தான். அவளுக்கு எல்லாம் தெரியும்" என்ற பிறகுதான் அனுமதித்தான்.

மேலே ஏறும் போதே கவனித்தோம்.

ஹெலிகாப்டர் ஒன்று கப்பலுக்கு மேல் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அவர்களின் ஆட்கள் வேவு பார்க்கிறார்கள் — போலிருக்கிறது. (போலீஸ் பயமா? இருக்கும்)

• • •

உள்ளே உள்ளே நிறைய கதவுகளைத் தாண்டிக் கடந்து கால் கடுத்துப் போய் இனிமேல் நடப்பதற்கில்லை என்று மூச்சு வாங்கும் போது தான் அந்த அறைக் கதவு திறந்து மனிதர்கள் தென்பட்டார்கள். நீளநீளமான ஒரு நீள் வட்ட மேஜை மேல் நடு மையமாக கறுப்புப் பெட்டி குந்தி இருந்தது.

மேஜையைச் சுற்றி அமர்ந்தவர்களின் முகங்கள் இருட்டில் இருந்தது. பின்னாலிருந்த ஒளி வெள்ளம் எங்கள் கண்களை மட்டுமே கூச வைத்தது.

தற்செயலாகத் திரும்பிப் பார்த்து வெல வெலத்துப் போய் விட்டேன்.

பெரிய திமிங்கிலம் ஒன்று கண்ணாடி சுவருக்கு அப்பால் என் உயரத்துக்குச் சரியாக 'ஆ' என்று வாயைப் பிளந்து விழுங்கக் காத்திருந்தது.

நான் தடுமாறி உளறிக் கொட்டிச் சாய்ந்ததும்— கொல்லென்று சிரித்த கூட்டம்—

தலைவன் போல ஒரு ஆள் 'உம்' என்று உறுமியதும் உடனே அடங்கியது.

"உங்களில் யார் பிரகதி?" என்றான்.

"சந்தேகத்துக்கு இடமில்லாமல் நான்தான்" —பிரகதி சொன்னாள்: "நான்தான் அடையாள வார்த்தையைச் சொன்னேன்."

அந்தத் தலைவன் அந்த சர்வதேச ஆளைப் பார்க்க- அவன் தலையாட்டினான்.

"அப்படியானால் இந்த ஆணழகன் தான் குமரேஷா?" என்றதும்—

காற்றில் மிதந்தேன். (ஆணழகன்! எவ்வளவு கவர்ச்சியான வார்த்தை. அதுவும் ஜென்னி எதிரில்! அவள் தான் உற்சாகமான நெருக்கமான வேளைகளில் 'என் இனிய பன்றிக் குட்டியே' என்கிறாள். இருக்கட்டும் இருக்கட்டும்.)

பிரகதி உலுப்பினதும் நினைவு திரும்பினேன். "உம் என்ன?"

"உன்னைத்தான் கேட்கிறார்."

"என்ன கேட்டார்? நான் கவனிக்கல்லே."

"நீதானா குமரேஷ் எங்கிறார்."

"இல்லை." என்றேன் சட்டென்று.

அவள் அதிர- மற்றவர்கள் எழ- தலைவன் முறைக்க—

"அதிலே சந்தேகமே இல்லை என்றேன். இதற்கேன் இப்படி முறைக்கிறீங்க?"

"விளையாடாதே. பீ ஸீரியஸ்" என்றாள் ஜென்னி.

''சரி. சரி. நானேதான் குமரேஷ் அனுப்பவும் மணல் கயிறு.''

''நோட்டுத் துண்டுகளைக் கொடுங் கள்.''

அவள் கைப் பையிலிருந்து ஒரு துண்டை எடுத்து நீட்டும்போதே முணுமுணுப்பாக ''உன் வலது மார்புப் பையிலிருக்கிற இரண்டாவது துண்டை எடு'' என்றாள்.

எனக்கே ஆச்சரியம்? எப்போது எப்படி என் பையில் போட்டாள்?

எடுத்து நீட்டினேன்.

பத்தே நிமிட பரிசோதனைக்குப் பிறகு எங்கள் நோட்டுத் துண்டும் அவர் துண்டும் பொருந்தி வரவே கைப் பெட்டி கனத்துடன் என் கைக்கு மாறியது. திறந்து பார்த் தோம். தங்க பிஸ்கட்டுகள் கண் சிமிட்டின.

தங்கத்தைத் தொட்டதுமே பெரிய மனிதனாகி விட்டேன். கம்பீரமாக தலைவனுடன் கை குலுக்கினேன்.

அவன் கை குலுக்கலில் அதிக ஆர்வம் தெரியவில்லை. ''நீங்கள் போகலாம்'' என்றான் கரகரப்புக் குரலில்.

யாராவது அழைத்துப் போவார் கள் என்று காத்திருந்தோம்.

''நீங்கள் போகலாம்'' என்றான் அவன் அழுத்தமாக.

''எப்படிப் போவதாம்?'' கோப மாகக் கேட்டேன். ''ஆயிரம் வாசலைத் தாண்டித் திரும்பி இருட்டிலே தடு மாறி வந்திருக்கோம். வெறுமே போகச் சொன்னால் எப்படி? யாரையாவது கூட்டிட்டு போய் விடச் சொல் லுங்க.''

''அந்த கதவைத் திறந்து போங் கள்.''

''அய்யோ. அந்தக் கதவைத் திறந் தால் கடல் நீர்— அதிலே திமிங்கிலம் விழுங்கிடும்.''

கூட்டத்தோடு சேர்ந்து தலைவ னும் சிரித்தான். அவன் பேச்சை விட அவன் சிரிப்பு அதிக பயங்கர மாக இருந்தது.

''ப்ரொஜக்டரை நிறுத்து'' என்ற மறு விநாடி—

கடல் மீன் எல்லாம் மறைந்தது.

கதவைத் திறந்து விட்டார். நூலே ணிக்குப் பக்கத்திலேயே இருந்தது அந்த அறை. (நாம் லேசில் அடை யாளம் தெரிந்து கொள்ளக் கூடா தென்றுதான் சுற்றிச் சுற்றி நடத்திப் போய் களைப்படைய வைத்திருக்கி றார்கள் போலிருக்கிறது!)

விழித்தபடி வராண்டாவுக்கு வந்த தும் கதவு சடாரென்று மூடிக் கொண்டு விட்டது.

''பத்து நிமிடங்களுக்குள் நீங்கள் படகுக்குப் போய்விட வேண்டும். பத்தே நிமிடத்தில் நூலேணி மேலேறி விடும். கப்பலும் நகர்ந்து விடும்'' என்றது அசரீரியாக.

திரும்பிப் பார்த்து வியந்தோம். கதவே தெரியாதபடி வெறும் சுவர் நீளமாகப் போயிற்று.

''ஏய்ய்... செருப்பு செருப்பு'' என்று நான் கத்துவது புரியாமல் அவர்கள் விழித்தார்கள்.

''என்ன ஆச்சு?'' ஜென்னி கேட் டாள். ''ஏன் கத்தறே?''

''காலை கடிக்கிறதேன்னு செருப் பைக் கழட்டி உள்ளேயே வச்சுட் டேனே-இரு எடுத்துட்டு வரச் சொல் றேன். பெட்டியைப் பிரகதியிடம் தந்து விட்டு ஓடினேன்.

கொஞ்ச தொலைவில் தெரிந்த அறைக் கதவை நோக்கி ஓடிப் போய் அவசரமாகக் கதவைத் திறந்து அதிர்ந்து போனேன்.

மிகவும் அந்தரங்கமாக இயங்கிக் கொண்டிருந்த அந்த ஆணும் பெண் ணும் திரும்பிப் பார்த்து அலற—

அவசரமாகக் கதவைத் திறந்துப் பார்த்து விழித்தேன்.

ஜென்னியையும் பிரகதியையும் காணோம். எட்டிப் பார்த்தபோது நூலேணியில் பாதி இறங்கி இருந்தார் கள் அவர்கள்.

''ஹேய். வெயிட் ஃபார் மீ'' என்று கத்திவிட்டு ஓட— இடுப்பில் துவாலையைக் கட்டிக்கொண்டு வந்த ஆள் புரியாத மொழியில் திட்டிக் கொண்டிருந்தான்.

நான் பாதி இறங்குவதற்குள் ஏணி மேலே ஏறத் துவங்கி விட்டது:

பதறிப் போய் குதித்த வேகம் படகு ஆடி— பிரகதி சாய— பெட்டி சர சர வென்று படகு ஓரத்தைக் கடந்து கடலில் விழப் பார்த் —

பாய்ந்து விழுந்து பிடித்துக் கொண்டு விட்டேன். (இதுகூட செய்யா விட்டால் அப்புறமென்ன ஹீரோ?)

மகிழ்ந்தோம்.

நிமிர்ந்துத் திரும்பிப்பார்ப்பதற்குள் கப்பல் கடுகு சைஸ் ஆகி இருந்தது.

மேலே ஹெலிகாப்டரும் காணோம்.

மூன்று பேருக்கும் உற்சாகம் பிய்த்துத் தள்ளியது. அவர்கள் ஸ்டெப்ஸ் வைத்து ஆங்கில நடனம் ஆட — நான் தமிழ் நாட்டு டப்பாங் குத்து ஆடினேன்.

'பிஸ்கெட்டே — என் தங்க பிஸ் கெட்டே?'' என்று பாடி —

''ஐயோ கோரமா பாடறயே'' என்று ஜென்னி கிண்டல் செய்ததும் நிறுத்தினேன்.

அவசரமும் ஆவேசமுமாக துடுப்பை இயக்கினேன்.

''கொஞ்சம் சீக்கிரமாகட்டும்'' என்றாள் பிரகதி. ''க்விக்.''

''ஏன்? பிஸ்கெட்டை பங்கு போடற ஆர்வமா?''

''இல்லே. சுங்க அதிகாரி மாமன் கள் வருகிறதுக்குள்ளே போய் ஆக ணும்.''

''யாவ்'' என்றவாறு கால்களைத் தூக்கிக் கொண்டு விட்டேன்.

''அவங்க பேரைச் சொன்னதுக்கே இப்படி அலர்றியே'' ஜென்னி கேட் டாள். ''நேரே பார்த்தால் மூச்சு விட மறந்துடுவே போலிருக்கே.''

''இல்லே ஜென்னி; காலை எதுவோ கவ்விப் பிடிச்ச மாதிரி இருந்தது.'' குனிந்துக் காலடியில் இருட்டை ஆராய்ந்தேன். அமைதியாகத் தெரிந்தது.

''செருப்பு இல்லாத காலில் ஏதா வது ஆணி குத்தி இருக்கும்'' பிரகதி சொல்லும் போது— ''ஓ! கமான் யா. சீக்கிரம் ஒட்டு நேரமாகிறது'' என்று ஜென்னி அலுத்துக் கொள் ளும்போது —

நான் மீண்டும் காலைத் தொங்க விடும் போது —

சரேலென்று எழுந்து நின்ற உருவம் — எங்களைச் சிலிர்க்க வைத் தது.

''ஏய் யார் அது?'' என்று நிழலா கத் தெரிந்த உருவத்தைப் பார்த்துக் கத்த —

அந்த பிரகதி மட்டும் ''பாஸ்' என்று அலறினாள்.

''துரோகி'' அந்த ஆள் உறுமி னான். ''நம்பிக்கைத் துரோகி. நீ இப்படிச் செய்வாய் என்று தெரிந்து தான் சிங்கப்பூரிலிருந்து வந்து உன்னையே கண்காணிச்சேன். செத்து விட்டதாக பொய் சொல்லி எல்லா பிஸ்கட்டையும் நீயே அனு பவிக்கத் திட்டம் போட்டாயா? உன் நிஜ உருவத்தைப் புரிஞ்சுக்கத்தான் ஹெலிகாப்டரில் வந்து இறங்கி உனக் காகக் காத்திருந்தேன்.''

''இல்லே பாஸ்- வந்து...'' என்று அவள் திணறினாள்.

"நம்ம கூட்டத்தில் துரோகத்துக்குத் தண்டனை என்ன தெரியுமில்லையா?"

நட்சத்திர ஒளியில் அவன் கண்ணீர் பளிச்சிட்டது. மறு விநாடி அவன் சரேலென்று துப்பாக்கியை எடுத்துச் சுடவே—

பெரிய அலறலுடன் தண்ணீரில் சரிந்து விழுந்தான். ஒரு விநாடியில் மூழ்கி மறைந்தான்.

"பிரகதி" என்று நான் போட்ட கூச்சலைக் கேட்டு அவன் திரும்ப— அதே சமயம் காலால் ஜென்னி அவன் கையை அடிக்க— துப்பாக்கி பறந்து போய்த் தண்ணீரில் விழுந்து விட்டது.

வெறி பிடித்தாற் போல் பாய்ந்து விட்டான்; ஜென்னியைச் சரிய விட்டுக் கழுத்தை இரண்டு கையாலும் நெரிக்க ஆரம்பித்தான்.

கையில் அகப்பட்ட அந்தப் பெட்டியால் அவன் பின் மண்டையைத் தாக்கினேன்.

முதல் அடிக்கு ஜென்னியின் கழுத்தை நெரித்த கை விலகியது. இரண்டாவது அடிக்குத் திரும்பினான். மூன்றாவது அடிக்கு என் மேல் பாய்ந்தான்.

துள்ளி நகர்ந்துப் பெட்டியை உயர்த்திப் பிடித்தேன். "வராதே. கிட்டே வராதே மூஞ்சைப் பேர்த்துடுவேன் வராதே."

லட்சியமே செய்யாமல் அவன் நெருங்கவே — ஓங்கி அவன் முகத்தில் பெட்டியை வீச அது பலமாக அவன் முகத்தைத் தாக்கிப் பறந்து பறந்து மேலே போய்ச் சரிந்து சரிந்து இறங்கித் தண்ணீரில் விழுந்து மறைந்தது.

"ஏய் ய்ய்ய்..." பயங்கரமாக கைகளை உயர்த்தியவன் — மயங்கி. சரிந்துத் தள்ளாடி தண்ணீரில் விழுந்தான். அப்புறம்? மேலே வரவேயில்லை.

ஜென்னியும் நானும் அவசரமாகப் படகை ஓட்டிக் கொண்டு போக ஆரம்பித்தோம்

உங்களுக்கு முத்து குளிக்கத் தெரியுமா சார்?

கடலில் விழுந்த கறுப்புப் பெட்டி தங்க பிஸ்கட்டைத் தேடலாம் வருகிறீர்களா?

"தங்கம் குளிப்போம் வாரீயளா?"

முற்றும்

# இழப்பு தமிழுக்கன்றோ!

பொ. துரைசாமி ஐ.ஏ.எஸ்.

(கவியரசு கண்ணதாசன் அவர்கள் இயற்கை யெய்தியபோது பாடியது)

கவிஞரே கண்ண தாசா! கவிக்கடல் மழையே முத்தே!
கற்பனை ஊற்றே! நல்ல கவிதையின் வளமே! பொருளே!
பவித்தி ரமாக வேநீ பசுந்தமிழ்க் கவிதைப் பாவை
பாரதித் தோன்ற லாகப் பண்ணொடு இழைத்துத் தந்தாய்
தவித்துனைப் புரிந்து வாட தனியதோர் இடத்தை நோக்கித்
தண்டமிழ்க் கவிதை யாற்றத் தமியனு மின்றி சென்றாய்
செவிப்புலம் கேட்கும் வண்ணம் செந்தமிழ்க் கவிதைத் தேனைச்
சீரியப் படைப்பை இனிமேல் செய்பவர் யாவர் உள்ளார்?

திரைப்பட வுலகில் நீயோர் திருப்பத்தைச் செய்து வாழ்ந்தாய்
தேனெனப் பாட்டி சைத்து தெருவெல்லாம் முழங்கச் செய்தாய்
வரையிலா கவிதைச் செய்துன் வாழ்விலோர்ப் புகழைச் சேர்த்தாய்
வண்டமிழ் வளமை தன்னை வள்ளல்போல் வாரி யீந்தாய்
கரையிலா காசு சேர்த்துக் கண்மூடிச் செலவு செய்தாய்
கப்பலே கவிழ்ந்த போதும் கலங்கா மல்வாழ்ந்து போனாய்
சிறைபெரு பறவை போல சிறகினை விரித்து வாழ்ந்தாய்
செயலினை படக்கி யின்றே சேய்மை நோக்கிச் சென்றாய்

அலகிலா கவிதை யாத்து அரசவைக் கவிஞ னானாய்
அன்பெனும் பிடிக்கு ளேநீ அகப்படும் பொருளு மானாய்
உலகியல் நடப்பை ஒட்டி உண்மையை உரைத்து வாழ்ந்தாய்
உத்தமன் போல வேடம் உறுவது வெறுக்கச் செய்தாய்
புலமைக்கோர் எடுத்துக் காட்டாய் புவியினில் வாழ்ந்து வந்தாய்
புரட்சியாம் கவிதைப் பாவைப் புதுமையாய் ஆக்கித் தந்தாய்
நிலையிலா வாழ்வு என்று நித்தமும் சொல்லி வந்தாய்
நீள்புகழ் ஈட்டி இன்றே நெடுவழிப் பயணம் கொண்டாய்

கீதையின் பாதைச் சொல்லிக் கிறித்தவர் மறையைத் தந்தாய்
கிளர்ந்தெழு கவிதைச் செய்து கேட்டவர் வியக்க வைத்தாய்
சாதனைப் பலவும் செய்து சரித்திரம் படைத்து நின்றாய்
சாத்திரம் முழுதும் கற்றுச் சமரச வழியில் சென்றாய்
சோதனை வந்த போதும் சோர்விலா முறையில் வாழ்ந்தாய்
சொகுசுகள் வந்த போது சொர்க்கத்தில் மூழ்கி நின்றாய்
வாதனை நோயால் தாக்கி வடிவினை அழித்துக் கொண்டாய்
வள்ளலே உன்னைப் போல் வாழ்ந்தவர் யாவர் உள்ளார்?

அரசியல் வானில் நீயோர் அதிசயப் பிறவி யானாய்
அன்னையின் அழைப்புப் போற்றும் அங்கமாய்த் திகழ்ந்து நின்றாய்
திரைப்பட உலகில் நீயோர் தெய்வமாய்ப் போற்றப் பட்டாய்
திருவினைச் சேர்த்தப் பின்னர் தெய்வத்தைப் பாடி நின்றாய்
உரைநடை பாட்டும் கூத்தும் உலகியல் வாழ்வும் நட்பும்
ஒருதனி நடையில் செய்து உயர்புகழ் ஈட்டி வாழ்ந்தாய்
இரையென அமுதின் தோய்ந்து இன்னுயிர் மாய்த்துக் கொண்டாய்
இனியவுன் இழப்பு எங்கள் இன்தமிழ் இழப்பு அன்றோ?

**அமுதசுரபி**

# வங்கி நிதி சிறப்பிதழ்

இந்த இதழுடன் வங்கி-நிதி சிறப்பு இதழை இணைப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

நாட்டின் வளர்ச்சிக்கு வங்கிகளின் பங்கு மகத்தானது. அடுத்து வரும் பக்கங்களில் பாரத நாட்டில் வங்கிகள் ஆற்றும் பணி, முன்னேற்றம் இவற்றைச் சேகரித்து அளித்துள்ளோம்.

ஆங்கிலத்தில் மட்டும் சொல்லப்பட்டு தமிழில் இதுவரை தயாரித்து வெளிவராத பல துறைகளின் சிறப்பு இதழ்களை 'அமுதசுரபி' முன் ஆண்டுகளில் வெளியிட்டு வந்திருக்கிறது. (1977 — தொழில் மலர். 1978 வேளாண்மைத் தொழில் மலர். 1979 மின்சக்தி சிறப்பு மலர். 1980 கைத்தறி சிறப்பு மலர்)

இந்த வங்கி-நிதி சிறப்பு இதழில் கிடைத்தவரை இயன்ற அளவுக்கு விவரங்கள் சேகரித்து அளித்துள்ளோம். தமிழ் மக்களுக்குப் பயன் உடையதாயிருக்கும் என நம்புகிறோம்.

## பஞ்சாப் நேஷனல் பாங்க்

உதயமானது 1895ல். விடுதலைப் போராட்ட வீரர்களான லாலா லஜபத்ராய், புருஷோத்தம் தாஸ் தாண்டன் ஆகியோருடைய முயற்சிகளின் விளைவாய்த் தோன்றியது, இந்த தேசிய வங்கி, லாகூரில் தலைமை அலுவலகம் அமைந்திருந்தது. பிரிவினைக்குப் பிறகு, இந்த அலுவலகம் புது தில்லிக்கு மாறியது.

எஸ். பி. ஜெயின், கே என். பஜாஜ், ராம்நாத் கோயங்கா, எஸ். சி. டிரிகா. டி. ஆர். துலி, ஓ. பி. குப்தா போன்ற பிரமுகர்கள், இந்த வங்கியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கின்றனர். திரு. சோப்ரா, தற்போதைய தலைவர். கடந்த ஆண்டு இறுதியில், வங்கியின் வைப்புத் தொகை ரூ. 2585.5 கோடி என்ற சாதனை, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுள் முதன்மை நிலையை இந்த வங்கிக்கு அளித்தது. நாடெங்கிலும் 1680 கிளைகளும் வெளி நாடுகளில் மூன்று கிளைகளும் கொண்ட ஆல விருட்சமாய் வளர்ந்திருக்கிறது, பஞ்சாப் நேஷனல் பாங்க்.

தமிழகத்தைப் பொறுத்தவரை வைப்புத் தொகை 65.74 கோடி ரூபாய். முன்னுரிமை பெற வேண்டிய துறைகள் பெற்ற கடனுதவி 28.3 கோடி ரூபாய். தாழ்த்தப்பட்டோருக்கும், மலைச் சாதியினருக்கும் தரப்பட்ட கடன் 0.22 கோடி ரூபாய்.

35 கிராமங்களை ஏற்று அவற்றின் வளர்ச்சிக்கு வகை செய்து வருகிறது.

இருபது அம்ச திட்டத்தின் கீழ் 82.57 லட்சம் ரூபாயும், சலுகையான வட்டி விகிதத்தில் 12.6 லட்ச ரூபாயும் நிதி உதவி செய்யப்பட்டிருக்கிறது.

சிறு தொழில்களுக்கும், சுயசார்பு உடையோருக்கும் 23.88 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதிக்கான நிதி உதவி ரூ. 17.75 கோடி.

தமிழகத்தில் உணவுப் பொருள் வழங்கும் கழகத்தின் நெல் கொள் முதல் பணிகளுக்கு நிதி உதவி செய்ய முன் வந்த முதல் வங்கி, பஞ்சாப் நேஷனல் பாங்க் தான்.

ஆயிரக் கணக்கான சிறு விவசாயிகளுக்குக் குழாய்க் கிணறு அமைக்கவும் உதவி செய்த முதல் வங்கி இதுவே.

மின்வாரியம், வீட்டு வசதி வாரியம், மாநகராட்சி போன்ற நிறுவனங்களின் பத்திரங்களில் முதலீடு செய்துள்ளது, இந்த வங்கி.

ஆலங் குளத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் நிறுவிய சிமெண்ட் தொழிற்சாலை உருவாகிட உறுதுணையாய் இருந்தது, பஞ்சாப் நேஷனல் பாங்க், தக்க சமயத்தில் செய்த பொருளுதவியே.

விவசாயம், தொழில் ஆகிய இரு துறைகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது, இந்த வங்கி.

## பாங்க் ஆஃப் இந்தியா

எழுபத்தைந்து வயதை எட்டியுள்ள பாங்க் ஆஃப் இந்தியா பிறந்தது 1906ல்.

ஆண்டுதோறும் வைப்புத் தொகை, கடனுதவி, முதலீடு ஆகிய இனங்களில் முன்னேற்றம் அடைந்து வந்துள்ள இந்த வங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் மிகப் பெரியது என்ற பெருமையை 1978, 1979 ஆண்டுகளில் அடைந்ததில் வியப்பில்லை.

விவசாயிகள், கைத் தொழிலாளிகள், சிறு தொழிலகங்கள், சிறு வியாபாரிகள், வாகன ஓட்டிகள், மேற்படிப்பைத் தொடரும் மாணவர்கள் ஆகியோரைத் தவிர ஊனமுற்றோருக்கும், சமூகத்தின் அடித் தளத்தில் உள்ளோருக்கும் சலுகையான வட்டி விகிதத்தில் கடன் வழங்கி யிருக்கிறது, இந்த வங்கி.

தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், புதுவை அடங்கிய தென் பிராந்தியத்தில் இந்த வங்கி, முன்னுரிமை பெற வேண்டிய துறைகளுக்கு அளித்துள்ள நிதி உதவி, ரிசர்வ் வங்கி வரையறுத்துள்ள குறியீட்டினை மிகக் குறுகிய காலத்திலேயே அடையும் நிலைக்கு வந்துள்ளது.

தமிழகத்தில் ஆயிரத்து இருநூறு சிறு தொழிலகங்களுக்கு ரூ. 12.59 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இந்த வங்கி வழங்கியுள்ள மொத்த கடன் தொகை ரூ. 63.59 கோடி. தமிழகத்தில் 148 ஊனமுற்றோருக்கு நிதி உதவி தந்திருக்கிறது, இந்த வங்கி.

எளிய பிரிவைச் சேர்ந்த குடும்பத் தலைவிகளும், விதவைகளும், தையல், ஒப்பனை, பொம்மை செய்தல், அப்பளத் தயாரிப்பு போன்ற வேலைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டும் வகையில், கிருஹ லட்சுமி திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வாடிக்கையாளர்களின் வசதிக்காக, அன்பளிப்புக் காசோலைகளையும் (Gift Cheques) தருகிறது, இந்த வங்கி.

பத்து வருட காலத்திற்குள் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற விரும்புபவர்கள், தங்கள் பெண்களின் திருமணத்தை நடத்தவும், வீடு

கட்டவும், பிள்ளைகளின் கல்விக்கும், இன்னும் இதுபோன்ற பல வருங் கால செலவுகளைச் சமாளிக்கும் விதத்தில் இந்த வங்கியின் 'டபிள் பெனஃபிட் டெபாஸிட் மற்றும் காஷ் சர்டிஃபிகேட்' திட்டங்கள் பேருதவி செய்யும்.

1980 ஆம் ஆண்டு இறுதியில் நம் நாட்டில் 1385 கிளைகள், அயல் நாடுகளில் 25 கிளைகள் என்ற அளவில் வேரூன்றியுள்ளது, இந்த வங்கி.

1980 ஆம் ஆண்டு இறுதியில், அகில இந்திய அளவில், வைப்புத் தொகை ரூ. 2958 கோடியாகவும், கடன் உதவித் தொகை ரூ. 1785 கோடியாகவும் இருந்தன.

## யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா

தோற்றம் 1919-ஆம் ஆண்டில்; 1921ல் பம்பாயில் அமைந்த இதன் தலைமைக் கட்டிடம், நம் தேசப்பிதாவின் திருக் கரங்களால் தொடங்கி வைக்கப்படும் பெருமை பெற்றது.

1979ல் வைர விழா கொண்டாடிய இந்த வங்கி, இந்த ஆண்டு அக்டோபர் மாதம், அதாவது தேசிய மயமாக்கப்பட்டு பன்னிரெண்டு வருட காலத்திற்குப் பிறகு ஆயிரத்து ஒரு நூற்று எழுபத்தொன்பது கிளைகளுடன், ரூ. 1476 கோடி வைப்புத் தொகையுடன் பல்கிப் பெருகியுள்ளது. முன்னுரிமை பெற வேண்டிய துறைகளுக்கு மேன் மேலும் நிதி உதவியை அதிகரித்து வரும் இந்த வங்கி, ரிசர்வ் வங்கியின் திட்டத்தின் கீழ், ஒன்பது மாநிலங்களில் உள்ள எழுபத்தைந் திற்கும் மேற்பட்ட கூட்டுறவு விவசாயச் சங்கங்களுக்குக் கடன் உதவி கொடுக்கிறது. பதினைந்து விவசாயிகளுக்கான சேவை சங்கங் களுக்கும் நிதி உதவி செய்கிறது. இவை தவிர, விவசாய மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் முன்னேற்ற திட்டங்களில் ஆர்வத் துடன் பங்கு கொள்கிறது.

சிறு தொழலகங்கள், வாகன ஓட்டிகள், தற்சார்புடைய தொழிலாளர்கள், சிறு வர்த்தகர்கள், மேற் படிப்பு போன்ற பல்வேறு துறையினர், இந்த வங்கியின் வளர்ச்சிப் பணியினால் வளப்பம் பெற்றுள்ளனர். சலுகையான வட்டி விகிதத்தில், சமுதாயத்தின் அடி மட்டத்தில் உள்ளோருக்காக கடன் உதவி செய்வதிலும், இந்த வங்கி முனைப்பாய் செயலாற்றி வருகிறது. ஆயிரத்து இருநூறு கிராமங்களை ஏற்றிருக்கும் இந்த வங்கி, நாற்பதாயிரம் கிராமவாசிகளுக்குக் கடன் தொகை வழங்கியுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் இருநூற்றைம்பது பிரிவுகளுக்கு உதவி செய்கிறது.

லீட் பாங்க் திட்டத்தின் கீழ், எட்டு மாவட்டங்களை ஏற்றிருக் கிறது.

ஊர்ப்புற மக்களின் முன்னேற்றத் திற்கென, நான்கு கிராமிய வங்கி களையும் தொடங்கியுள்ளது.

வாடிக்கையாளர்களின் வசதிக் காக, மாலை நேரத்தில் வங்கிக் கிளை கள் செயல்படும் சீரிய முறையில் முன்னோடியாக விளங்கியது, யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா.

கப்பல்களிலும் சேவை செய்யத் தொடங்கியுள்ள இந்த வங்கி, தற்போது சர்வதேச அரங்கிலும் வங்கித் துறையில் செயல்பட்டு வருகிறது.

## யுனைடெட் கமர்சியல் பாங்க்

1943ல் பிறப்பு. நாடெங்கிலும் உள்ள கிளைகளின் எண்ணிக்கை, 1347; தமிழகத்திலும், புதுவையிலும் மட்டும் 57 கிளைகள். சென்ற ஆண்டு இறுதியில், இந்த வங்கி யின் வைப்புத் தொகை ரூ. 1905 கோடி; கடன் உதவித் தொகை ரூ. 1125 கோடி.

தமிழக அரசின் மீன் வளத்துறை யுடன் இணைந்து மீனவர்களுக்கு விசைப் படகுகளை வாங்க ஒரு கோடி ரூபாய் நிதியுதவி செய்துள் ளது, இந்த வங்கி.

அதே போல் தமிழக அரசு தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைந்து இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு கொடுப்பதில் யுனைடெட் கமர்ஷியல் பாங்க் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளது. இதுவரை 7000 அகதிகளுக்கு வேலை வாய்ப்பளிக் கும் வகையில், 3000 ஹெக்டேர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. வேறு சில வங்கிகளுடன் இணைந்து செயலாற்றும் இந்த திட்டத்தில், பத்து கோடி ரூபாய் வரை நிதி உதவி செய்யக் கடமைப்பட்டுள் ளது, யுனைடெட் கமர்ஷியல் பாங்க்.

சென்னையை அடுத்துள்ள நாராயணபுரம் எனும் கிராமத்தில் உள்ள எளிய மக்களுக்குத் தற்சார்பை ஏற்படுத்தும் வகையில், கிண்டி இந்தியத் தொழில் நுட்ப நிலையத் துடன் இணைந்து, செங்கல்சூளை, சோப் தயாரிப்பு, காகிதத் தயாரிப்பு, கோழிப்பண்ணை, ரொட்டி தயாரிப்பு ஆகியவற்றை உருவாக்க, நிதி உதவி செய்கிறது, இந்த வங்கி.

## கிரிண்ட்லேஸ் பாங்க் லிமிடெட்

நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்க் லிமிடெட் என்ற பெயரில் 1863ஆம் ஆண்டில் தோன்றிய இந்த வங்கி, பின்னாளில் பெயர் மாற்றம் அடைந்தது.

கிரிண்ட்லேஸ் க்ரூப் என்ற பெயரில் உலக முழுவதும் நாற்பது நாடுகளில் வங்கிகளும், நிதி நிறுவனங்களும் சேர்ந்த பெரும் அமைப்பு, தன் தலைமை அலுவலகத்தை லண்டனில் கொண்டிருக்கிறது. இந்த வங்கியின் சேவை, தனிநபர் முதல் வர்த்தக நிலையங்கள், நிதி நிறுவனங்கள் மட்டுமன்றி அரசாங்கங்களுக்கும் கூடப் பயன்பட்டு வருகிறது.

இந்தியாவில், இந்த அன்னிய வங்கியின் வைப்புத்தொகை கடந்த ஆண்டு இறுதியில் 506 கோடி ரூபாய் என்ற நிலையை எட்டியது. கடனுதவித் தொகை 333 கோடி ரூபாய் என்ற அளவை அடைந்தது. உணவுக் கொள்முதல் நடவடிக்கைகளுக்காக, இதர வங்கிகளுடன் இணைந்து 54 கோடி ரூபாய் வரை நிதி உதவி செய்திருக்கிறது, இந்த வங்கி.

## சார்ட்டர்டு பாங்க்

இந்தியாவில் இருபது கிளைகளைக் கொண்டுள்ள இந்த அன்னிய வங்கி 1853ல் விக்டோரியா அரசி வழங்கிய சாசனத்தின் விளைவாக உருவானது.

1858ல் கல்கத்தாவிலும், பம்பாயிலும் இரு கிளைகளுடன் பாரதம் வந்தது சார்ட்டர்ட் பாங்க். சீனா, ஹாங்காங், சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் அடுத்தடுத்து செயல்பட ஆரம்பித்தது இந்த வங்கி.

இங்கிலாந்தில் சமகாலத்தில் உருவாகி வளர்ந்த ஸ்டாண்டர்ட் பாங்க் என்ற வங்கியுடன், சார்ட்டர்டு பாங்க் க்ரூப் எனும் புதிய அமைப்பு பிறப்பெடுத்தது.

வருங்காலத்தில் ராயல் பாங்க் ஆஃப் ஸ்காட்லண்ட் எனும் வங்கிக் குழுவுடன் இணையும் திட்டம் இருக்கிறது.

உலக முழுவதும் 1500 கிளைகளுடன் படர்ந்திருக்கும் இந்த வங்கியின் தலைமை அலுவலகம் லண்டனில் உள்ளது.

1980ஆம் ஆண்டின் கடைசியில் இந்தியாவில் இந்த வங்கியின்

வைப்புத் தொகை 1700.4 கோடி ரூபாய்; கடன் உதவித் தொகை 1159.9 கோடி ரூபாய்; முதலீடு 621.3 கோடி ரூபாய். சர்வதேச அளவிலான இதன் அமைப்பு, அன்னிய செலாவணித் துறையில் திறம்பட சேவை புரிவதற்கு உறு துணையாய் இருக்கிறது.

மேலும், சலுகையான விகிதங் களில் கனரகப் பொருட்களை இறக்கு மதி செய்வதற்கான நிதி உதவி செய்வதுடன், பெரிய தொழிலகங் களை நம்நாட்டில் நிறுவிடத் தேவை யான வெளிதேச செலாவணியைப் பெற்றுத் தருவது, பிறநாடுகளுடன் கூட்டாக தொழிலைத் தொடங்கிட நிறுவனங்களுக்கு உதவுவது ஆகி யவை இந்த வங்கியின் பணிகள்.

## மெர்க்கண்டைல் பாங்க் லிமிடெட்

இந்திய தேசத்தின் சரித்திரத் துடன் பின்னிப் பிணைந் திருக்கும் வங்கி இது. கிழக்கிந்தி யக் கம்பெனியின் வங்கிப் பணிகள் முடங்கிய தருணம்; 1853ல் சில ஆங்கிலேயரும், சில இந்தியரும் ஒன்றுய்ச் சேர்ந்து உருவாக்கினர், 'தி மெர்க்கன்டைல் பாங்க் ஆஃப் இந்தியா, லண்டன் அன்ட் சைனு' என்ற அமைப்பை. பம்பாயில் 50 லட்ச ரூபாயுடன் துவக்கப்பட்டது முதல் கிளை.

1857ல் லண்டனில் அமைந்தது மற்ருெரு கிளை.

பல்வேறு கட்டங்களைக் கடந்த பிறகு 1957ல் மெர்க்கண்டைல் பாங்க் லிமிடெட் என்ற பெயர் மாற்றம் அடைந்தது.

அதே ஆண்டில், இந்த வங்கி 'தி ஹாங்காங் அன்ட் ஷாங்காய் பாங்கிங் கார்ப்பொரேஷன்' என்ற குழுவுடன் ஐக்யமாயிற்று.

பெயரிலேயே உள்ள குறிப்பு தெரிவிக்கிற வகையில், இந்த வங்கி தொடக்க நாள் முதல், வாணிபம், குறிப்பாக கடல் வாணிபம் போன்ற துறைகளுக்கு நிதி உதவி செய்து வருகிறது.

1978ஆம் ஆண்டிலிருந்து இந் தியாவில் உள்ள பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு நிதிநிலை, நிர்வாகம் மற்றும் தொழில் முறை ஆலோசனை தருவதற்கென ஒரு தனிப்பிரிவைஇயக்கி வருகிறது. மேலும் இந்நிறுவனங்கள் சர்வதேச அரங்கில் நிதிவசதி பெறவும், வெளி நாடுகளுடன் இணைந்து கூட்டு முயற்சியாக தொழில்களை உருவாக் கவும் உதவி செய்து வருவது, மெர்க்கன்டைல் பாங்கின் நிகரில்லா நற்பணியாகும். பம்பாய், சென்னை, கல்கத்தா, விசாகப்பட்டினம், டெல்லி ஆகிய நகரங்களில் அலுவ லகங்களைக் கொண்டது.

## ஆந்திரா பாங்க்

1923ல் தேசிய முன்னணி வீரரான திரு. பட்டாபி சீதாராமையா அவர்களின் உழைப்பால் ஜனித்தது, ஆந்திரா பாங்க்.

மச்சிலிப்பட்டினத்தில் அமைந் தது முதல் அலுவலகம். ஆந்திர மாநிலம் கடந்து சென்னையில் முதன் முதலாக 1945ல் ஆரம்பிக் கப்பட்டது, மூதறிஞர் ராஜாஜி அவர்களின் தலைமையில்.

தற்போது நாடு முழுவதும் 627 கிளைகளுடன் பரவியுள்ள இந்த வங்கியின் வைப்புத் தொகை ரூ.668.18 கோடி. இதில் பத்து சத வீதம், கிராமப்புறக் கிளைகளால் சேர்க்கப்பட்டது. ஆரம்ப காலத் திலிருந்தே விவசாயத்திற்கும், கைத் தொழில்களுக்கும் நிதி உதவி செய்து கிராமப்புற வளர்ச்சிக்கு வழி வகுத்து வந்த ஆந்திரா பாங்க், 1980ஆம் ஆண்டில் தேசிய மய மாக்கப்பட்ட பிறகு தன் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளது. அந்த ஆண்டில், விவசாயத்திற்கு வழங் கப்பட்ட கடன் தொகை ரூ. 78.7 கோடி.
விவசாயிகளின் கூட்டுறவு சங்கங் களுக்கான தன் உதவியை நீடித்து வருகிறது, இந்த வங்கி. ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சிப் பணி யாக, 85 கிராமங்களை மேற் கொண்டு ஐந்து கோடிக்கு மேல் நிதி உதவி செய்துள்ளது. வெள்ளம் வறட்சி போன்ற இயற்கை உற்பாதங்களின் போது, அரசாங்கத்தின் நிவாரண நிதிக்கு நன்கொடை வழங்குவதுடன், இத் தகு இடையூறுகளால் அவதிப்படும் விவசாயிகள் வாங்கிய கடன் தவணையைத் தள்ளிப் போட்டும், ஆதரவு அளித்தும் வருகிறது, இந்த வங்கி.

1980ல் 4218 சிறு தொழிலகங் கள், நிதி உதவி பெற்றன. அந்த ஆண்டில் ஏற்றுமதித் தொழில்கள் பெற்ற நிதி உதவி ரூ. 15.84 கோடி. லீட் பாங்க் திட்டத்தின் கீழ் பல மாவட்டங்களை ஏற்றிருப் பதுடன், ஒரிஸாவில் ஒரு பிராந்திய கிராமீய வங்கியையும் அமைந் துள்ளது ஆந்திரா பாங்க்.

இந்த வங்கி வழங்கி வரும் நிதி உதவி, இதுவரை இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட, பிற் படுத்தப்பட்ட மக்களுக்குத் தரப்பட் டிருக்கிறது. இருபது அம்ச திட் டத்தின் கீழ், இந்த வங்கி செய் துள்ள நிதி உதவி ரூ. 11.02 கோடியாகும்.

நியாய விலைக் கடைகள், உப யோகிப்போர் கூட்டுறவு பண்டக சாலை, நிலமில்லாத விவசாயிகள், ரிக்ஷா ஓட்டுவோர், கைத்தறி நெசவாளர்கள், சிறு பாசன திட்டங் கள் போன்ற, இதுகாறும் அக்கறை செலுத்தப்படாத துறைகளில் நாட் டம் கொண்டு, நிதி உதவி செய்து, தன் சமூகப் பிரக்ஞையை நிலை நாட்டி வருகிறது, ஆந்திரா பாங்க். வாடிக்கையாளரின் வசதிக்காக மாலை நேரத்தில் செயல்படும் கிளைகள் துவக்கப்பட்டுள்ளன.

'விசா இன்டர்நேஷனல்' என்ற சர்வதேச அமைப்பில் ஆந்திரா பாங்க் அங்கம் வகிப்பதால், தன் வாடிக்கையாளர்களுக்கு அன்னிய செலாவணியான டிராவலர் செக்கு களும், கிரெடிட் கார்டுகளும் வழங் கும் வசதியை ஏற்பாடு செய்ய முடிந்திருக்கிறது. மேலும், நம் நாட்டிலேயே, தன் வாடிக்கை யாளர்களான பல்வேறு வர்த்தக நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், பொது மக்களுக்கு 'கிரெடிட்கார்டு' வசதியை உருவாக்கியுள்ளது. இதன்படி வங்கியால் அங்கீகரிக்கப் படும் நபர் தன் கார்டைக் கொண்டு, குறிப்பிட்ட கடைகளில் பொருள் வாங்குவதற்கும், குறிப்பிட்ட உண வகங்களில் தங்கி உண்பதற்கும் தற்காலிகக் கடன் வசதி செய்யப் படுகிறது. நிச்சயமாக, இது ஒரு புதிய முயற்சியே!

## கனரா பாங்க்

75 ஆவது ஆண்டை எய்தி யுள்ள மற்றுமொரு வங்கி, கர்நாடகத்தின் தென்கனரா மாவட் டம் கண்ட இன்னுமொரு வங்கி, கனரா பாங்க்.

இந்தியா முழுவதும் 1300க்கு மேற்பட்ட கிளைகளை உடைய இந்த வங்கி, தமிழகத்தில் மட்டும் 300 கிளைகளைக் கொண்டிருக்கிறது. இந்த மாநிலத்தில் இதன் வைப்புத் தொகை ரூ. 320 கோடி, கடன் உதவித் தொகை ரூ. 200 கோடி என்ற அளவு கோல்கள், அதன் வளர்ச்சியைக் குறிக்கின்றன. நிதி உதவித் தொகையில் 60 விழுக் காடு, புறக்கணிக்கப்பட்ட துறை யினர்க்கும், முன்னுரிமை தரப்பட வேண்டிய துறையினர்க்கும் அளிக் கப்பட்டுள்ளது என்று தெரியும் போது, இதன் சமூக நோக்கு நன்கு புலனாகிறது.

கிராமப்புற வளர்ச்சிக் கென்றே ஒரு டிரஸ்ட் அமைத்து, ஏழை எளிய கிராம மக்களுக்குத் தற்சார்பு அளிக்கும் பணியைத் தீவிரப் படுத்தியுள்ளது, இந்த வங்கி. கை வினைஞர்களும், சிறு தொழிலாளர் களும் நல்வாழ்வு பெற ஒத்துழைக் கிறது, இந்த வங்கி. மேலும் கிரா மங்களில் உள்ள ஊனமுற்றோரின் மறு வாழ்விற்காகவும் நிதி வழங்கு கிறது.

1969ல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுள் ஒன்றான இந்த வங்கி தமிழகத்தில் மட்டும் 300 கிளைகளைக் கொண்டிருக்கிறது. டிபாஸிட் வைத்திருப்போர் 18 லட்சம் என்றால், கடனுதவி பெற்றோர் 4 லட்சம் பேர் என்ற அளவில், இதன் சேவை பெருகியுள்ளது. நிதி உதவியில் 58.2 சதவிதம், சிறு தொழிலகங்கள், விவசாயிகள், வாகன ஓட்டிகள், சிறு வியாபாரி கள், மருத்துவர்கள், வழக்கறிஞர் கள், ஏற்றுமதித் தொழிலகங்கள் போன்ற துறையினருக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

தமிழகத்தில் விவசாயத்திற் கென்று ரூ. 68.2 கோடி நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. சலுகையான வட்டி விகிதத்தில் அளிக்கப்பட்ட கடன் தொகை ரூ. 1.2 கோடி யாகும்.

சென்னை மாநகராட்சியுடன் இணைந்து பல வளர்ச்சிப் பணி களுக்குச் செயல் வடிவம் தந்த பெருமை கனரா வங்கிக்கு உண்டு,

சமூக நடவடிக்கைகளிலும் பங்கு பெறும் வகையில் இந்த ஆண்டு குழந்தைகள் தினத்தை யொட்டி, சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்காக விளையாட்டுப் போட்டிகளை நடத்த முனைந்துள்ளது, இந்த வங்கி.

## கார்ப்பொரேஷன் பாங்க்

**1906ல்** கர்நாடக மாநிலத்தில், உடுப்பியில் பிறந்த போது இதன் நாமகரணம் கனரா பாங்கிங் கார்ப்பொரேஷன் என்பதாகும். மறைந்த ஹாஜி அப்துல்லா காசிம் என்பவரின் தலைமையில், பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் பத்துப் பேரின் கூட்டு முயற்சியாகும், இதன் அமைப்பு.

ஒரு சிறிய கிராமத்தில், அந்த மக்களின் சேமிப்பை வளர்ப்பதற் காக ஆரம்பிக்கப்பட்டது கார்ப் பொரேஷன் பாங்க். படிப்படியாக வளர்ந்த பிறகே, பெரு நகரங்களில் செயல்படத் தொடங்கியது இந்த வங்கி.

கூர்க் பகுதி தோட்ட முதலாளி களுக்கும், மெர்க்காராவின் வர்த் தகர்களுக்கும் வங்கி வசதியைத் தந்த முன்னோடி, கார்ப்பரேஷன் பாங்க். மூவாயிரம் ரூபாய் வைப்புத் தொகையுடன் தொடங்கிய இந்த வங்கி, 1981 செப்டம்பர் இறுதியில் ரூ. 293.21 கோடி வைப்புத் தொகை பெற்றிருக்கும் அளவிற்கு, மெல்ல மெல்ல முன்னேறி வந்துள் ளது. வங்கியின் 336 கிளைகளில் பெரும்பாலானவை, கிராமப்புறங் களில் தான் அமைந்துள்ளன. இதனால் தேசிய திட்டங்களைச் செயல்படுத்துவது எளிது. தமிழ் நாட்டில் இந்த வங்கியின் வைப்புத் தொகை ரூ. 1943.49 லட்சம். கடனுதவித் தொகை ரூ. 1435.35 லட்சம் என்றறிகையில், நம் மா நிலத்திற்கு இந்த வங்கி செய்துள்ள சேவை புரிகிறது.

1976—77ஆம் ஆண்டில் ஏற்று மதி நிதிக்கான தேசிய விருதைப் பெற்றது இந்த வங்கி. பம்பாயில் உள்ள இதன் அன்னிய செலா வணிப் பிரிவு, உலகின் முக்கிய வர்த்தக மையங்களுடன், செயற் கைக் கோள் மூலம் தொடர்பு கொள்ளும் ஏற்பாட்டை வைத்திருக் கிறது. வைர ஏற்றுமதியாளர் களுக்கென தனிப் பிரிவையும் நடத்துகிறது.

1980ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் நாள் கார்ப்பரேஷன் பாங்க், தேசிய மயமாக்கப்பட்டது.

'சர்வ ஜனு சுகினோ பவந்து' (யாவர்க்கும் வளம்) என்ற தனது கொள்கை முழக்கத்திற்கேற்ப, சமூகத்தின் எல்லா சாரருக்கும் ஏற்ற வகையில் பணி புரிந்து வரு கிறது, இந்த வங்கி.

## கர்நாடகா பாங்க் லிமிடெட்

**க**ர்நாடக மாநிலத்தில், தென் கனரா மாவட்டத்தில் உள்ள மங்களூரில் விவசாயம், கல்வி இவ் விரு துறைகளைச் சார்ந்த சில பிர முகர்களால் 1924ல் உருவாக்கப் பட்ட கர்நாடகா பாங்க், இன்று 'ஏ' வகுப்பு அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கிகளில் முக்கிய இடம் பெறுகிறது.

கடந்த ஆண்டின் இறுதியில், இந்த வங்கியின் மூலதனமும், ரிசர்வ் தொகைகளும் ரூ. 108 லட் சங்களாய் இருந்தன. வைப்புத் தொகை ரூ. 115 கோடிக்கு மேல்; கடன்தொகை ரூ. 60 கோடிவரை, என்ற நிலைகள் எட்டப்பட்டிருந் தன. ஆரம்பக் காலத்திலிருந்தே, விவசாயிகளுக்கும், எளிய தரப் பினருக்கும் நிதி உதவி செய்து வந்துள்ள இந்த வங்கி 1980 ஆம் ஆண்டின் கடைசியில் வழங்கி யிருந்த கடன் தொகையில் மூன்றி லொரு பங்கு, இந்த வகையில் அடங்கும்.

திறம்பட நிர்வகிக்கப்படும் இந்த வங்கி, பங்குதாரர்களுக்கு ஆண்டு தோறும் 12 சதவீத டிவிடெண்ட் தொகையை அளித்து வருகிறது.

தற்போது, நாடெங்கிலும் உள்ள இந்த தனியார் வங்கியின் கிளை களின் எண்ணிக்கை இருநூற்று நாற்பத்தேழு.

தலைவர் திரு பி. ரகுராம், பொது மேலாளர் திரு பி. சுந்தர்ராவ் ஆகி யோரின் தேர்ந்த மேற்பார்வையின் கீழ், இந்த வங்கி நாள்தோறும் முன்னேறி வருகிறது. பல்வகை யான சேவைகளையும் செய்யும் இந்த வங்கி, அன்னிய செலா வணித் துறையிலும் ஈடுபட் டுள்ளது. ஃ

---

**செலாவணிப் பாங்குகள்:**—அயல் நாட்டு வர்த்தகம் செய்யத் தேவைப்படும் செலா வணியை ஏற்பாடு செய்து தரும் பாங்குகள் இவை. வெளிநாட்டு வங்கிகள் செலாவணிப் பாங்குகள் எனப்பட்டன. தற்போது இந்திய நாட்டு வங்கிகளும் பிறநாடுகளில் கிளையை ஏற்படுத்தியும், வெளிநாட்டுப் பாங்குகளுடன் ஏற்பாடு செய்து கொண்டும், ஏற்றுமதி—இறக்குமதி போன்றவற்றிற்கு உதவுகின்றன.

**சர்வதேச நிதிக் கழகம்:**—1956-ல் உலகப் பாங்கின் இணைக் கழகமாகத் தோன்றிய இந்த நிறுவனம், மேம்பாடு அடைந்து வரும் நாடுகளின் தனியார் துறைகளில் முதலீடு செய்வதற்கும், நிர்வாகத் துறையில் உலகம் முழுவதும் இணைப்பு ஏற்படுத்துவதற்கும், மற்ற நாட்டினர் உறுப்பினர் தேசங்களில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிப்பதற்கும் உதவி செய்கிறது.

இலத்தீன் மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளுக்கே பெரும்பாலும் இதுவரை உதவி செய்த இந்தக் கழகத்தின் பார்வை தற்போது ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் மீது திரும்பி இருக்கிறது.

# வங்கிகளும் பொருளாதார வளர்ச்சியும்

''கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினுன் இலஙகை வேந்தன்'' என்ற கவிஞரின் வரிகள் ரொம்ப பிரசித்தம். அதைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. கடன்பட்டவன் துன்பம் எத்தகையது என்று அவர் அந்த வரிகளில் அழகாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிருர்.

அது எப்படி இருந்தாலும், கடன் கொடுப்பதும் கடன் பெறுவதும் தொன்று தொட்டு இருந்து வரும் பழக்கம் என்று அறியலாம். அதுதான் முக்கியம். தனிப்பட்டவர்கள் கொடுக்கல் வாங்கல் பழக்கம் கால ஒட்டத்தில் பல மாற்றங்களே அடைந்து இன்று தடன் வழங்கும் நிறுவனங்களாக உருப்பெற்று இருக்கின்றன.

அதுவே இன்று வங்கிகள் என அழைக்கப்படுகின்றன.

முற்காலத்தில் கடன் வாங்குவதற்கும் ஒருவனுக்குச் சில தகுதிகள் இருக்க வேண்டும் என்று கருதினுர்கள். அதாவது கடனைத் திரும்பிச் செலுத்துவதற்குப் போதிய சொத்து மதிப்பு அல்லது நாணயம் அவர்களிடம் இருக்கிறதா என்று பார்த்தார்கள். அதுதான் இந்த விஷயத்தில் முக்கிய அளவுகோலாகக் கருதப்பட்டது.

ஆனல் இன்று கடன்பெறும் தகுதியை மதிப்பிட யாதொரு முழுமையான அளவுகோ லும் இல்லே. உங்களுக்குக் கடன் கிடைப்பது, காலத்தையும் வாய்ப்பையும் பொறுத்துள்ளது. இது ஆளுக்கு ஆள் மட்டுமல்ல, நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது.

கீன்ஸ் என்பவர் ஒரு பொருளாதார வல்லுனர். அவர் கூற்றுப்படி பொருளாதார வளர்ச்சிக்குக் கடன் ஒரு முக்கிய சாதனமாகும். அதற்கு மேலாக இன்றைக்கு வங்கிகளுக்குச் சமுதாயப் பொறுப்புள்ளது. அவை கடன் வழங்குவதோ அல்லது கடன் பெறுவதோ அல்லது இவ்விரண்டையும் மட்டும் செய்வனவோ அல்ல. சமுதாயத்தில் நலிந்த வர்க்கத்தினருக்குக் கடன் வழங்கி, சமுதாய நீதி (சமுதாய சமத்துவம்) ஏற்படுத்துவதில் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

1969ஆம் ஆண்டில் வாணிப வங்கிகள் நாட்டு உடமையாக்கப்பட்ட பின்புதான் வங்கிகளின் சமுதாயப் பொறுப்பு முக்கியத்துவம் பெற்றது. இது வங்கிகளின் கிளைகள் அதிகமாவதற்கு வழி வகுத்தது.

1960ஆம் ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டு வரையில் வங்கிகளின் கிளைகளின் பெருக்கம் மிகவும் குறிப்பிடத்தக்கது. 1955ஆம் ஆண்டில் மொத்தம் 2858 கிளைகளாக இருந்தது. ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து 1969ல் 8262 கிளைகளாகி 1980 ஜுன் மாதத்தில் 32419 கிளைகளாக வளர்ச்சி அடைந்துள்ளன.

மேலே குறிப்பிட்ட கால வரம்பில் 1,37,000 மக்கள் தொகைக்கு ஒரு கிளை வங்கியாக இருந்தது, 65,000 மக்கள் தொகைக்கு ஒரு கிளையாக மாறி அது மேலும் 17,000 மக்மள் தொகைக்கு ஒரு கிளை வங்கியாக வளர்ச்சியடைந்துள்ளது. இன்று தெருவுக்கு ஒரு வங்கி இருக்கிறது.

இன்றைக்கு நாட்டு உடமை ஆக்கப்பட்ட மிகச் சிறிய வங்கிக்குக்கூட குறைந்தது 520 கிளைகள் இருக்கையில், 1955ஆம் ஆண்டில் இந்திய இம்பீரியல் வங்கிக்குச் சுமார் 470 கிளைகள்தாம் இருந்தன, என்பதைக் கவனிக்கும் போது வியப்பாக இருக்கிறது.

## குறிப்பிடத்தக்க கிளைகளின் பெருக்கம்.

1955ஆம் ஆண்டு ஜுன் மாதம் இந்திய இம்பீரியல் வங்கி (Imperial Bank of India) பாரத வங்கியாக (State of Bank of India) மாற்றம் செய்யப் பட்டபோது கிளைகளின் சீரான பெருக்கத்திற்குத் திட்டமிடப்பட்டு, முதல் ஐந்தாண்டு காலத்தில் 400க்குக் குறையாத கிளைகள் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வங்கி திட்டமிடப்பட்ட குறியீட்டை அடைந்தது மட்டுமல்லாமல் அதற்கு மேலாக 16 கிளைகளைத் தொடங்கியிருந்தது. ஐந்தாண்டு காலத்தில் இந்த வளர்ச்சி, வங்கிகளின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

தொடங்கப்பட்ட கிளைகளில் 286 கிளைகள் மக்கள் தொகை 25,000க்கு குறைவாக உள்ள ஊர்களில் ஆரம்பிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான கிளைகளைப் பாரத வங்கி தொடங்கியது. தற்போது நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவலகாச் சுமார் 5300 கிளைகள் உள்ளன.

நா. மகாலிங்கம் பி. எஸ்சி. எப். ஐ. இ.

சுதேச சமஸ்தானங்களின் ஏழு வங்கிகள் பாரத வங்கியியின் (State Bank of India) நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட பிறகு, அவைகளும் ஏராளமான கிளைகளைத் தொடங்கின.

அவ் வங்கிகளின் கிளைகள் 1960ஆம் ஆண்டில் 360-லிருந்து 1980ஆம் ஆண்டில் 2447ஆக உயர்ந்துள்ளது. 14 பெரிய வாணிப வங்கிகள் நாட்டு உடமையாக்கப்பட்டபின், அவைகளும் ஏராளமான கிளைகளைத் தொடங்கின. நாட்டு உடமையாக்கப்பட்ட 14 வங்கிகளின் கிளைகள் ஜுன் 1969ஆம் ஆண்டில் 4134தான் இருந்தன. ஜுன் 1980ல் அந்த வங்கிகளின் கிளைகள் 18082ஆக உயர்ந்துள்ளன.

ஜுன் 1980ல் எல்லா வாணிப வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 32419ஆக உயர்ந்துள்ளது. சராசரியாக ஒரு ஆண்டுக்கு 2200 கிளைகள் வீதம் வியத்தகு வகையில் வளர்ச்சியடைந்துள்ளன.

## கடன் வழங்குதலில் அதிகரிப்பு

நாட்டு உடமையாக்கப்பட்ட வங்கிகள் முன்னுரிமை பெற்ற துறைகளுக்கு வழங்கிய கடன் தொகை நாட்டு உடமையாக்கப்பட்ட பின் பதினொரு மடங்குக்கு அதிகமாக உயர்ந்துள்ளது.

அதாவது ரூ. 441 கோடியிலிருந்து ரூ. 5242 கோடியாக உயர்ந்துள்ளது, வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை முன்றரை லட்சத்திலிருந்து 102 லட்சமாக சுமார் 28 மடங்குகள் உயர்ந்துள்ளன.

நாட்டு உடமையாக்கப்பட்ட வங்கிகள் விவசாயத் துறையில் தனிக் கவனம் செலுத்தி வருகின்றன. விவசாயத் துறைக்கு வழங்கப்பட்ட தொகை ஜுன் 1969ல் முன்னுரிமை பெற்ற துறைக்கு வழங்கிய தொகையில் 36.2 சதவீதமாகும் (ரூ. 162 கோடி). இது ஜுன் 1979ல் 420.8 சதமாக (ரூ. 2245 கோடி) உயர்ந்துள்ளது. விவசாயத்திற்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை 13.85 மடங்காக உயர்ந்துள்ளது.

நேரடியாக விவசாயத்திற்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 40 கோடியிலிருந்து ரூ. 1667 கோடியாக, அதாவது 42.17 மடங்காக உயர்ந்துள்ளது. விவசாயத்திற்கு வழங்கப்பட்ட மறைமுகக் கடன் ஜுன் 1969ல் 75.3 சதவிதத்திலிருந்து ஜுன் 1979ல் 24.85 சதவீதமாகக் குறைந்துள்ளது.

இவ் விறக்கத்திற்கு, கிராமப் புறங்களிலும், சிறு நகர்ப் புறங்களிலுமுள்ள நாட்டு உடமையாக்கப்பட்ட வங்கிகளின் கிளைகள் விவசாயத்திற்கு நேரடிக் கடனுதவியில் கவனம் செலுத்தியதே காரணமாகும்.

அரசு நிறைவேற்றும் வளர்ச்சித் திட்டங்களில் இவ்,வங்கிகள் முக்கிய அங்கம் வகித்து வருகின்றன. கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கோளாகக் காட்டலாம்.

1) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்.

2) வறட்சிப் பகுதி நிவாரணத் திட்டம்.

3) பாசனப் பகுதி அபிவிருத்தித் திட்டம்.

4) பழங்குடியினர் சிறுவளர்ச்சித் திட்டம்.

5) கால்நடை அபிவிருத்தி சிறப்புத் திட்டம்.

6) கோழி வளர்ப்பு சிறப்புத் திட்டம் முதலியன.

கிராமப் புறங்களில் வங்கிகள் பின்பற்றும் தற்போதைய கொள்கை, வரையறுக்கப்பட்ட பகுதிகளில் (Area Approach) தேவைப்பட்ட எல்லாவிதக் கடன் தேவைகளையும் பூர்த்தி செய்து அவை சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா, என்பதையும் கண்காணிப்பதாகும்.

இத்திட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட கிராமம் அல்லது சில கிராமங்களின் தொகுப்பில் பொருளாதார ஆய்வு செய்து ஒரு கிராமம், அல்லது கிராமங்களின் தொகுப்பை எடுத்துக் கொண்டு கடன் வழங்கக்கூடிய தொழில்களுக்கும் விவசாயிகளுக்கும் தேவைப்பட்ட கடன் உதவிகளையும் வழங்குவதாகும்.

## இந்திய ரிசர்வ் வங்கியின் கொள்கைகள்

கடந்தகால செயலாக்கத்தை மனதிற் கொண்டு, முன்னுரிமை பெற்ற துறைகளுக்கு வழங்கப்படும் கடன் தொகையில் குறைந்தது 40 சதவீதம் விவசாயத் துறைக்கு ஒதுக்க வேண்டுமென நாட்டு உடமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

1985ஆம் ஆண்டில் முன்னுரிமை பெற்ற துறைகளுக்கு வழங்கப்படும் மொத்தக் கடனில் விவசாயத் துறையின் பங்கு 40 சதவீதமாக இருக்கும். எனவே 1985ஆம் ஆண்டில் விவசாயத் துறைக்கு வழங்கப்படும் கடன் மொத்தக் கடன் தொகையில் குறைந்தது 16 சதவீதமாக இருக்கும்.

தற்போது வங்கிகள் விவசாயத் துறைக்கு வழங்கும் கடன்களின் சதவீதம் 8-லிருந்து 28 ஆக உயர்ந்துள்ளது.

1983ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்துக்குள் விவசாயத் துறைக்கு வழங்கப்படும் கடன் தொகையில் குறைந்தது 50 சதவீதமாவது அத்துறையில் ஈடுபட்டுள்ள நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி பொது வங்கிகளுக்கு அறிவுறுத்தி,

இருக்கிறது. கீழ்க்கண்ட பிரிவினர் விவசாயத் துறையில் நலிந்தோராகக் கருதப்படுவர்.

1) 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலங்களை உடையவர்; அல்லது நிலமற்ற விவசாயக் கூலி.

2) ரூ. 10,000-க்கு மிகாத கடன் தேவைப்படும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ளோர்.

## கிராமக் கைவினைஞர்களுக்குக் கடன் உதவி

மேல்நிலை நிதி உதவி நிறுவனத்தின் செயற்குழு தயாரித்த அறிக்கையில் 1982-83ம் ஆண்டுவாக்கில் கிராமக் கைவினைஞர்களின் கடன் தேவை ரூ. 2620 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி அதிகபட்சமாக வழங்கப்படும் கடன் தொகையில் பெருவாரியான தொகை, நலிந்த பிரிவினருக்குப் போய்ச் சேரும்.

தற்போது இது 6 சதவீதமாக உள்ளது எனக் கணக்கிடப் பட்டுள்ளது. 1985க்குள் இது குறைந்தது இரண்டு மடங்காக்கப்பட வேண்டுமென இந்திய ரிசர்வ் வங்கி விரும்புகிறது. இதன்படி மொத்தக் கடன் தொகையில் 12.4 சதவீதம் நலிந்த பிரிவினர்களுக்கு ஒதுக்க வங்கிகள் திட்டமிட வேண்டும்.

இந்தியாவில் சுமார் 40 லட்சம் கைத்தறிகளும் அதனைச்சார்ந்து ஒரு கோடி நெசவாளர்களும் உள்ளனர். அவர்களில் சுமார் 40 சதவிகிதத்தினர் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கைத்தறி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிதி உதவி நிறுவனங்களால் ஒரு பெருந்தொகை கடன் உதவியாக வழங்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. 1978-83 காலத்திற்குரிய நிதித் தேவை ரூ. 362 கோடியிலிருந்து ரூ. 454 கோடியாக இருக்கும். தற்போது வழங்கிய கடன் தொகையின் அளவு ரூ. 13 கோடியிலிருந்து, இக் குறியீட்டை எட்டுவதற்கு பொதுத்துறை வங்கிகள் முனைப்பாகச் செயல்பட வேண்டியிருக்கும்.

அதிகப்படியான நபர்களை இத் திட்டத்திற்குள் கொண்டுவரும் பணியை நிறைவேற்றச் சில முக்கிய அம்சங்களைக் கவனிக்க வேண்டியுள்ளது. வங்கிப் பணியைப் பெருமளவில் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது.

வங்கி மேலாளர்கள் வாடிக்கையாளர்களுக்குப் பலவகைப்பட்ட சேவைகள் செய்ய வேண்டியிருக்கும். சாத்தியப்படக் கூடியதாகவுள்ள சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கு 90 சதவீதம் நிதி உதவி அளித்து நீண்ட காலத் தவணை முறையில் திருப்பித்தர ஏற்பாடு செய்யலாம்.

கிராமக் கைவினைஞர்கட்கு வழங்கப்படும் கடனை வசூலிப்பதில் தாமதம் மற்றும் வசூல் செய்யமுடியாத சூழ்நிலை இருப்பதால் வங்கிகள் கடன் வழங்குவதில் தயக்கம் காட்டலாம்.

இதைத் தவிர்க்க வாரா வாரம் கடன் வசூலிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தலாம். கைவினைஞர்கள், சுயவேலை வாய்ப்பு உள்ளவர்கள், சிறு தொழிலில் ஈடுபட்டுள்ளோர் ஆகியோருக்குக் கடன் வழங்கச் சிறு நிறுவனங்களை வங்கிகள் நியமித்து அவைகள் மூலம் கடன் வழங்கலாம். இச்சிறு நிறுவனங்களுக்கு 2 முதல் 3 சதவீதம் பணிச் செலவாக வழங்கலாம், கடன் வசூலை அதே நிறுவனங்களின் மூலம் செயல்படுத்தலாம். இதனால் வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.

**சேமிப்பு வங்கிகள்:**—குறைந்த வருமானம் பெறுபவர்கள் தங்கள் எதிர்காலத் தேவைகளுக்குச் சிறுசேமிப்பு மூலமே நிதி சேகரிக்க முடியும். இந்தச் சிறு தொகைகளைப் பெற்றுக் கொண்டு சேமிப்போர்களுக்குத் தேவையான போது கடன் கொடுப்பது, நல்ல வட்டி அளிப்பது, போன்றவற்றால் மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை உண்டாக்குகின்றன. நம் நாட்டில் போஸ்ட் ஆபீஸ் சேமிப்பு வங்கிகள் கிராமப் புறங்களில் சிறந்த சேவை செய்கின்றன. நகர்ப்புறங்களில் வர்த்தகப் பாங்குகள் தனியாகச் சேமிப்புக் கிளைகளை ஏற்படுத்தி இருக்கின்றன. கூட்டுறவு வங்கிகள், கிராமீயப் பாங்குகளும் சேமிப்புக் கணக்கை ஏற்றுப் பொதுமக்களுக்குத் தொண்டு செய்கின்றன.

**தொழில் துறை பாங்குகள்:**—தொழில் துறைக்கு நீண்டகாலக் கடன் வழங்குவதில் இப் பாங்குகள் நல்ல தொண்டு செய்கின்றன. பொதுமக்களிடம் இருந்து நீண்ட கால டெபாசிட்டுகள் பெறுகின்றன. தங்களின் பாண்டு (Bond) என்று சொல்லப்படுகின்ற பத்திரங்களை வெளியிட்டு, முதலீடு செய்பவர், அரசாங்கம் மற்றும் தொழில் அதிபர்களுக்கு இடையே பாலமாக விளங்குகின்றன.

கம்பெனிகளின் பங்குத் தொகைகளிலும், கடன் பத்திரங்களிலும் இவை முதலீடு செய்கின்றன. தவிர, கம்பெனிகள் வெளியிடும் பங்குத் தொகைகளை அன்டர்ரைட் (under write) செய்கின்றன. அதாவது அந்தப் பங்குத் தொகைகளை யாரும் வாங்காவிட்டால் இந்தப் பாங்குகள் அன்டர்ரைட் செய்த தொகைக்குப் பெற்றுக் கொள்ளும்.

— வி. எஸ்

திறமையுள்ள நெசவாளர்களுக்கு விசைத் தறி நடத்த நிதியுதவி செய்யலாம். சிறு கருவிகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வங்கிகள் கடன் உதவி வழங்கலாம். இவ் வகைத் தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு வங்கிகள் அத்தொழில்கள் சம்பந்தமான தொழில் நுணுக்கங்களையும், விற்பனை சாத்தியக் கூறுகளையும் எடுத்துக் கூறலாம்.

கடன் வழங்குவது விரிவாக இருப்பதைக் காட்டிலும் வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்கு உதவும் வகையில் இருக்கவேண்டும். அப்போதுதான் வங்கிகள் சமுகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டமைக்கு அர்த்தம் ஏற்படும்.

அமெரிக்க நாட்டில் தொழில் நுணுக்கப் பணியாளர்களின் (Technicians) சாத்தியப் படக்கூடிய திட்டங்களுக்கு வங்கிகள் ஐந் தாண்டுகள் வரையிலும், மேலும் அவர்கள் தொழில் உற்பத்தியைத் தொடங்கும் வரையிலும் நிதியுதவியளித்து உதவுகின்றன.

புதிதாகத் தொடங்கப் பெற்ற ஒரு நிறுவனம் தொழிலை ஆரம்பித்து லாபம் சம்பாதிக்கத் தொடங்கிய பிறகுதான் பொது மக்களுக்கு அந் நிறுவனத்தின் பங்குகளை (shares) அளிக்க முன்வருகிறது. அதுவரை அந் நிறுவனத்தின் நிதிப் பளுவை வங்கிகளே ஏற்றுக் கொள்கின்றன.

இம்முறையைக் குறைந்த பட்சம் இரண்டு கோடி ரூபாய்க்கும் கீழாகத் தேவைப்படும் தொழில்களுக்கு நம் நாட்டிலும் பின்பற்றலாம்.

நமது பொறியாளர்களும் தொழில் நுணுக்கப் பணியாளர்களும் திறமையும் அறிவும் படைத்தவர்கள். ஆனால் புதிய திட்டங்களைத் தொடங்க நிதி வசதி அவர்களிடம் இல்லை.

மூலப் பொருட்கள் கிடைப்பதைப் பொறுத்து அவர்களுக்குத் தகுந்த நிதி உதவியளித்தால் பல திட்டங்கள் உருவாக்க ஏதுவாகும். இம்முறையைச் செயல்படுத்தினால் நாட்டைத் தொழில் மயமாக்கும் முயற்சி விரைவு படுத்தப்படும்.

விரைவாகத் தொழில் மயமாக்கப்படுவதன் மூலமாகத்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். நிறையத் தொழில்களைத் தொடங்கினால் நிறைய வேலை வாய்ப்புகள் ஏற்படும்.

வங்கிகள்தாம் இக்காரியத்திற்கு உதவ முடியும். நமது வங்கிகளுக்குப் போதிய வசதி உள்ளது. ஆனால் அவற்றைப் பயன்படுத்த நல்ல வழிமுறைகள் உண்டாக்கப்படவில்லை. பரந்த நோக்கமும், வளைந்து கொடுக்கும் செயல்முறையும் இருந்தால் நிறையச் சாதனைகள் புரிய முடியும். எவ்வளவு விரைவில் இம் முயற்சிகளில் ஈடுபடுகிறோமோ அவ்வளவு விரைவில் நம்நாடு பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய வாய்ப்புண்டு. ஃ

## சர்வ தேச நிதி

(International Monetary Fund) உலக வியாபாரம், செலாவணிக் கட்டுப்பாட்டை நீக்குதல், அனைத்துலக நிதி ஒத்துழைப்பு, உறுப்பினர்நாடுகளுக்குக் குறுகிய காலக் கடன் தருதல் போன்ற காரணங்களுக்காக 1945-ல் தொடங்கப்பட்டது. தலைமையகம் வாஷிங்டன்.

தற்போது 140 உறுப்பினர் கொண்ட இந்த நிதி நாடுகளுக்கு நிபுணர்கள் மூலம் டெக்னிகல் உதவி அளிக்கிறது.

இந்த நிதி ஏற்படுவதற்கு முன்பு உலக வணிகத்தில் தங்கம் மற்றும் அமெரிக்க டாலர், பிரிட்டிஷ் பவுன் செலாவணிகளே ஏற்றுக் கொள்ளப்பட்டன. இப்போது இந்தப் பண்டின் ரிசர்வ் தொகை மூலமாகவும் உலக வாணிபம் செழிக்கிறது.

எஸ். டி. ஆர். (SDR) அல்லது தங்கத் தாள் (paper gold) என்று அழைக்கப்படும் ரிசர்வ் தொகையை அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், மேற்கு ஜெர்மனி ஜப்பான், இத்தாலி போன்ற 10 நாடுகள் ஏற்படுத்தி இருக்கின்றன. இது தங்கத்திற்குத் தொடர்பு இல்லாதது. இந்தப் புதிய (Special Drawing Rights) எஸ். டி. ஆர். எல்லா உறுப்பினர்களாலும் ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

**ஆசிய மேம்பாடு பாங்க்:**—ஆசிய நாடுகளின் வளர்ச்சிக்கு நிதி உதவி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான ''ஆசிய தூரக்கிழக்கு நாடுகளின் பொருளாதாரக் கழகம்'' செய்த முயற்சியால் 1966-ஆம் ஆண்டு உண்டானது இந்தப் பாங்க். மணிலா (பிலிப்பைன்ஸ்) நகரில் தலைமையகத்தைக் கொண்ட இந்த வங்கியில் இந்தியா ஜப்பானுக்கு அடுத்தபடி அதிக முதலீடு செய்திருக்கிறது.

இந்தப் பாங்கில் ஐக்கிய நாடு சபையைச் சேர்ந்த எல்லா நாடுகளும் உறுப்பினர் ஆகலாம். ஆசிய அபிவிருத்தி நிதி, பல நோக்கு விசேஷ நிதி, தொழிற்சாலை உதவி நிதி மூலம் தேசிய சாலைகள், துறைமுகம், விமான நிலையம், மின்சாரம், குடிநீர்வசதி, பாசனம் போன்ற துறைகளில் ஆசிய நாடுகளுக்கு உதவி செய்கிறது.

இந்தியா இந்தப் பாங்கில் இருந்து கடன் பெறக் கூடாது என்ற கொள்கை உடையதாக இருக்கிறது. ஏனெனில் மற்ற ஏழை நாடுகள் பயன் பெற வேண்டும் என்ற எண்ணமே காரணம்.

இந்தப் பாங்க் மற்ற வட்டாரங்கள் பெருமைப்படும்படி சர்வதேசப் பெருமை உடையதாக இருக்கிறது. ஆசிய நாடுகளுக்கு இந்த வங்கி ஒரு வரப்பிரசாதம்.

# யூனிட் டிரஸ்டும் அதன் பயன்களும்

**தோற்றம்**

பாரத யூனிட் டிரஸ்ட் 1964 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் நாளன்று 1963-ஆம் வருடத்திய ''யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா'' சட்டத்தின்படி ஒரு பொதுத்துறை நிறுவனமாகத் தொடங்கப் பட்டது.

இந்த நிறுவனத்தின் குறிக்கோள்களாவன:

1) யூனிட்டுகளை மக்களுக்கு விற்பதன் மூலம் அவர்களின் சேமிப்பை ஒன்று திரட்டுவது.

2) இச் சேமிப்புத் தொகையை இணைப்பு நிறுவனங்களில் (Corporate Sector) முதலீடு செய்வது.

3) இத்தகைய முதலீட்டின் மூலம் வரும் வருவாயை யூனிட்டுதாரர்களுக்கு மூலதனத்தின் அடிப்படையில் சமமான விகிதத்தில் பங்கீடு செய்வது.

இந்த நிறுவனம் இரு முனைச் சேவையில் ஈடுபடுகிறது. ஒன்று: நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் நிதி தேவைப்படும் தொழில் துறைகளுக்குத் தட்டாமல் நிதி உதவி கிடைக்க வகை செய்தல்; இரண்டு: சேமித்து முதலீடு செய்பவர்களுக்கு அவர்களது முதலீட்டுக்குத் தக்க பாதுகாப்பு அளித்து நல்ல வருவாய்க்கும் வகை செய்தல். இவ்வாறு செய்வதால் சிறு சேமிப்பாளர்களும் இந் நாட்டின் தொழில் முன்னேற்றத்தில் உரிய பங்கேற்க வாய்ப்புக் கிட்டுகின்றது. யூனிட் டிரஸ்டின் மூலம் முதலீடு செய்யும்போது மூலதன இழப்புக்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவு. யூனிட்டுகள் மூலம் கிடைக்கும் வருவாய் மெச்சத்தக்க அளவில் உள்ளது. மேல் நாடுகளில் யூனிட் டிரஸ்டுகள் தனியார் துறையில் இயங்குகின்றன. ஆனால் நமது நாட்டில் இந்நிறுவனம் அரசுத் துறையில் இயங்குகிறது.

**அமைப்பு:**

பாரத யூனிட் டிரஸ்டின் ஆரம்ப மூலதனம் ஐந்து கோடி ரூபாய்கள். இதற்காக முறையே பாரத ரிசர்வ் வங்கி 2·5 கோடி ரூபாயும், பாரத ஸ்டேட் பாங்க் மற்றும் அதன் துணை வங்கிகள் சேர்ந்து 0·75 கோடி ரூபாயும், ஆயுள் காப்பீட்டு நிறுவனம் 0·75 கோடி ரூபாயும், குறிப்பிட்ட சில ஷெட்யூல்ட் பேங்குகளும், நிதி நிறுவனங்களும் சேர்ந்து 1 கோடி ரூபாயும் வழங்கின.

1975-ஆம் வருடத்திய 'பொதுத்துறை நிதி நிறுவன விதிகள் திருத்தச் சட்டத்தின்'படி பாரத ரிசர்வ் வங்கி யூனிட் டிரஸ்டின் தொடக்க முதலீட்டுக்காக அளித்த தொகையான 2·5 கோடி ரூபாயும் இந் நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் பொறுத்த அதன் பொறுப்புகளும் 1976 பிப்ரவரி 16 ஆம் தேதி முதல் பாரதத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank of India)யைச் சாரும்.

பாரத யூனிட் டிரஸ்டின் பொது மேற்பார்வை, அதனுடைய விவகாரங்கள் மற்றும் பணிகளை நிர்ணயித்தலும், நிர்வகிப்பதுமாகிய பொறுப்புகள் 'அறங்காப்பாளர் குழு' (Board of Trustees) வினுடையவை. இக் குழுவில் நிதி, முதலீடு, பொருளாதார நிர்வாகம் இவற்றில் சேர்ந்த பதினொரு உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இக் குழுவின் தலைவர் (சேர்மன்) பாரதத் தொழில் வளர்ச்சி வங்கியின் ஆலோசனையுடன் இந்திய அரசால் நியமிக்கப்பட்டு முழு நேரமும் பணி புரிகிறார். 'எக்ஸிக்யூடிவ் டிரஸ்டி' எனப்படும் நிர்வாகக் காப்பாளர் மற்றும் நான்கு டிரஸ்டிகள் மேற்படி தொழில் வளர்ச்சி வங்கியால் நியமிக்கப்படுகின்றனர். ரிசர்வ் பேங்க், ஸ்டேட் பாங்க் மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் முறையே ஒவ்வொரு டிரஸ்டியை நியமிக்கின்றன. மீதமுள்ள இரு டிரஸ்டிகள் யூனிட் டிரஸ்டின் தொடக்க மூலதனத்தில் பங்கேற்றுள்ள இதர நிறுவனங்களால் நியமிக்கப் படுகின்றனர்.

அறங்காப்பாளர் குழுவின் அங்கீகாரம் பெற்ற விஷயங்களில் செயல்படுவதற்காக ஒரு நிர்வாகக் குழு உள்ளது. இக் குழுவில் சேர்மன், நிர்வாகக் காப்பாளர் மற்றும் பாரதத் தொழில் வளர்ச்சி வங்கியால் நியமிக்கப் பட்ட இரண்டு டிரஸ்டிகள் உள்ளனர்.

பாரத யூனிட் டிரஸ்டின் தலைமை அலுவலகம் பம்பாயில் உள்ளது. கிளை அலுவலகங்கள் பம்பாய், கல்கத்தா, சென்னை மற்றும் புது தில்லியில் உள்ளன. விரைவில் கேரள மாநிலத்தில் உள்ள திருச்சூரிலும் சண்டிகர் மாநிலத்தில் உள்ள லூதியானாவிலும் அலுவலகங்கள் திறக்கப்பட விருக்கின்றன.

வி.எம். முகமது மீரான்
துணைப் பொது மேலாளர்
பாரத யூனிட் டிரஸ்ட், சென்னை.

யூனிட்டுகள் வாங்குவதற்கான விண்ணப்பங்கள் யூனிட் டிரஸ்டின் அலுவலகங்கள் தவிர முன்னணியிலுள்ள எல்லா பேங்குகளின் கிளை அலுவலகங்களிலும், குறிப்பிடப்பட்ட தபால் அலுவலகங்களிலும் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. யூனிட்டுகளின் விற்பனையை ஊக்குவிக்கச் சுமார் 600 ஏஜெண்டுகளும் 500 புரோக்கர்களும் உள்ளனர். அண்மையில் சில மாவட்டங்களில் தலைமைப் பிரதிநிதிகள் (Chief Representatives) நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பொது மக்களுக்கு யூனிட்டுகளைப் பற்றிய தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி யூனிட்டுகள் விற்பனையைப் பெருக்க ஆவன செய்கிறார்கள்.

## யூனிட் திட்டம் 1964 :

1964 ஜூலை மாதம் முதல் தேதியன்று யூனிட் டிரஸ்ட், யூனிட் விற்பனையைத் தொடங்கியது. ஒரு யூனிட்டின் முக மதிப்பு ரூபாய் பத்து. யூனிட்டுகள் வாங்குவோர் குறைந்தது பத்து யூனிட்டுகளோ அல்லது பத்தின் மடங்காகவோ வாங்க வேண்டும். விற்பனை விலை அவ்வப்போது அறிவிக்கப்படும். தொடக்கத்தில் யூனிட் ஒன்றுக்கு ரூபாய் பத்தாக இருந்த விற்பனை விலை, நாளடைவில் யூனிட்டுகளின் மதிப்புக்கேற்றவாறு உயர்ந்து தற்போது ரூபாய் 12.25 ஆக உள்ளது.

யூனிட்டுதாரர் எப்போது வேண்டுமானாலும் யூனிட்டுகளை யூனிட் டிரஸ்டிடமே திரும்ப விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாம். இதற்கான விலை (Repurchase price) அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்படுகிறது.

யூனிட்டுகளை எப்போது வாங்கியிருந்தாலும் சரி, அவை ஜூன் மாதம் 30-ஆம் தேதியன்று நிலுவையில் இருந்தால், அந்த வருடத்திய டிவிடெண்டு குறிப்பிட்ட சதவிகிதத்தில் முழுமையாக அளிக்கப் படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் யூனிட்டுகள், பிரதி வருடம் ஜூலை மாதத்தில் பிரத்யேகமான சலுகை விலையில் விற்கப்படுகின்றன.

1964-65-ஆம் ஆண்டுக்கு 6·1% ஆக இருந்த டிவிடெண்டு சீராகப் பெருகி 1980-81-ஆம் ஆண்டுக்கு 11·5% ஆக உயர்ந்துள்ளது. வரவிருக்கும் ஆண்டுகளில் டிவிடெண்டு மேலும் உயர வாய்ப்பு உள்ளது.

## விலை மதிப்பீடு :

விற்பனை மற்றும் திரும்பப் பெறுவதற்கான விலைகள் குறிப்பிட்ட விதிகளின் (formula) அடிப்படையில் அவ்வப்போது நிர்ணயிக்கப் படுகின்றன. யூனிட் டிரஸ்ட் ஒரு பரஸ்பர நிதி. அதற்கேற்ப யூனிட் தாரர்கள் இந் நிறுவனத்தின் வருமானத்தில் பங்கேற்கும் அதே நேரத்தில், இதன் செலவினங்களிலும் பங்கேற்கின்றனர். இதே அடிப்படையில் தற்போது யூனிட்டுகளை வாங்குபவர்கள் தங்களுக்கு முன்னர் வாங்கியவர்களுக்குச் சமமான அந்தஸ்தையும் டிவிடெண்டையும் பெறுவதற்காக, ஏற்கனவே இந் நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ள செலவுகளுக்காகவும் இதற்குக் கிடைத்த வருமானத்திற்காகவும் உரிய பங்கைச் செலுத்த முன் வர வேண்டியிருக்கிறது.

யூனிட்டுகளின் விற்பனை விலை கீழ்க் கண்டவாறு நிர்ணயிக்கப்படுகிறது :

யூனிட் டிரஸ்ட் செய்துள்ள முதலீடுகளின் தற்போதைய மதிப்பு கணக்கிடப்பட்டு நிலுவையில் உள்ள யூனிட்டுகளின் மொத்த எண்ணிக்கையால் வகுக்கப் படுகிறது. இவ்வாறு பெறப்படும் தொகை அடிப்படை விலையும் நிறுவனத்திற்குக் கிடைக்க இருக்கும் வருமானம், மற்றும் முதலீடு செய்வது சம்பந்தப்பட்ட செலவுகளுக்கான உரிய பங்கைச் சேர்த்து, விற்பனை, விலை நிர்ணயிக்கப்படுகிறது.

யூனிட்டுகளை யூனிட் டிரஸ்ட் நிறுவனமே திரும்பப் பெறுவதற்கான விலை (Repurchase price) நிர்ணயிக்கப் படும்போது மேற்கூறிய படி, நிர்ணயிக்கப்பட்ட விலையிலிருந்து யூனிட் டிரஸ்டிடமுள்ள செக்யூரிட்டிகளை விற்பதற்காகும் செலவு கணக்கிடப்பட்டுக் கழிக்கப் படுகிறது. எனவேதான் யூனிட்டுகளின் விற்பனை விலையை விட, திரும்பப் பெறுவதற்கான விலை குறைவாக இருக்கிறது.

## மறு முதலீட்டுத் திட்டம் :

1966 ஆம் ஆண்டில் இத் திட்டம் தொடங்கப்பட்டு, யூனிட்டுதாரர்கள் தங்களுக்குக் கிடைக்கவிருக்கும் டிவிடெண்டுக்கான பணத்திற்குப் பதிலாக ஜூலை மாதத்தில் சலுகை விலையில் யூனிட்டுகளைப் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் யூனிட்டுகள் டிவிடெண்ட் தொகைக்குச் சம மதிப்புடையவையாக ஜூலை மாதச் சலுகை விலையில் 3 தசமத்தானத் திருத்தமாக ஒதுக்கப் படுகின்றன (Allotted). ஒவ்வோராண்டும் இத்தகைய ஒதுக்கீடு பற்றிய தகவல் யூனிட்தாரர்களுக்கு அனுப்பப்படுகிறது.

## குழந்தைகள் வெகுமதித் திட்டம் :

1970-ல் தொடங்கப்பட்ட இத் திட்டத்தின் கீழ் 15 வயதுக்குட்பட்ட குழந்தைக்கு வெகுமதியாக யார் வேண்டுமானாலும் யூனிட்டுகள் வாங்கிப் பரிசளிக்கலாம். விற்பனை விலை, டிவிடெண்டு யாவும் யூனிட் திட்டம் 1964ன் படியே ஆகும். இந்த வெகுமதித் திட்டத்தின் கீழ் குறைந்தது 50 யூனிட்டுகளாவது வாங்க

வேண்டும். ஐம்பதுக்கு மேற்பட்டு பத்தின் மடங்காக வாங்கலாம். அக் குழந்தை 21 வயது முடிக்கும் வரையில் வருடாந்திர டிவிடெண்டு யூனிட்டுகளாகவே மறு முதலீடு செய்யப்படும். 21 வயது முடிந்தவுடன் அப்போதுள்ள திரும்பப்பெறும் விலையின்படி நிலுவையில் உள்ள யூனிட்டுகள் காசாக்கப்பட்டு அக் குழந்தைக்கு அளிக்கப்படும். பெண் குழந்தைகள் 18 வயது முடிவில் பணம் பெற்றுக் கொள்ளும் சலுகை உண்டு.

இத் திட்டத்தின் கீழ் சிறப்பான பரிசுக் குலுக்கல்கள் அவ்வப்போது நடைபெறுவதால் குழந்தைகள் நல்ல பரிசுகள் பெறும் வாய்ப்பு உண்டு. வெகுமதி அளித்தவரே விரும்பினும் அவ்வெகுமதியைத் திரும்பப் பெற முடியாது. குறிப்பிட்ட காலம் முடிந்த பிறகே குழந்தைக்குப் பணம் அளிக்கப்படும். எனவே திருமணம், உயர்கல்வி இவற்றுக்காகத் திட்டமிட்ட முறையில் சேமிக்க இது திறம் பட்ட நல்ல திட்டம்.

இத் திட்டத்தில் சில விசேஷமான முன்னேற்றங்களைச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

## யூனிட் திட்டம் 1971 :

ஆயுள் காப்போடு இணைந்த யூனிட் திட்டம் ஒரு முன்னோடித் திட்டம். இது நல்ல டிவிடெண்டும், வருமான வரிச் சலுகையும், ஆயுள் காப்பும் ஒருசேர அளிக்கின்றது. இத் திட்ட காலம் 10 ஆண்டுகள். இதில் சேர விரும்புவோர் குறைந்த பட்சம் குறியீட்டுத் தொகையான ரூபாய் 3000/- முதல் அதிகப் பட்சம் குறியீட்டுத் தொகையான ரூ.12,000-க்குள் ஒரு தொகையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தத் தொகை பத்தாண்டு காலத்தில் சமமாக ஆண்டுத் தவணையாகவோ அல்லது அரை ஆண்டுத் தவணையாகவோ செலுத்தப் படவேண்டும். (உ-ம். ரூ. 3000/– குறியீட்டுத் தொகையானல் ஆண்டுத் தவணை ரூ. 300/-; அரையாண்டுத் தவணை ரூ. 150/–).

வருமான வரிச்சட்டம் 80C பிரிவின் கீழ் இந்தத் தவணைத் தொகைகளுக்கு வைப்பு நிதிக்குச் செலுத்தும் தொகை போன்றே வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது. 1·5% முதல் 5·5% வரை வயதுக்கேற்ப மாறுபடும் ஒரு சிறு தொகையை யூனிட் டிரஸ்டு, ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் செலுத்திவிட்டு, மீதமுள்ள தொகையை யூனிட்டுகளாக மாற்றிக் கணக்கு வைத்துக் கொள்கிறது. இந்த யூனிட்டுகளின் விலை, யூனிட் திட்டம் 1964ன் கீழ் நிர்ணயிக்கப்படும் விலையினின்றும் மாறுபட்டதாகும். டிவிடெண்டு விகிதமும் மாறுபடும். வருடாந்திர டிவிடெண்டும் யூனிட்டுகளாக மாற்றப்படுகிறது. பத்தாண்டுகள் முடிவில் சேர்ந்துள்ள யூனிட்டுகளின் விலை மதிப்புக் கணிக்கப்பட்டு யூனிட்டுதாரர்க்கு அளிக்கப் படுகிறது.

இத் திட்டத்தில் சேர 18 வயதுக்கு மேல் 45½ வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். மருத்துவப் பரிசோதனை இல்லை. திட்டத்தில் சேர்ந்த மறு ஆண்டிலிருந்து அவருக்குக் குறியீட்டுத் தொகை அளவுக்கு ஆயுள் காப்பு கிடைக்கிறது.

1971–72 ஆம் ஆண்டுக்கு 7% ஆக இருந்த டிவிடெண்ட் 1980–81 ஆம் ஆண்டுக்கு 8·75% சதவீதமாக உயர்ந்துள்ளது. இதன் அடிப் படையில் ஒருவரது சேமிப்பு, பத்தாண்டு முடிவில் சுமார் 50% வளர்கிறது.

திட்ட காலத்தின் மத்தியில் விலகிக் கொள்ளவும் வழி உண்டு. அப்படிச் செய்யும் போது நிலுவையில் உள்ள யூனிட்டுகளின் மறு விற்பனை மதிப்பிலிருந்து ரூபாய் 100க்கு மேற்படாத சிறுதொகை நிர்வாகச் செலவுகளுக்காகக் கழிக்கப்பட்டு மீதம் திருப்பி அளிக்கப் படுகிறது.

இத் திட்டத்தில் சில முக்கிய மாறுதல்களைச் செய்வதன் மூலம் இதை ஊக்குவிக்க வழிவகை செய்யப்பட்டு வருகிறது. ஏற்கனவே இத்திட்டத்தில் ரூ. 12,000/– குறியீட்டுத் தொகைக்குச் சேர்ந்துள்ளவர்கள் அப்படிச் சேர்ந்த மூன்றாண்டுகள் கழிந்ததும் மறுபடி ரூ. 12,000/– தொகைக்கு சேர அனுமதிக்கப் படுவர். அப்படிச் செய்யும் போது ஆயுள் காப்போடு 'பாரத பொதுக் காப்புக் கழகம்' (G. I. C. of India) அளிக்கும் விபத்துக் காப்பும் கிடைக்கின்றது.

மற்றுமோர் திட்டம் 15 ஆண்டுகளுக்கு உள்ளதாக ஆரம்பிக்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

## வரி சலுகைகள் :

வருமான வரிச்சட்டம் 80 L பிரிவின் கீழ் யூனிட்டுகள், வங்கிச் சேமிப்புகள், கம்பெனிப் பங்குகள் முதலானவற்றிலிருந்து கிடைக்கும் வருட வருமானம் ரூ. 3000/- வரை வருமான வரியிலிருந்து விலக்கப்படுகின்றது. இதுவன்றி யூனிட்டுகளில் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் வருட வருவாய் ரூ. 2000/– வரை பிரத்யேகமாக வருமான வரி விலக்குச் சலுகை பெறுகிறது. இவ்வாறு ஒருவர் ரூ. 5000/- வரை ஆண்டு வருமானம் யூனிட்டுகளில் முதலீடு செய்வதன் மூலமாகப் பெற்று வருமான வரி விலக்கும் பெறலாம்.

சொத்து வரிச் சட்டம் பிரிவு 5ன் கீழ் யூனிட்டுகளிலும், மற்றும் குறிப்பிடப்பட்ட சொத்துகளிலும் சேர்த்து ரூ. 1·5 லட்சம் வரை சொத்து வரி விலக்கு உண்டு. இதுவன்றி யூனிட்டுகளில் மட்டுமே முதலீடு செய்யப்பட்ட

ரூ. 25,000/- வரையான தொகையும் பிரத்யேகமான சொத்து வரிச் சலுகை பெறுகிறது. மேலும் இப்பிரத்யேகச் சலுகை பெற குறிப்பிட்ட காலநியதி (அதாவது மதிப்பீடு செய்யப்படும் தேதிக்குக் குறைந்த பட்சம் 6 மாதம் முன்னதாக முதலீடு செய்யப்பட வேண்டுமென்ற நியதி) யும் கிடையாது. எனவே மதிப்பீடு செய்யும் நாளன்று கூட ரூ. 25,000/– வரை யூனிட்டுகளில் முதலீடு செய்து சொத்து வரிச் சலுகை பெறலாம்.

1956 ஆம் வருடத்திய கம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள் மற்றும் டிரஸ்டுகளுக்கும் தனிச் சலுகைகள் உண்டு. இந்திய டிரஸ்டு சட்டம் 1882 பிரிவு 20ன் கீழ் குறிக்கப்பட்ட ஒப்புதல் அளிக்கப் பட்ட பத்திரங்களில் முதலீடு செய்யக் கட்டுப் பட்ட டிரஸ்டுகள் யூனிட்டுகளிலும் முதலீடு செய்யலாம். ஏனெனில் மேற்படி சட்டத்தின் பிரிவு 20(ee)ன் கீழ் அங்கீகரிக்கப் பட்டவையாகும்.

கம்பெனிச் சட்டம் 1956ன் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள் தங்கள் மிகுதித் தொகையை யூனிட்டுகளில் முதலீடு செய்யலாம். யூனிட்டுகள் மூலம் கிடைக்கும் டிவிடெண்ட் வருமான வரிச்சட்டம் 80(M) பிரிவின் கீழ் பெறப்படும் சலுகைகளுக்கு உரியது. எனவே கம்பெனிகளுக்கு, யூனிட்டுகளில் முதலீடு செய்தால் கிடைக்கும் வருமானம் மற்றைய சலுகை பெறாத முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் காட்டிலும் மிக அதிகமாக இருக்கும்.

ஒவ்வொருவருடைய தேவையையும் பூர்த்தி செய்யத் தக்க பலவிதத் திட்டங்கள் கொண்டுள்ளதால் யூனிட்டுகள் தற்போது பிரசித்தமடைந்துள்ளன.

யூனிட் திட்டம் 1964ன் கீழ் அடங்கிய யூனிட்டுகள், குறைந்த சேமிப்புள்ளவர்களும் தங்கள் சேமிப்பைப் பாதுகாப்பாக முதலீடு செய்ய ஏற்றவையாகும்.

சேமிப்பிலிருந்து வரும் வருமானத்திற்கு வரி கட்ட வேண்டி வருபவர்களுக்கு, யூனிட்டுகளின் மூலம் கிடைக்கும் வரிச் சலுகையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, யூனிட்டுகள் மிக நல்ல வருவாய் அளிக்கின்றன என்பதில் ஐயமில்லை.

ஆயுள் காப்போடு இணைந்த யூனிட் திட்டம் வரிச்சலுகை, நல்ல வருமானம், ஆயுள் காப்பு மூன்றும் ஒரு சேர அளிப்பதால் மத்திய வர்க்கத்தினரிடையே பிரபலமாகி வருகிறது.

பின் குறிப்பு: ஜுலை 1981 க்குப் பிறகு யு.எல்.ஐ.பி. திட்டத்தில் சில முன்னேற்றங்கள். தர்ம அல்லது மத டிரஸ்டுகளுக்காகவும் சொஸைட்டிகளுக்காகவும் விசேஷத் திட்டம் 1-10-81 முதல் அமுலில் வந்திருக்கிறது.

**தமிழாக்கம்: வி. வெங்கட ரமணன்.**

# வரி தவிர்ப்பு வரி ஏய்ப்பா?

வரிகள், அதிலும் முக்கியமாக வருமான வரி, மிகவும் அதிகமாக நம் நாட்டில் விதிக்கப்படுகிறது என்றும், இவ்வளவு உயர்வாக விதிக்கப் படுவதால் இன்னும் உழைத்துப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உற்சாக உணர்வு நசித்துப் போய்விடுகிறது என்றும் பொருளாதார நிபுணர்களும், சட்ட வல்லுநர்களும் கூறுவதை நாம் அடிக்கடி கேட்கிறோம். நம்மிடையே நம் தேசத்திற்கு நற்புகழ் தந்து வாழும் சட்ட நிபுணர் திரு. பால்கிவாலாகூட, 'உலகத்திலேயே அதிக வருமானவரி விதிக்கும் தேசம் நம் தேசம்' எனக் கூறியுள்ளார். நமது கவர்ன்மெண்டாரும் வரி விதிப்பைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டே வருவதும் இந்தக் குற்றச்சாட்டுதலாலோ என்னவோ? 1964-65ல் 82·5% வரி அதிக வரி விகிதமாக இருந்தது. இப்பொழுது மிகவும் உயர்ந்த வரி 66% தான். எல்லோருக்கும் தெரிந்த இன்னொரு விஷயம், படிப்படியாக வரியில்லாத வருமான வரம்பும் உயர்த்திக்கொண்டே வந்துள்ளதுதான். பல ஆண்டுகளுக்கு முன் ரூ. 3,000க்கு மேல் உள்ள ஆதாயங்களுக்கு வரி விதிக்கப்பட்டது. இப்பொழுது ரூ. 15,000க்கு மேல்தான் வரி விதிக்கப் படுகிறது. இந்த வருஷம் பேசிய பட்ஜெட் பேச்சில் ரூ. 25,000 வரை ஒருவர் வரி செலுத்தாமல் ஆதாயத்தைத் தக்கமுறையில் பயன் படுத்திக் கொண்டு வரியைத் தவிர்க்க முடியும் எனக் கூறியுள்ளார்கள். ஆதலால் வரி தவிர்க்கும் வழி, முறையானதே எனத் தோன்றுகிறது.

வரி தவிர்ப்பு முறைகளை மக்கள்—அதிலும் உபரி வருமானமுள்ள மக்கள்—கையாளுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. எல்லாவற்றிலும் முக்கியமான காரணம் சுயநலம்தான். எவ்வளவு பணம் தன்னிடம் வைத்துக் கொள்ள முடியுமோ—கவர்ன்மெண்டிற்கு வரி கொடுக்காமல் தனது பணமாக—அவ்வளவு வைத்துக் கொள்ளலாமே என்ற எண்ணம்தான். ''நான் சம்பாதித்த பணம்-நான் வைத்துக் கொள்வது என்ன தவறு?'' என்று சமாதானம் கூறிக் கொள்ள முடிகிறது. ''கவர்ன்மெண்டிற்குக் கொடுக்கப்படும் பணம் அநாவசிய வழிகளில் வீணடிக்கப்படுகிறது—தேசத்திற்கு வேண்டிய நல்வழிகளில் பயன்படுத்தப் படவில்லை. நாம் சட்ட அனுமதிக்குள் குறைத்துக் கொடுப்பதில் தவறு ஒன்றும் இல்லை'' எனவும் தேற்றிக் கொள்ளுகின்றனர். நம் தேசத்தில் தொன்று தொட்டு வரும் கலாசாரப் பண்பினால், ''தேசத்திற்குக் கொடுக்க வேண்டிய வரி கடவுளுக்கே (கடவுள் மீது நம்பிக்கையில்லாதவர்கள், நீதிக்கே) அளிக்கும், அளிக்கப்படவேண்டிய கட்டாயக் கட்டளை'' என்ற எண்ணம் நிறையப் பேர்களுக்கு மேலோங்கியிருப்பதால் இம்மாதிரியெல்லாம் சமாதானம் கூறி மன உளைச்சலைத் (tension) தளர்த்திக் கொள்ளுகின்றனர். வரி தவிர்ப்பவர்களின் உளைச்சலைப் பற்றியே இங்குக் கூறப்படுகிறதேயன்றி, வரி ஏமாற்றுபவர்களைப் பற்றியோ, பணம் பதுக்கி வரியே கொடுக்காமல் தேசத் துரோகம் செய்யும் கள்ள மார்க்கட்காரர்களைப் பற்றியோ கூறவில்லை. வரி தவிர்ப்பவர்கள் சட்டத்திற்குள் இருந்து, சட்ட ரீதியாகச் செய்து சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாக இருப்பதால் மனத்திற்கு, ''நாம் செய்யும் காரியம் தர்ம ரீதியாக நன்னடத்தையுடையதாக இருக்கிறதா?'' என்ற எண்ணங்கள் எழுவதால் உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். அவர்களிடம் அம்மாதிரி எண்ணங்கள் உண்டாகிறதோ இல்லையோ, மற்றவர்கள், ''வரி தவிர்ப்பது தர்மரீதியான காரியமன்று; அதர்மம். நன்னடத்தை அன்று'' எனக் கூற முற்படுகின்றனர். வரி தவிர்ப்பது தர்மமா, முறையா, நன்னடத்தையா? என்றெல்லாம் இதனாலே பிரச்சனைகள் எழுகின்றன.

எழும் பிரச்சனைகளை ஆராயுமுன், இங்கு வரி ஏமாய்ப்பு (tax evasion) பற்றிக் கூறுவது முக்கியமாகிறது. வரி ஏய்ப்பு, அந்தச் சொல் கூறுவது போல் ஏமாற்றத்தில் தொடங்கவோ, முடியவோ செய்கிறது. ஏமாற்றுவது, திருடுவது, கொள்ளையடிப்பது போன்ற தீய காரியங்களில் ஒன்று; சட்ட விரோதமான காரியம். அக் காரியத்தைச் செய்பவர்கள் சமூகவிரோதிகள், சட்டவிரோதிகள். தண்டிக்கப்பட வேண்டியவர்கள். வரி ஏய்ப்பு சட்டத்தை மீறிச்செய்யும் ஒரு குற்றம்; வரி தவிர்ப்பு சட்டத்தை ஒட்டிச் செய்வது. ஏய்ப்பு சட்டத்தைப் புறக்கணிப்பது. ஏய்ப்பு தண்டிக்கப்பட வேண்டிய ஒரு குற்றம். தவிர்ப்புபோற்றப் பட வேண்டிய ஒரு ஏற்றம். ஏமாற்றுபவர்கள் தேசத் துரோகிகள். தவிர்ப்பவர்கள் முற்போக்காளர்களும், வளர்ச்சியை உண்டு பண்ணுபவர்களும் ஆவர்.

கே. வெங்கடராமன், B.A. (Hons); LLB; IRS (Retd)

வரி தவிர்ப்பது குற்றமேயன்று எனப் பல உயரிய நீதிபதிகள் தங்களுடைய சட்டத் தீர்ப்புகளில் கூறியுள்ளனர். உயர்திரு ராமபிரஸாத ராவ் (பிறகு சென்னை ஹைகோர்ட் தலைமை நீதிபதி ஆனர்.),

''வரிச் சட்டத்தில் ஒழுக்கத்திற்கு (morality) இடம் இல்லை; வருமானச் சட்டத்தின் கடின விதியே தலையோங்கி நிற்கும்.''

எனக் கூறியுள்ளார். (P. S. Kandaswamy Mudaliar *vs* C. I. T. 7 21 TR 212). சுப்ரீம் கோர்ட் நீதிபதி உயர்திரு ஷா அவர்கள் (பிறகு இவர் சுப்ரீம் கோர்ட்டிற்கே தலைமை நீதிபதி ஆனர்.),

''ஒருவருடைய வியாபார சம்பந்தமான அலுவல்களை, விதிக்கப்பட வேண்டிய வரி ஒருவருக்குப் பதிலாக பல பேர்களுக் கிடையே பகிர்ந்து சட்டப்படி விதிக்கப் பட வேண்டுமாறு, ஏற்பாடு செய்து வரியைத் தவிர்ப்பது, சட்டத்தினுல் தடைப் படுத்தப் பட வில்லை. வரி கட்டுபவர் ஏதேனும் யுக்தி செய்து வரும் ஆதாயத்தை, தனக்கு வரும் முன்பே மற்றவர்களுக்குப் போகு மாறு செய்வது சரியே. யுக்தி சரியாகப் பலன் அளிக்கிறதா இல்லையா என்பது ஒழுக்கத்தின் ரீதியாகத் தீர்மானிக்கப் படுவதில்லை; வருமான வரிச் சட்டத்தின் ஷரத்துக்களால் தீர்மானிக்கப்படுகிறது. வரிச் சட்டங்களில் உள்ள சட்டப் பூர்வ மான தடுப்புகளைத் தண்டனையில்லாமல் மீற முடியாது; ஆனுல் அவைகளைச் சட்ட ரீதியாகத் தவிர்க்கலாம்.''

எனக் கூறியுள்ளார். (C. I. T. *vs* A. Raman & Co. 6 7 1 TR 11)

நீதிபதி உயர்திரு. ஜகதீசன்:

''வரி தவிர்ப்பது வரி ஏமாய்ப்பு அன்று; அதற்கு எந்தக் கெட்ட பெயரும் இடையாது. அது சரியானது; சட்ட பூர்வமானது; நிச்சயமாக அது கெட்ட ஒழுக்கத்தின்பால் சேர்ந்தது அன்று. ஒவ்வொருவரும் தனக்கு விதிக்கப்படும் வரியின் பளுச் சுமையைக் குறைக்க, தனது அலுவல்களைச் சட்ட ரீதியாக நடத்துவது ஒழுக்கமான செயலே.''

எனக் கூறியுள்ளார். (Aruna Group of Estates *vs* State of Madras-55 ITR 642)

பம்பாய்உயர்நீதி மன்றமும்,

''எந்த மனிதனும் தன்னுடைய அலுவல் களைக் குறைந்த வரி செலுத்துமாறு நடத் திக் கொள்ள—தனது வரிப் பளுவைச் சட்ட ரீதியாகக் குறைக்க—வாய்ப்பு உடையவன். இந்த வாய்ப்புரிமையை யாரும் அவனிடமிருந்து பிடுங்க முடி யாது. ஒரு மனிதன் தன் அன்னையுடன் வியாபாரம் செய்வதில்—தன் மனைவியுடன் வியாபாரம் செய்வதை விடக் குறைந்த வரி கொடுக்கலாம் என்றுல்—அவனுக்குத் தன் அன்னையுடன் வியாபாரம் செய்யச் சட்ட ரீதியாக அனுமதி உண்டு.''

எனக் கூறியிருக்கிறது (In re : The Central Talkies Circuit, Matunga 9 I T R 44).

பிரிவி கௌன்சிலிலும் இம்மாதிரியே கூறப்பட்டுள்ளது. உயர்திரு. வைகௌண்ட் ஸம்னர், ''இம்மாதிரி வரி தவிர்ப்பது சட்டத்தின் நோக்கத்திற்குப் (Sprit) புறம்பாக வருவதை ஒட்டியிருந்தாலும், சட்ட ரீதியான காரியம்'' எனக் கூறியுள்ளார். அதற்கு விளக்கம் என அமையுமாறு,

''வரிசெலுத்துபவர்களின் வழி கடின மானது. சட்ட மன்றம் அதற்குப் புறம் பாக அவ்வழியைச் சுலபமாக்குவதில்லை''

என்று கூறியுள்ளார். (Levene *vs* I. R. C 13 T. C. 486).

பிரிவி கௌன்சிலில் லார்டு கிரீன் கூறி யுள்ளார்:

''பல வருஷங்களாகத் தங்களுடைய வரிப் பளுவை மற்றவர்களிடையே சட்ட ரீதியாக அகற்றி, தம் வரிச்சுமையைத் தவிர்ப்பவர்களுக்கும் சட்டமன்றத்திற்கும் (legislature) ஒரு சாதுர்ய யுத்தமே நடந்து வருகிறது. அந்த யுத்தத்தில் எதிரி களின் அறிவு, தீவிர ஆற்றல், திறமை இவைகளினுல் சட்டமன்றம்தான் தோல்வி யடைகிறது.'' (Hervard De Walden (Lord) *vs* I. R. C. 10 I T R Suppt 90).

சிலவே உதாரணங்களாக மேலே கூறப்பட் டுள்ளன. இந்தியாவில் ஒவ்வொரு நீதி மன்ற மும் தீர்ப்புகளில் இவ்வாறே கூறுகின்றன. கூறப்போனுல் ஒவ்வொரு தேசத்திலும் இம் மாதிரியே நீதிபதிகள் வரி தவிர்ப்பை அனுமதித்தே பேசி வருகிறுர்கள். சட்ட வல்லுநர்களாலேயே வரி தவிர்ப்பது தரும மான காரியம் என்று கருதப்படுகிறது. வரி தவிர்ப்பில் வெட்கப்படுவதற்கோ உளைச்சல் படுவதற்கோ ஒன்றும் காரணம் இல்லை என்று இதனுல் நிதர்சனமாகத் தெரிகிறது.

நம் நாட்டிலேயும் சரி; வேறெந்த வரி விதிக்கும் நாட்டிலேயும் சரி; சட்டப்படி வரி தவிர்ப்பும் வரித்திட்ட யோசனைகளும் மிகவும் கருதப்படுகின்றன; வரவேற்கப்படுகின்றன. ஆடிட்டர்களுக்கு Institute of Chartered Accountants. ''வரித்திட்ட ஆலோசனையும் வரி சமாளிப்பும்'' (Tax Planning and Tax Management) என ஒரு பாடமே வைத் துள்ளது. வரித் தவிர்ப்பைப் பற்றி எழுதப் பட்டுள்ள புத்தகங்கள் அநேகம். வரித் தவிர்ப்பு முறைகளை எவ்வாறு கடைப்பிடிப் பவர்களின் தரத்திற்கேற்றபடி, ஆலோசனை செய்யவேண்டும் என்பதற்கெல்லாம் கருத்

தரங்குகள் அவ்வப்போது அநேகம் நடக்கின்றன. அக் கருத்தரங்குகளில் நீதிபதிகளும், உயரிய பொருளாதார நிபுணர்களும் ஆடிட்டர்களும், சட்ட வல்லுநர்களும், கம்பெனி, கவர்ன்மெண்ட் உயரிய உத்தியோகஸ்தர்களும் கலந்து கொள்கின்றனர். இக் கருத்தரங்குகள் நடத்தும் கழகங்களும் மிகவும் போற்றக்கூடிய, உயரிய சிந்தையுள்ள ''Institute of Chartered Accountants'' மாதிரியுள்ள கழகங்கள், கூறப்போனல் சராசரி மாதத்திற்கு ஒரு தடவையாவது, இம்மாதிரி கருத்தரங்கு நடக்கிறது. வரி தவிர்ப்பு பூரண சட்ட ரீதியானது மட்டுமன்றி, புத்திசாலித் தனமான ஒரு விஷயம் எனவும் இது தெளிவுபடுத்துகிறது.

வரிச் சட்டங்களிலேயே பலவிதச் சலுகைகள் இருப்பதால் அச் சலுகைகளை எவ்வாறு மிகவும் அதிகமாக அடையலாம் என்ற முறைகளை ஆராய்வது, அவைகளைக் கடைப்பிடித்து ஆலோசனை கூறுவது முதலியன இக் கருத்தரங்குகளின் நோக்கங்கள். மிகவும் புத்திசாலியாயுள்ளவர்கள் ஆழ்ந்து ஆராய்வதால் சட்டத்திலுள்ள, மெலெழுந்தவாரியாகக் காணக்கூடாத ஓட்டைகளும் (loopholes) ஆராயப்படுவதால் அவ்வோட்டைகளின் அனுகூலத்தை உபயோகிக்கிறார்கள். ஆனல் இம் மாதிரி அனுகூலத்தால் அதிகப் பயன் இருக்காது. சட்டமன்றம் இந்த ''ஓட்டைகளை'' அடைத்து விடுகிறது, சில சமயம் சட்டத்தை மாற்றியமைக்கிறது. இவ்வாறு சட்டத்தை மாற்றுவது பழைய நாளிலிருந்தே அமுல்படுத்தப்படுகிறது. (Retrospective effect). இம் மாதிரி சந்தர்ப்பங்களில் 'ஓட்டையை' ஆதாரமாகச் செய்த 'தவிர்ப்பு' பயனற்றதாகப் போகிறது. உதாரணமாக வருமான வரிச்சட்டத்தின் **80J** செக்ஷன் மாற்றத்தைக் கூறலாம். செக்ஷன் **80J** புதுக் கம்பெனிகளுக்கு வரிவிலக்குச் சலுகை தருகிறது. அச் சலுகை மூலதனத்தின் (Capital) அடிப்படையில் அளவிடப்படுகிறது. ''மூலதனம்'' என்பது கம்பெனியின் சொந்த மூலதனம் என்பது சட்டத்தின் நோக்கம். கடன் வாங்கிய மூலதனம், கணக்குப்படி மூலதனம் ஆனலும் சொந்த மூலதனம் ஆகாது என்று சட்டம் எண்ணியது. ஆனல் நீதி மன்றங்களும் கம்பெனிகளும் அம்மாதிரி எண்ணவில்லை. ''மூலதனம் என்பது ஒரு கலைச்சொல்; வணிகத் துறையில் அச்சொல், போடப்பட்ட சொந்த மூலதனம், வாங்கப்பட்ட கடன் மூலதனம் இரண்டையுமே குறிக்குமாதலால், சலுகை மொத்த மூலதனத்தின் மீது அளிக்கப்பட வேண்டும்'' என நீதி மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது. இதைச் சரிப்படுத்த சட்டமன்றம் சட்டத்தை— **80J** செக்ஷனை— (retrospective effect) உடன் மாற்றியமைத்தது. பல கம்பெனிகளை இம் மாற்றம், பல வருஷங்களுக்கு அவற்றைப் பல லட்ச ரூபாய் நஷ்டத்திற்கு ஆளாக்குவதால், சுப்ரீம் கோர்ட்டில், இம்மாற்றத்திற்கு எதிராக மனுப் போட்டிருக்கின்றன. இம்மாதிரி சட்டத் திருத்தங்கள் பல தடவை ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஒவ்வொரு வருடத்திலும் இம் மாதிரி தொடர்ச்சியாக வருகின்றன். ஒரே விஷயம் பற்றியும் திருத்தங்கள் அடிக்கடி வருகின்றன. வரி தவிர்ப்போர் புத்திசாலித் தனமாகத் தவிர்க்கும் பொழுது, சட்டமன்றம் சில சமயம் சட்டத்தை மாற்றியமைக்கிறது. ''சட்டத்தை மாற்றி அமைப்பதில் தவறு இல்லை; ஆனல் பழைய நாளிலிருந்தே மாற்றுவது (retrospectively) அவ்வளவு ஒழுக்கமான செயல் அன்று. அதனலேயே ஒழுக்கம் சட்ட மன்றத்திற்கும் இல்லை; வரி தவிர்ப்பவர்களுக்கும் இல்லை'' எனக் கூறுவோரும் உண்டு. இவ்வாறு வரி தவிர்ப்பவர்களுக்கும், சட்ட மன்றத்திற்கும் அடிக்கடி மோதல் ஏற்படுகிறது. ஆனல் இந்த யுத்தத்தில், முன்பே கூறியது போல், ''எப்பொழுதும் வரி தவிர்ப்பவர்களே வெல்லுகிறார்கள்'' என ஒரு தீவிர எண்ணம் இருக்கிறது.

'சட்டத்திற்குள் சட்ட ரீதியாக வரி தவிர்ப்பதை எல்லாச் சட்ட மன்றங்களும் ஒப்புக் கொண்டாலும், சட்டமன்றத்தின் மூலமாக வரி தவிர்ப்பை அனுமதிக்கலாகாது' என குஜாராத் உயர்நீதி மன்றம் கூறியிருக்கிறது. நீதி மன்றத்தின் உதவியினல் வரி தவிர்ப்பு ஏற்பட வேண்டும் என்ற சூழ்நிலை உருவாக்க வேண்டியிருந்தால் நீதிமன்றம் அவ்வாறு உருவாக்கக் கருவியாகாது எனவும் கூறியுள்ளது. ஏனெனில் அம்மாதிரி உருவாக்குவது பொதுஜன நலத்திற்கு எதிரானது; உயர்நீதி மன்றம் அம் மாதிரி செய்யலாகாது எனக் கூறியுள்ளது. வரி தவிர்ப்புச் செயலை ஆமோதிக்கும் நீதிமன்றம் அம் மாதிரி செயலுக்குத் தான் கருவியாக உபயோகப்பட அனுமதிக்கப்படுவதற்கில்லை எனவும் கூறியிருக்கிறது. 'வரி தவிர்ப்பை உண்டாக்கும் ஒரு யுக்தியை நீதிமன்ற வழிகளால் அனுமதிப்பது, நீதி வழிகளை அசுத்தப்படுவது போல்; அம்மாதிரி நீதி மன்றம் செய்யாது' எனவும் கூறியிருக்கிறது [Wood Polymer Ltd., In re (Guj) 109 ITR 178]. மற்றவர்கள் கடைப்பிடித்தால் நியாயம், தர்மம்; தான் கடைப்பிடிக்க அனுமதித்தால் தவறு, சட்டவிரோதம் எனக் கூறுவது போல் இருக்கிறது அல்லவா? தருமர்-தருமமே தவருதவர்–எவ்வாறு துரோணாச்சாரியாரின் முடிவிற்குப் பொய்யென்று கூறாமல் கூறச் செய்யப்பட்டார் என்பது நினைவிற்கு வருகிறது.

வரி தவிர்ப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதில் தவறு ஒன்றும் இல்லை. பல வழிகள் சட்டத்தின் கீழேயே கொடுக்கப் பட்டுள்ளன. கொடுக்கப்பட்ட சலுகைகளைக் கொண்டே நிர்வாகத்தை நன்கு திட்டப் படுத்திச் செயலாக்குவதில் இது நடைபெறுகிறது. கூறப் போனல், சென்னையில் திறம்பட வேலை செய்யும்

உலக பாங்க் :— 1946-ல் தொடங்கப் பட்ட இந்தப் பாங்க் உலக உற்பத்திக்கு முதலீடு செய்வதை அதிகரித்தல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், சர்வேதச வியாபார நிதி உதவி செய்தல் போன்ற பணிகளில் உதவி செய்கிறது.

மின்சாரம், போக்குவரத்து, மீன்வளம், தொழில்துறை நுண்கலை வளர்ச்சி (டெக்னாலஜி), ஜனத்தொகைக் கட்டுப்பாடு, குடிநீர்வசதி, வடிகால் வசதி, கல்வி, சுற்றுலா போன்ற பல துறைகளுக்கு உறுப்பினர் அரசாங்கத்திற்கு உதவி அளிக்கிறது.

நிதி உதவி தவிர நிபுணர் ஆலோசனை, நிர்வாக ஆலோசனை, டெக்னிகல் துறையில் உதவி போன்றவற்றையும் தருகிறது.

சூயஸ் கால்வாய்ப் பிரச்சனை, சிந்து நதி நீர்ப் பிரச்சனை, ஜமாய்க்காவில் ஜனத் தொகைக் கட்டுப்பாடு, சுற்றுலாக் குழுக்கள் வருகை இவற்றில் பங்கு கொண்டு சமூகப் பிரக்ஞையுடன் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தது.

இந்த உலக பாங்க் அதிக வட்டி விதிக் கிறது. கடனைத் திருப்பிச் செலுத்தும் விஷயங் களில் முன்கூட்டியே விதி முறைகளைக் கறார் ஆக்குகிறது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்குத் தேவையான வகையில் நிதி வசதி அளிக்க வில்லை என்பது போன்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. ஃ

ஒரு பெரிய நிறுவனத்தால் 1975ல் உண்டாக்கப் பட்ட ஒரு கம்பெனி மிகவும் இலாபம் அடைந் தும், அதனது ஷேர் (ரூ 10யுள்ளது ரூ. 52. 50) அதிகவிலை ஏறியும் வருமான வரியே யில்லாது தனது அலுவல்களைச் செய்து கொண்டிருக் கிறது. ஒவ்வொரு வருஷமும் பங்குதாரர் களுக்கு நல்ல டிவிடெண்டு கொடுத்து வருகிறது. போனஸ் ஷேரும் கொடுத்துள்ளது. வரி டிபார்ட்டுமெண்டை ஏமாற்றியதே கிடை யாது. சட்டப்படி உள்ள சலுகைகளைத் திட்ட மிட்டு வாங்கியதால் இம்மாதிரி ஏற்பட் டுள்ளது. பங்குதாரர்களுக்கு டிவிடெண்டி லும் குறைவில்லை; பங்கின் விலை ஏற்றத் திலும் குறைவில்லை. வரி தவிர்ப்பு முறை களைச் சரியாக அனுசரித்து, அதில் மிச்சமான கணிசமான தொகையை வியபாரத்தில் மேற் கூறிய வழிகளைக் கடைப் பிடித்தே போட் டுள்ளது. இதனால் இன்னும் பல வருஷங்களுக்கு வரி தவிர்ப்பு தொடர்ந்து கொண்டேயிருக்கு மாறு செய்துள்ளது. பூனாவில் (Poona) இருக்கும் இன்னொரு மிக நிர்வாகத் திறமை வாய்ந்த கம்பெனியும் வரி தவிர்ப்பு முறைகளை நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. 15-12-1980 Economic Times-ல் வந்துள்ள செய்திப்படி அதனுடைய விஸ்தரிப்புத் திட்டங்கள் வரி தவிர்ப்பு முறை களைத் திறம்படக் கடைப்பிடிக்கப் போவதால் வரி கொடுக்காமலே 1980-81 முதல் 1982-83 முடிய 3 வருஷங்களில் 60 கோடி லாபம் அக் கம்பெனி மிச்சம் பிடித்து விஸ்தரிக்கும். இந்தப் பிரம்மாண்ட விஸ்தரிப்புக்கு, பங்குதாரர்களிடமிருந்தோ, பாங்குகளி லிருந்தோ பணம் கடனாகவோ. முதலீடாகவோ கேட்காது எனவும் எழுதியுள்ளது. இந்தக் கம்பெனியும் வரி டிபார்ட்மெண்டை ஏமாற்றியதே கிடையாது. அச் செய்தி மூலமாகவே இக் கம்பெனி 1978—79ல் ரூ. 5 கோடியும் 1979—80ல் ரூ. 4.5 கோடியும் வருமான வரி கட்டியுள்ளது எனவும் தெரிகிறது. கூறப்பட்டுள்ள விவரங் களிலிருந்து 60 கோடி மதிப்புக்கூட மிகவும் குறைவாகத் தெரிகிறது. இக் கம்பெனி பங்குதாரர்களுக்கு நல்ல டிவிடெண்ட் கொடுத்து வருகிறது; பங்குதாரர்களுக்கு நல்ல போனஸும் கொடுத்தது. 1962ல் 5 ஷேர்கள் வைத்து இருந்தால் போனஸ் மூலமாக இப் பொழுது 28 ஷேர்கள் ஆகியிருக்கின்றன. இப்பொழுது, ரூ. 100 மதிப்புள்ள ஷேரின் விலை ரூ. 1610. இதனுலெல்லாம் என்ன தெரிகிறது என்றால், சட்டத்திற்குட்பட்டே வரி தவிர்ப்புச் செய்ய பல அனுகூலங்கள் உள்ளன; அவைகளைத் திறம்படச் செயலாக்க ஆற்றலும் திட்டமிட்ட நடவடிக்கைகளும் தேவை.

சலுகைகளால் மட்டும் அல்லாமல், தீவிர திட்டத்துடன் சட்டவரம்புகளைத் தாண்டாமல் வரி வரம்பிற்குள் இல்லாமல் தவிர்ப்பதும் வரி தவிர்ப்பின் இன்னொரு வழியாகும். உதாரண மாக, 10 வருஷத்திற்கு ஒருவர் தன் நிலத்தை வாடகைக்குவிடுகிறார். அதில் கட்டடம் கட்ட அனுமதித்து அந்தக் கட்டடம் தனக்கு 10 வருஷ முடிவில் கொடுக்கப்பட வேண்டியது என்கிறார். வருடந்தோறும் நில வாடகை ரூ. 1000/– கடைசியில் வந்த கட்டடத்தின் நிகர மதிப்பு ரூ.70,000/– அவருக்கு 10 வருஷங் களில் வந்த பணமும் ஆஸ்தியும் ரூ.80,000/– வருமான வரி 10 வருஷங்களில் இந்த மொத்தத் திற்குக் கொடுக்க வேண்டும் எனச் சட்டத்தின் நோக்கமும், சட்டம் எழுந்தவாரியாக நம் எல்லோருக்கும் உணர்த்தும் எண்ணமும் ஆகும். ஆனால் திட்டமிட்டுச் சரியாகச் செயல் பட்டு, வருஷம் ரூ. 1000 வீதம் ரூ. 10,000க்கு மாத்திரமே வரி எனக் கோரி நீதி மன்றத்தில் வெற்றியும் அடைந்தது, ஒரு பம்பாய்க் கம்பெனி (82 ITR 634 Bom).

சில சலுகைகளால் ஏற்படும் வரி தவிர்ப்பை, சிலர் வரிச்செலவு (Tax expenditure) எனக் கூறுகிறார்கள். இச் சலுகைகளால் வரி செலுத்துபவர்கள் சில செயல்களை அமல்படுத்த

வேண்டியிருக்கிறது. உதாரணமாக, மிச்சப் படுத்துபவர்களுக்குத் தரப்படும் சலுகைகளை யும் (Insurance, PF, Contribution Tax) செயல் படுத்துபவைகளுக்காகக் கொடுக்கப்படும் சலுகைகளையும் (80 HH, 80J, 80 QQ etc.) கூறலாம். இதே ரகத்தில் அநேக சலுகைகள் வருகின்றன. கவர்ன்மெண்டார் தாங்கள் நேரில் செலவு செய்வதற்குப் பதிலாக வரி செலுத்துபவர்களுக்குச் சலுகைகள் மூலம் இவை களைச் செலவுபடுத்துகின்றனர் என்பதுதான் இதன் தாத்பர்யம். நம் நாட்டில் வருடாந்தர பட்ஜெட் சமர்ப்பிக்கப் படும்பொழுது இம் மாதிரி வரிச்செலவின் பட்ஜெட் சமர்பிக்கப் படுவதில்லை. அதனால் இம்மாதிரி சலுகை களினால் எவ்வளவு மொத்தம் ஆகிறது என்ப தற்கு இலக்கங்கள் இல்லை. ஜெர்மனி தேசத் தில் இம்மாதிரி பட்ஜெட், கடந்த 10 ஆண்டு களாக Tax Incentives என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டு வருகிறது. கிரேட் பிரிட்ட னில் இம்மாதிரி பட்ஜெட் முதன் முதலாக 1979ல் கொடுக்கப் பட்டது. அமெரிக்காவில் இம்மாதியாக வரிச்செலவுகளில் அதிகப் பணம் செலவழிக்கப்படுகிறது; அதாவது வரிச்சலுகை களின் மூலமாகக் கடந்த ஆண்டுகளில் அங்கு வரிச் சலுகை அயிட்டங்கள் இரட்டிப்புப் பங்குக்கு (40லிருந்து ஏறக்குறைய 100 வரை) அதிகரித்துவிட்டன. கீழ்க்கண்ட விவரங்கள் அங்கு வரிச் சலுகைக்கு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன:

| | 1971 | 1978 |
|---|---|---|
| 'வரிச்செலவு' (அதாவது, சலுகைகளின் மூலம் செல வழித்த பணம்) | 52 பில்லியன் டாலர்கள் 100% | 134 பில்லியன் டாலர்கள் 158% |
| நேராக மக்கள் நலத்திற்குச் செலவழித்த பணம் | 211 பில்லியன் டாலர்கள் 100% | 493 பில்லியன் டாலர்கள் 134% |

1980 வரிச் செலவு 150 பில்லியன் டாலர் எனவும், நேரான செலவு 616 பில்லியன் டாலர் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. அதாவது வரிச்செலவு, மொத்தச் செலவிற்கு 20% ஆக எதிர்பார்க்கப்பட்டது. அதனாலேயே,

''வரிச்செலவு கட்டுகடங்காத ஒரு பெரிய பட்ஜெட் பிசாசு!'

எனக் கூறப்பட்டது.

நம் இந்தியாவில் பட்ஜெட் கணக்கு இம் மாதிரி வரிச் செலவுக்கு இல்லையே யொழிய, இவ்வரிச் சலுகைகள் பெரிய பூதாகாரம் என் பதில் சந்தேகம் இல்லை. பூதத்தை அடக்கி, நம் நன்மைக்கு, நம் தேசத்தின் நன்மைக்கு, நன்றாகத் திறம்பட உபயோகிக்கும் வரி தவிர்ப் போர் இதனால் விக்கிரமாதித்தன் போன்றோர் எனத் தெரிகிறது அல்லவா?

## இந்திய வங்கி வரலாற்றுப் பட்டியல்

**19-ஆம் நூற்றாண்டு:** —கல்கத்தா மற்றும் பம்பாயில் ஐரோப்பிய ஏஜென்ஸி ஹவுஸ் என்ற நிறுவனங்கள் இவை வியாபாரம்-வங்கித் தொழில் செய்கின்றன.

கிழக்கிந்தியக் கம்பெனியின் வங்கிகள் இவை.

**1804:** முதல் பம்பாய் ராஜதானி பாங்க் நிறுவப்படுகிறது. (நொடித்துவிடுகிறது.)

**1806:** வங்காள ராஜதானி பாங்க் உதயம்.

**1843:** மதராஸ் ராஜதானி பாங்க் ஆரம்பம்.

இந்த மூன்று பாங்குகளும் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு வங்கிகளாகப் பணியாற்றின.

**1860:** லிமிடெட் லயபிலிடி (Limited liability) என்னும் கடன் பொறுப்பு வரையறுக்கப்படுகிறது. புதிய பாங்குகள் தோன்ற இத் திட்டம் வழி வகுக்கிறது.

**1865:** அலகாபாத் பாங்க் தொடங்குகிறது. (சமீபத்தில் தேசிய மாக்கப்பட்டது.)

**1868:** இரண்டாவது பம்பாய் ராஜதானி பாங்க் நிறுவப்படுகிறது.

**1894:** பஞ்சாப் நேஷனல் பாங்க் ஏற்படுகிறது. (இதுவும் சமீபத்தில் தேசிய மாக்கப்பட்டது).

**1906-13:** சுதேசி இயக்கத்தால் ஊக்குவிக்கப்பட்டு இந்தியன் பாங்க், பாங்க் ஆப் இந்தியா, சென்ட்ரல் பாங்க், பாங்க் ஆப் பரோடா போன்ற பல வங்கிகள் தோன்றுகின்றன. (இவற்றில் பல தேசியமயமாக்கப்பட்டன.)

**1912:** கூட்டுறவு வங்கி தோற்றம். 80-க்கும் மேற்பட்ட வங்கிகள் திவால் ஆகின.

**1913-17:** முதல் மஹா யுத்தத்தின் போது சில பாங்குகள் தோன்றின.

**1921:** மூன்று ராஜதானி பாங்குகளையும் இணைத்து இம்பீரியல் பாங்க் உண்டாகிறது.

**1920-30:** 350-க்கும் மேலாக பாங்குகள் கடையை மூடின.

**1920:** முதல் நிலவள வங்கி உதயம்.

**1938:** திருவாங்கூர் தேசிய மற்றும் கொல்லம் வங்கி வீழ்ச்சியடைகிறது.

**1938-39:** பல காரணங்களால் மேலும் 64 பாங்கிகள் வீழ்ச்சியடைகின்றன.

**1939-45:** இரண்டாவது உலக யுத்தச் செலவுகள் காரணமாக வங்கிகள் டெபாசிட் அதிகரித்து மறுபடியும் வங்கிப் புரட்சி.

**1949:** பாங்குகள் நொடித்துப் போகாமல் இருக்கவும் அவற்றைக் கட்டுப்பாடு செய்யவும் பாங்கிங் கம்பெனிச் சட்டம் இயற்றப்படுகிறது. (இப்போது பாங்கிங் ரெகுலேஷன் சட்டம்.) ரிசர்வ் பாங்கிற்கு பல அதிகாரங்களை அளிக்கிறது இச்சட்டம்.

**1955:** இம்பீரியல் பாங்க் தேசியமாக்கப்பட்டு ஸ்டேட் பாங்க் என்று பெயர் மாற்றப்படுகிறது.

**1959-60:** ஏழு சுதேசிப் பாங்குகளை ஸ்டேட் பாங்க் ஏற்கிறது. இவை துணை வங்கிகளாகின்றன.

**1962:** டெபாசிட் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஏற்படுகிறது.

**1963:** விவசாய மறுநிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் ஏற்படுகிறது.

**1964:** தொழில் மேம்பாட்டு பாங்க் உண்டாகிறது.

**1969 (பிப்ரவரி):** வங்கிகள் மீது சமூகக் கட்டுப்பாடு.

**1969 (ஜூலை):** 14 வங்கிகள் தேசியமயம்.

**1969 (டிசம்பர்):** லீட் பாங்க் முறை அமுலுக்கு வருகிறது.

**1970:** சுப்ரீம் கோர்ட் குறிப்பிட்ட குறைகளை நீக்கி வங்கி தேசியமயச் சட்டம்.

**1972:** வங்கிகள் கமிஷன் ரிப்போர்ட்.

**1975:** வட்டாரக் கிராமீயப் பாங்குகள் தொடக்கம்.

**1980:** மேலும் ஆறு வங்கிகள் தேசியமயம்.

# பாங்கில் பைந்தமிழ்

நாடு விடுதலையடைவதற்கு முன்னால், பாங்குகள் பெரும்பாலும் நகரங்களில் மட்டுமே இயங்கி வந்தன. மாவட்டத் தலைநகரங்களுக் கப்பால் அவை மிக அரிதாகவே செயல்பட்டன. இன்றோ நிலைமை மாறி விட்டது. கிராமங்களிலும் புறநகர்ப் பகுதிகளிலும் பல கிளைகள் திறக்கப்பட்டு வருவதால் பாங்கு அலுவல்களில் வட்டார மொழிகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மக்களுக்கும் வங்கிக்கும் இடையிலுள்ள தகவல் இடைவெளியை இணைக்க மொழித் துறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்தகைய மொழித் துறைகளானது அந்தந்த வட்டார மொழிகளைப் பாங்குப் பணிகளில் படிப்படியாகப் பயன்படுத்தவும், வாடிக்கையாளர்களுக்கு, குறிப்பாகக் கிராமம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ளவர்களுக்குச் சிறப்பாகச் சேவை புரிவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யவும் வழி வகுக்கின்றன.

**இரு மொழிகளில் படிவங்களைத் தயாரித்தல் :**

வங்கியோடு பல விதங்களில் தொடர்பு கொள்ளும் வாடிக்கையாளர்களில் சம்பந்தப்பட்ட அனைத்துப் படிவங்களையும் வட்டார மொழிகளில் அச்சிட்டால் அவற்றின் உட்பொருளைப் புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். மேலும் வாடிக்கையாளர்களுக்கான அறிவிப்புகள், ஒப்புதல்கள், அறிக்கைகள் போன்றவற்றை அனுப்புவதற்காக

ஆங்கிலத்தில் மட்டுமே அச்சிடப்பட்ட படிவங்களை வங்கி பயன்படுத்தி வருகிறது. இரு மொழிப் படிவங்களைப் பயன்படுத்தினால் அந்தந்த வட்டார மொழிகளில் கடிதத் தொடர்பு கொள்ள உதவியாகவும் ஊக்குவிப்பதாகவும் இருக்கும். மேலே சம்பந்தப்பட்ட படிவங்களை இருமொழிகளில் தயாரிப்பதன் மூலம், வட்டார மொழிகளைப் படிப்படியாகப் பயன்படுத்தி அந்தந்த மொழிகள் வழங்கும் பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்களுடன் கடிதத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு நிறைய வாய்ப்புகள் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**மொழிபெயர்ப்பின் தன்மை :**

வங்கி அலுவல்கள் யாவும் நிதியைச் சார்ந்து நிகழ்வன. பெரும்பாலான கடிதத் தொடர்புகள் பணப் பொறுப்பின் அடிப்படையில் அமைந்திருப்பதால், தான்தோன்றித்தனமான மொழி பெயர்ப்புகள் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். எனவே, தனிப்பட்ட முறையில் தன்னிச்சையான மற்றும் ஒருதலைப்பட்சமான அணுகு முறையினின்றும் அப்பாற்பட்ட ஒரு மொழிக் கொள்கையை நிர்ணயிக்க வேண்டியது அவசியமாகிறது.

படைப்பிலக்கியங்களில் மொழி நடைக்கும் வர்ணனைக்கும் முதலிடம் அளிக்கப்படும். ஆனால் வங்கியியல் தெளிவான சில காரணங்களுக்காகச் சிலேடையில்லாமல், சரியான பொருளைத் தரும் சொல்லைப் பயன்படுத்துவது மிக முக்கியமாகும். வாக்கியியல் மொழியில் அனைத்துச் சொற்களும் பொருள் குறித்தே வருவதால் சீரான ஒரு கலைச் சொல் தொகுதியும், அதனை முறையாகப் பயன் படுத்துவதும் அவசியம். படைப்பிலக்கியங்களில் ஒரே மாதிரியான சொற்றொடர்களைப் பயன்படுத்துவது கண்டனத்திற்கு உள்ளாக நேரிடலாம். ஆனால், அதுவே தொழிற்துறையிலும், தொழில் நுட்பத் துறையிலும் ஏற்றதாகக் கருதப்படுகிறது. மேலும், அச் சொற்றொடர்கள் குழப்பம் இல்லாமலிருப்பதோடு தெளிவாகப் புரியக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இல்லையேல் வட்டார மொழிகளை நமது அலுவல்களில் பயன்படுத்தும் நோக்கமே தோற்றுவிடும். மேலும் அந்த மொழியானது இத்தகைய கட்டுப்பாடுகளுக்குட்பட்டபோதும் ஆற்றொழுக்கைப் போன்ற அழகு நடையில் அமைந்திருக்க வேண்டும்.

வங்கியின் நோக்கத்தின்படி நாம் பயன்படுத்தப் போகும் மொழிக் கொள்கைகளைத் தீர்மானித்த பிறகு, நமக்குள்ள அடுத்த கடமை, வாடிக்கையாளர்களோடு தொடர்பு கொள்ளும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் எத்தகைய மொழி நடை இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்வதுதான். பொதுவாக அவர்களோடு தொடர்பு கொள்ளும் சூழ்நிலைகள் இருவகையானது. ஒன்று கோடிட்ட இடத்தை நிரப்புவது; மற்றொன்று விவரமாக எழுதுவது போன்ற மொழி உபயோகம். வாடிக்கையாளர் அறிந்த மொழியில் பேசுவது மட்டுமல்ல; அதே மொழியில் கடிதத் தொடர்பும் கொள்ள வேண்டும். அவ்வாறு செயலாற்றுவதன் மூலம் அவர்களோடு நல்லுறவை ஏற்படுத்துவதுடன் நெருங்கிப் பழகுவதைப் போன்ற உணர்வையும் ஏற்படுத்த உதவும்.

**ஒப்பந்தங்களையும் சட்ட ரீதியான ஆவணங்களையும மொழி பெயர்த்தல் :**

கடன்கள், மிகைப் பற்றுக்கள் ஆகியவற்றைப் பெற விரும்பும் சிறு தொழிலதிபர்கள், வேளாண்குடிப் பெரு மக்கள், சுய வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் முதலிய வாடிக்கையாளர்கள் எழுதித் தர வேண்டிய ஆவணங்கள் வங்கி அலுவல்களில் மிக முக்கியமானதாகும். ஆங்கில மொழி தெரியாத பல வாடிக்கையாளர்களுக்கு அத்தகைய ஆவணங்களின் கருப் பொருளை விளக்க வேண்டியதிருக்கிறது. மேலும், பொது மக்களோடு தொடர்புள்ள தங்களது பணிகளை நிறைவேற்றுவதற்காக, வட்டார மொழிகளை அரசாங்கங்களும், நீதிமன்றங்களும் படிப்படியாகப் பயன்படுத்தி வருகின்றன. இத்தகைய ஆவணங்களை வட்டார மொழிகளில் மொழி பெயர்க்கும் முயற்சியை அந்தந்த மொழிப் பகுதிகளில் உள்ள அரசுகள் மற்றும் நீதி மன்றங்களின் முயற்சிகளோடு ஒருங்கிணைத்துக் கொள்ள முடியும். இது சிறிது கடினமான செயலென்றாலும்கூட இது போன்ற மொழி பெயர்ப்புகளைச் செய்து இவ்வகையில் புதிய முயற்சிகளில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**1976 ஆம் ஆண்டு ஆட்சி மொழிகள் விதிகள் (மத்திய அரசின் ஆட்சி மொழி நோக்கங்களுக்குப் பயன்படுத்துதல்):**

1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிகளின் சட்டம் பிரிவு 8 அதனுடன், பிரிவு 3 (4)ன்படி உள்ள தனது அதிகாரத்தின்படி மத்திய அரசானது ஆட்சி மொழி பற்றிய (மத்திய அரசின் ஆட்சி மொழி நோக்கங்களுக்குப் பயன்படுத்துதல்) விதிகளை 1976 ஆம் ஆண்டில் வகுத்துள்ளது. இவ் விதிகள் தமிழ் நாட்டைத் தவிர பாரதம் முழுமைக்கும் பொருந்துவதோடு 1976 ஆண்டு ஜூலை 17 ஆம் நாள் முதல் நடைமுறைக்கும் வந்துள்ளது.

பாங்கு அலுவல்களில் படிப்படியாகப் பைந்தமிழைப் பயன்படுத்தும் திட்டத்தில் பாரத ஸ்டேட் பாங்கு (ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா) வழக்கம்போல முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. "மக்களே பாங்கு" என்ற கோட்பாட்டில் செயல்பட்டு வரும் நமது நாட்டிலேயே மிகப் பெரிய பாங்கான பாரத ஸ்டேட் பாங்கானது, மொழித் துறையிலும் ஆற்றி வரும் அரும் பணியை அரசும், வாடிக்கையாளர்களும் ஆக்கமும் ஊக்கமும் தந்து ஆதரிப்பார்களென நம்புகிறோம்.

இராம. நமசிவாயம், M.A., CAIIB.,

# வங்கிப்பணிகளில் கூட்டுறவு வங்கிகளின் பங்கு

## கிராமச் சங்கங்கள் :

தமிழ் நாட்டில், குறிப்பாகக் கிராமப்புறங்களில் வங்கிப் பணிகளின் வளர்ச்சியில் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பங்கு வகித்து வருகின்றன. கிராம அளவில் 4752 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயிகளின் பல பொருளாதாரத் தேவைகளையும் பூர்த்தி செய்வதில் தம்மை ஈடுபடுத்தி உள்ளன. இச் சங்கங்கள் தம் உறுப்பினர்களிடமிருந்து பங்குத் தொகையும், உறுப்பினர்களிடமிருந்தும், உறுப்பினரல்லாதவர்களிடமிருந்தும் வைப்புத்தொகையும் வசூலித்துக் கிராம மக்களிடையே சிக்கனத்தையும், சேமிப்புப் பழக்கத்தையும் வளர்த்து வருகின்றன. இச் சங்கங்களில் பெரிய அளவிலான சில சங்கங்கள் வங்கி வசதிகளையும் மக்களுக்கு அளித்து வருகின்றன. இச் சங்கங்கள் விவசாயிகளுக்குப் பயிர்ச் செலவுக்காக ஓராண்டுக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்படவேண்டிய குறுகிய காலப் பயிர்க் கடன்களையும், வேளாண்மை சார்ந்த கறவை மாடு வளர்த்தல், ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களுக்காக மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய மத்திய காலக் கடன்களையும் வழங்குகின்றன. விவசாயத்திற்குத் தேவையான விதை, உரம் போன்ற இடுபொருட்களையும், உழவுமாடுகள், மாட்டு வண்டிகள், விவசாயக் கருவிகள், தானியக் கொள்கலன்கள், பூச்சி மருந்து தெளிப்பான்கள் போன்ற விவசாய உபகரணங்களையும் இச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வழங்குகின்றன. அன்றியும், கிராம அளவில் இன்றியமையா நுகர்பொருட்களை நியாய விலையில் மக்களுக்கு வினியோகித்து வருகின்றன.

## மத்திய மாநில வங்கிகள் :

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் மாவட்ட அளவில் இயங்கி வரும் 15 மத்தியக் கூட்டுறவு வங்கிகளுடன் இணைந்துள்ளன. இந்த மத்தியக் கூட்டுறவு வங்கிகள் சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியுடன் இணைந்துள்ளன. மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், மாநிலக் கூட்டுறவு வங்கியும் தம்மோடு இணைந்துள்ள பலவகைப் பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அன்றி, தனியார்களிடமிருந்து வைப்புத் தொகைகள் திரட்டுவதில் பெரும்பணி ஆற்றி வருகின்றன. கிளைகளைத் திறந்து இவை வங்கி வசதிகளையும் மக்களுக்கு அளித்து வருகின்றன. தம்முடன் இணைந்துள்ள பலவகைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குறுகிய கால, மத்திய காலக் கடன்களையும், காசுக் கடன்களையும் வழங்குகின்றன.

## நிலவள வங்கிகள் :

வட்ட அளவிலும், வட்டார அளவிலும் இயங்கிவரும் 182 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் விவசாயத்திற்கும் அதைச் சார்ந்த துணைத் தொழில்களுக்கும் தேவைப்படும் நீண்ட காலக் கடன்களை வழங்கி வருகின்றன. இவ் வங்கிகள் சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியுடன் இணைந்து இயங்குகின்றன.

## நகர வங்கிகள் :

நகர்ப்புறங்களிலும், ஓரளவு நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள இடங்களிலும் 131 கூட்டுறவு நகர வங்கிகள் குறுகிய கால, மத்திய காலக் கடன்களையும் வங்கி வசதிகளையும் அளித்து வருவதோடன்றி, குடிசைத்தொழில் மற்றும் சிறுதொழில்களுக்கு வேண்டிய நிதி உதவி அளிக்கும் ஓர் தனித் திட்டத்தையும் நிறைவேற்றி வருகின்றன. இவ் வங்கிகள் அனைத்தும் இணைந்து இயங்குவதற்காக மாநில அளவில் கூட்டுறவு நகர வங்கிகளின் இணையம் ஒன்று நிறுவும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

மேற்கூறிய வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் வங்கிப் பணிகளில் முக்கியமானவை சில வற்றின் விவரங்கள் பின்வருமாறு:—

### வைப்புத் தொகை

## வைப்புத் தொகை வசூலித்தல் :

கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பல்வகைப் பணிகளில் மிகவும் முக்கியமானதுமான ஒன்று, வைப்புத்தொகை திரட்டுதலாகும். கிராம அளவில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் தம் உறுப்பினர்களுக்குத் தாம் வழங்கும் பயிர்க் கடன்களில், ரொக்கப் பகுதியில் 2 சதவீத அளவிற்குச் சிக்கன வைப்புத் தொகையை வசூலிக்கின்றன. இச் சங்கங்களில் பெரிய அளவிலான கூட்டுறவு விவசாய வங்கிகள், உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமக் கூட்டுறவு வங்கிகள்

து. ஆ. சு. பிரகாசம்

உள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்திலோ அல்லது மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளையிலோ சேமிப்புக் கணக்கு வைத்துக் கொள்வதன் மூலம், இந்தக் காசோலை பயன்படுத்தப்படுகிறது. இவ்வகையில் 25 இலட்சம் வங்கிக் கணக்குகள் கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களிலும், மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகளிலும் சங்க உறுப்பினர்களால் வைக்கப்பட்டுள்ளன. இதனால் கிராம அளவில் உள்ள நலிந்த பிரிவினைச் சார்ந்த விவசாயிகளும்கூட வங்கிக் கணக்கு வைத்துக்கொள்ளும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க ஏதுவாகிறது.

## நடமாடும் வங்கிக் கிளை :

இதுவரையில் ஒருவர் தன் வங்கியை நாடிச்சென்றது போக, தற்போது வங்கியே வாடிக்கையாளர்களைத் தேடி நகர்ந்து வரும் நிலையைக் கூட்டுறவு இயக்கம் உருவாக்கியுள்ளது. சென்னையில் உள்ள சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி 1980ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு நடமாடும் கிளையைத் தொடங்கியுள்ளது. நடமாடும் கிளை தொடங்குவது தமிழ் நாட்டில் வங்கித் துறையின் வரலாற்றில் ஒரு புதிய துணிகரச் செயலாகும். இந்த நடமாடும் கிளை, நலிந்த பிரிவுகளைச் சார்ந்தவர்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று சிறு சேமிப்பில் கவனம் செலுத்துவதோடு அல்லாமல், எல்லாவித வங்கி வசதிகளையும் தருகிறது.

இந்த நடமாடும் கிளையில் இதுவரை 809 வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. இக் கிளையில் நிலுவையில் உள்ள வைப்புத் தொகை 11 இலட்சம் ரூபாய் ஆகும். மேற் சொன்ன கணக்குகளில் 187 கணக்குகள் குழந்தைகளால் தொடங்கப்பட்டுள்ளன. 18 வயதுக்கும் கீழ் உள்ள குழந்தைகளுக்கான சிறப்புத் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டுள்ள இக் கணக்குகளில் நிலுவை நிற்கும் வைப்புத் தொகை 21 ஆயிரம் ரூபாய் ஆகும். குழந்தைகளிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு குழந்தைக்கும் வங்கிக் கணக்கு தொடங்கும்போது, நான்கு ரூபாய் மதிப்புள்ள கவர்ச்சிகரமான உண்டி ஒன்று இலவசமாகத் தரப்படுகிறது. குழந்தைகள் சேமிப்புக் கணக்கில் உள்ள பணத்திற்கு $10\frac{1}{2}$ சதவிகிதம் வட்டி தரப்படுகிறது. அன்றியும், மாதச் சம்பளம் பெறுவோர் 161 வங்கிக் கணக்குகளையும், கூலியாட்கள் 79 கணக்குகளையும், இந்த நடமாடும் கிளையில் தொடங்கியுள்ளனர். இவ்வகையில் நலிந்த பிரிவினரின் சேவையில் இக்கிளை தன்னை ஈடுபடுத்தியுள்ளது.

## சென்னை நகரில் கிளைகள் :

சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியும், சென்னை மாவட்டக் கூட்டுறவு வங்கியும் மாநகரில் 44 கிளைகளை நடத்தி வருவதன் மூலம் பலகை வங்கிப் பணிகளையும் செய்து வருகின்றன.

## நகர வங்கிகள் :

வர்த்தக வங்கிகள் கிளை தொடங்கும் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு வெகுநாட்களுக்கு முன்னரே சிறு நகர்களிலும், பெரிய கிராமங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு நிலைத்து நிற்கும் கூட்டுறவு நகர வங்கிகள், வங்கி வசதிகளைப் பெருமளவில் நகர்ப்புற மக்களுக்கு வழங்கி வருகின்றன. தற்போது 131 கூட்டுறவு நகர வங்கிகள் இவ்வகையில் பணியாற்றி வருகின்றன. கூட்டுறவு நகர வங்கிகள் 12 கிளைகளை நடத்தி வருகின்றன.

## சர்வேதச மேம்பாட்டு சங்கம் :

உலக பாங்கின் இணை நிறுவனம். மேம்பாடு அடைந்துவரும் நாடுகளுக்கு எளிய வகையில் கடன் அளிக்கிறது. ரோடு போடுதல், குடிசை மாற்று வாரியம், குடிநீர் வசதி, பாலம் கட்டுதல், சமூகச் சுகாதாரம் போன்றவற்றிற்குக் கடன் அளிக்கிறது. திட்டம் உற்பத்தியோ வருமானமோ உண்டுபண்ணினாலும், இல்லாவிட்டாலும் இந்த நிறுவனம் கடன் அளிக்கும்.

முதல் வகுப்பு உறுப்பினர்கள் 21 மேம்பாடு அடைந்த நாடுகள். இவை தங்கள் சந்தாவைத் தங்கம் மற்றும் ஏற்றுக் கொள்ளப்படும் அந்நியச் செலாவணியில் செலுத்தி இருக்கின்றன. இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த 90–க்கும் மேற்பட்ட வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் நாடுகள், 10 சதவிகிதச் சந்தாவை மேற்கண்டவாறு தங்கம் போன்றவற்றிலும் மீதி 90 சதவீதம் தத்தம் நாட்டு நாணயத்திலும் செலுத்தி இருக்கின்றன.

இந்தச் சங்கம் இதுவரை வட்டியே இல்லாமல் கடன் கொடுத்து இருக்கிறது. கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் 50 ஆண்டுகள். இதைத் தவிர 10 ஆண்டு அதிகத் தவணையும் உண்டு.

இந்த மாதிரி மிக எளிமையான விதத்தில் நிதி வாரி வழங்குவதால் இது, ''எளிய கடன் சாளரம்'' (Soft loan window) என்று அன்புடன் அழைக்கப்படுகிறது. தனியார் நிறுவனங்களுக்கும், அரசாங்க உத்திரவாதம் கூட இல்லாமல் நிதி அளிக்கும் அமைப்பு இது.

உலகில் உள்ள வளர்ச்சி பெற்ற நாடுகள் தாங்களாகவே முன் வந்து தங்கள் நிதியை இந்தச் சங்கத்தின் மூலம் உதவலாம். கடன் வாங்கிய நாடுகளும் பொறுப்புடன் கடனைத் திரும்பச் செலுத்த வேண்டும்.

## விவசாயக் கடன்கள் :

கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களையும், கூட்டுறவு நிலவள வங்கிகள் நீண்ட காலக் கடன்களையும் 1977-78ல் சுமார் 22 இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றனர். வேளாண்மை வளர்ச்சிக்குக் கூட்டுறவு வங்கிகளின் தொண்டு இன்றியமையாத ஒன்றாகும். கால தாமதமன்றி, கிராமத்திலேயே, இன்னொரு உறுப்பினரின் ஜாமீன் மீது, கடன் ரொக்கமும் இடுபொருள்களும் குறைந்த வட்டிக்கு வழங்கும் ஒரே அமைப்பு கூட்டுறவு அமைப்பு ஆகும். தமிழ்நாட்டில் இந்த அமைப்பு மிகச் சிறந்த முறையில் வளர்ந்து வந்துள்ளது. 1977-78—ஆம் ஆண்டிற்குப் பிறகு கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வழங்கிய விவசாயக் கடன்கள் குறைய நேரிட்டது, கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து தெரியவரும்:—

| ஆண்டு | குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்கள் | நீண்ட காலக் கடன்கள் | மொத்தம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1977-78 | 127·13 | 12·28 | 139.41 |
| 1978-79 | 102·65 | 11·24 | 113·89 |
| 1979-80 | 42·70 | 8·85 | 51·55 |
| 1980-81 | 25·77 | 4·76 | 20·53 |

அண்மை ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய விவசாயக் கடன் அளவு குறைந்ததற்கு முக்கியக் காரணம், உறுப்பினர்களின் தவணை தவறிய கடன்தொகை பெருமளவில் அதிகரித்தது ஆகும். கேட்பில் தவணை தவறிய கடன்கள் 1973-74ல் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் அளவில் 17 சதவீதமாகவும், பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் அளவில் 18 சதவீதமாகவும் இருந்தன. அவை ஆண்டுதோறும் அதிகரித்து 30-4-81ல் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் அளவில் 75 சதவீதமாகவும், கூட்டுறவு நிலவள வங்கிகள் அளவில் 72 சதவீதமாகவும் ஆயிற்று. 1974-75ஆம் ஆண்டிலிருந்து 1977-78ஆம் ஆண்டு வரையில் மாநிலத்தில் பல பகுதிகளில் வறட்சி அல்லது வெள்ளம் ஏற்பட்டதும், கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதை விவசாயிகளின் சங்கங்கள் 1977-78 ஆம் ஆண்டிலிருந்து எதிர்த்து வந்ததும், தவணை தவறிய கடன்களின் அதிகரிப்புக்கு முக்கியமான காரணங்கள் ஆகும். அரசின் உதவியாலும் மக்களின் முயற்சியாலும் இந்த நிலை விரைவாக மாறி வருகிறது.

## நகையீட்டுக் கடன்கள் :

கடன்கள் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு நிறுவன அமைப்பில்லாத தனியார்களிடமிருந்து கடன் கிடைப்பது அரிதானதால் ஏற்பட்ட நிதி வசதிக் குறைவை முடிந்த அளவு தீர்ப்பதில் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், நகையீட்டின்பேரில் வழங்குவது மூலம் முக்கியப் பங்கு வகித்து வருகின்றன. 1975-76 ஆம் ஆண்டில் சுமார் 22 கோடி ரூபாய் அளவிற்கே நகைக் கடன்களை வழங்கிவந்த கூட்டுறவுச் சங்கங்கள், தாம் வழங்கும் கடன்களின் அளவை ஆண்டுதோறும் கணிசமாக அதிகரித்து வந்து, 1980-81 ஆம் ஆண்டில் 116 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கின. 1975-76 ஆம் ஆண்டில் 414 கூட்டுறவு அமைப்புகள் மூலம் மட்டுமே வழங்கப்பட்ட நகைக் கடன்கள், தற்பொழுது 1153 விவசாய சேவைக் கூட்டுறவு வங்கிகளின் 373 கிளைகள், 128 கூட்டுறவு நகர வங்கிகள், அவற்றின் 12 கிளைகள் ஆக, 1966 கூட்டுறவு அமைப்புகள் மூலம் வழங்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் நகையீட்டுக் கடன்கள் வழங்கியதில் உள்ள முன்னேற்றம் கீழ்க்கண்ட விபரங்களிலிருந்து தெளிவாகும் :—

| ஆண்டு | அமைப்புக் களின் எண்ணிக் கை | கடன் அளவு (கோடி ரூபாயில்) | பயனடைந் தோரின் எண் ணிக்கை (இலட்சத் தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 975-76 | 414 | 21·83 | 1·20 |
| 1976-77 | 919 | 40·10 | 5·71 |
| 1977-78 | 1208 | 50·77 | 7·64 |
| 1978-79 | 1378 | 79·17 | 8·84 |
| 1979-80 | 1581 | 111·42 | 9·81 |
| 1980-81 | 1666 | 116·23 | 9·43 |

நகைக் கடன்கள் சவரன் ஒன்றிற்கு 600/- ரூபாய் வீதம் வழங்கப்படுகின்றன. இக்கடன்கள் ஒருவருக்கு 5000 ரூபாய் வரையில் வழங்கப்படுகின்றன. வட்டி 14 சதவீதம் தான்.

## வட்டி விகிதங்கள் :

கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வழங்கும் பல்வகைக் கடன்களின் பேரில் வசூலிக்கப்படும் வட்டி விகிதங்கள் கீழ்க்கண்டவாறு :—

| கடன்களின் வகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) |
|---|---|
| (1) | (2) |
| 1. குறுகிய காலக் கடன்கள் : | |
| அ. சிறு விவசாயிகள் | 10·50 |
| ஆ. இதர விவசாயிகள் | 12·00 |

| | |
|---|---|
| 2. மத்திய காலக் கடன்கள் | 11.00 |
| 3. நீண்ட காலக் கடன்கள் :— | |
| அ. சிறுபாசனம் மற்றும் நில வளத் திட்டங்கள் | 10·25 |
| ஆ. தோட்டப்பயிர், பால் பண்ணை, ஆடு வளர்த்தல் போன்ற இதர நோக்கங்களுக்கான கடன்கள்:— | |
| அ. சிறு விவசாயிகள் | 10·25 |
| ஆ. இதர விவசாயிகள் | 12·50 |
| 4. நகையீட்டுக் கடன்கள் | 14·00 |

மலை வாழ் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், அவர்கள் மிக அதிகமாக வாழும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பெரிய அளவிலான் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பழங் குடியினருக்குக் குறைந்த வட்டி வீதத்தில், அதாவது 4 சதவீத வட்டிக்குச் சாகுபடி மற்றும் துணைத் தொழில்களுக்கான கடன்களை வழங்குகின்றன. குறித்த காலத்தில் கடன் களைத் திருப்பிச் செலுத்துவதற்காக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்தாரர் களை ஊக்குவிக்கும் வகையில், 1981-82 ஆம் ஆண்டில் தமது குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன் தவணைகளையும் குறிப் பிட்ட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி செய்யத் திட்டமிட்டுள்ளது.

## கைத்தறி நெசவுத் தொழிலுக்கு உதவி :

வேளாண்மைக்கு அடுத்த பெருந்தொழி லாகிய கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடு பட்டுள்ள நெசவாளர்களுக்கு நியாயமான ஊதியமும், இதர வசதிகளும் கிடைப்பதற்காக, 1155 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டில் இயங்கி வருகின்றன. தமிழ் நாட்டில் உள்ள 5·56 இலட்சம் கைத்தறிகளில், 2·55 இலட்சம் கைத்தறிகள் இக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆண் டொன்றுக்கு 52 கோடி ரூபாய் அளவிற்குக் கைத்தறித் துணி இக்கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இச் சங்கங் களுக்கும், ''கோவாப் டெக்ஸ்'' என வழங்கப் படும் இவற்றின் தலைமைச் சங்கத்திற்கும் பல ஆண்டுகளாகக் கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்கி நெசவுத் தொழிலுக்குப் பெருந்துணை யாக இருந்து வருகின்றன. இச் சங்கங்களுக்கும் தலைமைச் சங்கத்திற்கும் கூட்டுறவு வங்கிகள் 82 கோடி ரூபாய் அளவிற்கு வியாபார மூலதனம் வழங்கியுள்ளன.

## நூல் மற்றும் சர்க்கரை உற்பத்திக்கு உதவி :

தமிழ் நாட்டில் 12 கூட்டுறவு நூற்பாலை கள் 3·14 இலட்சம் கதிர்கள் திறனுடன் இயங்கிவருகின்றன. இவ்வாலைகள் ஆண்டொன்றுக்குச் சுமார் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள நூல் உற்பத்தி செய்கின்றன. தமிழ் நாட்டில் 10 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் இயங்கி வருகின்றன. இவ் வாலைகள் ஆண் டொன்றுக்குச் சுமார் 1·40 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்கின்றன. இந்த நூற்பாலைகளுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் மாநிலக் கூட்டுறவு வங்கி 3 கோடி ரூபாய் அளவிற்கு மூலதன உதவி அளித்துள்ளது. மேலும், இவ்வாலைகள் இயந்திர சாதனங் களைத் தவணை முறையில் பெறுவதற்குத் தேவையான உத்திரவாதத்தையும் பொறுப் பையும் மாநில வங்கி அளித்து உதவுகிறது.

## நெல் உரம் கொள்முதல் செய்ய உதவி :

1981 ஆம் ஆண்டு சம்பா நெல் பருவத்தில் தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையமும், பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் உற்பத்தியாளர்களிடமிருந்து 1·15 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்தன. இதனால் நெல் உற்பத்தியாளர்களுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு 150 ரூபாய் முதல் 180 ரூபாய் வரை அதிக விலை கிடைத்ததுடன் வெளிச் சந்தை விலை குறையாமல் இருந்தது. இந்தக் கொள் முதலுக்காகத் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்குத் தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி 18 கோடி ரூபாய் கடன் உதவியளித்தது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இரசாயன உரங்களை விநியோகம் செய்ய, 450 இலட்சம் ரூபாய் அளவுக்கு, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி காசுக் கடன் வசதி அளித்துள்ளது.

## நுகர்பொருள் விநியோகத்திற்கு உதவி :

தமிழ் நாட்டில் நுகர்வோருக்குத் தேவை யான நுகர்பொருட்கள், கூட்டுறவுப் பண்டக சாலைகள் மற்றும் கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படு கின்றன. தரமான பொருட்களை, சரியான அளவில் நியாயமான விலைக்கு விற்பனை செய்வதன் மூலம், விலையேற்றத்தை ஓரளவுக் குக் கட்டுப்படுத்துகின்றன. சுமார் 12,000 கூட்டுறவுக் கடைகள் மாநிலத்தில் கிராமப் புறங்களிலும் நகர்ப் புறங்களிலும் இப்பணி யைச் செய்து வருகின்றன. ஆண்டொன்றுக்கு 180 கோடி ரூபாய் அளவுக்கு நுகர்பொருட்கள் இக்கடைகள் மூலம் விற்கப்படுகின்றன. இவற்றுக்குத் தேவைப்படும் நடைமுறை மூலதனக் கடன் சுமார் 25 கோடி ரூபாய் அளவுக்கு மாநில, மத்தியக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படுகிறது.

## சிறு தொழில்களுக்குக் கடன் வசதி :

இந்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின் படி கூட்டுறவு நகர வங்கிகள் குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு வேண்டிய நிதி உதவி செய்யும் திட்டத்தை 1970-71ஆம் ஆண்டிருந்து நிறைவேற்றி வருகின்றன. இத் திட்டத்தின்கீழ் கூட்டுறவு நகர வங்கிகள் 1980-81ஆம் ஆண்டில் 1·48 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்களை வழங்கியுள்ளன.

நலிந்த பிரிவுகளைச் சார்ந்த கைவினைஞர்களுக்கு உதவும் வகையில் அவர்களுக்குச் சிறு தொழில் அல்லது குடிசைத் தொழில்களுக்காகத் தேவைப்படும் கடன்களை மிகக் குறைந்த வட்டிக்கு, அதாவது 4 சதவீத வட்டிக்கு, ஆரம்பக் கட்டமாக 64 கூட்டுறவு நகர வங்கிகள் மூலமாகவும், 26 உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வழங்குவதற்கான ஒரு திட்டம் பரிசீலனையில் உள்ளது.

## கூட்டுறவைப் போற்றிட வேண்டுகோள்

உழைப்பின் பயன் முழுவதையும், இடைத்தரகர்களை நீக்கி, உழைப்பவனே பெறவேண்டும் என்பதுதான் கூட்டுறவின் நோக்கம். சமத்துவ சமுதாயம் மலர இது ஒரு சிறந்த சாதனம்.

பெரும் மக்கள் தொகையும், அவர்களுள் பெரும்பாலோரை வறுமைக் கோட்டிற்குக் கீழும் கொண்டுள்ள நமது நாடு பொருளாதார முன்னேற்றம் பெற வேண்டுமானால், அது கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகத்தான் சாத்தியமாகும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி. தமிழகத்திலுள்ள அனைத்து மக்களும் கூட்டுறவு இயக்கத்தின்பால் பற்றுக்கொண்டு, தமது சேமிப்புக்களைக் கூட்டுறவு வங்கிகளின் வைப்புத் தொகைகளில் இட்டும், கூட்டுறவுச் சங்கங்கள் தரும் வங்கி வசதிகளைப் பெற்றும்; கூட்டுறவுக் கடன்களைக் குறித்த காலத்தில் திருப்பிக் கொடுத்தும், பெற்றும் நற்பயன் அடைந்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஃ

# பாங்குகளில் தொழிலுறவு

இந்தக் கட்டுரையாளர் தேசிய வங்கி ஊழியர் கூட்டமைப்பின் (NCEB) பொதுச் செயலாளர்.

சி. எல். இராஜரத்தினம், எம். ஏ.

இன்றைய சூழ்நிலையில் தொழிலுறவு என்பது ஒரு சிக்கலான விஷயமாகத் தான் இருந்து வருகிறது. எந்தவொரு நிறுவனத்திலும் தொழிலுறவு என்பது பெரும்பாலும் அந்தந்த நிறுவனத் தொழிற் சங்கங்களின் பலத்தைப் பொறுத்தே அமைகிறது. நிர்வாகம், என்பது ஒரு போதும் பலவீனமாக இருக்காது என்றே எப்போதும் கருதப்படுகிறது. எனவே தனது பேரங்களை (Bargain) வெற்றிகரமாக தொழிற் சங்கங்கள் நிறைவேற்றிக் கொள்ளும் போதுதான் தொழிலுற்வு நிலவுவது போலத் தோன்றும் கோரிக்கைகளில் வெற்றி பெறுவதென்பது தொழிற் சங்கங்களின் அமைப்பு, சரியான தலைமை, போதுமான பண பலம், தான் கொண்டுள்ள தொழிற் சங்கக் கொள்கை வழி நடத்தல் போன்ற தன்மைகளைப் பொறுத்தே அமைகிறது.

எனவே பாங்குகளில் தொழிலுறவைப் பற்றிப் பேசும் போதும் அவற்றின் தொழிற் சங்க அமைப்பு, பலம், கொள்கை, தலைமை போன்றவற்றையும் ஆராய வேண்டும். அத்தோடு அவை நொடிகின்ற பொழுது அரசு மேற் கொள்ளும் நடவடிக்கைகளையும் கவனிக்க வேண்டும். வங்கி ஊழியர்களும் Organised Sector வகையைச் சேர்ந்தவர்கள். 1946 முதலே ஒரு பலமான தொழிற் சங்கத்தை விரும்பித் தோற்றுவித்தனர். 1946 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1950 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் வங்கித் தொழிலில் தொழிலுறவு பாதிக்கப்பட்ட நிலையில் ஊழியர்களின் சம்பள விகிதம், பணி விகிதம், பணி விதிகள் போன்றவற்றிற்காக ஒரு கட்டாய நீதித் தீர்ப்பை (compulsory adjudication) விதித்து அரசு தலையிட்டதால் ஓரளவு தொழிற் தாவாக்கள் (disputes) தீர்ந்தன. எந்த நீதித் தீர்ப்பையும் போலவே இதையும் ஊழியர்கள் நீண்ட நாட்களாய் எதிர்த்து, கிட்டதட்ட நான்கு ஆண்டுகளாய் வழக்காடி, ஊதியம் போன்றவற்றில் ஒரு திருப்திகரமான முடிவு வரும் வரை நீடித்தனர். தொழிற் தாவாக்களை நேரிடையாகப் பேசித் தீர்த்துக் கொள்ளும் வழக்கமான முறையிலிருந்து இத்தகைய அரசு இடையீடென்பது வெளிப்படையாகச் சிறிது வெற்றியாகத் தோன்றினும் உள்ளூரப் பெருத்த தோல்வியாகவே இருக்கும். வங்கி ஊழியர்கள். இத்தகைய அரசுத் தலையீடு அறவே அகல வேண்டுமாயின் ஒரு கூட்டுப் பேரத்திற்கான வழி வகை தோன்ற வேண்டுமென்பதை உணர்ந்தனர். இத்தகைய உணர்வே மூன்றும் நபரை வைத்துத் தொழிற் தாவாக்களைத் தீர்த்துக் கொள்வதைக் காட்டிலும் நிர்வாகத்துடன் இருதரப்புப் பேச்சு வார்த்தைகளின் (Bipartite Talks) மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்க்கமான எண்ணத்தை ஊழியர்களுக்கிடையே ஏற்படுத்தியது. இந்த ஆர்வம் வங்கித் துறையில் இருதரப்பார் முதல் ஒபபந்த காலத்தில் (-I Bipartite Settlement) மேலோங்கியிருந்தது. எனினும் அப்போதிருந்த அரசின் போக்கால் அரசியல் நோக்கங்களும் அதில் இடம் பெற்றிருந்தன.

ஊதியம் மற்றும் பணி நிபந்தனைகளைப் பற்றிய இருதரப்பு ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும் வங்கித் தொழிலில் தொழிலுறவு மகிழ்ச்சியான சூழ்நிலைக்கு வரவில்லை. பல்வேறு தொழிற் சங்கங்கள் குறிப்பிட்ட அந்த வங்கியிலும், வங்கித் தொழில் துறையிலும் தமக்கே பேச்சு வார்த்தைக்கும் அங்கீகாரத்திற்கும் உரிய தகுதி உள்ளதென கோரியது தான் இதற்கான காரணம். பெரும்பாலும் ஒவ்வொரு தொழிற் சங்கமும் ஒன்றுடன் ஒன்று மோதுவதால் மட்டுமே தொழிலுறவில் அடிக்கடி பாதிப்புக்கள் நேர்ந்தன. ஊழியர்களின் பணி நிபந்தனைகள் போன்றவை குறித்த பெரிய முக்கிய விஷயங்களால் அல்ல.

வெவ்வேறு தொழிற் சங்கங்களுக்கிடையேயும் (Inter Union) ஒரே தொழிற் சங்கத்திற்குள்ளேயும் (Intra Union) உள்ள பகைமைகள் இன்றைய வங்கித் தொழிலைப் பெரிதும் பாதித்துள்ளன. இவை தீராத நோயென்று கூடத் தோன்றக் கூடும்.

வெவ்வேறு தொழிற் சங்கங்களுக்கிடையே உள்ள பகைமை நோயைப் பொறுத்த மட்டில் குணப்படுத்துவதற்குப் பல்வேறு வழிகள் உள்ளன. அவற்றை இங்கே மிக விரிவாக எழுத இடம் போதாது. எனினும் இந்த அவல நிலையின் அடிப்படைக் காரணம் என்ன என்பதைக் கவனித்தால், தொழிற் சங்கங்களின் நடப்பு, அவற்றின் உரிமைகள், பொறுப்புகள் அதைப் போலவே நிர்வாகத்தின் உரிமைகள், பொறுப்புகள், அங்கீகாரம் பெறுவதற்கான தகுதிகள் பற்றித் தீர்க்கமான, தீர்மானிக்கப்பட்ட விதி முறை (CODE) இல்லாதது தான் என்பது புரியும். நமது நாட்டில் ஏகப்பட்ட தொழிற் சங்கங்கள் பெருகி வருவதை முற்றிலுமாய் தவிர்க்க வழி வகை உள்ளதென எவரும் நம்பாவிட்டாலும் நிச்சயமாக ஒரு நிறுவனத்தில் (Unit) ஒரு தொழிற் சங்கமே வேண்டும் என்று ஆசைப்படாமல் இருக்க மாட்டார்கள். ஒரு நிறுவனத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற் சங்கங்கள் என்பது இன்றைய அவல நிலை எல்லாத் தொழிற் சங்கங்களும் நிர்வாகங்களும் அரசாங்கமும் (எல்லா வங்கிகளுக்கும் இப்போது அரசாங்கம் தான் நிர்வாகம்) 'நியாயமான விதிகளை' இந்தத் தொழிற் சங்க 'விளையாட்டிற்கு' நிர்ணயிக்க முயல வேண்டும். அங்கீகாரம் அளிப்பதற்கான தகுதியைத் தொழில் ஒழுக்க முறைமை (Code of Discipline) அடிப்படையில் உருவாக்குவதன் மூலம் தான் ஏற்படுத்த முடியும். தொழிற் சங்கங்களின் பலம் (உறுப்பினர் ஆதரவு) என்ன என்பதைக் கண்டறிவதில் சிரமம் எழலாம். இச்சிரமத்தைத் தவிர்க்க ரகசிய ஓட்டெடுப்பு முறை பயன்படும் அல்லது உறுப்பினர் கட்டணத்தைச் (சம்பளத்தில் பிடிப்பது) எனும் முறையில் செலுத்துவதை எல்லாச் சங்கங்களுக்கும் அனுமதிக்கலாம். இதன் மூலம் பாங்குகளில் உள்ள தொழிற் சங்கங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன என்பது தெளிவாகத் தெரியும். அந்தச் சதவீதத்தைப் பொறுத்து அவற்றின் உரிமைகளையும் பொறுப்புக்களையும் தீர்மானிப்பதில் சிரமமிரா.

ஒவ்வொரு தொழிற் சங்கத்திற்குமிடையே உள்ள அதிருப்தி அகற்றப்படுமேயானால் தொழிலுறவைப் பொறுத்த மட்டில் நாம் நிச்சயமாக ஒரு நல்ல சூழ்நிலையை எதிர்பார்க்கலாம். ஏனெனில் தொழிலாளர்களின் பிரச்சனைகள் குறைகள் போன்றவை இவ் விதிமுறைகளின் அடிப்படையில் சுமுகமாகத் தீர்க்கப்படும். அதற்கேற்றார் போல் தலைவர்களும் விதிமுறைக் கிணங்கிச் செயலாற்ற வேண்டும்.

ஒரே தொழிற் சங்கத்தில் (Intra-union) எழும் சச்சரவுகள் என்பது வங்கி ஊழியர்களுக்கு வருத்தந்தரும்

விஷயமாகும். அதன் தலைவர்களே தமது உறுப்பினர்களின் கருத்துக்களை மதியாது அரசியல்வாதிகளைப் போல நடந்து கொள்ளும் போது நிலைமை இன்னும் மோசமடைகிறது. எந்த விதிகளோ சட்டங்களோ இவர்களைத் திருத்த முடியாதபோது ஒவ்வொரு உறுப்பினர்களின் துணிவு, உறுதி, தன்னம்பிக்கை சகிப்புத் தன்மை போன்றவை மட்டுமே நிலைமையைச் சீராக்க முடியும்.

அரசாங்கத்தின் தலையீடு என்பது, குறிப்பாக தேசியமயமாக்கப்பட்ட துறைகளில் நிரந்தரமான தொன்றாகி விட்டது. பொது மக்களுக்கு ஏற்படும் இடையூறு, வணிகத்தையும் பொருளாதாரத்தையும் சீர்குலைக்கும் நிலைமை சம்பந்தப்பட்டவற்றை அகற்றுவதில் எந்தத் தகராறு எழும் போதும் அரசு உடனடியாகத் தலையிடலாம். அவ்வப்போது வங்கித் தொழிலில் உள்ள தொழிலுறவை முற்றிலுமாகப் பாதிக்கும் அல்லது பாதிக்க வழிகோலும் நிலைமைகளை அரசாங்கம் புரிந்து கொள்வதற்குத் துடிப்பும் அறிவாற்றலும் பொறுப்புமுள்ள வங்கிகளின் சங்கம் அவ்வப்போது உதவ வேண்டும்.

தமிழாக்கம் :

ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்

---

# பாங்குத் தொழிலில் சங்கங்கள்

### இந்திய வங்கிகள் சங்கம் (INDIAN BANKS ASSOCIATION)

பாங்கு அதிகாரிகள் ஊழியர்கள் எல்லோரும் தமக்கென சங்கம் அமைத்துக் கொண்டிருப்பதைப் போலவே பாங்குகளும் சங்கம் அமைத்துக் கொண்டுள்ளன. பாங்குகளுக்கிடையே ஏற்படும் அவசியமற்ற போட்டிகளைத் தவிர்க்கவும் சீரான நடைமுறைக் கேற்ற வழிவகைகளை உருவாக்கவும் இந்திய வங்கிகள் சங்கம் பல விதி முறைகளை வகுத்துள்ளது. இச் சங்கத்தின் தலைமையகம் பம்பாயில் உள்ளது. இதன் தற்போதைய தலைவர் ஸ்டேட் பாங்குத் தலைவரான திரு. பி. சி. டி. நம்பியார்.

### அகில இந்திய பாங்கு அதிகாரிகளின் சங்கக் கூட்டமைப்பு

### (All India Confederation of Bank officers organisations) AICOBOO

பாரதமெங்கிலும் உள்ள 28 அரசு வங்கிகள், 18 தனியார் துறை வங்கிகள் ஆகியவற்றில் பணியாற்றும் அதிகாரிகள் தமது பாங்குகளில் அமைத்துள்ள சங்கங்களின் கூட்டமைப்பு இது. இவ்வமைப்பின் கீழ் இயங்கும் பல்வேறு பாங்கு அதிகாரிகள் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் இரண்டு இலட்சமாகும். இதன் தலைமைச் செயலகம் பம்பாயிலும் பிராந்தியத் தலைமை அலுவலகம் பம்பாய், சென்னை, டெல்லி, கல்கத்தா ஆகிய இடங்களிலும் உள்ளன. தென்பிராந்தியத்தில் தமிழகத்தில் 20,000, கர்நாடகத்தில் 15,000, ஆந்திராவில் 14,000, கேரளத்தில் 8,000, பாண்டிச்சேரியில் 200, அதிகாரிகள் இருப்பதாக இச்சங்கத்தின் புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

### தொழிற் சங்கக் கல்வி மற்றும் ஆய்வுப் பயிற்சி நிலையங்கள்

### (Institute for Trade Union Education and Research)

தொழிற் சங்கக் கல்வி மற்றும் ஆய்வுப் பயிற்சி நிலையம் என்பது இவ்வகையில் இந்தியாவில் புதுமையான முயற்சியாகும். ஸ்டேட் பாங்கின் அதிகாரிகள் சங்கம் இத்தகைய பயிற்சி நிலையத்தைச் சென்னையில் 19-3-80 அன்று தொடங்கியது. இந்திய தேசிய தொழிற் சங்கக் காங்கிரஸ் (INTUC) பொதுச் செயலாளர் திரு. ஜி. இராமாநுஜம் இதனைத் தொடக்கி வைத்தார். தொழிலாளர்களுக்கு, அலுவலர்களுக்கு, பள்ளி ஆசிரியர்களுக்கு, தலைவர்களுக்கு என்றெல்லாம் எத்தனையோ விதமானவர்களுக்கு பல்வேறு விதமான பயிற்சிகளையும் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி வருகிறது இவ்வமைப்பு. இதுவரை சுமார் 28 பயிற்சிகளை (S. B. O. A. Institute for Trade Union Education & Research) நடத்தியிருக்கிறது.

சென்னையில் உள்ளது போல ஹைதராபாத்திலும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் அதிகாரிகள் சங்கம், தொழிற் சங்கக் கல்வி மற்றும் ஆய்வுப் பயிற்சி நிலையத்தைத் தொழிற் சங்கக் காங்கிரஸ் சார்பில் அண்மையில் குற்றாலத்திலும் இவ்வாறு ஒரு அமைப்பு தொடங்கப் பட்டிருக்கிறது.

### இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் பாங்கர்ஸ்

நமது நாட்டில் பாங்குகளில் பணியாற்றுகிறவர்கள் பாங்குகள் சம்பந்தப்பட்ட பொதுவான விஷயங்கள், புள்ளி விவரங்கள், தகவல்கள் போன்றவற்றைத் தெரிந்து கொள்ளவும் பாங்கியலில் அவர்களுடைய தகுதி, திறமை போன்றவற்றை வளர்த்துக் கொள்ளவும் உதவும் வகையில் 1928-ம் ஆண்டு இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் பாங்கர்ஸ் தொடங்கப்பட்டது. பல்வேறு பாங்குகளின் தலைவர்கள் இதன் உறுப்பினர் குழுவில் உள்ளனர். பாங்கு ஊழியர்கள் இந்த இன்ஸ்டிடியூட்டில் உறுப்பினர்களாகி C.A.I.I.B பட்டத் தகுதியைப் பெறுவதற்கான தேர்வுகளை எழுதுகின்றனர். இத் தேர்வுகளுக்கென இரண்டு பகுதிகள் உள்ளன. முதற் பகுதிக்கு ஒன்றும் இரண்டாவது பகுதிக்கு இரண்டுமாக மூன்று சம்பள உயர்வுகள் (இன்கிரிமென்ட்ஸ்) அளிக்கப் படுவதாலும் பதவி உயர்வுகளுக்கு இவையும் தகுதிகளாகக் கருதப்படுவதாலும் பாங்கு ஊழியர்கள் இத்தேர்வுகளை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். இந்த இன்ஸ்டிடியூட்டின் தற்போதைய தலைவர் திரு. ஐ. ஜி. படேல். தலைமைக் காரியதரிசியாக இருப்பவர் பரோடா பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய அனுபவமிக்க பேராசிரியர் திரு. ஆர். டி. பண்டியா. இதன் தலைமைச் செயலகம் பம்பாயில் உள்ளது. நாடெங்கிலும் 65 நகரங்களில் துணை அலுவலகங்களும் நூலகங்களும் உள்ளன.

## பாங்க் ஆப் பரோடா

பாங்க் ஆப் பரோடா, பாரதத்தின் பிரதான பாங்குகளில் ஒன்று. 1908ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த வங்கி, 1969ஆம் ஆண்டு தேசிய உடமையாக்கப் பட்டது.

உலக நாடுகளுடன் வாணிபம் புரிவதற்கு இந்த வங்கி சிறந்த பணியாற்றி வருகிறது. இதர பாங்குகளைப் போல், பாரத வேளாண்மை, தொழில், நலிந்தோர் துறைகளின் வளர்ச்சிக்குச் சிறந்த முறையில் உதவி வருகிறது. குறிப்பாக கிராமங்களில் பணியாற்றுவதை முதல் கடமையாகக் கொண்டுள்ளது. உற்பத்தியாளர் கூட்டுறவு, வேளாண்மை உயர்வு கூட்டுறவுக் கழகங்களுக்கு உதவுவது போன்றவற்றில் பாங்கு ஈடுபாடு கொண்டுள்ளது.

பாரத நாட்டில் இந்த வங்கிக்கு மொத்தம் 1550 கிளைகள் உள்ளன. அவற்றுள் அயல்நாட்டுக் கிளைகள் 58 உள்ளன. தமிழ்நாட்டில் 57 கிளைகள் உள்ளன. கிராமப் பகுதியில் 665 கிளைகள் உள்ளன.

பாங்க் ஆப் பரோடாவின் சிறப்பைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கும்.

டெபாஸிட்டுகள்: ரூ. 3026.26 கோடி. கடன் வழங்கிய தொகை ரூ. 1670.68 கோடி. டெபாஸிட்டரின் எண்ணிக்கை 61,03,709. பணி புரிவோர் 30,216.

இந்த வங்கி உதவியுள்ள தொகை. வேளாண்மைத் துறை: ரூ 222.86 கோடி.

சிறுதொழில் 198.78கோடி.

தொழில் பேட்டை நிறுவ கடனுதவி: ரூ. 4,50,50 ஆயிரம்.

விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன் ரூ. 40,38,73 ஆயிரம்.

நடுத்தர, நீண்ட காலக் கடன்: ரூ. 80,41,64 ஆயிரம்.

சில்லறை வியாபாரிகள்: 64,048 பேர். ரூ. 26,62,00 ஆயிரம்.

சுய வேலை செய்வோர்: 73,994 பேர். ரூ. 15,59,07 ஆயிரம்.

கல்வி: 2143 பேர். ரூ. 1,09,03 ஆயிரம்.

மொத்த டெபாஸிட்டுகள்: ரூ. 2450,06,98,183.

நிகர லாபம் (போனஸ் கழிக்காமல்) ரூ. 4,30,07,433.

## சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

தனியார் துறையில் முதன்மையான பெரிய வங்கியாக விளங்கிய சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா 1969 ஜூலை மாதம் நாட்டுடமையாக்கப்பட்டது. 1911 டிசம்பரில் இவ்வங்கி இந்திய மூலதனத்துடன் ஒரு சுதேசி வங்கியாக காலஞ்சென்ற சர் போச்சன் வாலா அவர்களால் துவக்கப்பட்டது.

தாழ்த்தப்பட்ட மிகப் பழங்குடியினர் வசிக்கும் மத்தியப் பிரதேசக் குக்கிராமமான சிஜோதா என்னும் மலைப் பகுதியில் தனது 2000ஆவது கிளையைச் சமீபத்தில் மிக எளிய முறையில் துவக்கி தனிப் பெருமை பெற்றுள்ளது.

ஆசிய ஜோதி நேருஜி பிறந்த நாளான நவம்பர் 14ஆம் நாளன்று ஒரே நாளில் நாடு நெடுகிலும் 50 கிளைகளைத் திறந்து மாபெரும் சாதனையை நிகழ்த்தியுள்ளது.

தற்சமயம் உள்ள 2051 கிளைகளில் சுமார் 900 கிளைகள் கிராமப் பகுதிகளிலும், நகர்புறப் பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட கிளைகளும் அமைந்துள்ளன.

கடந்த ஜூன் மாதம் வரை இவ்வங்கியின் சேமிப்புத் தொகை சுமார் 2800 கோடி ரூபாய்களாகும். மொத்தக் கடன் தொகையாக வழங்கப்பட்டுள்ள சுமார் ரூ. 1700 கோடியில், சுமார் 620 கோடி முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதில் வேளாண்மைக் கடனாக வழங்கப்பட்டுள்ள சுமார் 300கோடி ரூபாய்களும் சிறுதொழில் நிறுவனர்களுக்குச் சுமார் 200 கோடி ரூபாய்களும் வழங்கப்பட்டுள்ளன.

கிராம ஏற்புத் திட்டத்தின் கீழ் சுமார் 3500 கிராமங்கள் நாடெங்கிலும் ஏற்கப்பட்டு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்குச் சிறுகடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலேயே முதன்முறையாக வங்கித் துறையில் பல நவீன திட்டங்களை அறிமுகப்படுத்திய இவ்வங்கி, ''சென்ட்ரல் கார்டு'' என்னும் புதியதோர் திட்டத்தை வகுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் சென்ட்ரல் கார்டு உரிமையாளர்கள் பணத்தை ரொக்கமாக எடுத்துச் செல்லாமல் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நாடெங்கிலும் உள்ள குறிப்பிட்ட நிறுவனங்களில் தேவையான பொருட்களை வாங்கவும், விடுதிகளில் தங்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்றோருக்கான உலக ஆண்டான இவ்வாண்டில் இவ்வங்கி ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்புகளை நல்கியதுடன் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கியும் சமூக நோக்கில் தன் பணியினை ஆற்றியுள்ளது.

## பாங்குகளில் மக்கள் தொடர்பு

பாங்குகளில் மக்கள் தொடர்பு என்பது மிகவும் இன்றியமையாததாகும். சொல்லப் போனால் பாங்குகளின் தலைமை அலுவலகங்கள் நீங்கலாக மற்றெல்லாக் கிளைகளிலும் உள்ள ஊழியர்கள் பல்வேறு பாங்கு நடவடிக்கைகளில் பொது மக்களோடு தொடர்பு கொண்டவர்கள் தான். எனவே பாங்கில் பணியாற்றுகிற ஒவ்வொரு அதிகாரியும் எழுத்தரும், காசாளரும் மக்களோடு ஒரு நல்ல தொடர்பையும் இனிய நட்பையும் வைத்திருப்பது அவசியம்.

பாங்குகளில் பணியாற்றும் பலர் விளையாட்டு, இலக்கியம், கலை போன்ற துறைகளில் பிரபலமாக மக்கள் மத்தியில் செல்வாக்காக இருப்பார்கள்.

கோடிக் கணக்கிலோ லட்சக் கணக்கிலோ பாங்கில் கடன் வாங்க வரும் பிரமுகர்களுக்குக் கொடுக்கப்படும் மதிப்பும் மரியாதையும் ஒரு ஆயிரம் ரூபாயை பாங்கில் போட வரும், ஒரு சாமான்யனுக்கும் கொடுக்க வேண்டும். இருவரும் அவரவர்களின் பொருளாதாரத் தகுதியில் வேறுபட்டிருந்தாலும் வாடிக்கையாளர் என்ற பார்வையில் பாங்குக்கு ஒன்றாகவே தோன்ற வேண்டும். இதை ஒவ்வொரு ஊழியருக்கும் உணர்த்துவதே மக்கள் தொடர்புத் துறைகளின் நோக்கமாயிருத்தல் வேண்டும்.

# தமிழகம் தந்த தலை சிறந்த வங்கிகள்

## இந்தியன் பாங்க்

**1907** ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள், விடுதலை நாள்; ஆம் தவருகச் சொல்லவில்லை. இந்திய நாடு சுதந்திரம் பெற்ற தினத்திலிருந்து சரியாக நாற்பதாண்டுகள் முன்னரே, நிதி மற்றும் பாங்கிங் துறைகளில் ஆங்கிலேய ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற வழி வகுக்கப்பட்டு விட்டது. அன்று தான் இந்தியன் பாங்க் உருவானது; அர்பத் நாட் அண்ட் கம்பெனி திடுமென்று சீர்குலைந்து போனதால் தங்கள் வைப்புத் தொகையை (Deposit) இழந்தவர்கள் ஏராளம். இத்தகு இன்னல்களுக்கு முடிவு கட்ட வேண்டும், இந்தியர்களுக்காக இந்தியர்களாலேயே ஒரு வங்கி துவக்கப்பட வேண்டும் என்ற எண்ணங்களின் விளைவே, இந்தியன் பாங்க் லிமிடெட் என்ற அமைப்பு.

சங்கம் கண்ட மதுரையில் பிறந்தது முதல் கிளை. இன்று 870 கிளைகள், 16 உப கிளைகள், 56 எக்ஸ்டென்ஷன் கவுன்டர்கள் என்று நாடெங்கும் வியாபித்திருக்கிறது. கடல் கடந்து சிங்கப்பூரிலும் கொழும்பிலும் கூட பரவியுள்ளது.

சென்னை நகரில் வடக்குக் கடற்கரைச் சாலையில் பென்டிக் கட்டிடத்தில் அமைந்த தலைமை அலுவலகம், எழுபதாண்டு காலத்திற்குப் பிறகும் அதே இடத்தில் அமைந்திருக்கக் காணலாம்:

இருபது லட்ச ரூபாய் முதலுடன் தொடங்கிய இந்தியன் பாங்க், பல நெருக்கடிகளை மீறிக் கொண்டு முன்னேற வேண்டியிருந்தது.

படிப்படியாக முன்னேறி வந்த இந்தியன் பாங்க் 1969ல் தேசியமயமாக்கப்பட்ட போது அதன் வசம் ஏறத்தாழ ரூ. 90 கோடி வைப்புத் தொகை இருந்தது. ரூ. 63 கோடிக்கு மேல் கடன் உதவி செய்திருந்தது.

தேசியமயமானதன் பிறகு, வங்கியின் வைப்புத் தொகை பன்னிரண்டு மடங்கு பெருகியிருப்பது, வங்கித் துறையில் இணையற்ற சாதனை. அதே போல் வங்கி செய்த கடனுதவியும் பத்து மடங்கு பெருகியது.

1980 ஆம் ஆண்டின் முடிவில் வைப்புத் தொகை ரூ. 1164 கோடி, கடன் தொகை ரூ. 681.9 கோடி என்ற நிலையை எட்டியது.

32.1 சதவிகிதக் கடன் தொகை, முன்னுரிமை பெற வேண்டிய துறைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட சிறுவிவசாயிகள் இந்த வங்கியின் கடன் உதவி பெற்றிருக்கின்றனர். மொத்தக் கடன் தொகையில் 11.4 சதவீதம் விவசாய வளர்ச்சிக்குத் தரப்பட்டுள்ளது.

விவசாய வளர்ச்சிக்கென்றே பிரத்தியேகமாக மூன்று கிளைகள் இயங்குகின்றன. சித்தூரில் ஒரு கிராமிய வங்கியும் செயல்படுகிறது.

லீட் பாங்க் (Lead Bank Scheme) திட்டத்தின் கீழ், ஒன்பது மாவட்டங்களில், முன்னேற்றப் பணியில் ஈடுபட்டுள்ளது, இந்த வங்கி.

அயல் நாடுகளில் பலமாக கால் ஊன்றியுள்ள இந்த வங்கி, இந்தோனேசிய வங்கி ஒன்றுக்கு நிர்வாக ஆலோசனையும், தொழில் நுணுக்க அறிவுரையும் தருகிறது. கொழும்பில் அந்நியச் செலாவணிக்கான வங்கியை அமைத்துள்ளது. வேறு சில தேசிய வங்கிகளுடன் இணைந்து ஹாங்காங்கில வைப்புத் தொகை சேர்க்கும் நிறுவனம் ஒன்றையும் நடத்தி வருகிறது.

திரு. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் முதல் முயற்சியால் 1906 ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் தேதி அமைக்கப்பட்டு, அதே ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள் செயல்படத் தொடங்கிய இந்தியன் பாங்க், எழுபத்தைந்தாம் ஆண்டில் எழுச்சி நடை போடுகிறது.

## கும்பகோணம் சிட்டி யூனியன் பாங்க்

**த**மிழ்நாட்டின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றின் உறைவிடமாகத் திகழும் தஞ்சை மாவட்டத்தின் புராதன சிறப்புப் பெற்ற குடத்தைமா நகர் என்று அழைக்கப்படும் கும்பகோணத்தில் தோன்றியது.

1904ம் ஆண்டு கும்பகோணம் பாங்க் என்ற பெயரிலே ஆரம்பிக்கப்பட்டு, 1945ம் ஆண்டு ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா ஆக்டின் இரண்டாவது ஷெட்யூலில் சேர்க்கப்பட்டது. இவ் வங்கியின் முதல் கிளை 1930 ஆண்டு ஜனவரி மாதத்தில் மன்னார்குடியில் திறக்கப்பட்டது. விவசாயப் பெருங்குடி மக்கள் மிக அதிகமாக வாழும் தமிழகத்தின் நெற் களஞ்சியமான, தஞ்சை மாவட்டத்திலேயே 25 ஆண்டுகளில் எட்டு கிளைகள் திறக்கப்பட்டன. கிராமங்களின் ஏழை விவசாயிகளின் வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு கிளைகள் திறக்கப்பட்டன. 1954ல் வங்கி தன் பொன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. 1957ல் காமன் வெல்த் பாங்க் லிமிடெட்டின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தனதாக்கிக் கொண்ட நிலையில் மேலும் ஐந்து கிளைகளைத் திறந்தது. 1965ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இணைப்புத் திட்டம் ஒன்றின்படி "சிட்டி பார்வர்ட் பாங்க்" மற்றும் "யூனியன் பாங்க்" ஆகியவற்றைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. அந்த இணைப்புத் திட்டத்தின்படி வங்கியின் பெயரை "கும்பகோணம் சிட்டி யூனியன் பாங்க்" என்று மாற்றிய பின்னர் மேலும் ஆறு கிளைகளைத் திறந்தது.

1965ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வங்கியின் வளர்ச்சியை விஸ்தரிக்கும் பொருட்டு சென்னையில் தியாகராய நகரில் முதல் கிளை திறக்கப்பட்டது. இவ் வங்கியின் சேவைக்குப் பொது மக்கள் அளித்த உற்சாக ஆதரவால் மந்தை வெளி, திருவல்லிக்கேணி, ஜார்ஜ் டவுன், மவுண்ட் ரோடு ஆகிய இடங்களில் கிளைகளைத் திறந்தது. 1979ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வங்கியின் முத்து விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வெளி மாநிலங்களிலே தன்னுடைய சேவையை விஸ்தரிக்கும் பொருட்டு தன்னுடைய வெளி மாநில முதல் கிளையை 1980ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பெங்களூரிலும் இரண்டாவது கிளையை இந்த

| | 70ல் | 75ல் | 80ல் | 81ல் |
|---|---|---|---|---|
| | (லட்ச ரூபாய்களில்) | | | |
| டெபாசிட்டுகள் | 258.31 | 663.42 | 1701.29 | 1933 |
| வழங்கப்பட்ட கடனகள் | 177.72 | 448.98 | 1024.24 | 1233 |
| முதலீடுகள் | 62.33 | 169.19 | 421.82 | 446 |
| கிளைகள் | 28 | 39 | 57 | 58 |

15—11—81 அன்று மொத்தக் கிளைகள் 61

ஆண்டு நவம்பரில் ஐதராபாத்திலும் திறந்தது.

இவ் வங்கியின் நிர்வாகக் குழு தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பொருளாதார நிலைகளை நன்கு அறிந்த செல்வாக்கு மிக்க நபர்களைக் கொண்டது. இவ் வங்கித் தலைவர் இந்திய வங்கிகளின் தலைவர்களிலேயே மிகவும் இளம் வயதினர் என்பது குறிப்பிடத் தக்கது. 37 வயதே நிரம்பிய தலைவர் திரு வி. நாராயணன் இவ் வங்கியிலே தலைவர்களாக பணி புரிந்த திரு. O. R. சீனிவாசன், திரு. K. சீனிவாசன் ஆகியவர் களிடமிருந்து சீரிய அனுபவம் பெற்றவர்.

மக்களுடைய தேவைக் கேற்ப சேவை செய்வதையே தாரக மந்திர மாகக் கொண்டு சிறிய வங்கியாக ஆரம்பிக்கப்பட்டு இன்று முன்ன ணியில் நிற்கும் தனியார் வங்கிகளில் ஒன்ருகத் திகழ்கிறது. இந்த வங்கி சமுதாயத்தில் பொருளாதார ரீதி யாகப் பின் தங்கிய மக்களின் நலத்தைப் பேணிக் காக்க வேண் டும் என்ற அரசின் கொள்கைக்கு இணங்கி சிறு விவசாயிகள், சிறு வியாபாரிகள், சிறு தொழில் புரிவோர் ஆகியோருக்கு ஒரு கலங்கரை விளக்கமாக இருந்து உதவி புரிகிறது. ஊழியர்களின் ஒன்றிணைந்த பணியாலும் வாடிக் கையாளர்களின் ஆதரவாலும் இவ் வங்கி மேலும் மேலும் வளர்ந்து வருகிறது.

"கிராமங்களே இந் நாட்டின் முதுகெலும்பு" என்ற அண்ணல் காந்தியின் முதுமொழிக்கு ஏற்ப இவ் வங்கியின் கிளைகளில் பெரும் பாலானவை கிராமங்களிலே அமைந்திருப்பது மட்டுமின்றி, இதன் கடன் செலாவணியின் பெரும் பகுதி நடுத்தர சிறு சிறு வாடிக்கைதாரர்களுக்கும் கிராமப் புற மக்களுக்கும் கொடுக்கப்பட் டுள்ளது.

பாதுகாப்பு — வளர்ச்சி — மனங் கனிந்த சேவை—அதுவே "கும்ப கோணம் சிட்டி யூனியன் பாங்க் லிமிடெட்."

## எல் வி பி - மக்களுக்கான பாங்க்

செல்லமாக எல் வி பி என இன்று அழைக்கப்படும் லக்ஷ்மி விலாஸ் பாங்க் கரூரில் 1926-ம் ஆண்டு நவம்பரில், வியாபாரத்தில் தேர்ச்சி பெற்ற வைஸ்யப் பிரமுகர் கள் சிலரால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பம் முதலே அதன் இலட்சியம் கைத்தறித் தொழிலுக்கும், சிறு விவசாயிகளுக்கும், சில்லரை வியா பாரிகளுக்கும் உதவுவது தான்.

காலப் போக்கில் இதன் விஸ்தரிப் புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ரிஸர்வ் பாங்கின் யோசனைக் கிணங்க இந்த பாங்க் கீழ்க்கண்ட எட்டு சிறிய பாங்குகளை எடுத்துக் கொண்டு, அதன் விளைவாக அவற் றின் கிளைகளைத் தனதாக்கிக் கொண் டது. அவை :—திருக்காட்டுப் பள்ளி பாங்க், சேலம் குகை ஸ்ரீ கிருஷ்ண பாங்க், நாடியம்பாள் பாங்க், திருச்சி வைஸ்யா பாங்க், சேலம் நேஷனல் பாங்க், சேலம் ஸ்ரீ ராமசுவாமி பாங்க், கரூர் மர்க்கண்டைல் பாங்க். 1974-ல் வெளி மாநிலங்களிலும் கிளைகளைத் திறக்க ஆரம்பித்து இன்று பெரு வாரியான கிளைகளுடன் அகில இந்திய அந்தஸ்தைப் பெற பீடு நடை போடுகிறது.

அண்ணல் காந்தியடிகளின் இராமப் புனருத்தாரணக் கொள்கைக்குச் செயல் வடிவம் கொடுப்பது போல, இப் பாங்க் தன் கிளைகளில் 60 சத விகிதத்தை கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் கொண்டிருக்கிறது. இதனுல் சமுதாயத்தில் நலிவுற்ற பகுதியாருக்கும், பிற்பட்டவர்களுக் கும் தனது கடமையை இப் பாங்க் நிறைவேற்றுவதுடன், அவர்களது நம்பிக்கையையும் பெற முடிகிறது.

1951-ல் வெள்ளி விழா கண்ட இப் பாங்க் 1976-ல் பொன் விழா வைச் சிறப்புடன் கொண்டாடி, அந்நியச் செலாவணி வர்த்தகத்தை யும் தொடங்கியது. ஐந்தாண்டு களே ஆகி இருந்தும் இன்று அந்நி யச் செலாவணியில் திறம்பட வர்த் தகம் செய்யும் பாங்குகளில் ஒன்ருக இது திகழ்கிறது. இந்த "எ" வகுப்பு தனியார் துறை 'ஷெட் யூல்ட் பாங்க்' தனது 31—12—80 டெபாசிட் திட்ட குறியீட்டுத் தொகை ரூ. 50கோடியைத் தாண்டி, மேலும் முன்னேறி வருகிறது. இதன் கிளைகள் மொத்தம் 149. சேர்மன்:- திரு. என். வி. ஸ்ரீநிவாசன், ஜெனரல் மானேஜர் :-திரு. என். முத்தியாலு.

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி

1905-ம் ஆண்டு நவம்பர் திங்க ளில் சென்னை மத்திய நகர வங்கி என்னும் பெயரில் ஆரம்பிக்கப் பட்ட தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி கடந்த 75 ஆண்டுகளாக தமிழகத்தில் தன் கூட்டுறவுப் பணியைச் சிறப்புற நிறைவேற்றி வந்துள்ளது. இந்த ஆண்டு வங்கி யின் பிளாட்டின விழா ஆண்டா கும். விவசாயப் பெருங்குடி மக்க ளுக்குத் தேவையான குறுகிய கால பயிர்க் கடன் மற்றும் மத்திய காலக் கடன்களை வழங்கி தமிழ்நாட்டின் பசுமைப் புரட்சியில் இந்த வங்கி முக்கிய பங்கு வகித்தது. மேலும் தமிழகத்தில் உள்ள கூட்டுறவு சர்க் கரை ஆலைகள் மற்றும் கூட்டுறவு நூற்பு ஆலைகளின் வளர்ச்சிக்கும் வங்கி பெரும் ஆதரவு அளித்துள் ளது. கைத்தறி நெசவாளர் கூட் டுறவு சங்கங்களுக்கும் மற்றும் கோ-ஆப்-டெக்ஸுக்கும் வங்கி பெரும் உதவி அளித்து வருகிறது. 31—12—80 அன்று வங்கிக்கு 27 கிளைகள் உள்ளன. திரு. இரெ. ஆறுமுகம் அவர்கள் இந்த வங்கி யின் தனி அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர்.

**பங்கு மூலதனம் :**

வங்கியின் அதிகாரம் பெற்ற பங்கு மூலதனம் ரூ. 500 இலட்சம் ஆகும். வசூலிக்கப்பட்ட மூலதனம் 30—6—73ல் ரூ. 358.19 இலட்ச மாக யிருந்தது. 31—12—1980 ல் இது ரூ. 501.83 இலட்சமாக உயர்ந் துள்ளது.

**சேம நிதியும் இதர நிதிகளும் :**

31—12—1980-ல் வங்கியின் சேம நிதி ரூ. 604.41 இலட்சமாக இருந் தது. ஒவ்வொரு ஆண்டிலும் அடைந்து வந்த நிகர இலாபத்தி லிருந்து 25 சத விகிதத் தொகையை ஒதுக்கியதன் மூலம் இந்நிதி சேர்க் கப்பட்டுள்ளது. வங்கியின் இதர சேமிப்பு நிதிகளில் ரூ. 183 83 இலட்சம் சேர்ந்துள்ளன.

30—6—1980-ல் ரூ. 13030·49 இலட்சமாகயிருந்த வங்கியின் டிபா சிட்டுகள் 31—12—1980-ல்

ரூ. 13210·97 இலட்சமாக உயர்ந்து உள்ளன.

கடன்கள் :

31—12—1980-ல் வங்கி வாங்கியிருந்த மொத்த கடன்கள் ரூ. 1913·27 இலட்சம்.

முதலீடுகள் :

மத்திய, மாநில அரசாங்கங்களின் கடன் பத்திரங்கள், மாநில நில வள வங்கியின் கடன் ஈட்டுப் பத்திரங்கள், தமிழ்நாடு மின்சார வாரியக் கடன் பத்திரங்கள், இதர டிரஸ்டு பத்திரங்கள் ஆகியவைகளில் வங்கி செய்திருந்த முதலீடுகள் ரூ. 3987·96 இலட்சமாகும்.

பாங்கு ஆற்றும் பணிகள் :

1. விவசாயக் கடனுதவி
2. கைத்தறி நெசவு உற்பத்தி மற்றும் விற்பனைக்கான கடன்கள்.
3. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஆகியவைகளின் முதற்பொருள் மூலதனம் மற்றும் நடைமுறை மூலதனக் கடன் வசதி.
4. உர விநியோகம், அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் ஆகிய கூட்டுறவு முயற்சிகளுக்கு நிதி வசதி.
5. சிறப்பங்காடிகளுக்கு கடனுதவி
6. நகைக் கடன் உதவி (நேரிடை மற்றும் மறுநிதிக் கடன்).

தமிழக அரசு மேற்கொண்ட கடன் நிவாரண நடவடிக்கை காரணமாக தனிப்பட்டோர் வழங்கும் கடன் வசதி குறைந்துவிட்டது. எனவே, சென்னை நகரில் வங்கி அதன் கிளைகள் மூலம் தங்க நகைகளின் ஈட்டின் பேரில் கடன் வசதி அளித்து வருகிறது. 1976-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் 3 கிளைகளில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தற்போது மேலும் 15 கிளைகளில் செயல்படுத்தப்படுகிறது. 31—12—1980 வரை 46,687 நபர்களுக்கு நகைக் கடன் வழங்கி ரூ. 200·18 இலட்சம் அத்தேதியில் நிலுவை யிருந்தது.

7. சுய தொழில் வளர்ச்சிக்குக் கடன் உதவி, மாதச் சம்பளம் பெறுவோருக்குக் கடன் உதவி மற்றும் பயன்படு பொருள் பெறக் கடன் உதவி.
8. சிறு தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குதல்.
9. மாநில தொழில் கூட்டுறவு வங்கி மற்றும் கூட்டுறவு மாநில நிலவள . வங்கிகளுக்கு நிதி வசதியளித்தல்.
10. தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கு நிதி உதவி அளித்தல்.
11. விவசாய அபிவிருத்திக்கு உதவுகின்ற அரசு நிறுவனங்களுக்கு நிதி உதவி அளித்தல் (உத்தேசிக்கப்பட்டுள்ளது).

லாபம் :

1979—80-ம் ஆண்டில் வங்கி ரூ. 294·99 இலட்சம் நிகர லாபம் ஈட்டியுள்ளது. 1974—75 கூட்டுறவு ஆண்டிலிருந்து வங்கி கூட்டுறவு விதிகளின்படி அதிக டிவிடெண்டை வழங்கி வருகிறது. இது 9 சதவிகிதமாகும். மேலும் 1978—79-ம் ஆண்டிற்கு 10 சத விகிதம் டிவிடெண்டு வழங்கப்பட்டது.

## கரூர் வைஸ்யா பாங்க்

கரூர் வைஸ்யா பாங்க் 1916-ஆம் ஆண்டு கரூரில் ஆரம்பிக்கப்பட்டது. சமீபகாலத்தில் இந்த வங்கியின் முன்னேற்றம் பலதரப்பட்டவர்களால் மிகவும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது.

1980-ஆம் ஆண்டில் வங்கியின் டிபாசிட்டுகள் 13·33 கோடிகள் அதிகரித்துள்ளன. (70·55 கோடி) முன் ஆண்டை விட 10 கோடிக்கும் அதிகமாகும்.

சென்ற ஆண்டில் புதிய ரொக்க சர்டிபிகேட் திட்டமொன்றை வங்கி அறிமுகப்படுத்தியது.

கே. வி. பி. தமிழ் நாட்டைத் தவிர பாரதத்தின் பிற மாநிலங்களிலும் தம் கிளைகளை விரிவுப்படுத்தத் தொடங்கியது. கேரளாவில் 2, மகாராஷ்டிராவில் 1, மேற்கு வங்காளத்தில் 1.

இந்த ஆண்டு திருப்பதியில் முதல் கிளையைத் திறந்தது.

கிராமப்புற மக்களுக்குச் சேவை செய்வதில் கரூர் வைஸ்யா பாங்க் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. கிராமப்புறங்களில் இந்தப் பாங்கிற்கு 34 கிளைகள் உள்ளன.

எல்லா நாட்டு நாணயங்களிலும் செலாவணி செய்வதற்காக சென்னைக் கதீட்ரல் சாலையில் உள்ள விசாலமான கட்டடத்தில் சர்வதேசப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

வளமையான எதிர் காலத்திற்காக இந்த பாங்க் கீழ்க்கண்ட டிபாசிட் திட்டங்களை அறிவித்துள்ளது.
1. திருமகள் திருமணத் திட்டம்.
2. ஜம்போ சேமிப்புத் திட்டம்.
3. தேனீ சேமிப்புத் திட்டம்.
4 சூரியோதயா சேமிப்புத் திட்டம். 5. மாதாந்தர சேமிப்புத் திட்டம். 6. வைப்பு சேமிப்புத் திட்டம் (பிக்சட் டெபாஸிட்). 7. நடப்பு கணக்குத் திட்டங்கள். 8. நீண்ட கால தொடர்வட்டி சேமிப்புத் திட்டங்கள். 9சேவிங்ஸ் கணக்குகள்.

ஏழு மாநிலங்களில் மொத்தம் 127 கிளைகள் இந்தப் பாங்கிற்கு உள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் 103 கிளைகள் உள்ளன. இந்த பாங்கியின் வளர்ச்சிக்கு
திரு. கே. வி. ராகவாச்சாரியார் அவர்கள் பெரிதும் உழைத்துள்ளார். இப்பொழுது சேர்மனைப் பதவி ஏற்றுள்ள திரு. ஜி. வெங்கடேசன், பி. ஏ. ஸி. ஏ. ஐ. ஐ. பி. அவர்களுடைய திறமையான திட்டமிட்ட நிர்வாகத்தின் கீழ் இந்த வங்கி மேலும் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கலாம். ∴

## பாங்க் ஆப் தஞ்சாவூர்

பெரிய விமானம், பெரிய லிங்கம் என்று மிகப் பெரிய புகழ்பெற்ற பேரரசன் ராஜராஜனின் தலை நகராம் தஞ்சையில் 1901-ஆம் ஆண்டு 'தி தஞ்சாவூர் பர்மனென்ட் பண்டு' என்ற பெயரில் தொடங்கப்பட்ட பாங்கின் ஆரம்ப கால மூலதனம் ரூ. 99,990. ஒரு ஆண்டிலேயே மூலதனம் மூன்று லட்சமாயிற்று. 1911-ல் 15 லட்சம். 1927-ல் 54 லட்சம் ஆகப் பெருகிற்று. ஆரம்ப காலத்தில் பண்டு நிர்வாகிகள் வாடிக்கைக் காரர்களிடையே வங்கி முறைகளைச் செய்வதிலும் சேமிப்புப் பழக்கத்தை வளர்ப்பதிலும் தளராது உழைத்தனர். இந்த பண்டின் உதவியால் அந்தக் காலத்தே அபரிமித வட்டி மூலம் லேவாதேவிக் காரர்களிடம் வேதனைப்பட்ட பலரை மீட்ட பெருமை இந்தப் பண்டிற்கு உண்டு. 1947-ஆம் ஆண்டு' தி தஞ்சாவூர் பர்மனென்ட் பாங்க் லிட்' என்ற புதுப் பெயரைப் பெற்று, 1951-ஆம் ஆண்டு பொன் விழாவையும் இந்த வங்கி கொண்டாடியது. அந்த விழாவிற்கு திரு. குமாரசாமி ராஜா தலைமை வகித்தார்.

1960-ஆம் ஆண்டில் சென்னை நகரில் இந்தப் பாங்கியின் கிளையொன்று திறக்கப்பட்டது. 1961-ஆம் ஆண்டு வைரவிழா கொண்டாடியது. 1981-ஆம் ஆண்டில் பவழ விழாவைக் கொண்டாடும் அளவுக்கு முன்னேற்றங் கண்டுள்ள இந்த வங்கிக்கு 1968-ல் 55 கிளைகள் இருந்தன. 1980-ஆம் ஆண்டு 136 கிளைகள்!

சகலவிதமான வங்கி நடவடிக்கைகளிலும் ஈடுபட்ட பர்மனென்ட்

கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விபரங்களே இந்த வங்கியின் வளர்ச்சிக்குச் சான்று :

| | | |
|---|---|---|
| வேளாண்மைத் துறையில் பயனுற்றோர் | 38,820 | தொகை ஆயிரத்திற்கு 49,492 |
| சிறிய தொழிற்சாலைகள் | 498 | 10,725 |
| சிறு வியாபாரம் | 2613 | 5206 |
| சுய வேலை செய்வோர் & தொழில் வல்லுநர்கள் | 1278 | 1368 |
| போக்குவரத்து உரிமையாளர் | t09 | 2,88,10 |
| கல்வித்துறை | 105 | 109 |
| சில்லறை வியாபாரிகள் | 5927 | 1,69,15 |

பாங்க், பாங்க் ஆப் தஞ்சாவூர் லிட் என்ற பெயரைப் பூண்டது.

விவசாயத்தை முதலிடமாகக் கொண்ட மாவட்டத்து வங்கியான இது, விவசாயத் துறையுடன் சிறு தொழில்கள் துறையின் முன்னேற்றத்திற்காக தாராள கடன் வசதியளித்து வருகிறது. ரிகரிங் டிபாஸிட் முறையில் பாங்க் ஆப் தஞ்சாவூர் ஒரு முன்னோடி. (1901-ஆம் ஆண்டிலிருந்தே. பல ஆண்டுகளுக்குப் பிறகே மற்ற வங்கிகள் இம் முறையைப் பின்பற்றின.)

வங்கியின் தலைவர் திரு. பி. கே. மாதவன் அவர்களுடைய திறமையான நிர்வாகத்தின் கீழ் வளர்ந்து வரும் பாங்க் ஆப் தஞ்சாவூர் பல்லாண்டு பல்லாண்டு பல கோடி நூறாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

(1970-ஆம் ஆண்டு பிப்ரவரி மாத 'அமுதசுரபி' இதழில் ''எழுபதை நெருங்கும் ஏற்றமிகு வங்கி' என்ற தலைப்பில் இந்த வங்கியைப் பற்றி எழுதப்பட்ட கட்டுரையில் ''விழுதுகள் பல கொண்ட இந்த ஆலமரம் பல்லாண்டு பல்லாண்டு நின்று பணி புரிவதாக' என்று வாழ்த்தியது இங்கே நினைவுக்கு வருகிறது.)

## தமிழ் நாடு மெர்க்கன்டைல் பாங்க்

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, 1921 ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் நாள் தூத்துக்குடியில் வர்த்தகர்கள் சிலர் சேர்ந்து நாடார் பாங்க் லிட் என்ற நிறுவனத்தைத் தொடங்கினர்.

நாடார் பாங்க் பல இடையூறுகளையும் கடந்து, சிறந்த நிர்வாகத்தின் காரணமாக 1947ல் வெள்ளி விழாவும் கண்டது. 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு மெர்க்கன்டைல் பாங்க் லிட் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1971ல் பொன் விழா கொண்டாடும் அளவுக்கு வளர்ந்தது. இன்று, 1981ல் வைர விழா கொண்டாடும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

1978-ஆம் ஆண்டு தமிழ் நாட்டிற்கு வெளியே மற்ற மாநிலங்களில் இந்தப் பாங்கிற்குக் கிளைகள் திறக்கப்பட்டன.

சிறு தொழில், விவசாயம், சிறு வாணிபம் முதலிய பல்வேறுபட்ட துறைகளில் உள்ள மக்களுக்கு இந்தப் பாங்கு கடன் வசதி அளித்து அத்துறையினர் முன்னேற வழி வகுத்து வருகிறது.

இந்த வங்கியினால் பயன் அடைந்தவர்கள் எண்ணிக்கை 1980-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 37, 671பேர். 1922-ஆம் ஆண்டில் இந்த வங்கியில் டிபாசிட் ரூ.21 ஆயிரம். இன்றோ டிபாசிட் ரூ. 46 கோடி! 1971-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக இன்று வரை முதலீட்டிற்கு 20சதவீத டிவிடெண்ட் அளித்து வருகிறது இந்த வங்கி.

இந்த வங்கியின் கிளைகளும் 82 ஆக வளர்ந்துள்ளது. (இவற்றுள் 48 கிளைகள் கிராமப்புறங்களில்) இந்த வங்கியின் முத்துக் குவியல் டெபாசிட் திட்டம், நவரத்ன மாலா டெபாசிட் திட்டம், சேமிப்புத் தொகை பல்கிப் பெருகும் திட்டம்.

இந்த வங்கியின் சேர்மன் திரு. ஆர். ஜெயராஜ் பி.எஸ்.ஸி.பி.எல்., அவர்களோடு இணைந்துப் பணியாற்றும் டைரக்டர்களின் திறமையான நிர்வாகத்தினால் இந்த வங்கி தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்கு மிக உதவியாக இருக்கும் என நம்பலாம்.

## பாங்க் ஆப் தமிழ்நாடு

பாங்க் ஆப் மகாராஷ்டிரா, ஆந்திரா பாங்க், ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர், ஸ்டேட் பாங்க் ஆப் திருவாங்கூர் என்றெல்லாம் இருப்பதுபோல் தமிழ் மாநிலத்தின் பெயரில் ஒரு பாங்க் இல்லையே என்ற குறையை பாங்க் ஆப் தமிழ்நாடு லிட், தீர்த்து வைக்கிறது.

1903-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் தி சவுத் இண்டியா பாங்கு லிட், என்ற பெயரில் தொடங்கப்பட்ட பாங்க், 27—10—79 தீபாவளி நாள் முதல் பாங்க் ஆப் தமிழ்நாடு என்ற பெயரில் செயல்படத் தொடங்கியது.

பாரம்பரிய மிக்க நிறைவான தொடர்ந்த வளமான சேவையினை அன்றுபோல் இன்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது, பாங்க் ஆப் தமிழ்நாடு.

இந்த வங்கியின் சேர்மன் திரு. வி. ரங்கநாதன் பி. எஸ். ஸி., பி. எல்., அவர்களது திறமையான நிர்வாகத்தின் கீழ், இந்த வங்கி சிறப்பாக முன்னேறி வருகிறது. தமிழ்நாட்டில் 77 கிளைகள் இந்தப் பாங்கிற்கு உள்ளன.

சேமிப்புக் கணக்குகள், ரெகரிங் டெபாஸிட்டுகள், ரொக்க சர்டிபிகேட்டுகள், . வளர்நிதி டெபாசிட் திட்டம் ஆகிய சேமிப்புத் திட்டங்களை இந்த வங்கி சிறந்த முறையில் நடத்தி வருகிறது.

## பாங்க் ஆப் மதுரை

நான் மாடக் கூடல் என்று பெயர் பெற்று சங்கம் வளர்த்த தொன்மையான புகழ் மிகுந்த பெயரைப் போல் புகழ் பெற்ற பாங்க் ஆப் மதுரை லி., முப்பத்தொன்பது ஆண்டுகளில் மிகச் சிறப்பாக வளர்ந்து வந்திருக்கிறது.

வங்கித் தொழிலின் சகல பிரிவுகளிலும் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வரும் பாங்க் ஆப் மதுரை 1980 ஆண்டு முடிவில் 17, 71, 476—68 ரூ லாபம் ஈட்டியுள்ளது.

இந்த வங்கியின் டெபாஸிட்டு தொகை 11729. 35 (லட்சமாக) உயர்ந்ததுபோல் அந்த வங்கி பல துறையினரின் வளர்ச்சிக்கு அளித்துள்ள கடன் தொகையும் ரூ8636.87 (லட்சம்) உயர்ந்துள்ளது.

அயல் நாட்டுடன் நடத்தும் வாணிபத்திற்கு இந்த வங்கி சகல வித உதவிகளையும் செய்து வருவது குறிப்பிடத் தக்கது. முந்திரி, வெங்காயம், கைத்தொழில் பண்டங்கள் ரெடிமேட் ஆடைகள், போன்ற தொழில்களைப் புரிவோர்க்கு இந்த வங்கி கடன் அளித்து அத்துறை வளர வழி செய்துள்ளது. இந்த வங்கியின் அயல்நாடு செலாவணித் துறையில் மட்டும் லாபம் 1980ல் ரூ 30.23 லட்சம்.

# பாங்க் ஊழியர்கள் சங்கம்

இந்தியா முழுவதிலும் உள்ள பாங்குகளில் பணியாற்றும் அதிகாரிகள் அல்லாத பிற பாங்கு ஊழியர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 5 லட்சங்கள் ஆகும். பல்வேறு தொழிற் சங்கங்கள் பாங்கு ஊழியர்களுக்காக இயங்கிய போதும் குறிப்பிடத் தக்க நான்கு பெரிய தொழிற் சங்கங்களின் விவரங்கள் கீழே தரப் பட்டிருக்கின்றன.

**1. தேசிய வங்கி ஊழியர் கூட்டமைப்பு National Confederation of Bank Employees. N.C.B.E**

கிட்டத்தட்ட 2 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கொண்டுள்ள பெரிய தொழிற் சங்கம் இது. இந்தியாவின் மிகப் பெரிய பாங்கான ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் பணியாற்றும் ஊழியர்களில் கிட்டத் தட்ட எல்லோருமே இதில் உறுப்பினர்களாக இருப்பதுவே இச் சங்கத்தின் பெரும் பலமாக இருக்கிறது. இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கு, பாங்க் ஆப் பரோடா ஊழியர்களில் பலரும் இதில் உறுப்பினர்களாய் உள்ளனர். இச் சங்கத்தின் ஊழியர் திரு ஜி.பி குப்தா, பொதுச் யெயலாளர் திரு. எஸ்.எல். ராஜரத்தினம். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஊழியரான திரு. இராஜரத்தினம் அவர்கள் தேசிய அளவிலான வங்கி ஊழியர் சங்கத்தில் பெரிய பதவி வகிக்கும் ஒரே தமிழர் என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறார்.

**2. அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம். All India Bank Employees Association. A.I.B.E.A.**

தேசிய வங்கி ஊழியர் கூட்டமைப்புக்கு அடுத்த பெரிய பாங்கு ஊழியர் சங்கம் இது. கிட்டத் தட்ட 2 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டது. இதன் தலைவர் திரு. பிரபாத்கர். பொதுச் செயலாளர் திரு. தாரகேஸ்வர் சக்ரவர்த்தி.

**3. தேசிய வங்கி ஊழியர்கள் அமைப்பு. National organisation of Bank workers. N.O.B.W.**

பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணிய சாமி அவர்களைக் கௌரவத் தலைவராகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பின் தலைவர் திரு. ஷெனய் அவர்கள்.

**4. இந்திய தேசிய வங்கி ஊழியர் காங்கிரஸ். Indian National Bank Employees Congress. I.N B.E.C.**

இது இந்திய தேசிய தொழிற் சங்கக் காங்கிரஸின் (INTUC) ஆதரவில் இயங்கும் வங்கி ஊழியர் சங்கமாகும். தலைவர் திரு. என். கே. பட். பொதுச் செயலாளர் திரு. ராய்.

இவையன்றி மாநில அளவுகளில் பல தொழிற் சங்கங்கள் உள்ளன. சில வங்கிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கங்களும் அமைக்கப் பட்டிருக்கின்றன. ❧

சுய தொழில் புரிபவர்களுக்கு இந்த பாங்க் கணிசமாக் உதவி வருகிறது.

1971 ஆம் ஆண்டு 108 கிளைகள் உடையதா யிருந்த இந்த பாங்க் 1980 ஆம் ஆண்டு இறுதியில் 206 கிளைகளைக் கொண்டு வளர்ந்துள்ளது. (இன்று 211 கிளைகள்).

கிராமங்களைச் சுவீகரித்தல் வேளாண்மை சிறு தொழில் வளர்ச்சிக்கு உதவுதல், ஏற்றுமதி இறக்குமதித் துறையில் முன்னேற்றத்திற்கு உதவுதல் போன்ற சிறப்பான பணிகளை ஆற்றும், பாங்க் ஆப் மதுரை, சேர்மன் ஆர்.எம். முத்தையா அவர்களது திறமையான நிர்வாகத்தின் கீழ் மேலும் மேலும் வளர்ந்து, பாங்க் தோன்றிய தமிழகத்திற்குச் சிறந்த புகழீட்டித் தருமென்பதில் சந்தேகமில்லை.

'அமுதசுரபி' டெபாசிட் திட்டம், ரொக்க சர்டிபிகேட் திட்டம், ரெகரிங் டெபாசிட் போன்ற சேமிப்புத் திட்டங்களை இந்த வங்கி வாடிக்கையாளர்களுக்கு அளித்துச் சிறந்த பணிபுரிகிறது. சிறு சேமிப்பு டெபாசிட் திட்டத்தின்கீழ் பத்து ஆண்டுகளுக்கு ரூ500 டெபாசிட் செய்பவர்களுக்கு, பத்து சதவீத வட்டியுடன் ரூ 1000 ஆக திரும்பித் தருவதுடன் மாதா மாதக் குலுக்களில் 2 லட்சம் வரையில் ஆன 209 பரிசுகள் மாதா மாதம் கிடைக்க வழி செய்துள்ளது.

## இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்

தமிழ் நாட்டிலே தொடங்கி, பாரத நாட்டில் சிறந்த இடம் பிடித்த இரு பாங்குகளுள் இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கும் ஒன்று என்று பெருமையுடன் கூறலாம். சென்னை அண்ணா சாலையில் இதன் மத்திய அலுவலகம் கம்பீரமாகத் திகழ்கிறது.

இந்தியாவில் மட்டும் இந்த வங்கி 1174 கோடி வைப்புத் தொகை கொண்டுள்ளது. இந்த வங்கி ரூ. 702 கோடி அளவுக்குக் கடனுதவிகள் வழங்கியுள்ளது. அவற்றுள் வேளாண்மைவளர்ச்சிக்கு 110கோடியும், சிறு தொழில் வளர்ச்சிக்கு 87 கோடியும் கடனாக வழங்கியுள்ளது குறிப்பிடத் தக்கது.

இந்தியாவில் 808 கிளைகள் உள்ளன.

அயல் நாட்டு வாணிபத்திற்கு உதவும் வகையில் வெளி நாடுகளில் 11 இடங்களில் கிளைகள் உள்ளன.

ஒரு வங்கி சிறந்து விளங்குவதற்குத் திறமையான அலுவலர்களின் பணி முக்கியமாகும்.

இந்தப் பாங்கியில் 3987 அதிகாரிகளும், 10854 எழுத்தர்களும் 2581 கடைநிலை ஊழியர்களும் பணியாற்றுகிறார்கள்.

திரு. கே. விஷ்ணு மூர்த்தி ஏர்க் காதித்யா, இந்த வங்கியின் சேர்மனாகவும், நிர்வாக இயக்குநராகவும் விளங்கி பாங்கியில் முன்னேற்றத்துக்குச் சிறந்த வழி காட்டுகிறார்.

## பாரத் ஓவர்ஸீஸ் பாங்க்

நமது நாட்டின் அயல் நாட்டு வர்த்தகத்தில் சிறந்த பணியாற்றும் வங்கிகளுள் எட்டே ஆண்டு நிறைந்த பாரத் ஓவர்ஸிஸ் பாங்கும் ஒன்றாகும்.

ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியுற்று இந்த வங்கி 1980 டிசம்பர் முடிய நடந்த ஆண்டில் 26.33லட்சம் ரூபா இலாபம் ஈட்டியிருக்கிறது.

இந்த வங்கிக்கு வைப்புத் தொகை 1980ல் 41.81 கோடியாக உயர்ந்துள்ளது பாங்க் ஆற்றும் சிறந்த பணிக்குச் சான்றாகும்.

தாய்லாந்தில் இந்த வங்கியின் கிளை மற்றொரு வெற்றிகரமான ஆண்டைப் பூர்த்தி செய்து 34.48 லட்சம் ரூபா இலாபம் ஈட்டியுள்ளது.

இந்த வங்கியின் தலைவர் திரு. எம். எம். கதிரேசன், மற்றும் திறமை வாய்ந்த இயக்குனர்களின் நிர்வாகத்தின் கீழ் இந்த வங்கி மேலும் சிறந்த சேவையை நாட்டுக்கு அளிக்கும் என்பதில் ஐயமில்லை. ❧

# பாங்கின் கதை

"பணத்தை ஒரு முட்டாள் கூட சம்பாதித்துவிட முடியும் ஆனால் ஒரு புத்திசாலியால்தான் அதைக் காப்பாற்ற முடியும்" என்று [illegible]காவில் ஒரு பழமொழி உண்டு. பணத்தைப் பணத்தால் பெருக்குவது, பெருக்கிய பணத்தைப் பாதுகாப்பது, பாதுகாத்த பணத்தைத் தான் வாழும் சமூகத்திற்குப் பயன்படச் செய்வது போன்ற எல்லாப் பணிகளையும் நிறைவேற்றும் சாதனமாக விளங்குகின்றன பாங்குகள். பாங்கு பிறந்த கதை மிகவும் சுவையானது. பாங்கு பிறந்த கதையைத் தெரிந்து கொள்வதற்கு முன்னால் 'Bank' என்ற பதம் பிறந்த விதத்தைக் காண்போம்.

பணப் பாதுகாப்பு பண லேவாதேவித் தொடக்க காலத்தில் லம்பார்டியில் உள்ள யூதர்கள் இத் தொழிலைச் செய்து வந்தனர். அவர்கள் சந்தைகளில் பெரிய பெஞ்சுகளில் உட்கார்ந்து வணிகம் செய்வது வழக்கம். அந்த பெஞ்சுகளுக்கு (பாங்கஸ்) 'BANCUS' அல்லது 'BANCO' என்று பெயர். இச் சொற்களிலிருந்து (பாங்க்) Bank என்ற சொல் பிறந்திருக்கலாம். திடீரென்று இத்தகைய வணிகத்தில் ஈடுபட்டவர்கள் நொடிந்து போனால் பணத்தைக் கோட்டை விட்டவர்கள் கோபத்தில் அந்த பெஞ்சுகளை உடைத்துப் போட்டு விடுவார்கள். இச் செயலிலிருந்து தான் 'Bankrupt' என்ற சொல்லும் பிறந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

பாங்கு என்ற சொல்லுக்கு இன்னொரு விளக்கமும் கூறப்படுகிறது. 'Back' என்ற சொல்லிலிருந்து 'Banco' என்ற பதம் வந்ததாயும் 'Back' என்ற ஜெர்மானிய மொழிச் சொல்லுக்குக் கூட்டுப் பாங்கு நிதி (Joint Stock Fund) என்ற பொருள் உண்டென்பதுதான் அவ் விளக்கம்.

பாங்கான வாழ்க்கைக்கு வழி கோலுவதால் இவைகளைப் 'பாங்கு' என்று நாம் அழைப்பதாகவும் தமிழ் நாட்டவர் பெருமை கொள்ளலாம்.

கி.மு. 2000-ல் பாபிலோன் நாட்டில்தான் பாங்குத் தொழில் பிறந்தது. மக்கள் தமது செல்வங்களைப் பாதுகாத்து வைப்பதற்கென அங்குள்ள பெரிய தேவாலயங்களில் அளிப்பார்கள். ஆலய மத குருமார்கள்தாம் அவர்களுடைய பாங்கர்கள். சேமிப்புக்களைப் பத்திரப்படுத்தி வைத்ததுமல்லாமல் கடனுதவிகளும் செய்ததாகவும் வரலாறு உள்ளது. கிரேக்க நாட்டுக் கோவில்களில் இது போன்ற பாங்குத் தொழில் செயல்பட்டிருக்கிறது. சமயத்தைப் புறக்கணித்த மக்கள் ஆலயங்களில் தமது செல்வத்தைப் பாதுகாக்க விரும்பாததாலும் மேலும் சில இடையூறுகளாலும் இத் தொழில் அப்போது பிரபலமாக வளர வாய்ப்பில்லாமற் போய்விட்டது. இதற்கிடையில் வட்டி வாங்குவது பாவமென்று அரிஸ்டாட்டில் பிரசாரம் செய்ததால் அவர் வழியைப் பின்பற்றிய ஹீப்ருக்கள் தமது நாட்டில் பாங்குகள் வருவதை ஆதரிக்கவில்லை. பிறகு 12-ஆம் நூற்றுண்டில் சமுதாய வளர்ச்சி ஏற்பட்டு வெனிஸ், ஜினேவா நகரங்களில் பாங்குகள் தோன்றின. 14-ஆம் நூற்றுண்டில் பிளாரன்ஸ் நகரத்தில் பல்வேறு பெயர்களில் சேமிப்புத் தொகைகளை வாங்கி அவற்றை வெளியே வட்டிக்கு விட்டு பல வணிகர்கள் லாபம் சம்பாதித்தனர்.

இங்கிலாந்து நாட்டில் உள்ள பொன் வர்த்தகர்கள் எழுதிக் கொடுத்த ரொக்க ரசீதின் அடிப்படையில் மக்கள் அவர்களிடம் தமது செல்வத்தைப் பாதுகாக்க விட்டுச் சென்றனர். அவர்களே அச் சீட்டைக் கொண்டு வந்தாலும் சரி யாரிடமேனும் அனுப்பி வைத்தாலும் சரி பொன் வர்த்தகர் அதிலுள்ளவாறு திரும்பக் கொடுத்து விடுவார்கள். படிப்படியாக பாங்கு நோட்டுகளும் பின்னாளில் காசோலைகளும் தோன்ற இம் முறையே பிள்ளையார் சுழியாகிவிட்டது. அந் நாளில் இம் முறையிலும் பல சிக்கல்கள் எழுந்தன. எனினும் நாளாவட்டத்தில் படிப்படியாக வங்கிப் பணிகள் அன்று முதலே வளரத் தொடங்கின.

1694-ல் பாங்க் ஆப் இங்கிலாந்து தொடங்கப்பட்டது. தற்போதுள்ள பாங்குகளில் மிகவும் பழமையான பாங்கு இதுதான்.


## பாரதி கவி அரங்கம்

பாரதி நூற்றுண்டு விழா டிசம்பரில் தொடங்குகிறது. ஒவ்வொரு மாதமும் கவியரங்கம் நடத்திச் சிறந்த கவிதைகளுக்குப் பரிசு அளிக்க 'அமுதசுரபி' முன் வருகிறது.

முதல் கவியரங்கம் டிசம்பர் மாதம் 20ஆம் தேதி நடைபெறும்.

வழக்கமான சிறுகதைகள், தொடர் கதைகள், கட்டுரைகள் போன்ற பகுதிகளுடன் வங்கி நிதி சிறப்பிதழை இந்த இதழுடன் இணைத்துள்ளோம்.

சேமிப்பு திட்ட மிடுதல் என்பது வாழையடி வாழையாக வர வேண்டிய கொள்கை. சிக்கனம், உழைப்பு, திறமை இவற்றைப் பிஞ்சுக் கரங்களுக்கு முதிய கரங்கள் கற்றுத் தருவதை இந்த இதழ் மேலட்டை விளக்குகிறது.




நாட்டு வங்கிகள் நிதி நிறுவனங்கள் எளிய மக்களுக்கு உதவுவதைச் சித்தரிப்பதாகவும் கொள்ளலாம்.

பாரதியார் நூற்றுண்டு விழா தொடக்கத்தைப் புலப்படுத்த மகாகவியின் திரு உருவமும், பாரதி மிகவும் போற்றிப் பாடிய ஞானச் செருக்குடன் கூடிய புதுமைப் பெண்ணையும் ஓவியர் திரு. ஜி. கே. மூர்த்தி உருவகப் படுத்தி இந்த இதழ் மேலட்டையில் வரைந்துள்ளார்.

ஜனவரி 1982—புதிய ஆண்டு—அமுதசுரபியில் பல புதிய பகுதிகளை அளிக்க விருக்கிறது.

Printed by R. Janardhanan at Orr Jay Process, 23, Begum Sahib 2nd Street, Madras-600002 and Published by A. V. S. Raja on behalf of Shriram Trust, 123, Angappa Naicken Street, Madras-600001. Editor: Vikraman. Phone: 37890